68

# சோழ நாட்டுத திருப்பதிகள்

(இரண்டாம் பகுதி)

பேராசிரியர். டாக்டர். ந. சுப்புரெட்டியார்



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சோழநாட்டுத் திருப்பதிகள்

(இரண்டாம் பகுதி)

‘அருங்கலைக்கோன்’, ‘ஸ்ரீ சடகோபன் பொன்னடி’,
‘வைணவ இலக்கிய மாமணி’, ‘தலைமாமணி’,
‘ஆய்வுத் தமிழரசு’, ‘தமிழ்வாகைச் செம்மல்’,
‘தமிழ்ச் செம்மல்’, ‘பொதுமறைச் செம்மல்’,
பேராசிரியர்

டாக்டர். ந . சுப்புரெட்டியார்

M.A., B.Sc., L.T., Ph.D., D.Lit.,

அவ்வை

எண்.1, 3 ஆவது மாடி, புதூர் 13 ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை – 600 083.
✆ : 55688527

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | **சோழநாட்டுத் திருப்பதிகள் – இரண்டாம் பகுதி** |
| நூலாசிரியர் | : | **பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார்** |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| ஆண்டு | : | டிசம்பர் 2004 |
| நூல் வகை | : | ஆய்வு நூல் |
| பக்கங்கள் | : | xviii + 166 = 184 |
| நூல் அளவு | : | டெம்மி |
| ஒளி அச்சு | : | அம்மா சிஸ்டம்ஸ், சென்னை – 17. |
| அச்சிட்டோர் | : | தேவா ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 5. |
| விலை | : | **ரூ. 70.00** |

வெளியீடு

**அவ்வை**

எண். 1 புதூர் 13 – ஆவது தெரு
அசோக் நகர், சென்னை – 600 083
✆ : 55688527

# சோழநாட்டுத் திருப்பதிகள்

(இரண்டாம் பகுதி)

உபநிடத முனிவர்களையொத்த



முன்னைய பெரியவாள்

காஞ்சி காமகோடி பீடம் 68 வது பட்டம்
ஜெகத்குரு தவத்திரு சந்திரசேகரேந்திர சரசுவதி
பரமாசாரிய சுவாமிகள் திருவடிகளில்

## பக்திப் படையல்

பங்கயப் பதத்தால் பூமியைக் குன்றாப்
பாவனம் ஆக்குவோர்; தோய்ந்து
கங்கையே முதலாம் திர்த்தத்தில் தூய்மை
கனிந்திடப் புரிபவர்; நோக்கால்
மங்கலப் பொலிவை உயிர்தொறும் நிரப்பும்
மாண்பினர்; சந்த்ரசே கரப்பேர்ச்
சங்கரா சார்யர் திருவடி மலரில
தளிர்ந்தொளி பெறுகஇந் நூலே.

# அணிந்துரை

## சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி
## பு.ரா. கோகுலகிருஷ்ணன்

*சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பகுதி) பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சியின் விளைவிலே வெளிவருகிறது. உழைப்பால் உயர்ந்து, உள்ளத்தால் சிறந்து, செந்தமிழைச் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயும் பரப்பிப் பெருமை கண்டவர் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். அறிவியலைத் தவிர, தமிழிலேயும், குறிப்பாக வைணவ சமயத்திலேயும், அறிவாற்றலும், ஆழ்ந்து ஈடுபாடும் கொண்டவர் ரெட்டியார் அவர்கள். சமய நூல்கள் செந்தமிழைப் பெரிதும் வளர்த்துள்ளமை நம் தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாடாகும். சைவ நெறியும், பௌத்த நெறியும், சமண நெறியும், வைணவ நெறியும் இன்பத்தமிழ் பாடி எண்குணத்தான் பெருமையினைத் தமிழிலே போற்றி மகிழ்ந்துள்ளது.*

***'தெளியாத மறை நிலங்கள் தெளிய ஓதிய'*** *பெருமை வைணவப் பாசுரங்களுக்கு மிக உண்டு.* ***'வேதம் அனைத்திற்கும் வித்தாகும் சோதை தமிழை'*** *வில்லிபுத்தூராரின் கோதையின் திருப்பாவையில் கண்டு மகிழ்கின்றோம். திருப்பதிக்கும், தென்மண்டலத்திலே இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டும் வைணவம் சொந்தமல்ல. சோழநாட்டுத் திருப்பதிகளைக் கண்ணுறுங்கால் வைணவம் செழித்து வளர்வது நன்கு புலப்படும் என்பதனைப் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் சோழநாட்டுத் திருப்பதிகளை நம் கண்முன் தம் எழுத்தோவியத்தின் மூலம் சித்திரித்துக் காட்டுகின்றார். இந்நூலில் அருமையான வைணவ தத்துவங்களை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதியுள்ள பான்மை ரெட்டியார் அவர்களுடைய ஆழமான அறிவினை எடுத்துக்காட்டுகின்றது.* ***'திராவிட சிசு'*** *என்று ஆதிசங்ககரரால்*

வழுங்கப்பெற்ற சம்பந்தர் திருமங்கையாழ்வாரின் ஒரு குறளாய் இருநில மூவடிமண் வேண்டி என்ற ஒரு திருமொழியைக் கேட்டவுடன், வியந்து தமது வேலாயுதத்தை இவரது திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்தார என்ற நிகழ்ச்சியைப் பேராசிரியரின் இந்த நூல் மூலம் அறிந்து வியப்புற்றேன்.

இறைவனுடைய அபய முத்திரை குற்றம் புரிந்தவாகளையும் திருத்தும் தன்மைத்து என்று பொருள்பட ரெட்டியார் அவர்கள் அபய முத்திரையை விளக்கி,

**உங்கள் குறங்களை நினைத்து நீங்கள் அஞ்ச வேண்டா. என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக் கொள்வேன்.**

என்பது அன்பைக் காட்டும் வாத்சலயத்தின் விளக்கம் என்று எழுதியுள்ள பான்மை நம்மையெல்லாம் கவர்கின்றது. இதே கருத்தை நாவுக்கரசர்,

**"பிழைத்தோர் பிழைப்பு அறியவல்ல அடி"**

என்று இறைவனுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடுகின்றார்.

திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை நம்மையே அறியாமல் அத்திருத்தலங்களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை நம்மிடம் எழுப்புகின்றது. குறிப்பாக, **'தலைச்சங்காடு'** என்ற திருப்பதியை திரு. ரெட்டியார் அவர்கள் உதாரணத்தோடும், தகுந்த ஆதாரங்களோடும் விளக்கி, இவ்விடம் ஒரு காடாக இருந்ததாகவும், காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து சிறந்த சங்குகள் இங்கு விற்பனைச் செய்யப்பட்டனவாகவும், அதனால் இந்த இடம் **'தலைச்சங்கம்'** என்று பெயர் பெற்றுப் பிறகு **'தலைச்சங்கக்காடு'** — தலைச் சங்காடு என்று மருவியது என்பதனை அழகாக எடுத்து விளக்குகின்றார். இத்தகைய அருமையான விளக்க உரைகள் எம்பெருமான் எழில் உருவத்தின் தத்துவங்களையும், அவர் எழுந்தருளியுள்ள திருப்பதிகளின் பெருமைகளையும் எடுத்து இயம்புகின்றன.

பேராசிரியர் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நல்ல தமிழறிஞர். அறிவு எப்போதுமே ஓய்வதில்லை. உள்ளத்தில் இளமையும், அதன் காரணமாகச் சிந்திக்கும் திறமையும், இவற்றிற்கெல்லாம் மேலாக ரெட்டியார் அவர்களுடைய ஆழ்ந்த

படிப்பும், அவர்தம் தமிழ்ப் பணியை, ஆராய்ச்சித் திறனைத் தொடர்ந்து செய்யத் தூண்டுகிறது. இத்தகைய அறிவாற்றல் நிறைந்தவர்களுடைய பணி நம்முடைய சமுதாயத்திற்கு மிகவும் தேவை. ரெட்டியார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகள் பலவற்றையும் இவ்வையகம் அறியும்படி விளக்க உரைகள் எழுதுவார் என்ற நம்பிக்கை எங்களைப் போன்றவர்களுக்கு மிகவும் உண்டு.

வாழ்க சுப்புரெட்டியார் அவர்கள்! வளர்க அவர்தம் தெய்விகத் தமிழ்த் தொண்டு!

— பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சென்னை — *20*

*30–06–1981.*

# நூல் முகம்

**நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!**
**நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி**
**ஊரகத்தாய்! தண்துறைநீர் வெஃகா உள்ளாய்!**
**உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்**
**காரகத்தாய்! கார்வானத்து உள்ளாய்! கள்வா!**
**காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு**
**பேரகத்தாய்! பேராதுஎன் நெஞ்சில் உள்ளாய்!**
**பெருமான்உன் திருவடியே பேணி னேனே![1]**

**— திருமங்கையாழ்வார்**

*இந்த வரிசை நூல்களில் இறுதியாக வெளிவரும் இந்த நூலின் நூல்முகத்தைத் தொடங்கும்போது என் சுயபுராணத்தில் சில பக்கங்களைப் புரட்டத் தோன்றுகின்றது. இதோ என் இலக்கிய வாழ்க்கையின் ஒரு பகுதி. **1941** ஜுன் முதல் நாள் பி.எஸ்ஸி., எல்.டி., பட்டங்களுடன் யானே முன்னின்று தொடங்கிய உயர்நிலைப்பள்ளி வளர்ச்சியுடன் அதன் தலைமையாசிரியனாக என் அலுவலக வாழ்க்கையும் தொடங்கியது. அப்பொழுது **'பி.எச்டி. பட்டம் பெற வேண்டும்'** என்ற எண்ணமும் ஆசையும் என்று கூடச் சொல்லலாம் என்பால் அரும்பியது. மூன்று ஆண்டுகள் ஆசிரியத்துறை அநுபவம் பெற்றதும் **எம்.ஏ** தேர்வு எழுத முயன்றேன். பி.எஸ்ஸி தேர்வு தனியார் எழுத முடியாது. பி.ஏ., பட்டம் பெற முயன்றேன். எந்தப் பட்டங்களும் இல்லாத ஆசிரியர்க்குத்தான் இந்தச் சலுகை உண்டு என்ற சம்பிரதாயத்தைக் கூறி அதற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் மறுத்தது. அச்சகை ஆசிரியர்க்குரிய உரிமையாகும் என்று பதிவாளரிடம் வாதாடினேன். பலன்? எதிர்முறையில் என்*

1. திருநெடுந். 8

ஆசிரியப் பெருந்தகை **ஜெரோம் டிசௌசா பாதியாரின்** (முதல்வர், லயோலா கல்லூரி, சென்னை) துணையால் பல்கலைக் கழக விதி மாற்றப்பட்டது. அவர் நாலாண்டுகள் தொடர்ந்து வற்புறுத்தியதால், இந்த நாலாண்டுக் காலத்தைக் கொன்னே கழிக்காமல் **வித்துவான் தேர்வில் (1945)** வெற்றி பெற்றேன். விதி மாறிய ஆண்டில் **(1947)** பி.ஏ., தேர்வு எழுதி தமிழில் பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில் முதல் நிலை அடைந்தேன். எம்.ஏ., எழுது முயன்றபோது பி.ஏ., பட்டம் பெற்ற பிறகு **இரண்டாடுகள் இடைவெளி வேண்டும்** என்ற விதி குறுக்கிட்டது. பொறுத்திருந்து **51** இல் **எம்.ஏ.,** பட்டம் பெற்றேன். எம்.ஏ. பட்டம் பெறவே **பத்து ஆண்டுகள்** கழிந்தன. போனால் போகட்டும். அறிவியலில் தீவிர நாட்டம் கொண்ட என்னைத் தமிழன்னை ஆட்கொண்டாள். வறுமையில் வாடுகின்றவனுக்கு அறிவியலில் உயர்வு ஏது? தமிழ்தான் இவர்களைக் காப்பாற்றுகின்றது. **'வறுமையின் இளமை வாடிய சினையவாய்'** (கலி—10) என்று கலித்தொகை ஆசிரியர் கூற்றின் உண்மைப் பொருள் எனக்கு விளக்கம் உற்றது.

ஒன்பதாண்டுகள் உயர்நிலைப் பள்ளி வாழ்க்கைக்குப் பிறகு, காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் என் வாழ்க்கைத் தொடங்கியது. இங்குப் பணியாற்றிய பத்தாண்டுக் காலத்தில் பல்வேறு முறைகளில் முயன்றேன் பிஎச்.டி பட்டத்திற்குப் பதிவு செய்து கொள்ள. கல்வித் துறையிலாவது பெறலாம் என்று முயன்றும் பலன் கிட்டவில்லை. எம்.ஏ. பயிற்றும் கல்லூரியில் அல்லது பல்கலைக் கழகத்தில் நுழைந்துகொண்டு முயலலாம் என்று கருதிய முயற்சி பலன் தரவில்லை. எனக்கு ஆசி கூறுவதற்கு பெரியவர்கள் இலர். என் செய்வது?

**அந்தோ! அடியேன் உன்பாதம்**
**அகல கில்லேன் இறையுமே**[2]

என்று ஏழுமலையானைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு அவன் திருவடிவாரத்திலேயே பணியாற்றத் தொடங்கினேன். இங்கும் பதிவு செய்து கொள்ள முயன்றேன். முயற்சி பலன் தரவில்லை. தமிழ் Faculty இல்லாததால் (எம்.ஏ. இல்லாததால்) வழி இல்லாது போயிற்று.

பல பல்கலைக் கழகங்களில் தக்க வழிகாட்டியுள்ள துறையில் பிற துறை மாணாக்கர்கள், ஆசிரியர்கள் பதிவு செய்து கொள்ளும் விதியை எடுத்துக் காட்டினேன் துணை வேந்தருக்கு. வடமொழித்

2. திருவாய். 6–10:9

துறையில் செய்து கொள்ள துணைவேந்தரை (திரு. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு) வேண்டினேன். அவர் சொன்னார் "அங்கெல்லாம் பாலை உண்டாக்கியுள்ளனர். சிறிது நீர் ஊற்றினால் ஒன்றும் கெட்டுவிடாது. ஆனால், இது புதிய பல்கலைக் கழகம். இங்குப் பாலே இல்லை. முதலில் நீர் ஊற்றினால் என்ன ஆகும்? நீங்களே சொல்லுங்கள்" என்பதாக. துணைவேந்தர் பேச்சில் சதுரர். யார் எதற்குச் சென்றாலும் அழகாகப் பேசி எதிர்மறை முடிவினையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொள்ளுமாறு செய்து விடுவார். திரும்புகிறவர்களும் மனநிறைவுடன் திரும்பிவிடுவர்.

நான் சொன்னேன் "ஐயா, ஒரே ஒரு வழி உண்டு. **கும்பகோணம் வழி** என்பது அதன் பெயர். அதனைக் கையாண்டு முயல வேண்டியதுதான்" என்பதாக. "அப்படி என்றால்?" என்று வினவினார். "சென்னையில் இருந்த தங்கட்கு இது நன்கு தெரியும். ஆறு திங்களில் தெரிவிப்பேன்" என்றேன். அவரும் அதனை வற்புறுத்தாமல் அந்த அளவில் விட்டுவிட்டார் சிரித்துக்கொண்டே. என் வயதிற்கும், புலமைக்கும் அடக்கமான பண்புக்கும் அவர் மதிப்புத் தருபவராதலால், சற்றுத் துணிவுடன் அவரிடம் பழகும் வாய்ப்பு எனக்கு உண்டு. கும்பகோணத்திலுள்ள Institute of Homeopaths என்ற நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டு அஞ்சல்வழிக் கல்வி பெற்று தேர்வு எழுதி வெற்றி பெற்று **ஓமியோபதி டாக்டரானேன்.** ஒருநாள் துணைவேந்தரிடம் சென்று சான்றிதழை அவர் முன் வைத்து 'இதுதான் கும்பகோணம் வழி. டாக்டர் பட்டம் வாங்கிவிட்டேன். உங்கள் பட்டம் இனி எனக்குத் தேவையில்லை" என்றேன். வியப்பும் வேடிக்கையும் கண்ட அவர் "மிஸ்டர் ரெட்டியார், உங்கள் **உண்மையான கவலையையும் ஆர்வத்தையும்** உணர்ந்தேன். இப்பொழுதே விண்ணப்பியுங்கள்" என்றார். 1964 இல் வடமொழித் துறையில் பதிவு செய்துகொண்டேன். ரீடராக இருந்த **டாக்டர் வி. வரதாச்சாரியார்** வழிகாட்டியாக அமைந்தார். ஐந்து ஆண்டுகள் ஆய்ந்து 1969 இல் பட்டமும் பெற்றேன். பணியாற்றிய தலத்திற்கும், வழிகாட்டியாக அமைந்தவருக்கும், என் மன நிறைவுக்கும் பொருத்தமான **'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம்'** என்ற தலைப்பை ஆய்பொருளாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன். இப்படிப் பல்கலைக் கழக விதிகளை வைத்துக்கொண்டே **'சடுகுடு'** விளையாடி **52 வது வயதில் டாக்டர் பட்டம் வந்தது** 'கர்மபுத்திரன்

போல்.' எந்த நிலையில் எது கிடைத்தாலும் அதுவும் அவன் அருள் தானே.

ஆழ்வார் பாடல்களில் உருகினேன். கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்த திருத்தலங்களைச் சேவிக்கவேண்டும், தலத்திலேயே அவர்களின் அருளிச் செயல்களை அநுபவிக்கவேண்டும் என்ற பேரவா என்னைச் சூழ்ந்தது. 108 தலங்களில் 102ஐக் குடும்பத்துடன் சேவிக்கும் பேறு பெற்றேன் சேவிக்கும் ஊழ் எனக்கு இருந்ததால். அந்தத் திருத்தலப் பயண அநுபவம்தான் இந்த வரிசை நூல்கள். ஏற்கனவே **மலைநாட்டுத் திருப்பதிகள் (1971) தொண்டை நாட்டுத் திருப்பதிகள் (1973) பாண்டிநாட்டுத் திருப்பதிகள் (1977), வடநாட்டுத் திருப்பதிகள் (1980), சோழநாட்டுத் திருப்பதிகள் — முதற் பகுதி (மார்ச் 1981) முறையே ஜஸ்டிஸ் மகாராஜன், ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டியார், ஜஸ்டிஸ் பி. எஸ். கைலாசம், ஜஸ்டிஸ் ஜி. இராமாநுஜம்** இவர்களுடைய அணிந்துரையுடன் வெளிவந்துள்ளன சோழநாட்டுத் திருப்பதிகள். இரண்டாம் பகுதி என்ற இந்த நூல் **ஜஸ்டிஸ் பு. ரா. கோகுலகிருஷ்ணன்** அவர்கள் அணிந்துரையுடன் நடைபோடுகின்றது. இந்நூலில் **இருபது திருப்பதிகள்** இடம் பெற்றுள்ளன. இவை 1968 சூன் திங்கள் என் துணைவி, மூத்தமகன் **எஸ். இராமலிங்கம்** (இப்பொழுது பாரத் ஓவர்சீஸ் வங்கி தலைமை அலுவலகத்தில் ஆபீசராக இருப்பவன்), இளைய மகன் **டாக்டர் எஸ் இராமகிருஷ்ணன் எம்.டி.** (இப்பொழுது சென்னை என்புருக்கி நோய் ஆய்வு மருத்துவமனையில் ஆய்வு அலுவலராகப் பணியாற்றுபவன்) அடியேனுடன் வர இத்திருப்பதிகளைச் சேவித்தேன். அப்பொழுது என் மக்கள் இருவரும் கல்லூரி மாணாக்கர்கள்.

சிதம்பரத்தில் தங்கி தில்லைத் திருச்சித்திர கூடத்தையும் (கட்டுரை—1) மயிலாடுதுறையில் தங்கிக் காழிச் சீராம விண்கரம் (2), திருஇந்தளூர் (3), தலைச் சங்க நாண் மதியம் (4), சிறுபுலியூர் (5), திருக்கண்ணபுரம் — 6, திருவழுந்தூர் — 7, திருவெள்ளக்குளம் — 8, திருவண் புருடோத்தமம் — 9, வைகுந்த விண்ணகரம் — 10, மணிமாடக் கோயில் — 11, திருத்தெற்றியம்பலம் — 12, செம்பொன் செய்கோயில் — 13, அரிமேய விண்ணகரம் — 14, திருஆலி — திருநகரி — 15, திருத்தேவனார்த் தொகை — 16, திருக்கூடலூர் — 17, திருமணிக் கூடம் — 18, காவளம்பாடி — 19, பார்த்தன் பள்ளி — 20 என்ற 20 திருத்தலங்களைச் சேவித்தேன். இவை பற்றிய

கட்டுரைகளில் ஆழ்வார் பெருமக்களின் பக்தியுணர்ச்சியின் கொடுமுடிகளைக் காணலாம். பாசுரங்களின் சொல்வளம் வியாக்கியாதாக்கள் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட பாங்கு, என் சிறிய உள்ளம் பாசுரங்களை அநுபவித்த முறை ஆகியவற்றைக் கண்டு மகிழலாம்.

ஒரு சமயம் இந்நூல்கள் வெளிவரும் பேறு கிட்டுமோ என்ற ஐயமும் அச்சமும் அடியேன்பால் எழுந்தன. இந்நிலையில் ஏழு மலையான் திருவருள் பாலித்தான். **திருமலை – திருப்பதி தேவஸ்தானம்** சமய நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதி உதவியது– ஆகவே, இந்நூல் தமிழ்கூறு நல்லுலகில் உலா வர வாய்ப்பு கிட்டியது. இங்ஙனமே திருவேங்கட முடையான் திருவருளால் **'சில நோக்கில் நாலாயிரம்,'** Collected Papers of Prof. Dr. N. Subbu Reddiar, **முத்திநெறி** என்ற மூன்று நூல்களும் வெளிவரும் என்ற நம்பிக்கை என்றும் அடியேன்பால் உண்டு. நிதி உதவிய தேவஸ்தானத்தாருக்கு அடியேன் அன்பு கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்நூலிலுள்ள முதற்கட்டுரை 'தில்லை மூலட்டான ஈசுவரர் கோயில் குடமுழுக்கு விழா மலரில்' (1979) வெளிவந்தது. ஏனைய கட்டுரைகள் இந்நூலுக்கென்றே எழுதப் பெற்றவை. 12 ஆண்டுகட்கு முன்னர் ஏற்பட்ட அநுபவத்தை மீண்டும் அசைபோடும்போது எல்லையற்ற பேரின்பத்தை அடைகின்றேன். பகவதநுபவம் சீவன் முக்தர்கட்கு கிடைத்தற்கரிய பேறு. இந்நூலையும் இந்த வரிசை நூல்களையும் படிப்போர் இந்த அநுபவத்தைப் பெற்றால் அதுவே அடியேன் பெற்ற பேறு.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய நாவல் ஆர்ட் பிரிண்டர்சின் அதிபர் **கவிஞர் நாரா. நாச்சியப்பன்** அவர்கட்கும், மேலுறையைக் கண்கவர் வனப்புடனும் பக்தியுடனும் அச்சிட்டுக் கட்டமைத்துத் தந்த கந்தன் அடிமை **எஸ்.பி. சண்முகம் பிள்ளை** அவர்கட்கும் (உரிமையாளர் Ganesh Printing and Binding) அடியேன் நன்றி கலந்த வணக்கத்தைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

சென்னை உயர்நீதி மன்றத்து மாண்புமிகு **தலைமை நீதிபதி திரு. கோகுலகிருஷ்ணன்** அவர்கள் தமிழக மக்கள் உள்ளத்தில் நிலையாக வீற்றிருக்கும் உயர்குணச் செம்மல். பண்புடையார் பட்டுண்டு உலகம் என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு

இலக்கியமாகத் திகழ்பவர். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த இப்பெருமகனார் சென்னை மாநிலக் கலலூரியில் பயின்று பொருளாதாரத்தில் பி.ஏ. பட்டமும், சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று பி.எல். பட்டமும் பெற்றவர். கல்லூரி வாழ்வில் இரு கல்லூரிகளிலும் **தமிழ்ச் சங்கச் செயலாளராக** இருந்து அரும்பணியாற்றியவர். இதனால் இவர்தம் தமிழ்ப்பற்று நன்கு புலனாகும். **1952—60** ஆண்டுகளில் சென்னை உயர்நீதி மன்றத்தில் **வழக்குரைஞராகத்** தம் திறமையைப் பல்லோரும் போற்றும் வகையில் பணியாற்றியவர். தமிழக அரசும் இவர்தம் திறமையை வியந்து ஓராண்டு காலம் **(1967—68) பப்ளிக் புராசிகுயூட்டர்** பதவியையும், தொடர்ந்து ஓராண்டு காலம் **(1968—69) அட்வொகேட் ஜெனரல்** பதவியையும் வழங்கியது. அடுத்து **1969** சூன் முதல் உயர்நீதி மன்றத்தின் நிலையான நீதிபதிப் பதவியும் இவரை வந்தடைந்தது. இந்நிகழ்ச்சிகள் இவர்தம் திறமைக்கும் நேர்மைக்கும் இத்துணைக்கும் மேலாக இவர்தம் உயர்பண்புக்கும் கிடைத்த பரிசுகளாக அமைகின்றன. இன்றுவரை நேரிய முறையில் நீதிபதியாக, சிறிது காலமாகத் தலைமை நீதிபதியாக சமன் செய்து சீர்தூக்கும்கோல் போல் அமைந்து சான்றாண்மை குன்றாது பணியாற்றி வருவதை தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டமே நன்கு அறியும்.

மாணாக்கர் வாழ்விலேயே **திருவிக.விடம்** இவருக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம் உண்டு. இதனால் அப்பெரியவரின் ஆசி அன்றும் இருந்தது. இன்றும் இருந்து வருகின்றது. என்றும் இருந்து வரும் எனக் கருதலாம். அப்பெருமகனாரின் பெயரில் தோற்றுவித்து நடைபெற்று வரும் **மணவழகர்[5] மன்றத்தின்** தலைவராகப் பணியாற்றித் தற்சமயம் புரவலராகப் (காப்பாளராக) பணியாற்றி வருபவர். இதனைத் தவிர, பல்லாண்டுகள் இயல் இசை நாடக மன்றத் தலைவராகவும், பல்லாண்டுகள் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டின் (பழம் பொருள்கள் கிடைக்குமிடம்) தலைவராகவும் பணியாற்றி வருபவர். இதனால் இவர்தம் கலையார்வத்தை நன்கு அறிய முடிகின்றது.

ஆயர்பாடிக் கண்ணனைப் போல் இவரும் பிள்ளைப் பிராயத்திலேயே துடுக்காக இருந்து வந்திருக்க வேண்டும். அக்கண்ணனிடம் இருந்த தலைமைப்பண்பு இவரிடமும் கருவிலே திருவாக அமைந்திருக்கவேண்டும். கண்ணனின் பெரும் புகழுக்குக்

3. மணம் – கர்யாணம்; அழகர் – சுந்தரர்; மன்றம் – கழகம்

காரணமாக இருந்தவை அவனிடம் காணப் பெற்ற சௌலப்ய சௌசீலயாதி குணங்கள். அந்தக் குணங்கள் இவரிடமும் காணப்பெறுவதை இவரிடம் அன்றாடம் நெருங்கிப் பழகுபவர்கள் நன்கு அறிவார்கள். அந்தக் காலத்தில் நீதியை நிலைநாட்ட பாரதப் போர் நிகழ்ந்தது. அப்போரில் பார்த்தனுக்குச் சாரதியாக இருந்துகொண்டு நீதியை நிலைநாட்டினான் கண்ணன். **'பார்த்தசாரதி'** என்ற அழகான பெயருக்கு ஓர் உயர் கருத்தையும் நிலைநாட்டி அப்பெயரை நிலைத்து வாழச்செய்தான். அங்ஙனமே நாட்டின் நீதிதேவனின் தேரை நடத்தும் பொறுப்பு தெய்வ சங்கற்பமாக இவரிடம் வந்தமைந்துள்ளது; தம் பெயருக்குப் பொருத்தமாகப் **பார்த்தசாரதியின் பொறுப்பும்** வந்துள்ளமை ஒருவாறு ஒற்றுமை நயத்தைப் புலப்படுத்துகின்றது. இதனை அறிஞர்களும் அரசும் பாராட்டும் வண்ணம் நடத்தி வருவதை நாம் கண்டு மகிழ்கின்றோம்; பாராட்டவும் செய்கின்றோம். சோழ நாட்டைச் சார்ந்த ஒரு பெருமகனாரிடம் **'சோழ நாட்டுத் திருப்பதிகள்'** என்னும் என் நூல் அணிந்துரை பெறும் வாய்ப்புப் பெற்றது நூலுக்குப் பெருமையளிக்கின்றது. அணிந்துரை வழங்கிய அன்பருக்கு அடியேன் உளங்கனிந்த நன்றியைப் பெருமையுடன் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

காஞ்சி காமகோடிப் பீடம் 68வது பட்டம் **தவத்திரு சந்திரசேகரேந்திர சரசுவதி பரமாச்சாரிய சுவாமிகளை** அறியாதார் நமது பண்ணிய பூமியில் ஒருவரும் இருக்க முடியாது. கி.பி. 1907 முதல் **'இந்திர சரசுவதி'** என்னும் பட்டத்துடன் அணிசெய்து ஞானச் செங்கோலோச்சி வருபவர்கள். **'தவம்'** என்பதற்கு ஓர் உருவம் கொடுத்துப் பேச வேண்டுமாயின் அது **'காஞ்சிப் பெரியவாள் தாம்'** என்று சொல்லுவது எள்ளளவும் மிகையாகாது. இன்று நாட்டில் நடமாடும் தெய்வமாகக் காட்சியளிக்கும் சுவாமிகள் ஆதசங்கரரின் அவதாரமாக வைத்தெண்ணப் படுபவர்கள். நாடு முழுவதும் பாதயாத்திரை செய்து புண்ணிய பூமியை மேலும் புனிதமாக்கியவர்கள். அசோகவனத்திலிருந்த சீதாப்பிராட்டியைக் கம்பன் **'தவம் செய்த தவம்'** என்று காட்டுவான். சுமார் பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் அடியேனின் இரு மந்தர்கள் உட்பட துணைவியுடன் பெரியவாள் அவர்களைக் காஞ்சியில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் தரிசித்தபோது கண்ட **'தவம் செய்த தவமாம்'** போன்ற உருவம் இன்னும் அடியேனின் மனத்தை விட்டு அகலவிடவில்லை கள்ளங் கபடமற்ற குழந்தையின் முகத்தில் பால் வடியும் என்று

*சொல்லுவதுண்டு. ஆனால், பெரியவாள் முகத்தில் கருணையே வெள்ளமிட்டுப் பொழிவதைக் கண்டேன். கருணை வடிவத்தைக் காணும்போது மெய்மயிர் சிலிர்த்து உள்ளம் பொங்கியதை அநுபவித்தேன். நாராயண மந்திரத்தைத் தாரகமாக கொண்டிருப்பவர் என்பதையும் கேள்வியுற்றேன். இவரைத் தரிசிக்கும்போது உபநிடத முனிவர்கள் என் மனக்கண்முன் காட்சி தருகின்றனர். இத்தகைய பெரியவாள் திருவடிகளில் இந்த நூலை பக்திப் படையலாக்குவதைப் பெறற்கரிய பெரும் பேறாகக் கருதுகின்றேன். இவருடைய ஆசியால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் ஆசாரியர்களின் உரைகளிலும் அடியேனுக்குத் தெளிவும் பக்தியும் மேலும் மேலும் பெருகி அடியேனை உய்விக்கும் என்பது அடியேன் திடமான நம்பிக்கை.*

*இதுசமயம் நம்மாழ்வாரின்,*

**'ஆம்முதல்வன் இவன்' என்று தன்கேற்றி, என்**
**நாமுதல் வந்து புகுந்து நலஇன்கவி**
**தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்**
**வாய்முதல் அப்பனை என்று மறப்பனோ?[4]**

*என்ற திருவாய்மொழியைச் சிந்திக்கின்றேன். அன்பர்கட்காக அடியேனைக் கொண்டு தன்னைக் கவிதை பாடிக் கொண்ட பேருதவி செய்தவனை ஒரு நாளாவது மறக்க முடியுமா?' என்று கேட்பதைப் போலவே அடியேனைக் கொண்டு மன்பதை இறையநுபவத்தைப் பெற்று உய்வதற்காக திருத்தலப் பயணக் கட்டுரைகளை எழுதுவித்து, திருமலை —திருப்பதி தேவஸ்தானத்தாரால் நிதிஉதவிச் செய்து இந்நூல் வெளிவரக் காரணமாக இருக்கும்* ***ஏழுமலையப்பனை*** *ஒரு நாளாவது மறக்க முடியுமா?' என்று கேட்கத் தோன்றுகின்றது. இங்ஙனம் எல்லா நலன்களையும் ஈந்து அடியேனை இயக்கி நன்னெறிப்படுத்தி வரும்* ***திருவேங்கடமுடையானை*** *மனம் மொழி மெய்களால் வாழ்த்தி இறைஞ்சி வணங்குகின்றேன்.*

**வெற்புஎன்று வேங்கடம் பாடினேன் வீடுஆக்கி**
**நிற்கின்றேன் நின்றுநினைக் கின்றேன் கற்கின்ற**
**நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்**
**கால்வலையில் பட்டிருந்தேன் காண்.[5]**

**— திருமழிசை ஆழ்வார்.**

*— ந. சுப்புரெட்டியார்*

4. திருவாய். 7–9:3
5. நான். திருவந். 40

# உள்ளுறை


| | |
|---|---|
| பக்திப் படையல் | v |
| அணிந்துரை | vi |
| நூல் முகம் | ix |
| சித்திரக்கூடத்து செங்கண்மால் | 1 |
| காழிச் சீராமவிண்ணகரத் தாடாளன் | 12 |
| இந்தளூர் அந்தணன் | 19 |
| தலைச்சங்க நாண்மதியப் பெருமாள் | 28 |
| சிறுபுலியூர் அருமா கடலமுதன் | 35 |
| கண்ணபுரத்துக் கருமணி | 44 |
| அணிஅழுந்தூர் நின்ற அஞ்சனக் குன்றம் | 62 |
| வெள்ளக்குளத்து அண்ணன் | 73 |
| நாங்கூர்ப் புருடோத்தமன் | 80 |
| நாங்கூர் வைகுந்தநாதன் | 87 |
| நாங்கூர் நந்தா விளக்கு | 93 |
| திருத்தெற்றியம்பலத்துச் செங்கண்மால் | 102 |
| செம்பொன் செய்கோயில் பேரருளாளன் | 108 |
| நாங்கூர்க் குடமாடு கூத்தன் | 114 |
| வயலாளி மணவாளன் | 121 |
| திருத்தேவனார்த் தொகை தெய்வநாயகன் | 136 |
| திருக்கூடலூர் வையம் காத்த பெருமாள் | 142 |
| திருமணிக்கூடத்து நாயகன் | 150 |
| காவளம் பாடிக் கண்ணன் | 156 |
| பார்த்தன் பள்ளிச் செங்கண்மால் | 161 |

# 1. சித்திரக்கூடத்துச் செங்கண்மால்

**எம்பெருமானின்** திருவடியின் பெருமையினை எல்லாச் சமயங்களும் போற்றிப் புகழும். ஆயினும், வைணவ சமயம் அவ்வாறு புகழ்வதில் ஒரு தனி ஊற்றத்தைக் காணலாம். **ஆளவந்தார்** என்று வைணவர்களால் போற்றப்பெறும் **யமுனைத் துறைவர்** தம்முடைய 'தோத்திர ரத்னத்தில்' இதன் பெருமையினை அழகுற ஓதியுள்ளார். தேனையே உணவாக உடைய வண்டு - **மதுவிரதம்** - தேன் நிறைந்த தாமரை மலரில் இருந்து கொண்டிருக்க அதனை விட்டு, நாவினை நனைப்பதற்கும் போதாமல் இருக்கின்ற தேனையுடைய முள்ளில் பூவைக் கண்ணாலும் பாராததைப் போன்று எம்பெருமானுடைய தேனே மலரும் திருவடித் தாமரைகளினுடைய இனிமையில் மனம் அழுந்தின ஒருவன் மற்றொரு அற்ப இன்பத்தை விரும்பமாட்டான் என்கின்றார்.[1] அடுத்த சுலோகத்தில் அவனுடைய திருக்கழல் இணையை வணங்குவதாகச் செய்யும் அஞ்சலி[2]யின் பெருமை அளவிறந்ததென்று அருளிச் செய்கின்றார்.

அடையத்தக்க பொருளாக இருக்கும் எம்பெருமான் அவனை அடையும் வாயாகவும் அமைவான். அவனை அடைவதற்கு எம்பெருமாட்டி புருஷகாரமாக அமைவாள். இது வைணவ தத்துவம். இவர்கள் இருவரும் சேதநரைக் கைவிட்டாலும், எம்பெருமானுடைய திருவடிகள் தம்மைப் பற்றினாரைக் கைவிடா. அவை மிக்க உறுதியுடையனவாகும். இதனை,

> **"பிராட்டியும் அவனும் கைவிடினும், திருவடிகள்**
> **விடாது, திண்கழலாயிருக்கும்"[3]**

1. தோத்தர ரத்னம் – 27
2. அஞ்சலி – அஞ்ஜலி. கைகளைக் கூப்புவதற்கு அம்ஜலி என்று பெயர். இச்செய்கை (அம்ஜலயதி) எம்பெருமானை நீர்ப்பண்டமாக உருகச் செய்தலால இதற்கு இப்பெயர் வந்தது. இஃது ஓர் அடையாளமாகும்.
3. முமுட்சுப்படி – 146.

என்று கூறும் முமுட்சுப்படி. இதனைச் சற்று ஆழ்ந்து சிந்திப்போம். பிராட்டியார் சேதநனுடைய துன்ப நிலையைக் கண்டு மனமிரங்கி அவனை ஏற்றுக் கொள்ளுமாறு எம்பெருமானுக்குப் பரிந்துரைக்கின்றார்; புருஷகாரம் செய்கின்றார். இந்த நோக்குடைய அவர் சேதநனுடைய குற்றங்களை அவனுடைய திருக்குறிப்பிற்குக் கொண்டுவரமாட்டார் என்பது உறுதியே. ஆயினும், எம்பெருமான் மனத்தில் இவனை ஏற்றுக்கொள்ளும் எண்ணத்தை ஊன்றுவிப்பதற்காக ஒருகால் சில சிறு குற்றங்களை எடுத்துரைத்தல் கூடும். இங்ஙனம் உரைக்கும் முறையில் பிராட்டியார் கைவிடுவர். அந்தச் சேதநனிடம் ஊன்றிய அன்பு கொண்ட எம்பெருமானும் தனக்குள்ள வாத்சல்யம் முதலிய குணங்களால் 'என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்' என்று கூறி அவனை ஏற்றுக்கொள்ள முன்வந்து நிற்பன். ஆயினும், அவனும் ஒருகால் கைவிடுவதுண்டு. இங்ஙனம் சேதநனுக்கு நன்மையே புரியவல்ல இருவரும் கைவிடினும் தம் அழகினால் சேதநனை அப்புறம் செல்லாதவாறு அகப்படுத்திக் கொள்ளும் அவனுடைய 'இணைத் தாமரையடிகளோ' சேதநனைவிடாது பற்றிக்கொள்ளும் திண்ணம் வாய்ந்தன வாயிருக்கும். இதனைத் திருவுள்ளங் கொண்ட நம்மாழ்வாரும்,

> **"ஈறுஇல**
> **வண்புகழ் நாரணன்**
> **திண்கழல் சேரே"**[4]

என்று கூறியருளினார்.

சேஷபூதனுடைய சொரூபத்தை நோக்கினாலும் அவன் இறங்குந்துறை எம்பெருமானுடைய திருவடிகளேயாகும். இதைப் **பிள்ளை உலக ஆசாரியர்** ஓர் அழகிய எடுத்துக்காட்டால் விளக்குவர்.

> **"சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்துறை, ப்ரஜை**
> **முலையிலே வாய்வைக்குமாப் போலே"**[5]

(சேஷி – தலைவன்; சேஷபூதன் – அடியான்; ப்ரஜை – குழந்தை.)

பாலுண்ணும் பச்சைப் பசுங்குழவி எங்ஙனம் அன்னையின் பிற உறுப்புகள் யாவையும் விட்டுத் தான் உயிர்வாழ்வதற்கு இடனாக உள்ள அவளுடைய கொங்கையிலே வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே தலைவனாகிய எம்பெருமானைப் பற்றப் புகும் அடியானும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டுத் தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவனுடைய திருவடிகளையே பற்று

4. திருவாய் 1–2:10 5. மேலது – 147

கின்றான். குழந்தை முலையைப் பற்றுதலும் அடியான் திருவடியைப் பற்றுதலும் அவரவருவருடைய சொரூபத்திற்கு இயல்பாய் அமைந்ததாகும்.

அயிந்தை அண்ணலைச் சேவித்த நாம் சித்திரகூடத்துச் செங்கண்மாலை வழிபடும் நோக்கத்துடன் கடலூரிலிருந்து சிதம்பரத்தை நோக்கி இருப்பூர்தியில் வருங்கால் இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் சிதம்பரம் நிலையத்தில்[6] இறங்கி நிலையத்தின் அருகிலுள்ள விடுதிக்குச் செல்லுகின்றோம். நன்னீராடித் தூய ஆடைகளை உடுத்திக்கொண்டு தில்லைச் சித்திரகூடம் என்ற திருக்கோயிலுக்குப் போகச் சித்தமாகின்றோம். போகும்போதே திருக்கோயிலின் பெயர் ஆராய்ச்சியில் நம் மனம் ஈடுபடுகின்றது. ஆதியில் இத்தலம் **தில்லை** (Excoecaria Agallocha Linn) என்ற ஒருவகைப் புதர்ச் செடிகள் நிறைந்த வனமாயிருந்தமையின் **தில்லை** என்ற பெயர் பெற்றது. **சித்திரகூடம்** என்பது விசித்திரமான சிகரங்களையுடையதெனப் பொருள்படும் காரணப் பெயர். இஃது இராமபிரான் வனவாசம் செய்த காலத்து அவனது திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருந்தவொரு மலை; அதனைப் போலவே இத்தலமும் எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருப்பது பற்றி அப்பெயரே இதற்கும் இடப்பெற்றது போலும். இந்தச் செய்தியை நினைத்தவுடன் சீதாப் பிராட்டியுடன் இராமபிரான் சித்திர கூட மலையில் இருந்த பொழுது பிராட்டிக்குப் பெருமான் சித்திரகூடக் காட்சிகளைக் காட்டுவதாக அமைந்த கம்பன் பாடல்களில் ஆழங்கால படுகின்றோம். திருமணமானவுடன் அயோத்தியை அடைந்து அரக்கர் பாவத்தாலும் அல்லவர் இயற்றிய தவத்தாலும் நாடாளும் பொறுப்பை விட்டுக் கானாளச் சென்ற காகுத்தனின் தேன் நிலவுக் (Honey Moon) காட்சிகளன்றோ இவை? இக்காட்சிகள் ஒவ்வொன்றாக மனத்திரையில் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் நிலையில் இந்தத் திருக்கோயிலுக்குப் போகுமாறு "தில்லை திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே" என்று ஒரு முறைக்கு ஒன்பது முறையாக ஆற்றுப்படுத்தும் திருமங்கையாழ்வாரின் பாசுர ஒலி நம் சிந்தையில் ஒலித்துக் கொண்டிருக்க நாம் கீழைக் கோபுர வாயிலை அடைகின்றோம். பல மண்டபங்களையும் தாண்டி எம்பெருமான் சந்நிதிக்கு வருகின்றோம்.

6. இது கடலூர் மயிலாடுதுறை இருப்பூர்திப் பாதையில் உள்ளது.

இங்கு அர்ச்சாவதார நிலையில் கோயில் கொண்டிருப்பவரே **தில்லைக் கோவிந்தராசர்.** சித்திர கூடத்துச் செங்கண்மால். இவர் தில்லைச் சிற்றம்பலவனின் திருநடனத்தை அறிதுயில் கொண்ட நிலையில் அநுபவித்து மகிழ்கின்றார். **'கோயில்'** என்றால் வைணவர்கள் திருவரங்கத்தையும் சைவர்கள் சிதம்பரத்தையும் குறிப்பது மரபு. இந்தப் பெயர் ஒற்றுமை கருதியே திருவரங்கத்தில் அறிதுயில் கொண்டுள்ள அரங்கநாதனைப் போல் கோவிந்தராசரும் இங்கு வந்து காலை நீட்டிப்படுத்துக் கொண்டார் போலும். தில்லைச் சிற்றம்பலவனும் மனம் ஒப்பித் தனது பெரிய மாளிகையில் தன் கனகசபைக்கு அருகிலேயே ஒரு பகுதியை ஒதுக்கித் தந்து மகிழ்கின்றனன் போலும். தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் ஆனந்தக் கூத்தனைச் சேவிப்பது போலவே கோவிந்தராசரையும் சேவிக்கின்றனர். இதனை,

**மூவாயிர நான்மறை யாளர் நாளும்**
**முறையால் வணங்க அணங்காய சோதி**
**தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்**
**திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே.**[7]

என்று திருமங்கையாழ்வாரும்,

**"தில்லை நகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்**
**அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த"**[8]

என்று **குலசேகரப் பெருமாளும்** குறிப்பிட்டிருப்பதால் அறியலாம். இவற்றால் ஆழ்வார்கள் காலத்தில் கோவிந்தராசரின் வழிபாடுகள் தில்லை மூவாயிரவரான தீட்சிதர்களிடமே இருந்திருக்கக் கூடும் எனக் கருத இடந்தருகின்றது. சில நூற்றாண்டுகட்கு பின்னர்தான் (கி.பி. 1543 இல்) தனிப்பட்ட வழிபாடுகள் ஏற்பட்டனவாக அறியக் கிடக்கின்றது. இந்தக் கோவிந்தராசரை குலசேகராழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

**குலசேகரர்** இராமாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டவர் என்பது எல்லோரும் அறிந்த செய்தியாகும். தசரதச் சக்கரவர்த்தி இராமனைப் பிரிந்த அளவில் புலம்பிய **'புலம்பல் தன்னை'** இரங்கிப் பேசின பேச்சுகளின் வடிவமாக ஆழ்வார் அருளிச் செய்த திருமொழியால் இதனை அறியலாம்.

**"கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்**
**குலமதலாய்! குனிவில் ஏந்தும்**
**மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்**
**மனம் உருக்கும் வகையே கற்றாய்**

7. பெரி. திரு. 3–2:8 8. பெரு. திரு. 10:2
9. பெரு. திரு. 10:11

**மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப்போய்**
**வியன்கான மரத்தின் நீழல்**
**கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ?**
**காகுந்தா! காரிய கோவே!"[10]**

இதில் ஆழ்வார் தன்னைத் தயரதனாகவும் இராமபிரானைத் தன் மகனாகவும் நினைந்து புலம்பும் பாசுரம் கல்நெஞ்சத்தையும் கரைக்கும் தன்மையதாக அமைந்திருப்பதைக்கண்டு மகிழலாம். ஒரு சமயம் இராமாயணக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது இராமபிரான் எண்ணிறந்த சேனையோடெதிர்த்த கர தூடணாதியரை யாதொரு துணையுமின்றி எதிர்த்துப் போருக்குச் சென்றார் என்ற கட்டத்தில் கதை வரும்போது ஆழ்வார் அந்நிகழ்ச்சி அன்றுதான் நடைபெறுவதாக நினைத்து தம் சேனைகளையெல்லாம் போருக்குச் சித்தமாய் முன் செல்லுமாறு பணித்தார் என்றும், சிறந்த சிந்தனையாளராகிய கதை சொன்ன புராணிகர் பகைவர்கள் அனைவரையும் தாம் ஒருவராகவே போர் செய்து வென்றார் என்றும், ஆழ்வாரும் சேனையைத் திருப்பிக் கொண்டு பயணத்தை நிறுத்தினார் என்றும் வழங்கும் செவிவழிச் செய்தியும் இவரது இராமபக்தியின் உறைப்பினைத் தெளிவுறுத்துகின்றது.

தில்லைக் கோவிந்தராசரை ஆழ்வார் இராமபிரானாகவே காண்கிறார். அர்ச்சாவதார மூர்த்தியை விபவாவதாரமாகவே கண்டு மகிழ்கின்றார். இராமபிரானது வரலாற்றை வால்மிகி பகவான் பேசியநுபவித்ததைப் போலவே தாமும், பேசி அநுபவிக்கின்றார் ஒரு திருமொழியில். ஆழ்வாரில் மனத்திரையில் இராமபிரான் 'உலகனைத்தும் விளக்கும் சோதி'யாகவும், 'வெங்கதிரோன் குலத்து விளக்காகவும், செங்கண் நெடு கருமுகிலாகவும் விண் முழுதும் உய்யக் கொண்ட வீரனாகவும்' காட்சி அளிக்கின்றார். பெருமானை 'எங்கள் தனி முதல்வன்' என்றும் 'எம்பெருமான்' என்றும் போற்றிப் புகழ்கின்றார்.[11] இராமபிரானின் வாழ்க்கையில் நேரிட்ட ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் ஆழ்வாரின் மனத்திரையில் இடம்பெறுகின்றது. தாடகை வதம், விசுவாமித்திரரது வேள்வி காத்தல், வேள்விக்கு இடையூறு விளைவித்த சுபாகுவை வானுலகுக்கேற்றல், மாரீசனைக் கடலில் தள்ளல் போன்ற நிகழ்ச்சிகள் நினைவிற்கு வருகின்றன. இவற்றிற்குத் துணையாக அமைந்த கோதண்டத்தை 'எவ்வரு வெம்சிலை' என்று போற்றுகின்றார்.[12] அதனை, "வேறொருவரால் அடக்கியாள வொண்ணாமல் காணவே ப்ரதிபட்சம் முடியும் படியான

10. மேலது 10:3
11. பெரு. திரு. 10:1
12. பெரு. திரு. 10:2

ஸ்ரீ சார்ங்கம்'' என்று வியாக்கியானமும் போற்றுகின்றது. 'இராமன் தன்னை இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே' என்று தனது அவாவையும் வெளியிடுகின்றார். இராமபிரானுக்கு அடியவனான பரதாழ்வானுக்கு அடிமை பூண்டொழுகின சத்துருக்கனன் போலப் பாகவததாசனாக வேண்டுமென்பது ஆழ்வாரின் பேரவா. பின்னர், சனகன் கன்யாசுல்கமாக வைத்திருந்த வில்லையிறுத்து மைதிலியை மணத்தல், அயோத்திக்குத் திரும்பும்போது எதிர்வந்து தோன்றின தான் அவதரித்த க்ஷத்திரிய சாதியினரின் பகையாக இருந்த பரசுராமனைப் பங்கப்படுத்தல் போன்ற செயல்கள் இவர் மனத்திரையில் தோன்றுகின்றன.[13] பின்னர் அடுத்து, கைகேயியின் சொற்படி வழிவழியாக வரும் அரசபாரத்தைக் கைவிட்ட நிகழ்ச்சி, குகப்பெருமான் நாவாய் செலுத்தி உதவின செய்தி, பரதாழ்வானுக்கு மரவடியையும் அரச பாரத்தையும் நல்குதல் ஆகியவற்றில் ஆழங்கால்பட்டு மகிழ்கின்றார். இராமபிரானும் சீதாப்பிராட்டியும் சித்திரகூட மலையில் உலவி வீற்றிருக்கும் காட்சி ஆழ்வாரின் நினைவிற்கு வருகின்றது. இக்காட்சியை பிற்பட்டார் கேட்டு அநுபவிக்க முடியுமேயன்றித் தாம் கண்டு அநுபவிக்கப் பெறாமல் கண்விடாய்த்து நிற்கும் குறைதீர எக்காலத்திலும் உள்ளார் அநுபவிப்பதற்காகவே தில்லைச் சித்திரகூடத்தில் வீற்றிருக்கின்றனன் என்று நினைந்து உள்ளம் நெகிழ்கின்றார். இக்காட்சியை நேரில் கண்குளிர சேவிக்கப் பெறுபவர்கட்கு நித்திய சூரிகளும் சிறிதும் சமமாகார் என்று கருதுகின்றது இவரது பக்தித் திருவுள்ளம்.[14]

இங்ஙனம் எண்ணிய நிலையில் விராதனை விண்ணுக்கேற்றல், அகத்தியரிடமிருந்து கொடுத்து வைத்திருந்த வில்லை பரசுராமனிடம் பெற்ற இராமபிரான் வாங்குதல், சூர்ப்பணகையின் மூக்கையறுத்தல், கர-தூடணர் உயிர் வாங்குதல், மாய மானாய் வந்த மாரீசனை அழித்தல் போன்ற செய்திகளும்[15] தொடர்ந்து வைதேகியைப் பிரிந்ததால் இராமபிரானுக்கு ஏற்பட்ட வருத்தத்தால் தளர்வெய்துதல், சடாயுவுக்கு வீடுபேறு அளித்தல், சுக்கிரீவனுடன் நட்புக் கொள்ளல், வாலியை வானுலகிற்கு அனுப்புதல், மாருதியால் இலங்கையைச் சுடுவித்தல் போன்ற நிகழ்ச்சிகளும்[16] இவற்றை அடுத்து, குரைகடலை அடலம்பால் மறுக எய்தல், சேது அமைத்து இலங்கையை அடைதல், இராக்கதர்களையும் அவர்களுடைய அரசன் இராவணனையும் கொன்றழித்து வீடணனுக்கு ஆட்சியை ஈதல் போன்ற நிகழ்ச்சிகளும்[17]

13. பெரு. திரு. 10:3
14. பெரு. திரு. 10:4
15. மேலது 10:5
16. மேலது 10:6
17. மேலது 10:7

பின்னர் அயோத்திக்கு மீண்டு வந்து ஆட்சியை அடைதல், இராவணனின் தொல் கதையை அகத்தியன் வாயால் கேட்டல், மைதிலி பெற்றெடுத்த தன் மைந்தர்களான குசலவர்களின் செம்பவளத் திரள்வாயால் தன் வரலாற்றைக் கேட்டல் போன்ற நிகழ்ச்சிகளும்[18] சம்புக வதம், அந்தண குமாரனுடைய உயிர்மீட்டல், அகத்தியன் அளித்த மணிமாலையை அணிதல், சத்துருக்கனைக் கொண்டு இலவணாசுரனைக் கொல்வித்தல, துருவாசரின் சாபத்தால் இளைய பெருமாளைத் துறத்தல் போன்ற நிகழ்ச்சிகளும்[19] தான் சோதிக்கு எழுந்தருள்கின்ற நாளில் முன்னதாக அயோத்தி மக்களையும், பிற உயிர்களையும் வைகுந்தத்திற்குப் போகச் செய்தல், கருடாழ்வான் தாங்க, நித்திய சூரிகளும் முக்தர்களும் எதிர்கொள்ள, ஆதி இடமான பரமபதத்திற்கு எழுந்தருளல் போன்ற நிகழ்ச்சிகளும்[20] ஒன்றன்பின் ஒன்றாக திரைப்படத்தில் வெள்ளித் திரையில் காண்பதுபோல் ஆழ்வாரின் மனத்திரையில் காணப்பெறுகின்றன. தில்லைத் திருச்சித்ரகூடத்தில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தராசர் அவ்விராமபிரானே என்று கருதி துதித்துய்யுமாறு அறிவுறுத்துகின்றார். இப்பெருமானைத் தலைவணங்கி அஞ்சலி செய்து சேவிக்கப் பெற்றோர் நடமாடுவதால் இந்நிலம் பெரும்பேறு பெற்றது என்றும், இப்பெருமானின் திருவடிகளைத் தலைமேற் கொள்ளலாகிய அரசினைப் பெற விரும்புவதன்றி அதற்கு மாறாக சுவாதந்திரியம் பாராட்டுகின்ற அரசினை ஒரு பொருளாகத் தாம் மதிக்கவில்லை என்றும் எக்களிப்புடன் பேசுகின்றார் தம் பாசுரங்களில். இராமகாதை முழுவதும் சுருக்கமாக நமக்குக் காட்டப் பெறுகின்றது இத்திருப்பாசுரங்களில்.

நடு நாட்டுத் திருப்பதிகளான திருக்கோவலூரையும் திருவயிந்திபுரத்தையும் மங்களாசாசனம் செய்தருளின பின்னர், சோழ நாட்டுத் திருப்பதிகளை மங்களா சாசனம் செய்யத் திருவுள்ளம் பற்றின திருமங்கையாழ்வார் தில்லைத் திருச்சித்திர கூடத்தில் முதன்முதலாக இழிகின்றார். இத்திருப்பதியின் எழிலார்ந்த சூழ்நிலை இவர் மனத்தைக் கவ்வுகின்றது. “சேமங்கொள் பைம்பூம் பொழில் சூழ்ந்த தில்லைத் திருச்சித்திர கூடம்[21] என்றும், தெய்வப் புனல் சூழ்ந்தழகாய தில்லைத் திருசித்ர கூடம்[23]” என்றும் வருணிக்கின்றார். ஊரைச் சூழ்ந்த சோலைகளில் மயில் கூட்டங்கள்

18. மேலது 10:8
19. பெரு.திரு. 10:9
20. மேலது 10:10
21. பெரி. திரு. 3–2:5
22. மேலது 3–2:7
23. மேலது 3–3:1

ஆடுகின்றன; அவை சோலைகளே ஆடுவது போல் காட்சி அளிக்கின்றன. தீர்த்தங்கள் மதுவோடு கூடிப் பெருகுவதால் மதுவின் நசையால் வண்டுகள் திரளாக மொய்க்கின்றன. அருகில் வெள்ளாறு (நிவா என்று குறிப்பிடுவர் ஆழ்வார்) தில்லையை வலங்கொண்டு வருகின்றது. இந்த ஆறு யானைக் கொம்புகளையும், சந்தன மரங்களையும் தள்ளிக் கொண்டு பெருக்கெடுத்து வருங்கால் முத்துகளைக் கொழித்துக் கொண்டு வந்து கழனிகளில் தள்ளும்; அந்த முத்துகள் விதை விதைத்தது போல் காட்சி அளிக்கும். அவற்றைக் கயல்கள் கண்டு இவை என்னவோ; என்று வெருவித் தாவித் திரியும்.[24] ஊரோ செம்பொன் மணிமாடங்கள் நிறைந்திருப்பது. நான்மறையாளர்கள் நாடோறும் தீ வளர்த்து வைதிக கருமங்களைத் தவறாது செய்து வரும் ஊர். இத்திருத்தலத்தில் மூலவர் **திருப்பாற்கடல் நாதன்போல்** சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இவர் திருநாமம் **கோவிந்தராசர்**. தாயார் கமலவல்லி. விமானம் சாத்விக விமானம்.

வீடுபேற்றை அவாவும் முமுட்சுகள் ஊண் உண்ணாது நீரையும் காற்றையுமே உட்கொண்டு உயிர்காத்துப் புலன்களை ஒடுக்கித் தவம் புரிகின்றனர். சிலர் இளங்காய்களையும் நெடுநாள் உலர்ந்த பழங்களையும் வீசுகின்ற வெப்பமான காற்றையும் உட்கொண்டு ஐந்து தீயூடு நின்று தவம் செய்கின்றனர்.[25] இவர்களைக் கண்டு கழிவிரக்கம் கொண்ட திருமங்கை ஆழ்வார் தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேருமாறு ஆற்றுப்படுத்துகின்றார். இத்திருத்தலம் சென்று சேர்ந்தால் பரமபுருஷார்த்தம் எளிதாகக் கிடைக்கக் கடவதாயிருக்க. அரிய வழிகளை மேற்கொள்வது ஏன்? என்று வினவுகின்றார், ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது பல விபவாவதாரப் பெருமான்களையும் அநுசந்திக்கின்றார். அவர்களுடைய வீரச் செயல்களிலும் விசித்திரச் செயல்களிலும் ஆழங்கால்படுகின்றார். ஒரு காலத்தில் இந்த வையம் பரந்த கடல் வெள்ளத்தில் மூழ்கிப்போக அப்பொழுது மிக்க சினங்கொண்ட வராகத்திருவுருவாகி அதைத் தம் கோட்டால் தூக்கிக் கொணர்ந்தவன்[26] அழகிய வாமன உருவங்கொண்டு மாவலியின் வேள்வி நிலத்திற்குச் சென்று மூவடி மண் இரந்து பெற்றவன்[27]. இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரியர்களைக் கொன்றழித்த பெருமான்[28]. வருணனின் உதாசீனத்தால்அணைகட்ட வராதது கண்டு

24. பெரி. திரு. 3–2:7, 8
25. மேலது 2:1
26. பெரி. திரு. 3–2:3
27. மேலது 3–2:4
28. மேலது 3–2:5

அவன் மீது சினங்கொண்டு 'அனைவரும் நடந்தே செல்லும்படி கடலை வற்றச் செய்வேன்' என்று கூறிப் பொங்கி எழுந்து, வருணனைச் சரணடையச் செய்து சேது கட்டியவன்[29]. இலங்கை நகரை ஒரம்பால் அழித்தவன்[30]. பிரகலாதாழ்வான் பொருட்டு நரசிம்ம உருவத்துடன் தோன்றி அவன் தந்தை இரணியனை அழித்தவன்[31]. இத்தகைய எம்பெருமான்தான் சித்திர கூடத்திருப்பவன் என்கின்றார் ஆழ்வார்.

கிருஷ்ணாவதாரத்திலும் அதிகமாக இழிந்து அவ்வதாரத்தில் நிகழ்த்திய பல அற்புதச் செயல்களை நினைந்து போற்றுகின்றார் ஆழ்வார். நப்பின்னைப் பிராட்டிக்கும் பெரிய பிராட்டியார்க்கும் கொழுநன். குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அசுரனின் வாயைப் பிளந்து கொன்றவன்[32]. இரட்டை மருத மரங்களிடையே தவழ்ந்து அவற்றை முறித்துத் தள்ளினவன். கோவர்த்தன மலையைக் கொற்றக் குடையாக எடுத்து ஆயர்கட்கும் ஆநிரைக்கும் கல்மாரியால் வந்த துன்பத்தைக் காத்தவன். அழகிய பெண்ணுருவங் கொண்டு வந்து நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயன்ற பூதனையின் உயிர் குடித்தவன். அறியாதார்க்கு ஆனாயனாகிப் போய் ஆய்ப்பாடி, உறியார் நறு வெண்ணெய் உண்டு உகந்தவன். நப்பின்னையின் பொருட்டு ஏழு கொல்லேறு களைத் தொலைத்து திருவாய்ப்பாடியின் தெருவில் கூத்தாடியவன். குவலயாபீடம் என்னும் களிற்றின் கொம்புகளிரண்டையும் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவது போல் பிடுங்கி அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அக்களிற்றினையும் அதன் பாகனையும் உயிர் தொலைத்தவன்.[33] இத்தகைய எம்பெருமான் 'பின்னானார் வணங்கும் சோதியாக' கோவிந்தராசனாக திருத் தில்லையில் கோயில் கொண்டுள்ளவனாக ஆழ்வார் அநுசந்தித்து அநுபவிக்கின்றார். இவரை நாம் இன்று வணங்கி வாயாரா வாழ்த்துகின்றோம்.

ஆழ்வார் தம் பாசுரங்களில் 'வருகின்றான், வருவான்' என்று அருளிச் செய்திருப்பதால், அவர் இத்திருப்பதிக்கெழுந்தருளின சமயம் பெருமாளுக்குத் திருவீதிப் புறப்பாடாக இருந்திருக்காலா மென்று சிலர் கருதுவர். இதனை நிலைநிறுத்த,

**"கருமுகில் போல்வதோர் மேனி**
**கையன ஆழியும் சங்கும்**
**பெருவிறல் வானர் சூழ**
**ஏழுல கும்தொழு தேத்த**

29. பெரி. திரு. 3–2:6
30. மேலது 3–3:6
31. மேலது 3–3:8
32. மேலது 3–2:7, 8 3–3:1
33. பெரி. திரு. 3.3:1–7

**ஒருமக ளாயர் மடந்தை**
**ஒருத்தி நிலமகள் மற்றைத்**
**திருமகளோடும் வருவான்**
**சித்திர கூடத் துள்ளானே"[34]**

(கருமுகில் – காளமேகம்; விறல் – ஆற்றல்; ஆயர் மடநதை – நப்பின்னை (நீளாதேவி); நிலமகள் – பூமிப் பிராட்டியார்; திருமகள் – பெரிய பிராட்டியார்)

என்ற பாசுரத்தைக் காட்டலாம். திருமேனி காளமேகம் போன்றுள்ளது. அதற்குப் பொலிவு தருவனபோல் திருக்கைகளிலுள்ள திருவாழி திருச்சங்குகள் ஒளிர்கின்றன. இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாங்கள் சுற்றிலும் சூழ்ந்து வருகின்றன. மற்றுமுள்ளாரும் தொழுது துதிக்கின்றனர். சீதேவி பூதேவி நீளதாதேவி என்ற நாச்சிமார் மூவரும் எம்பெருமானும் எழுந்தருளியுள்ளனர். இப்படிப்பட்ட விபவம் பொலியப் புறப்பட்டெழுந்தருளா நின்றனன் எம்பெருமான் என்று கண்ணாரக் கண்டு வாயாரப் பேசுகின்றார் ஆழ்வார்.

இந்த நிலையில் திவ்விய கவி **பிள்ளைப் பெருமாள்** அய்யங்காரின் பாசுரம் நினைவுக்கு வருகின்றது. இது பாசுரம்.

**அடியால் உலகெல்லாம் அன்றளந்து கொண்ட**
**நெடியானைக் கூடுதியே நெஞ்சே – கொடிதாய**
**குத்திர கூடங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்**
**சித்திரகூடம் கருதிச் செல்[35]**

(நெடியான் – திரிவிக்கிரமன்; சூத்திரம் – இழிகுணம் – கூடு – உடல்; அங்கி – நெருப்பு; கொளுந்தாமுன் எரித்து விடுவதற்கு முன்).

இறப்பதற்கு முன்னர் சித்திரகூடம் சென்றால் தில்லைக் கோவிந்தனை வழிபட்டு நற்கதி அடையலாம் என்று தம் நெஞ்சிற்கு அறிவூட்டுகின்றார் இப்பாடலில். கோவிந்தன் என்ற திருநாமம் பசுக்களைக் காத்தவன், உயிர்களை அடிமையாக உடையவன், கதிரவனின் கதிர்களில் தங்கியிருப்பவன், நான்மறையை நான்முகனுக்கு உபதேசித்தவன், வராக அவதாரம் செய்து பூமியை அடைந்தவன் என்ற பொருள்களையெல்லாம் தாங்கி நிற்கின்றது என்பதை நாம் சிந்திக்கின்றோம். மணிவாசகப் பெருமானும் கோவிந்தராசரின் சயனத் திருக்கோலத்தைக் குறிப்பிட்டுள்ளமையும் நம் நினைவிற்கு வருகின்றது.[36]

இந்நிலையில் ஆழ்வார்களின் பாசுரங்களை அவன் சந்நிதியில் ஓதி உளங் கரைகின்றோம். அவர்கள் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முனைகின்றோம். பின்னர் தீர்த்தம் திருத்துழாய் சடகோபம்

34. மேலது 3.3:7
35. நூற். திரு., அந். 22
36. திருக்கோவை – 86

சாதிக்கப்பெற்று திருக்கோயிலின் ஓர் அமைதியான இடத்தில் அமர்ந்து இத்திருக்கோயிலைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைச் சிந்திக்கின்றோம். கோவிந்தராசர் அறிதுயில் கொண்டுள்ள திருக்கோயிலை, எட்டாம் நூற்றாண்டில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலை நிறுவிய **இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லன்** (கி.பி. 17-782) எடுப்பித்தான். 12ஆம் நூற்றாண்டில் **அநபாய சோழன்** என்ற இரண்டாம் குலோத்துங்கள் (கி.பி. 1133-1150) சிற்றம்பலத்தைப் பெருக்கி அமைத்தற் பொருட்டு கோவிந்தராசப் பெருமானை எடுத்துக் கடலில் எறிந்துவிட்டான் என்றும், **இராமாநுசர்** இந்தத் திருமேனியைக் கைப்பற்றித் திருப்பதியில் பிரார்த்தித்தார் என்றும் கூறுவதற்குச் சான்றுகள் பல உள்ளன.

**கிருட்டிண தேவராயர்** தம்பி **அச்சுதராயரது** ஆட்சியில் கி.பி. 1539 இல் மீண்டும் இவர் இவருடைய பழமைத்தானத்தில் பிரதிட்டிக்கப் பெற்று **வைகானச முறைப்படி** வைணவ பட்டாச்சார்யர்களால் வழிபாடுகள் செய்துவர நிர்பந்தங்கள் விடப்பெற்றுள்ளன என்ற செய்தி கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது. திருச்சித்திர கூடத்தின் பல பகுதிகளைக் கட்டிய செய்திகள் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை. இராயவேலூரிலிருந்து அரசோச்சிய **விசயநகர வமிச சீரங்கராயர்** இக்கோயிலை முகமண்டபத்துடன் புதிதாகவே வனைந்து, வழிபாடு செய்யும் வைணவர்கட்கு ஐந்து சிற்றூர்களை இறையிலியாக அளித்தார். **செட்டி நாட்டரசர் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார்** இத்திருக்கோயிலின் முன்னணியாகவுள்ள நாற்பதுகால் மண்டபத்தை அமைத்தார். இப்போதுள்ள திருச்சித்திரகூடத்தின் அமைப்பு 1934இல் **செட்டி நாட்டரசரின் திருமகனார் முத்தய்யா செட்டியார்** தமது நேர்பார்வையில் சுமார் மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அழகுற அமைத்ததாகும்.

வேறு சில செய்திகளும் அறியத்தக்கவை. ஒரு சமயம் சைவர்கட்கும் வைணவர்கட்கும் இங்கு நடந்த விவாதங்களைச் செஞ்சியில் அரசுரிமை தாங்கிய **கிருட்டிணப்ப நாயக்கர்** தீர்த்து வைத்தார் என்றும், ஆங்கில ஆட்சியில் பல விவாதங்கள் நீதித் தலங்களில் விவாதிக்கப் பெற்றன என்றும் இறுதியாக. செட்டி நாட்டரசர் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் விவாதங்களை முழுதும் சமரசப்படுத்தினார் என்றும் நினைவு கூர்கின்றோம். எம்பெருமானைக் கண்டுகளித்த பக்திப் பெருக்குடனும் சில அரிய வரலாற்றுச் செய்திகளுடனும் திருக்கோயிலை விட்டு வெளிவருகின்றோம்.

# 2. காழிச் சீராமவிண்ணகரத் தாடாளன்

**இவ்வுலகில்** நாம் வாழும் நாட்களில் பகவதநுபவம் பெறுதலில் பலகை உண்டு. அவற்றுள் ஒன்று ஈசுவரன் உகந்து கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களில் பேரவாக்கொண்டு ஆங்காங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான்களின் அநந்த கல்யாண குணங்களை அநுபவித்துக் கொண்டு எண்ணம், சொல், செயல்களினால் கைங்கரியம் செய்தலையே பொழுது போக்காகக் கொள்ளுதல் ஆகும். ஆழ்வார் பெருமக்களுள் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு அதிகமான திவ்விய தேசங்களைச் சேவித்தவர் திருமங்கையாழ்வார். இவர் அந்தந்த எம்பெருமான்களைச் சேவிக்கும் முறை மிகமிக நேர்த்தியானது. எம்பெருமான்களைச் சேவிக்கும் பாசுரங்கள் கம்பீரமான தமிழ் நடையில் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். பாடியும் அநுபவிக்கலாம்.

**"தான் உகந்த ஊரெல்லாம்**
**தன்தாள் பாடிப்**
**... ... ... ... ... ... ... ... ...**
**பூங்கோல் ஊர்தொழுதும்**
**போது நெஞ்சே**

என்பது அவர் வாக்கு. நெஞ்சை ஆற்றுப்படுத்தும் பாசுரம் இது. "என் நெஞ்சமே, எம்பெருமான் திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளுக்கெல்லாம் போந்து, அவனுடைய திருவடிகளைப் பாடி, வளப்பம் பொருந்திய திருக்கோவலூரைச் சேவிப்போம் வருவாயாக" என்கின்றார் இதில். இதே பாணியில் இன்னொரு பாசுரத்தில்,

1. திருநெடுந் . 6

**"உலகம் ஏத்தும்**
**கண்டியூர் அரங்கம் மெய்யம்**
**கச்சிபேர் மல்லை என்று**
**மண்டினார் உய்யல் அல்லால**
**மற்றையார்க் குய்ய லாமே?"[2]**
(ஏத்தும் – புகழும்)

என்று குறிப்பிடுவதும் சிந்திக்கத் தக்கது. இவற்றுள் கண்டியூர், திருவரங்கம் திருப்பேர்நகர் சோழ நாட்டுத் திருப்பதிகள். காஞ்சிபுரம், மாமல்லபுரம், தொண்டை நாட்டுத் திருப்பதிகள். திருமெய்யம் என்னும் திருப்பதி பாண்டி நாட்டைச் சேர்ந்தது. இந்தத் திருப்பதிகளைப் பற்றிப் போற்றிக்கொண்டு அவற்றை அடைந்தவர் எவரோ அவர் உய்வை அடைவரே அல்லாமல், அங்ஙனம் செய்யாத மற்றோர் உய்ய வழி இல்லை என்பது இவ்வாழ்வாரின் திருவுள்ளம். ஏனைய திருப்பதிகளையும் இவற்றுடன் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

திருச்சித்திர கூடத்தைப்பற்றிப் பேசும்போது "தில்லைத் திருச்சித்திர கூடம் சேர்மின்களே"[3] என்கின்றார். காழிச் சீராமவிண்ணகரம் பற்றிப் பேசும்போது "காழிச் சீராமவிண்ணகரே சேர்மின் நீரே"[4] என்கின்றார். திருநறையூரைப் பற்றிப் பேசும்போது "திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே" என்கின்றார். இப்படிப் பல திருப்பதிகளையும் எடுத்துரைத்து 'சென்று சேருங்கள் - சென்று சேருங்கள்' என்றால், 'எந்தத் திருப்பதியில் சென்று சேர்வது' என்று வைணவ அடியார் ஒருவரை மற்றோர் அடியார் கேட்க அதற்கு அவர் 'ஆழ்வார் திருவாயில் நுழைந்து புறப்பட்ட திருப்பதிகள் எல்லாம் நாம் நுழைந்து புறப்பட வேண்டியது பிராப்தம்' என்று அவர் மறுமொழி பகர்ந்தது வைணவ சமூகம் நன்கு அறியும். இந்த ஆழ்வாரே 'பதியே பரவித் தொழும் தொண்டர்'[6] என்று குறிப்பிடுவதால் எம்பெருமான் உகந்தருளின நிலங்களெல்லா வற்றிலும் சென்று சென்று சேவிக்க வேண்டும் என்பது உட்கருத்து.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் நாம் மயிலாடுதுறை காளியாக்குடி அய்யர் விடுதியிலிருந்து[7] சீகாழிக்குப் புறப்படுகின்றோம். பேருந்தின் மூலம் (நாம் தங்கினது

2. திருக்குறுந் – 19
3. பெரி. திரு. 3.4
4. மேலது 3.4
5. திருவாய் 6.6.
6. பெரி. திரு. 7.1:7
7. மயிலாடுதுறையில் நம் போன்ற திருத்தலப் பயணிகள் தங்குவதற்கு நலல விடுதி. பழைய முறையிலிருப்பினும் எல்லா வசதிகளும் உள்ளன.

மே திங்கள் 1969) பேருந்து நிலையத்திலிருந்து சிறிது தொலைவு நடந்தே செல்லலாம். இருப்பூர்தியில் வருவோர் சீகாழி நிலையத்திலிருந்து இறங்கி வரலாம். நிலையத்திலிருந்து அரை மைல் தொலைவில் உள்ளது திருக்கோயில். ஆழ்வார் திருத்தலப் பயணமாகப் பரிவாரங்களுடன் இத்திருப்பதிக்கு எழுந்தருளுங் கால் பரிவாரங்களுடன் வந்த சிலர் "நாலு கவிப் பெருமாள்[8] வந்தார்" "பரகாலன் மத்தகஜம் வந்தார்" என்ற குரல் ஒலிகளை எழுப்பி ஆழ்வாரின் பெருமையை எடுத்தேத்திக் கொண்டு சென்றதாகவும், இவ்வூரிலிருந்த சில சைவ அடியார்கள் இக்கூட்டத்தின் முன் வந்து எங்கள் ஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இருக்கும் இடத்தில் இங்ஙனம் விருதூதிச் செல்லலாகாது" என்று சொல்லித் தடுத்ததாகவும், அது கேட்டு ஆழ்வார் சம்பந்தப் பெருமான் உள்ளவிடத்திற்குச் சென்று அவருடன் வாதப்போர் செய்யத் தொடங்கினதாகவும், அப்போது நாயனார் ஆழ்வாரை நோக்கி "உம் கவித்திறத்தை யாம் காணுமாறு முந்துற முன்னம் ஒரு பாடல் பாடும்" என்று சொன்னதாகவும், உடனே ஆழ்வார் சீராமவிண்ணகர் எம்பெருமான் மீது **"ஒரு குறளாயிரு நில மூவடி மண் வேண்டி"**[9] என்று தொடங்கி ஒரு திருமொழியைப் பாடியதாகவும், அதனைக் கேட்ட சம்பந்தப் பெருமான் மிகவும் வியந்து **"உமக்கு இவ்விருதுகள் யாவும் தகும், தகும்"** என்று சொல்லித் தமது வேலாயுதத்தை இவருக்குத் திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்து நன்கு பாராட்டி உபசரித்து வழிபட்டு வழிவிட்டு மீண்டதாகவும் பெரியோர் கூறும் இதிகாசம் ஈண்டு நினைவுகூரத்தக்கது.[10]

திருக்கோயிலில் நுழையும்போதே இத்திருப்பதி எம்பெருமானின்மீது ஆழ்வார் மங்களாசாசனம் செய்துள்ள திருமொழிப் பாசுரங்களைச் சிந்திக்கின்றோம். இத்திருப்பாசுரங் களின் பிற்பகுதி இத்திவ்விய தேசத்தைப் பற்றியயையும் முற்பகுதி இங்கு எழுந்தருளி இருக்கும் எம்பெருமானைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. இனி, இத்திவ்விய தேசத்தின் வருணனையில் ஆழங்கால்படுவோம். சுற்றியுள்ள வயல்களில் சூல் கொண்டுள்ள சங்குகள் கருவுயிர்க்கும் நிலையிலுள்ளன. அங்கு உழுகின்ற எருதுகள் அங்கும் இங்கும் ஓடுகின்றன. இந்த அதிர்ச்சியினால் சங்குகள் முத்துக்களை ஈனுகின்றன. வெள்ளை வெளேரென்றிருக்

8. நாலு கவிப் பெருமாள் – ஆசு கவி, மதுரகவி, சித்திர கவி, விஸ்தாரகவி என்ற நாலு வகையான கவித்திறங்களில் மிக்க வல்லமை பெற்றவர் என்றபடி.

9. பெரி. திரு. 3.4

10. இதன் வரலாறு பற்றிய இரு பாடல்கள் தனிப் ாபடல் திரட்டில் உள்ளன.

கின்ற இந்த முத்துகளைக் கொக்குகள் கண்டு அவற்றைத் தம்முடைய முட்டைகள் என்று மயங்குகின்றன. அவற்றைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டுள்ளன. கழனிகளில் எங்கும் தாமரை மலர்கள் நிறைந்துள்ளன. மீன்கள் குறுக்கும் நெடுக்குமாகத் துள்ளிக் குதிக்கின்றன (2). கழனிகளில் பயிர்களினிடையே உள்ள நெய்தல், குவளை, குமுதம், தாமரை இவற்றைக் களை பறிக்கும் கடைச்சிமார்கள் நெய்தல், குவளை மலர்களைத் தங்கள் கண்களாகவும், சிவந்த ஆம்பல் (குமுதம்) மலர்களைத் தங்கள் வாயாகவும், தாமரை மலர்களைத் தாங்கள் முகமாகவும் மயங்கிக் களை பறியாமல் கழனியை விட்டு வெளியேறுகின்றனர் (3, 5). கடலில் உள்ள சங்குகள் அவ்விடத்தை இகழ்ந்துவிட்டு நீங்கிச் சீகாழியில் வந்து சேர்கின்றன. தாழைகள் நிறைந்த கழனிகட்கு வருகின்றன. பின்னர் மழை நீர் வெள்ளமாகப் பெருகி வருகின்ற வாய்க்கால்களின் மூலம் ஊரிலுள்ள வீதிகளில் வந்து சேர்ந்து சங்குகளையும் முத்துகளையும் ஈனுகின்றன (7). அணில்கள் கிளை கிளையாகத் தாவித் தவழ்வதனால் பாக்கு மரங்களின் பழுத்த காய்கள் உதிர்ந்து விழுகின்றன. அவை பலாமரங்களின் காய்களின் கனத்தால் தாழ்ந்த கிளைகளில் நெருங்கியிருக்கும் பருத்த கனியப் பழுத்த பலாப் பழங்களின்மீது வீழ்வதால் அவை நசுங்கித் தேனைப் பொழிகின்றன (8). வண்டுகள் தம்முடைய பேடையோடும் சேர்ந்திருந்து நீர் நிலைகளிலுள்ள தாமரைப் பூவில் புகுந்து தேனைப் பருகி, அங்கே உறங்கி, அதன் பிறகு தாழை மடல்களில் பொருந்தியுள்ள பூந்தாதுத் துகள்களில் புரண்டு களித்து இசைபாடுகின்றன (9). இங்ஙனம் சீகாழியின் மருத நிலவளத்தைக் காண்கின்றோம்.

சீகாழி நகரக் காட்சியில் ஈடுபடுவோம். நகரிலுள்ள பெரிய மாடங்களில் பதிக்கப்பெற்ற நீல மணிகள் அந்திப் பொழுதை ஆதாரமாகவுடைய இருளை அதிகப்படுத்துகின்றன. அவற்றின் நடுவே அழுந்தியுள்ள முத்துகள் குளிர்ந்த திங்களின் நிலவொளியைக் காட்டுகின்றன. இவற்றின் இடை இடையே அழுத்தப் பெற்றுள்ள பவளங்கள் எழுஞாயிற்றின் சிவந்த ஒளியைப் பரப்புகின்றன (4). நகரிலுள்ள மாளிகைகள் மலைபோல் உயர்ந்துள்ளன. அந்த மாளிகையின் மீதுள்ள தளத்தில் நின்று உடுக்கை இடை மாதர்கள் நட்புடன் உரையாடி மகிழ்கின்றனர். அவர்களின் தாமரை போன்ற முகத்தின் ஒளியைக் கண்ட திங்கள் வெள்கி வருந்துகின்றான். நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், ஐந்து பெரு வேள்விகள், ஏழு சுரங்கள், வீதி நிறைந்த திருவிழாச் சிறப்புகள் ஆகியவற்றால் புகழ்பெற்றது இத்திருத்தலம் (1).

இனி, திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பற்றிய ஆழ்வாரின் அநுபவத்தில் ஆழங்கால் படுவோம். இந்த எம்பெருமான் உலகளந்த பெருமாளாதலால் 'ஒரு குறளா' என்று தொடங்கி வாமன திரிவிக்கிரகமாவதாரத்தை அநுசந்திக்கின்றார்.

**"ஒருகுறளா இருநில மூவடிமண் வேண்டி**
**உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்**
**தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த**
**தாடாளன் தாளணைவீர்"[11]**

(இருநிலம் – விசாலமான நிலம்; ஒடுக்கி . ஆக்கிரமித்து; ஒன்றும் . மூன்றாவது அடி நிலத்தையும்; தாடாளன் – பெருமை பொருந்தியவன், முயற்சியுள்ளவன்; தாள் – திருவடி)

இத்திருத்தலம் '**தாடாளன் சந்நிதி**' என வழங்குதலும் உண்டு. தனக்கு ஆயுள் மிகுதியுள்ளது என்று அகங்காரம் கொண்டிருந்த நான்முகனின் செருக்கை உரோமசன்மரைக் கொண்டு அடக்கியவன், சிவனின் சாவத்தைத் தீர்த்தவன். (2) உரோமசன்மரின் வரலாறு இதிகாச புராணங்களில் எங்கும் காணப்பெற்றிருப்பது. பலர் மூலம் பல வாறாகக் கேட்ட கதையைச் சுருக்கிக் கூறுவர். பிரதிவாதி பயங்கரம் அண்ணவகராசாரிய சுவாமிகள். உரோமசன்மர் உடல் முழுவதும் கரடிபோல் அடர்ந்த மயிர்களையுடைய ஒரு மாமுனிவர். இவர் நீண்ட காலம் வாழ்ந்து எம்பெருமானைச் சிந்தனை செய்ய விரும்பினார். ஒரு புண்ணிய நதிக்கரையில் தவம் செய்தார். பரந்தாமன் இவர் முன் சேவை சாதித்து இவர் விருப்பத்தைக் கேட்க, முனிவர் இந்த உடம்புடன் எம்பெருமானைத் தொழுது விரும்புவதால் பல்லாயிரம் நான்முகனுக்குரிய ஆயுளைத் தந்தருள வேண்டினார். பரந்தாமனும் திருவுள்ளம் உவந்து, "மாமுனிவரே, நான்முகனுடைய ஆயுளை நீர் அறிவீர். ஒரு நான்முகன் காலம் சென்றால், உம்முடைய உடம்பினின்றும் ஒரு மயிர் இற்று விழக் கடவது. இப்படி ஒவ்வொரு நான்முகனின் முடிவிலும் ஒவ்வொரு மயிராக இற்று 'இனி உம்முடைய உடம்பில் ஒரு மயிரும் இல்லை' என்று சொல்லத்தக்க நிலைமை நேரும் அளவும் நீர் வாழ்ந்திருக்கக் கடவீர்" என்று வரம் அருளினர் என்பது வரலாறு.

அடுத்து, கோலவராகாவதாரம் எடுத்து பூமிப் பிராட்டியாரை அண்டபித்தியினின்றும் விடுவித்துத் தம் கோட்டு நுனியில் வைத்தருளிய கோமான். வாணனுடைய ஆயிரம் தோள்களைத் தம் கூராழியினால் அறுத்தெறித்தவன் (3). வலிமிக்க ஏழு காளைகளை அடக்கிப் பின்னை பிராட்டியை மணந்த பெருமான். இரணியனின்

11. பெரி. திரு. 3.4:1

மார்பைப் பிளந்து அவனை முடித்தருளிய மாவீரன் (4). சத்திரியர்களை இருபத்தொரு தலைமுறை கொன்று அவர்தம் குருதியால் தம் வமிசத்தில் மாண்டவர்கட்குத் தர்ப்பணம் செய்த பரசுராமனாக அவதரித்தவன். குவலயா பீடம் என்ற யானையைக் கொன்றொழித்தவன் (5). வாலி, கவந்தன், விராதன் இவர்களை வானுலகத்திற்கு ஏற்றியவன் (6). இராவணனுடைய பத்துத் தலைகளும் புற்று சரியுமாப்போலே கீழே இற்று விழச் செய்தவன் (7). அழகெலாம் திரண்டு திகழும் சத்தியபாமாவுக்காக உம்பருலகச் சோலையினின்றும் பாரிசாத மரத்தைப் பிடுங்கி வந்த பெம்மான் (8). முடியில் பிறையணிந்த சிவனை வலப்புறத்திலும், நான்முகனை நாபிக் கமலத்திலும், பெரிய பிராட்டியைத் திருமார்பிலும் வைத்துக் கொண்டுள்ளவன் (9). "இத்தகைய எம்பெருமான்தான் காழிச் சீராம விண்ணகரில் கோயில் கொண்டுள்ளான். அவனை வணங்கும் பொருட்டு அத்திருத்தலத்திற்கு ஏகுவீர்" என்று நம்போன்றவர்களை ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார். மானசீகமாக நாமும் ஆழ்வார் காலத்துக்குச் சென்று விடுகின்றோம்.

இங்ஙனம் பாசுரங்களை மானசீகமாக அநுபவித்த நிலையில் தாடாளன் சந்நிதிக்கு வருகின்றோம். எம்பெருமானின் திருநாமம் **தாடாளன், திரிவிக்கிரம மூர்த்தி**. கிழக்கே திருமுகம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் பஞ்சாயுதங்களுடன் சேவை சாதிக்கின்றார். இடக்கால் தூக்கிய திருவடியாகவும், வலக்கை அபயம் தரும் பாவனையிலும் இடக்கை திருவடியில் பொருந்தியிருக்குமாறும் காட்சி அளிக்கின்றார். தாயார் **மட்டவிழும் குழலி நாச்சியார்.** எம்பெருமானையும் எம்பெருமாட்டியையும் சேவிக்கும் நிலையில் திருமொழியின் பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். பல சுருதிப் பாசுரம்;

**செங்கமலத் தயனனைய மறையோர் காழிச்**
**சீராம விண்ணகரின் செங்கண் மாலை**
**அங்கமலத் தடவயல்சூழ் ஆலி நாடன்**
**அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்**
**கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன்**
**கொற்றவேற் பரகாலன் கலியன் சொன்ன**
**சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்**
**தடங்கடல்சூழ் உலகுக்குத் தலைவர் தாமே**[12]

(அயன் – நான்முகன்; கமலம் . தாமரை; தடம் – குளம்; ஆலிநாடன் – திருமங்கையாழவார்; அருள்மாரி – அருளைப் பொழியும் மேகம்; அரட்டு அமுக்கி – தீங்கு செய்வோரைத் தலையெடுக்க ஒட்டாது அமுங்கச் செய்பவா; அடையார் – பகைவர்; வேள் . விரும்பத்தக்கவர்; கொற்றம் . வெற்றி; பரகாலன் . எதிரிகட்கு; எமன்; சங்கம்முகம் – கூட்டம் கூடிக் கொண்டாடும்).

12. பெரி. திரு. 3.4:10

இத்திருவாய்மொழியை ஓத வல்லவர்கள் கடல் சூழ்ந்த உலகத்திலுள்ளார்க்கெல்லாம் மேம்பட்டவராவார் என்கின்றார் ஆழ்வார். இப்பாசுரத்தில் திருமங்கையாழ்வாரின் விருதுகளாகிய **அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார் சீயம், பரகாலன், கலியன்** போன்ற யாவும் ஒருசேர ஓரிடத்தில் கூறப் பெற்றுள்ளன. இவற்றின் பொருளைச் சிந்தித்து மகிழ்கின்றோம்.

இந்நிலையில் திவ்வியகவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

**"செல்லுந்தொறும் உயிர்ப்பின் செல்லும் உயிர்வினையை**
**வெல்லும் உபாயம் விரும்புவீர் – தொல்லரங்கர்**
**சீராம விண்ணகரம் சேர்மின்பின் மீளாத**
**ஊராம விண்ணகரம் உண்டு"**[13]

(செல்லும் தொறும் – உயிர் உடலை விட்டு நீங்கும் இடமெல்லாம்; இருவினை – நல்வினை, தீவினை; வெல்லும் – கடத்தற்குத் தக்க; உபாயம் – வழி; மீளாத – திரும்பி வருதல் இல்லாத; விண்ணகரம் – பரமபதம்.)

சீராம விண்ணகரத்தைச் சேர்ந்தால் இருவினைகளையும் ஒழித்துப் பரமபதத்தில் நிலைத்து வாழலாம் என்கிறார் அய்யங்கார். சக்கரவர்த்தி திருமகன் எழுந்தருளியிருக்கும் சிறந்த நகரமாதலின் இது **சீராம விண்ணகரம்** என்ற திருநாமம் பெற்றது. காளி வாழும் தலம் ஆதல்பற்றி இத்திருத்தலம் **காழி(ளி)ச் சீராமவிண்ணகரம்** என்ற பெயரையும் கொண்டது. இன்று இத்திருத்தலத்தைச் **சீகாழி, சீய்யாழி** என்று மக்கள் வழங்குகின்றனர். இங்ஙனம் பல செய்திகளை அறிந்து இறையநுபவம் பெற்ற நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

13. நூற். திரு.ப அந். 24

# 3. இந்தளூர் அந்தணன்

**எம்பெருமானிடம்** செளலப்பியம் என்ற திருக்குணம் நிறைந்திருப்பது அச்சாவதாரம். பரமபுருடனாகிய தன்னை மலர்கள் முதலிய பொருள்களைக் கொண்டு வழிபட்டு வாழ வேண்டும் என்று கருதும் சேதநனுக்குக் கண்ணன் கீதையில் கூறுவது: சேதநன் தன் கையில் கிடைத்ததொன்றைத் திருமேனியாக எழுந்தருளப் பண்ணி "எம்பெருமானே, இங்கு தேவரீர் எழுந்தருளி இருக்க வேண்டும்" என்று வேண்டும்போது, இறைவனும் அதற்கு இணங்கித்தான் தான் பரத்துவ நிலையில் செய்யும் விருப்பத்தை அத்திருமேனியில் செய்து இவனுக்குத் திருவருள் புரிவான். இந்த அர்ச்சாவதாரம் தொலைவினால் மனத்திற்கும் எட்டாத பரமபதம் திருப்பாற்கடல் போன்றும், தற்போது சேர்ந்து இன்பந் துய்த்தற்கியலாத இராமகிருஷ்ண அவதாரங்கள் போன்றும் அல்லாமல் எப்பொழுதும் நம்மருகில் நிலைபெற்று கண்ணாற் கண்டு களிப்பதற்கு இடந்தருகின்றது.

அர்ச்சையில் எம்பெருமான் சங்கொடு சக்கரம் ஏந்துத் தடக்கையனாயிருத்தலை நாம் காண்கின்றோம்.

> **"திருக்கையிலே பிடித்த திவ்வியாயுதங்களும்,**
> **வைத்தஞ்சல் என்ற கையும், கவித்த முடியும்,**
> **முகமும் முறுவலும், ஆசன பதுமத்திலே**
> **யழுந்தின திருவடிகளுமாய் நிற்கின்ற நிலையே**
> **நமக்குத் தஞ்சம்"[1]**

என்று இந்நிலையை முமுட்சுப்படி குறிப்பிடுகின்றது. இங்ஙனம் ஆயுதங்களை எப்போதும் தாங்கிக் கொண்டிருத்தல் வன்மை வாய்ந்த வீரனுடைய காரியமாகும். தன்னை வந்தடைந்த

1. முமுட்சுப்படி – 142.

அடியார்களின் விரோதிகளைப் போக்குதற்கு இப்படைகள் பயன்படுகின்றன. இவ்வாயுதங்களைத் தாங்கும் வன்மை மட்டிலும் போதியதன்று. விரோதிகளையும், அவற்றைப் போக்கும் முறைகளையும் அறிபவனாய் இருத்தல் வேண்டும். இங்ஙனம் இச்செய்தியை உற்று நோக்குங்கால், தன்னைப் பற்றிய சேதநனுடைய காரியத்தைச் செய்யும்போது பயன்படுவையான ஞான சக்திகளுக்குப் பிரகாசங்கள் திவ்விய ஆயுதங்களாகும் என்பதனை அறிகின்றோம்.

சேதநர், தாம் செய்த குற்றங்களை நினைந்து "ஐயகோ இத்தனைப் பிழைகளை இழைத்த நாம் எங்ஙனம் அத்துணை உயரிய சுவாமியைச் சென்றடைவது?" என அஞ்சி அகலாதிருக்கும் பொருட்டே, அவருடைய திருக்கை அபய முத்திரையுடன் சேவை அளிக்கின்றது. இஃது "உங்கள் குற்றங்களை நினைத்து நீங்கள் அஞ்ச வேண்டா. என்னை வந்தடையுங்கள். யான் உங்களை ஏற்றுக்கொள்வேன்" என்னும் அன்பைக் காட்டும் வாத்சலயத்தின் அறிகுறியாகும். எம்பெருமான் தலையில் கவித்திருக்கும் இரத்தின முடி அவன் எல்லா உலகங்கட்கும் சுவாமியாயிருத்தலை அறிவிப்பதாகும். அன்பர்களைக் காணுங்கால் எம்பெருமானுக்கு உண்டாகும் முகமலர்ச்சியும் புன்முறுவலும் அவர்களோடு புரையறக் கலக்கும் சீலத்தைத் தெரிவிக்கும். ஆசனபதுமத்தில அழுந்தி நிற்கும் எம்பெருமானின் இரண்டு திருவடிகளும் அனைவரும் பற்றுதற்கு இடந்தந்து நிற்கின்றன. இத்தன்மை சௌலப்பியத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த எண்ணங்கள் நம் சிந்தனையில் குமிழியிட்ட வண்ணம் **திருஇந்தளூர்** என்ற திருத்தலத்திற்குப் பயணமாகின்றோம் காளியாக்குடி அய்யர் விடுதியிலிருந்து. மயிலாடுதுறை இருப்பூர்தி நிலையத்திலிருந்து வடகிழக்கில் மூன்று மைல் தொலைவில் மயிலாடுதுறை நகரின் வடக்கு முனையில் உள்ளது இத்திவ்விய தேசம். காவிரியைத் தாண்டிச் செல்லப் பாலம் உள்ளது. இருப்பூர்தி நிலையத்திலிருந்து இத்திருத்தலத்திற்குக் குதிரை வண்டிகளும் மாட்டு வண்டிகளும் கிடைக்கும். விடுதியிலிருந்து நாம் நடந்தே செல்லுகின்றோம். இங்ஙனம் செல்லும்போதே திருமங்கை யாழ்வாரின் பாசுரங்களில் ஆழங்கால்படுகின்றோம். இந்த ஆழ்வார் மட்டிலுமே இத்திருத்தல எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார்.

இத்திருமொழியில் பாசுரங்களின் அநுபவம் பேரின்பம் பயப்பதாக உள்ளது. இந்தப் பாசுரங்களை நாவினாற் சொன்னாலும் பிறர் சொல்லக் கேட்டாலும் நெஞ்சு நீர்ப் பண்டமாயுருகும். திருவிந்தளூர் எந்தையைக் கண்ணாரக் காணவேண்டும் என்றும், கையாரத் தொழ வேண்டும் என்றும் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி, வழுவிலா அடிமைகள் செய்ய வேண்டும்'[2] என்றும் எவ்வளவோ பாரித்துக்கொண்டு வந்தார் ஆழ்வார். ஆனால், அப்பெருமான் திருக்கண்களால் குளிர நோக்குதல், வாரியணைத்தல், வினவுதல், அத்தாணிச் சேவுகத்தில் ஏவுதல் ஆகியவற்றில் ஒன்றும் செய்திலன்; நிரங்குசச் சுவாதந்தரனான (தடையில்லாத சுவாந்தரனான) அவனது திருவுள்ளத்தை யார்தான் அறியவல்லார்? ஆழ்வாருடைய கல்நெஞ்சத்தையும் உருக்க வல்ல பாசுரங்களைச் செவிமடுக்க வேண்டுமென்று பிச்சேறினான் போலும். கோபுரவாசற் கதவையும் அடைத்துக்கொண்டு கிடந்தான் போலும். ஆழ்வார் துடிக்கின்ற துடிப்பை எப்படிக் காட்டுவது? பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஒதி உளங் கரைகின்றவர்களே இத்துடிப்பை ஓரளவு அறிய முடியும்.

பிரேமத்தால் பெண் பேச்சாக அமையப் பாசுரமிட்டுக் காட்டுகின்ற துடிப்பை ஆழ்வார் தானான தன்மையில் காட்டுகின்ற திருமொழியாகும் இது. நம்மாழ்வார் '**மின்னிடை மடவார்கள்**'[3] என்ற திருவாய்மொழியில் தலைவன் காலந்தாழ்ந்து வரக்கண்ட தலைவி ஊடல் கொண்டு உரைக்கும் பாங்கிலும், குலசேகரப் பெருமாள் "**ஏர் மலர்ப் பூங்குழல் ஆயர் மாதார்**"[4] என்னும் திருமொழியில் கன்னியர் ஊடிக் கண்ணனை எள்கும் நிலையிலும் இந்த ஆழ்வாரே "**காதில் கடிப்பு இட்டு**"[5] என்ற திருமொழியில் ஆய்ச்சி ஒருத்தி கண்ணனோடு ஊடி உரைக்கும் முறையிலும் பெண் பேச்சாக வெளியிட்ட நெஞ்சுருக்கும் உணர்ச்சிகளையெல்லாம் இத்திருமொழியில் தானான தன்மையில் அருளிச் செய்த அழகு மிக அற்புதமாக அமைந்துள்ளது. இந்த ஆழ்வாரின் அநுபவத்தை நாமும் பெற முயல்கின்றோம். கோபுர வாயிலிலிருந்தே இந்த அநுபவத்தைப் பெறும் முயற்சியில் ஈடுபடுகின்றோம்.

ஆழ்வார் வேண்டுவது : "இந்தளூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, அடியேன் உம்மை வணங்கினேன்; நீர் சேஷி என்றும் அடியேன் சேஷபூதன் என்றும், அடிமை செய்தலே முறையென்றும் நன்கு அறிந்தே கைங்கரியத்தை நாடுகின்றேன். உம்மைப் பார்ப்பதே

2. திருவாய். 3.3:1
3. மேலது 6.2
4. பெரு. திரு. 6
5. பெரி. திரு. 10:8

கடினமாக உள்ளது. உம்முடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை ஒரு தடவையாவது அடியேன் பார்க்கலாகாதா? (1). நெஞ்சில் நீங்காதிருக்கும் செல்வமே, கட்புலனுக்குச் சிறிது காலமாவது இலக்காகக் கூடாதா? கண்ணாலே கண்டுகளிக்கப்பெறும் அநுபவத்தை நீர் வஞ்சித்தீராகிலும் மனத்தால் அநுபவிக்க அநுபவிக்க இனிதாயிருக்கிறதே. 'அந்தண் ஆலிமாலே' 'சோலை மழளிறே! 'நறையூர் நின்ற நம்பீ!' என்று வேறு திருத்தல எம்பெருமான்களையும் இந்தத் திருத்தல எம்பெருமானாகக் கண்டு 'அடியேற்கு இறையும் இரங்காயே' என்று கெஞ்சும் பாவனையில் பேசுகின்றார் ஆழ்வார் (2).

நான் சேவித்தாலும் சேவிக்கின்றேன்; இழந்தாலும் இழக்கின்றேன்; அடியேனுக்கு இஃது ஒரு பெரிய பொருளன்று. நீர் குணசாலி என்று பேர் படைப்பதற்குப் படாதபாடுகள் பட்டுள்ளீர். மாவலியிடம் முன்னம் குறளுருவாய் மூவடி மண் இரந்து பெற்று, பின்னர் திரிவிக்கிரமனாகி மூவுலகங்களையும் அளந்து பெரும்பாடுகள்பட்டுப் பெரிய குணம் சம்பாதித்தீர். 'நான் உலகுக்கெல்லாம் சேஷி; எல்லாரையும் நான் குளிர நோக்கக் கடவேன்' என்று உறுதியாகத் தனி மாலை இட்டிருக்கும் நீர் என்னை நோக்கா தொழியலாமா?

**"அயலாரும்**
**ஆசையெங்ஙனும் கடலில் வீழ்ந்திங்கு**
**அயர்ந்தோம்; அயலாரும்**
**ஏசுகின்றது இதுவே காணும்**
**இந்தளூ ரீரே!"[6]**

என்கின்றார். 'திருமங்கை மன்னன் திருவிந்தளூர்ப் பெருமானைக் காண ஆசைப்பட்டு அது பெறாதே முடிந்தான் என்ற பேச்சு நாற்சந்தியில் கிளம்பினால் இதனைக் காட்டிலும் மிக்கக் குற்றம் வேறு உண்டோ?' ஒருவர் ஆசைப்பட்ட அழகையும் குற்றமுள்ள ஒருவர் அந்த ஆசைக்கு முகம் காட்டின அழகையும் என்ன சொல்லுவோம்! சர்வ ரட்சகன் இப்படியன்றோ இருப்பது! என்று அயலர் ஏசுவார்களே; அப்படிப்பட்ட ஏச்சுக்கு இடமாகும்படி நடந்து கொள்ளவேண்டா' என்பதே அடியேன் சொல்வது (3).

அடுத்து, கல்நெஞ்சையும் உருக்கும் வண்ணம் பேசுகின்றார் ஆழ்வார்.

6. பெரி. திரு. 4.9:3

**"ஆசைவழுவா தேத்தும் எமக்கிங்கு**
**இழுக்காய்த்து; அடியோர்க்கு**
**தேசம் அறிய உமக்கே ஆளாய்த்**
**திரிகின் றோமுக்கு**
**காசின்ஒளியில் திகழும் வண்ணம்**
**காட்டீர்! எம்பெருமான்!**
**வாசிவல்லீர் இந்த ளூரீர்!**
**வாழ்ந்தே போம்நீரே"**[7]

(வழுவாது . குன்றாமல்; ஏத்தும் – துதிக்கும்; இழுக்கு – குற்றம்; தேசம் – நாடு; ஆளாய் . தொண்டாய்; காசு – பொற்காசு; வண்ணம் . வடிவழகு; வாசி – வேறுபாடு, தார தம்மியம்.)

"அடியேன் உம்மீது ஆசை குன்றாமல் துதிக்கின்றேன். நீர் அடியேனை உதாசீனம் செய்யச்செய்ய அதுவே எருவாக ஆசை மேலும் வளர்கின்றது. இப்படி நான் துதித்தால் சேஷபூதர் சேஷியைத் துதிப்பது முறையன்றோ?" என்று எல்லோரும் கருதவேண்டியது மறை; அங்ஙனம் நினையாமல் என் செயலைப் பரிகசிக்கின்றனரே. கூவிக்கூவி நெஞ்சுருகக் கதறும் கலியனுக்குக் காட்சி அளிக்காமல் இருக்கின்றானே; இவன் சர்வலோக சரண்யனாம்; திருநாமத்தின் அழகுதான் என்னே! என்று என்னைச் சிலர் பரிகசிக்கின்றனர்; மேலும் சிலர், பல்லெலாம் தெரியக் காட்டிப் பலகால் வேண்டினவிடத்திலும் வாய்திறவாது இருக்கும் ஒருவனை நாணம் கெட்டு ஏத்துகின்றானே இக்கலியன்!" என்று ஏளனம் செய்கின்றனர். அநந்யார்ஹராக[8] இருக்கும் எங்களுக்கு எங்களுக்கென்றே கொண்டிருக்கின்ற திருமேனியை எமக்குக் காட்டாதிருப்பது என்னோ? **வாசிவல்லீர்.** மிகச் சிறந்த நம் திருமேனியை நித்திய சூரிகள் மட்டிலுமே காணவல்லவர்கள், அற்பனான இவன் காணலாகாது' என்ற நினைப்போ? சர்வசாதாரணமான திருமேனியை "இன்னார்க்குத்தான் காட்டலாம்- இன்னார்க்குக் காட்டலாகாது" என்று வேறுபாடு கொள்ளலாமோ? **இந்தளூரீர்** நித்திய சூரிகட்குக் காட்சி தரும் வடிவை நித்திய சம்சாரிகட்கும் எல்லாப் பொருள்களையும் அளிப்பதற்கன்றோ இந்தளூரில் வந்து நிற்பது? வாசியற முகம் கொடுக்க வந்து நிற்கிறவிடத்தில் வாசி (வேறுபாடு) வைக்கின்றீரே, வாழ்ந்தே போம் நீரே; உம்முடைய உடம்பு உம்மை ஆசைப்பட்டவர்களுக்காக ஏற்பட்டது என்று நினைத்திருந்தோம்; அப்படியன்றாகில் உம்முடைய உடம்பை நீரே கண்டு கொண்டு, நீரே தொட்டுக் கொண்டு, நீரே முகர்ந்துகொண்டு, நீரே

7. பெரி. திரு. 4.5:4
8. அநந்யார்ஹர் – பிறர்க்குரியரல்லாதவர் (நினக்கே உரியவர் என்றபடி)

கட்டிக்கொண்டு நீரே வாழ்ந்து போம்' என்று வெறுப்புடன் பேசுகின்றார் (4). இவ்விடத்தில் "சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி ஒளி ஒவ்வாதூ" என்ற நம்மாழ்வார் வாக்கு நினைக்கத் தகும்.

'அசித்தும் எம்பெருமானின் திருமேனி' என்ற துணிவுடைய இந்த ஆழ்வார் வீணாக வருந்துகின்றார் என்று இந்தளூர்ப் பெருமான் திருவுள்ளம் பற்றியிருப்பதாகக்கொண்டு ஆழ்வார் பேசுகின்றார் : "தீ எம்பெருமான், நீர் எம்பெருமான், திசையும் இருநிலனும் எம்பெருமான்" என்ற சாத்திரப் பொருள் அடியேனுக்குத் தெரியாமலில்லை. சங்கு சக்கரமும் புன்முறுவல் கொண்ட முகமும் திகழும் திவ்விய மங்கள விக்கிரகத்தைக் கண்டுகளிக்கப் பேரவா கொண்டிருக்கும் அடியேனுக்கு ஜகத்சொரூபனாக இருக்கும் இருப்பு என்ன பயன் அளிக்கும்? அடியேன் போன்றோர் கண்டுகளிக்க அன்றோ இந்தளூரில் வந்திருப்பது? நீர் பர வாசுதேவனாயிருக்கும் இருப்பு நித்திய சூரிகளின் அநுபவத்திற்காக. வியூகநிலை நான்முகன் முதலானோருடைய கூக்குரலை கேட்பதற்காக. விபவாவதாரங்கள் அக்காலத்தில் இருந்தவர்கட்காக ஒழிந்தன. அந்தயாமியாக இருக்கும் இருப்பு பிரகலாதாழ்வான் போன்றவர்கட்காக. அச்சாவதார நிலையொன்றே அடியேன் போன்றோருக்குப் பிழைப்பு. சம்சாரிகட்கு முகம் கொடுப்பதற்கன்றோ இது ஏற்பட்டது? குருடர்க்கு ஏற்பட்ட இடத்தில் விழிகண்ணர் புகலாமா? விழிகண்ணர்க்கு ஏற்பட்ட இடம் குருடர்க்குப் பயன்படுமோ? (5) என்கின்றார். "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய், சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனாய்" என்று ஜகத்சொரூபனாயிருக்கும் இருப்பு தனக்கு மனநிறைவு தாராமையையும் அசாதாரணத் திருமேனி சேவையே தமக்கு வேண்டும் என்பதையும் "கூராழிவெண் சங்கேந்திக் கொடியேன்பால் வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே"[9] என்ற நம்மாழ்வாரின் விருப்பத்தையும் ஈண்டு நினைவு கூர்வோம்.

அடுத்து ஆழ்வார் பேசுவது நம் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது.

> **"சொல்லாது ஒழியகில்லேன் அறிந்த**
> **சொல்லல நும்அடியார்**
> **எல்லாரோடும் ஒக்க எண்ணி**
> **யிருந்தீர், அடியேனை**

9. திருவாய். 3.1:2

**நல்லார் அறிவீர்; தீயார்**
**அறியீர்; நமக்கிவ்வுலகத்தில்**
**எல்லாம் அறிவீர் ஈதே அறியீர்**
**இந்தளூ ரீரே!"[10]**

(ஒக்க – சமமாக; நமக்கு ஈதே . என்னுடைய தன்மை ஒன்றினையே)

"ஆழ்வீர் நீ சேஷபூதர்; நான் சேஷி. என்னை வற்புறுத்தி காரியங்கொள்வது உம் சொரூபத்திற்குச் சேராது என்பது உமக்குத் தெரிந்ததுதானே. அவன் செய்வன செய்து கொள்ளட்டும் என்றிராமல் மீண்டும் மீண்டும் நிர்ப்பந்திப்பது உமக்குத் தகாது" என்று எம்பெருமான் திருவுள்ளம் கொண்டதாகக் கருதி ஆழ்வார் விண்ணப்பிக்கின்றார். "இந்தளூரீர், அடியேன் விண்ணப்பம் செய்ய நினைத்ததைக் கூசாமல் சொல்லி விடுகிறேன். சேஷபூதன் சேஷியை வற்புறுத்தலாகாது என்ற முறையறிந்து அடியேனால் இருக்க முடியவில்லை. எல்லாம் அறிந்த தேவரீருக்குத் தெரியாத செய்தி ஒன்றுண்டு. உம்மைப் பிரிந்து தரிக்கமாட்டாத அடியேனை உம்முடைய அடியவர்கள் எல்லாரோடும் சமமாக நினைத்திருக்கின்றீர். 'ஒருகணமும் திருமங்கை மன்னன் உம்மைப் பிரிந்திருக்க முடியாது' என்ற உண்மையை மாத்திரம் உம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை. நீர் இந்தளூரில் வந்து நிற்கும் செயலை மறந்தீரே" (6) என்கின்றார்.

"நீர் எல்லாவித ஆற்றல்களுடையவராயிருந்தும் அடியேனிடத்து ஒரு கைங்கரியம் கொள்ள ஆற்றலற்றவரானீர். 'இந்த நீசனால் என்ன கைங்கரியம் பண்ண முடியும்?' என்று நினைத்து அடியேனைத் தள்ளி வைக்கின்றீர். நிறையொன்றுமில்லாத நீசனேனையும் கைங்கரியங்களுக்கு ஆளாம்படித் திருத்திப் பணி கொள்ள உமக்கு ஆற்றலில்லையே. அடியோடு எமக்கு அறிவே இல்லாதபடி மண்கட்டியாகப் படைத்து வைத்திருந்தாலும் ஒருவாறு ஆறியிருக்கலாம். சேதநன் கோட்டியில் படைத்து வைத்தீர்; சேஷத்துவமே சொரூபம் என்பதையும் உணர்த்தி வைத்தீர்; கைங்கரியம் புரியாவிடில் சேஷத்துவம் நிறைவு பெறாது என்றும் புரிய வைத்தீர். இவ்வளவு அறிவையும் பிறப்பித்து வைத்து அடியேனை ஒன்றுக்கும் உதவாதபடி தள்ளி வைத்தீர். கைங்கரியம் கொள்ளாவிடினும் திருவடியையாவது சேவை சாதிப்பிக்கலாம்; அந்தப் பேறும் பெற்றிலேன்; திருவடியையும் காட்டா தொழிந்தீர். பிறர்க்கென்றே ஏற்பட்டிருக்கும் திருவடிகளையும் உமக்காகக் கொண்டுள்ளீர் போலும்"(7) என்கின்றார்.

10. பெரி. திரு. 4–9:6

"இந்தளூர் எம்பெருமானே, உமக்குப் பல நிறங்கள் உள்ளனவாக சாத்திரங்களால் அறியக் கிடக்கின்றது. கிருதயுகத்தில் உள்ளவர்கள் சத்துவ குணம் நிறைந்தவர்களாய் சுத்தமான நிறத்தை உகுக்கும் தன்மையர்களாகையால் அவர்கட்காகப் பால் நிற வண்ணனானீர்; திரேதாயுகத்தில் சிவந்த நிறத்தைக் கொண்டீர்; துவாபரயுகத்தில் பசுமை நிறத்தைக்கொண்டீர்; கலியுகத்தில் எந்த நிறங்கொண்டாலும் ஈடுபடுவாரின்மையால் இயற்கையான நீலநிறத்தைக் கொண்டீர். இப்போது அர்ச்சையாக எழுந்தருளியிருக்கும் இருப்பில் எந்த நிறங்கொண்டிருக்கிறீர் என்பதை அடியேன் அறியே வேண்டாவோ? 'இதோபாராய், இதுவே என் வண்ணம்' என்று சொல்லி வடிவைக் காட்டியருளீர்" (8) என்கின்றார். ஏழு தலைமுறையாக வந்து அடிமை செய்யும் குடியிலே பிறந்த அடியேன் விஷயத்தில் இவ்வளவு ஆலோசிக்கின்றீர். இது தகுதியோ? 'நம்முடைய திருமேனியைச் சேவிப்பதற்கு இவன் தகுந்தவனா? தகாதவனா?" என்று வாசி பார்க்கின்றீரே. இது பொருந்துமோ? திருமேனியைக் கண்ணில் காட்டுவதற்கு இவ்வளவு ஆலோசிக்கின்ற நீர் ஓர் ஆலோசனையும் பண்ணாமல் நெஞ்சகத்தின்பால் முன்னே வந்து குடி கொண்டுவிட்டீரே. அஃது ஏன் செய்தீர், நெஞ்சில் புகுந்ததுபோல் கண்ணிலும் புகவேண்டும். கண்ணில் ஒன்றுக்கு ஆலோசனை பண்ணாதவர் ஒன்றுக்கு மட்டிலும் ஆலோசனை பண்ணுவது ஏனோ? திருமேனியின் நிறத்தைச் சிறிதும் காட்டாமலிருக்கின்றீரே. நித்திய சூரிகட்குக் காட்சி கொடுக்கும் வடிவை இங்குள்ளார்க்கு முழுக்காட்சி கொடுப்பதற்காகவன்றோ இங்கு எழுந்தருளி இருப்பது?"(9) என்று கூறுகின்றார்.

இங்ஙனம் ஆழ்வார் பெற்ற அநுபவத்தை நாம் பெற்றுத் திருக்கோயிலில் நுழைகின்றோம். கருவறைக்கு வருகின்றோம். கிழக்கே திருமுக மண்டலங்கொண்டு சயனத் திருக்கோலத்தில் (வீர சயனம்) சேவை சாதிக்கும் **பரிமள ரங்கனை** நம் தாபமெல்லாம் தீர வணங்குகின்றோம். இந்த எம்பெருமானுக்குச் **சுகந்தவன நாதன், அந்திய ரங்கன், மருவினிய மைந்தன்** என்ற வேறு திருநாமங்களும் உள்ளன. திருமங்கையாழ்வார் இவருக்கு **இந்தளூர் அந்தணன்"**[11] என்று திருநாமம் சூட்டுகின்றார். மூலவருக்கு நான்கு புயங்கள் உள்ளன. தாயார், **புண்டரீகவல்லி; சந்திர சாப விமோசன வல்லி** என்ற திருநாமமும் இவருக்கு உண்டு. இவரையும் வணங்குகின்றோம். எம்பெருமான் சந்நிதியில் இந்தப் பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

11. பெரிய திருமடல் – கண்ணி. 126

**"கலியன் ஒலிசெய்த**
**சீராரின் சொல்மாலை கற்றுத்**
**திரிவார் உலகத்தில்**
**ஆரார் அவரே அமரர்க்கு என்றும்**
**அமலர் ஆவாரே."**[12]

(சீரார் – சிறந்த; கற்று – ஓதி; ஆர்ஆர் – எவரெவரோ; என்றும் – எக்காலத்திலும்; அமரர்க்கு – நித்திய சூரிகளுக்கும்; அமரர் ஆவார் – கௌரவிக்கத் தக்கவராவார்.)

என்ற பலனையும் பெற்றவராகின்றோம். இத்திருமொழியை ஓதுபவர்கள் எவராயினும் நித்திய சூரிகளால் சிறப்பித்துக் கொண்டாடப் பெறுவர் என்பதை அறிந்து பேரானந்தம் பெறுகின்றோம். இந்நிலையில் திவ்வியகவியின் பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

**"நாடுதும்வா நெஞ்சமே நாராய ணன்பதிகள்**
**கூடுதுமும்வா மெய்யடியார் கூட்டங்கள்– சூடுதும்வா**
**வீதியிந்த ளத்திதகலின் வீசுபுகை வாசம்எழும்**
**ஆதியிந்த ளூரான் அடி"**[13]

(நாராயணன் பதிகள் – திருமாலின் திருப்பதிகள்; நாடுதும் – தரிசிப்போம்; கூடுதும்; போய்ச்சேருவோம்; இந்தளம் – தூபக் கால்கள்; அகில் – அகில் கட்டைகள்.)

இதனையும் ஓதுகின்றோம்.

திருமாலின் திருப்பதிகளிற் சென்று அடியார் கூட்டங்களுடன் கூடி எம்பெருமானின் திருவடித் தாமரைகளை முடிக்கு அணியாகச் சூடுமாறு தம் நெஞ்சை அழைக்கின்றனர் திவ்விய கவி. **சந்திரனது சாபம் நீங்கப்பெற்றதால்** இத்திருத்தலம் **இந்தளூர்** என்று திருநாமம் பெற்றது. இதற்கு வடமொழியில் **சுகந்த வனம்** என்ற திருப்பெயரும் வழங்கி வருகின்றது. திருத்தலப் பயணம் பெற்ற அநுபவத்துடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

12. பெரி. திரு. 4–9:10
13. நூற். திருப். அந். 22

# 4. தலைச்சங்க நாண்மதியப் பெருமாள்

**வைணவ** சமயத்தில் எம்பெருமானைப் பற்றுதற்கு எல்லோருக்கும் எளிதான வழி பிரபத்தியாகும். பிராட்டியாரின் புருஷகார[1] பலத்தாலே எம்பெருமானிடம் தலையெடுக்கும் குணங்கள் **வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி** என்பவையாகும்.

கீழ்க் குறிப்பிட்ட ஆறனுள் முதலில் குறிப்பிட்ட நான்கு குணங்களும் சேதநன் இறைவனைப் பற்றுதற்கு மிகவும் துணை செய்யக்கூடியவை. இவற்றுள் **வாத்சல்யம்** என்பது, கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு. சேதநனுடைய குற்றங்களையும் போக்கியமாய் (இன்பமாய்)க் கொள்வான் எம்பெருமான். இதனால் எம்பெருமானைப் பற்ற வேண்டும் என்ற நினைப்புடன் நிற்கும் சேதநன் தன் குற்றம் கண்டு அஞ்சாமைக்கு இத்திருக்குணம் காரணமாய் அமைகின்றது. **சுவாமித்துவம்** என்பது, உடையனாக இருக்கும் இருப்பு. சேதநன் ஈசுவரனைக் கருதாமலும் நோக்காமலும் பாராமுகமாயிருக்கும் நிலையிலும், ஈசுவரன் இவனை விடாமல் நின்று, இவனுடைய சொரூபத்தையே நோக்கிக்கொண்டு போவதற்குக் காரணமாகவுள்ள ஒரு தொடர்பே சுவாமித்தவம் ஆகும். சேதநன் உலகப் பற்றிலேயே இச்சை வைத்து உழன்று திரிகின்றான். இங்ஙனம் சேதநன் பயனற்ற வழியில் தன் காலத்தைக் கடத்தினும், தன் உடைமையான இவனை அங்ஙனமே நலமற்ற வழியில் விட்டு விடுவதற்கு ஈசுவரனுடைய சுவாமித்துவமாகின்ற தொடர்பு இடந்தருதல் இல்லை. ஆதலின், அவன் தன் உடைமையான சேதநனை விடாது மறைந்திருந்து, பல நன்மைகளையும் விளைவிக்கின்றான். இதற்குக் காரணம் பகவானுக்கும் சேதநனுக்கும் உள்ள தொடர்பேயாகும். **சௌசீல்யம்** என்பது, உயர்ந்தவன்

1. புருஷகாரம் – தகவுரை, சேர்ப்பிக்கும் தன்மை

தாழ்ந்தவனோடு புரையறக் கலக்கை இந்த **சௌசீல்யம்** இருவகைப்படும். நித்தியவிபூதி, லீலா விபூதி இவற்றிற்குச் சுவாமியாய்ப் பெரிய பிராட்டியாரை முதல் துணைவியாய்க் கொண்டவனாய்த் தடை சிறிதுமற்ற சுவாதந்திரமாகிற தேஜஸை உடையவனாய் இருக்கும் பரமபதநாதன் தன் பெருமையையும் தன்னோடு கலக்கும் சீவான்மாவின் சிறுமையையும் நோக்காது, தன் பேறாக அவனுடன் புரையறக் கலத்தல் ஒருவகை. சேதநன் விருப்பமின்றி இருப்பினும், பகவானே சென்று அவனோடு கலத்தல் மற்றொரு வகை. முன்னதற்குப் பாத்திரமானவர்கள் ஞானியர். பின்னதற்குப் பாத்திரமானவர்கள் நம் போலியரான சமுசாரிகள். **சௌலப்பியம்** என்பது எளியனாயிருக்கும் இருப்பு. இது கண்ணிற்குப் புலனாகாதிருக்கும் ஈசுவரன் தன் திவ்வியமங்கள விக்கிரகத்தைச் சேதநன் தன் கண்களாலே கண்டு பற்றுவதற்கேற்ப எளியனாயிருத்தல். இதனை,

> **"குற்றங் கண்டுவெருவாமைக்கு வாத்சல்யம்;
> காரியம் செய்யும் என்று துணிகைக்கு சுவாமித்
> துவம்; சுவாமித்துவம் கண்டகலாமைக்கு
> சௌசீல்யம்; கண்டு பற்றுகைக்கு சௌலப்
> பியம்..."**[2]

என்று முமுட்சுப்படி குறிப்பிடும். **"நிகரில் புகழாய்"**[3] என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் இந்த நான்கு குணங்களையும் வெளியிடுவர் நம்மாழ்வார்.

ஸ்ரீவசனபூஷணமும்,

> **"பிரபத்திக்கு அபேட்சிதங்களான சௌலப்
> பியாதிகள், இருட்டறையில் விளக்குப் போலே
> பிரகாசிப்பது இங்கே"**[4]

என்று இத்திருக்குணங்களை விளக்கும். இருட்டறையில் விளக்குப் போலே பிரகாசிப்பது இங்கே என்றது, பரத்துவத்தில் இந்தத் திருக்குணங்கள் உளவாக இருக்கவும், எல்லாவற்றாலும் தன்னை ஒத்திருப்பவர்களான நித்திய முத்தர்கட்கு முகம் கொடுத்திருக்கின்ற இடமாகையாலே, பகல் விளக்குப் போன்று விளக்கம் அற்றிருக்கும்; அர்ச்சாவதாரமான இடத்தில், தண்மைக்கு எல்லை நிலமான இவ்வுலக மக்கட்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கையாலே, திணிந்த இருளிலே விளக்குப்போன்று மிக்க பேரொளியாகத் தோற்றும்.

2. முமுட்சுப்படி – 138
3. திருவாய் 6–10:10
4. ஸ்ரீவசன பூஷ – 40

மயிலாடுதுறையில் காளியாக்குடி அய்யர் விடுதியில் தங்கியிருக்கும் நம்முடைய மனத்தில் இந்த எண்ணங்கள் குமிழியிடுகின்றன. நாமும் **தலைச்சங்க நாண்மதியம்** என்ற திருத்தலத்திற்குச் செல்ல எண்ணுகின்றோம். இத்திருத்தலம் மயிலாடுதுறை - தரங்கம்பாடி தென்னிந்திய இருப்பூர்தி கிளைப் பாதையில் உள்ள ஆக்கூர் நிலையத்தினின்றும் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இதே பாதையிலுள்ள **செம்பனார்கோயில்** நிலையத்தினின்றும் ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருத்தலப் பயணிகள் செம்பனார் கோயில் நிலையத்தில் இறங்கி மாட்டுவண்டி அமர்த்திக்கொண்டு செல்வது நல்லது. நாம் மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் செல்லும் பேருந்தில் பயணம் செய்து வழியிலுள்ள தலைச்சங்க நாண்மதியம் (அல்லது **தலைச்சங்காடு)** என்ற ஊரில் இறங்குகின்றோம். ஊரிலிருந்து மேற்குத் திசையில் முக்கால் கிலோ மீட்டர் தொலைவில் வயல் களுக்கிடையேயுள்ள திருக்கோயிலுக்கு நடந்தே செல்லுகின்றோம்.

நடந்து செல்லுங்கால் ஊர்ப் பெயரின் ஆராய்ச்சியில் நம் மனம் ஈடுபடுகின்றது. இங்கிருந்து காவிரிப்பூம்பட்டினம் ஏழு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்து சிறந்த சங்குகள் இங்கு விற்பனை செய்யப் பெற்றதால் இவ்விடத்தைத் **தலைச்சங்கம்** என்று வழங்கினர். இவ்விடத்தைச் சுற்றிலும் புரச (பலாச) மரக்காடாக இருந்தமையால் இவ்விடத்தைக் **காடு** என்றும் வழங்கினர். நாளடைவில் இவ்விரண்டு பெயர்களும் சேர்ந்து 'தலைச்சங்கக் காடு' என்ற திருப்பெயராக வழங்கலாயிற்று. காலப்போக்கில் மக்கள் வாக்கில் இத்திருப்பெயர் மருவி 'தலைச்சங்காடு' என்ற பெருவழக்குப் பெறலாயிற்று. இவ்வூருக்கு அருகில் திருவெண்காடு என்ற ஊரும் இருப்பதால் காடு என்ற முடிவு பொருந்துவதாகக் கொள்ளலாம். திருமங்கையாழ்வாரும் 'தலைச்சங்கம்' என்றே தம் திருப்பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

சிலப்பதிகாரக் குறிப்பும் நம் நினைவிற்கு வருகின்றது. அடைக்கலக் காதையில் வரும்,

> **"தாழ்நீர் வேலித் தலைச்செங் கானத்து**
> **நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை**
> **மாமறை முதல்வன் மாடலன் என்போன்**
> **மாதவ முனிவன் மலைவலங் கொண்டு**
> **குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து**
> **தமர்முதல் பெயர்வோன்"**[5]

5. சிலப். அடைக். வரி (11–16)

(வேலி . வேலியாகவுடைய; முற்றிய – முற்று உணர்ந்த; நலம்புரி . நன்மையை விரும்பிய; கொள்கை – கோட்பாடு; மலை . பொதியமலை; கொள்கையிற் படிந்து . முறைப்படி நீராடி; தமர்முதல் . கிளைஞர் இருக்கும் இடம்; பெயர்வோன் – மீண்டு வருவோன்.)

என்ற அடிகளிலிருந்து இவ்வூரின் பெயர் 'தலைச் செங்கானம்' என்று மிகப் பழங்காலத்தில் வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. இவ்வூர்க் குடிமகனான **மாடலன்** என்னும் மறையோன் அகத்திய முனிவனின் பொதிய மலையை வலங் கொண்டு குமரியாற்றில் முறைப்படி தீர்த்தமாடித் தன் கிளைஞர் உள்ள இடமாகிய தலைச்செங்கானத்திற்கு மீண்டு வரும் செய்தி இதில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இத்தலைச்செங்கானமும் தலைச்சங்காடும் வேறு வேறு ஊர்கள் அன்று என்பதைச் சிலப்பதிகார அடிக்குறிப்பினால் அறியலாம். எனவே, சிலப்பதிகார காலத்திற்கு முன்பிருந்தே இத்திருத்தலம் இலக்கிய வழக்கும் பெற்றுள்ளமை நன்கு புலனாகின்றது.

'நாண்மதியப் பெருமாள்' இடம் கொண்டுள்ள திருக் கோயில் ஊரின் மேற்குத் திசையில் உள்ளது. திருமங்கை யாழ்வாரும் "தண்ணார் தாமரைசூழ் தலைச் சங்கம் மேல் திசையுள், விண்ணோர் நாள்மதியை"[6] என்று இத்திருக்கோயி லிருக்கும் திசையைக் காட்டுவர். நாள் மதியம் என்ற இரண்டு சொற்கள் சேரும்போது (நாள்+மதியம்) நாண்மதியம் என்றாகின்றது. முழுமதியம் அல்லது பூர்ண சந்திரன் என்பது இதன் பொருளாகும். நம்மாழ்வாரும் மகள் பாசுரமாகச் செல்லும்,

**"நைவாய எம்மேபோல்**
**நாள்மதியே! நீஇந்நாள்**
**[redacted]இருளகற்றாய்**
**மாழாந்து தேம்புதியால்"[7]**

(நைவாய – நைந்து போதலையே இயல்பாக உடைய; எம்மே போல் . எம்மைப் போலவே நாள் மதியே – பூர்ண சந்திரனே; மைவான் . கரிய ஆகாயம்; மாழாந்து – மயங்கி; தேம்புதி – குறைபடுகின்றாய்)

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் "நாள்மதியே!" என்று பூர்ண சந்திரனை விளிப்பதைக் காணலாம் எம்பெருமானைச் சூரியனுடனும் சந்திரனுடனும் சம்பந்தப்படுத்தி முன்னோர் போற்றியுள்ளதைப் பக்தி இலக்கியங்களில் கண்டு களிக்கலாம். நம்மாழ்வாரும்,

**"குழுமித் தேவர்குழாங்கள் கைதொழச்**
**சோதிவெள்ளத்தி னுள்ளே**
**எழுவதோர் உருஎன்நெஞ் சுள்எழும்**
**ஆர்க்கும் அறிவரிதே"[8]**

6. பெரி. திரு. 7.9:9
7. திருவாய் 2–1:6
8. திருவாய் 5–5:10

(குழுமி – நெருங்கி; சோதிவெள்ளம் – ஒளியின் வெள்ளம்; எழுவது – எழுகின்ற; ஓர்உரு – ஒரு விக்கிரகம்; ஆர்க்கும் . எப்படிப்பட்டவர்க்கும்.)

என்ற பாசுரப் பகுதியில் எம்பெருமானின் திறத்தைச் 'சோதி வெள்ளம்' - ஒளியின் வெள்ளம் என்று குறிப்பிடுவதைக் காணலாம். அன்னை ஆண்டாளும்,

**"கதிர் மதியம் போல் முகத்தான்"[9]**

என்று எம்பெருமானைச் சூரியனையும் சந்திரனையும் போன்ற திருமுகமண்டலத்தை யுடையவன் என்று பொருள்படும்படி பேசுவதைக் காணலாம். ஈண்டுத் திருமுக மண்டலத்தின் ஒளிக்குச் சூரியனும், குளிர்ச்சிக்குச் சந்திரனும் உவமையாக வந்துள்ளமை கண்டு மகிழத்தக்கது. மற்றும் இந்த அம்மையார்,

**"திங்களும் ஆதித்**
**தியனும் எழுந்தாற்போல்**
**அங்கண் இரண்டும்கொண்டு**
**எங்கள்மேல் நோக்குதியேல்"[10]**

என்று அவன் திருக்கண்கள் இரண்டையுமே சூரிய சந்திரர்களாகப் பேசுவதையும் கண்டு மகிழலாம். நாச்சியார் திருமொழியிலும் அம்மையார்,

**உதயப் பருப்பதத்தின்மேல்**
**விரியும் கதிரேபோல்வானை**
**விருந்தா வனத்தே கண்டோமே"[11]**

(பருவதம் என்ற வடசொல் பருப்பதமாக வடிவு கொண்டது)

என்று போற்றுவதைக் காணலாம். திருவுருவம் உதய பருவதமாகவும் திருமுகமண்டலம் சூரிய மண்டலமாகவும் உருவகிக்கப் பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்க.

இந்தச் சிந்தனைகளுடன் திருக்கோயிலுக்கு வந்து சேர்கின்றோம். திருக்கோயில் மிகச் சிறியது. மூலவருக்குக் கருவறை மட்டிலுமே உள்ளது. கருவறைக்கு முன்னர் ஒரு சிறு மண்டபமும் உள்ளது. எம்பெருமான் திருநாமம் **நாண்மதியப் பெருமாள்** என்பது நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு சேவை சாதிக்கின்றார். தாயாருக்குத் தனிச் சந்நிதி இல்லை. தாயார் **தலைச்சங்க நாச்சியார், செங்கமல வல்லித் தாயார்** என்ற திருப்பெயர்களால் வழங்கப்பெறுகின்றார். உற்சவருக்கு **வெண்சுடர்ப் பெருமாள்** என்பது திருப்பெயர். கருவறைக்கு வெளியே காட்சி தருகின்றார். இவர் பூரண சந்திர

9. திருப். 1
10. திருப். 22
11. நாச். திரு. 14:6

மண்டலத்தில் எழுந்தருளியிருப்பது குறிப்பிடத்தக்கது. இஃது வேறு எங்கும் காணப்பெறாத திருக்காட்சியாகும். இவர் பழங்காலத்து மூலவராக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. இத்தலத்து மூலவர் சந்திரனது சாபந்திர்த்தமையால் **சந்திர சாபஹரர்** என்ற திருப்பெயராலும் வழங்கப்பெறுகின்றார். தமிழில் உள்ள **நாண் மதியப் பெருமாள்** என்ற திருப்பெயரை வடமொழியில் இங்ஙனம் மாற்றி வைத்தனரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்த எம்பெருமான் சந்நிதியில் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்தருளிய ஒரே ஒரு பாசுரத்தை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

**கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்**
**தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்**
**விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெம்சுடரைக்**
**கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றதிங் கென்றுகொலோ?**[12]

(கண்ஆர் – அழகிய; கடி மணம்; விண்ணோர் – நித்திய சூரிகள்; வெம்சுடர் – சூரியன்; ஆர – நிறைவு பெறும் அளவு.)

“நறுமணமும் குளிர்ச்சியும் பொருந்திய தாமரை மலர்களால் சூழப்பெற்ற தலைச்சங்காட்டின் மேல்திசையில் நித்தியசூரிகட்கு எந்நாளும் அநுபவிக்கத்தக்கவனான எம்பெருமான் இந்நிலவுகில் எல்லோரும் வணங்கும்படி எளிதில் கிட்டுபவன் ஆனான். உதயகாலத்தில் விரியும் சூரியனைப் போல மிக்கவனான அவனை இந்நிலத்தில் கண்கள் நிறைவு பெறுமளவும் கண்டு களிப்பெய்துவது என்றைக்கோ?” என்று பெருமகிழ்ச்சி அடைகின்றார். இப்பெருமான் இந்த ஆழ்வாரின் உள்ளம் கவர்ந்தவராதலால் இவரது பெரிய திருமடலில் தன்னிலைமை எல்லாம் அறிவித்ததற்கு உற்ற எம்பெருமான்களுள் ஒருவராக, **“நந்நீர்த் தலைச்சங்க நாண்மதியை”**[13] என்று குறிப்பிடுவதும் அறியத்தக்கது.

**“செப்புங்கால் ஆதவனும் திங்களும்வா னுந்தரையும்**
**அப்புங்கா லுங்கனலும் ஆய்நின்றான் – கைப்பால்**
**அலைச்சங்கம் ஏந்தும் அணியரங்கத்து அம்மான்**
**தலைச்சங்க நாண்மதியத் தான்”**[14]

(ஆதவன் – சூரியன்; திங்கள் – சந்திரன்; வான் – ஆகாயம்; தரை . பூமி; அப்பு – நீர்; கால் – காற்று; கனல் – நெருப்பு; ஆய் – ஆகி)

சராசரங்ளாகிய யாவும் எம்பெருமானது திருமேனியே என்ற கருத்தைச் சிந்திக்கின்றோம். இந்த எம்பெருமானே ஐந்து

12. பெரி. திரு. 8–9:9
13. பெரிய திருமடல் – 68
14. நூற். திருப். அந். 13

பூதங்களாகக் காட்சி அளிப்பதாக அய்யங்கார் கருதுகின்றார். இந்த எம்பெருமான் விலைமதிக்க வொண்ணா திருச்சங்கைத் தலையணையாகக் கொண்டுள்ளதாக ஐதிகம். இங்ஙனம் எம்பெருமானின்மீது கொண்ட நிறைந்த அநுபவத்துடன் நம் இருப்பிடம் திரும்பும் நிலையில் இக்கோயிலைப் பற்றிய சில குறிப்புகளையும் அறிகின்றோம்.

இந்தத் திவ்விய தேசம் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் வரை உள்ளே செல்லவொண்ணாதபடி சுற்றிலும் சப்பாத்தி முளைத்துக் கிடந்தது. திருவாராதனமும் நடைபெறாது இருந்தது. அப்போது மிகவும் முதிர்ந்து தளர்ந்த **வடுக நம்பி இராமாநுச தாசர்** என்ற பெயர் கொண்ட சுவாமி ஒருவர் திருப்பணி செய்ய முன்வந்தார். அதனைத் தொடங்குமுன் அவர் காலமாகி விட்டாராதலால் அவரது சீடராகிய **சுந்தர இராமாநுசதாசர்** என்பார் முன்வந்து அத்திருப்பணியை அரும்பாடுபட்டு நிறைவு செய்தார். 1972 இல் இதற்குக் குடமுழுக்கு விழாவையும் நிறைவேற்று வித்தார். இந்தச் செய்தியையும் அறிகின்றோம். இந்நிலையில் மனநிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

# 5. சிறுபுலியூர் அருமா கடலமுதன்

**நாராயணன்** என்ற சொல்லின் பொருள் நம் சிந்தையில் எழுகின்றது. "நாராயணன் என்றது நாரங்களுக்கு அயநம் என்றபடி;" "நாராங்களாவன நித்திய வஸ்துக்களின் திரள்'[1] என்ற முமுட்சுப்படியின் வாக்கியங்களும் நினைவிற்கு வருகின்றன. 'நாராயணன்' என்பது வடசொல். இதற்கு நாரணாம், அயநம், நாராயண என்றும்; நாரா, அயனம், யஸ்ய, ஸ: நாராயண என்றும் இருவகைப் புணர்ச்சி இலக்கணம் கூறப்பெறுகின்றது. இவற்றுள் முந்தியதற்கு "நாரங்களுக்கு ஆதாரமானவன் எவனோ அவன் நாராயணன்" என்றும், பிந்தியதற்கு "எவன் நாரம் ஒவ்வொன்றிலும் முழுமையாய் இருப்பவனோ அவன் நாராயணன்" என்றும் பொருள் கொள்ளப்பெறுகின்றன, முதற் புணர்ச்சியை ஆராய்கின்றோம்.

நாரா என்பதனை நோக்குகின்றோம். ர என்னும் சொல்லிற்கு 'அழிவுள்ளது' என்பது பொருள். 'நகரம்' அதனை மறுக்கின்றது. ஆகவே, இவ்விரண்டு சொற்களும் சேர்ந்து அழிவற்றது (நித்தியம்) என்னும் பொருளைத் தரும். 'நர' என்னும் சொல் வடமொழி இலக்கணத்தின்படி 'நார' என்றாகி, அழிவில்லாத பொருள்களின் திரளைத் தெரிவிக்கின்றது. பன்மை வேற்றுமை சேரும்போது **'நார'** என்றாகி பொருள்களின் திரள்களை அறிவிக்கின்றது. எனவே **'நர'** என்பது **அழிவுற்ற** பொருளையும், **'நார'** என்பது **அழிவற்ற** பொருள்களின் திரளையும், **'நாரா'** என்பது மேற்கூறிய திரள் பல என்பதையும் காட்டாநிற்கும்.

ஒரு பொருளுக்குள்ள இயல்பு இருவகைப்படும். இவ்விரண்டும் சாத்திரங்களில் **'சொருப நிருபக தருமம்'** என்றும், **'நிருபித சொரூப விசேஷணம்'** என்றும் சொல்லப் பெறுகின்றன. ஒரு பொருளை எந்த இயல்போடு சேர்த்தே அறிகின்றோமோ, எந்த

1. முமுட்சுப்படி. 95, 96

இயல்பை விட்டு அதை அறிய முடியாதோ, அஃது அந்தப் பொருளுக்குச் 'சொருப நிரூபக தருமம்' எனப்படும். மேற்கூறிய இயல்பைக்கொண்டு அப்பொருளை அறிந்த பின்பு, அதற்குள்ள மற்ற இயல்புகளை அறிந்துகொள்ள நேரிடுகின்றதோ அது **'நிரூபித சொரூப விசேஷணம்'** என்று சொல்லப்பெறும். எடுத்துக்காட்டாக, மலருக்கு மணம் **'சொருப நிரூபக தருமம்;'** அதிலுள்ள நிறம் முதலியன **'நிரூபித சொரூப விசேஷணம்.'**

இங்கு **'நாராயண'** என்றும் சொல்லில் உள்ள நாரா என்பது, பரமான்மா நீங்கலாக, மற்றப் பொருள்கள் யாவற்றையும் சொல்லுகிறதெனக் கொள்ளல் வேண்டும். இக்கோட்பாட்டின்படி சித்தையும் அசித்தையும் மற்றப் பொருள்கள் என்று இயம்புதல் போன்றே, பரமான்மாவிற்குரிய குணங்களையும் மற்றப் பொருள்கள் எனவே கூறுதல் வேண்டும். ஆதலின் அவற்றுள் முதன்முதல் பரமான்மாவிற்குள்ள **'சொருப நிரூபக தருமங்களை'** நோக்குவோம்.

ஞானத்துவம், ஆனந்தத்துவம், அமலத்துவம், சத்யத்துவம், அநந்தத்துவம் ஆகியவை பரமான்மாவின் **'சொருப நிரூபக தருமங்கள்'** எனப்படும். **ஞானத்துவம்** என்பது, அறிவின் தன்மை. உள்ளும் புறமும் உப்பாகவே இருக்கும் உப்புக் கட்டியைப் போன்று பரமான்ம தத்துவம் முற்றும் ஞானமாகவே இருக்கும். அறிவின் தன்மை அதன் இயல்பாகும். **ஆனந்தத்துவம்** என்பது, விரும்பப்படும் பொருளின் தன்மை. தேன், பால், கன்னல் முதலியவற்றை உண்ணும்போது ஓர் இன்பம் தோன்றுகின்றதல்லவா? இவ்வின்பத்தின் பொருட்டே அவற்றை விரும்புகின்றோம். 'அந்த இன்பம் விரும்பும் பொருளாய் இருக்கின்றதே, அஃது எதன் பொருட்டு?' என்று ஒரு வினா எழுமாயின், அதற்கு என்ன விடை சொல்ல முடியும்? அதுபோலவே, **'பிரம்மம் ஸுவத:'** விரும்பப்படும் பொருளாக உள்ளது. அதனுடைய தன்மையே ஆனந்தத்துவமாகும். **அமலத்துவம்** என்பது, தான் குற்றமற்ற பொருளாயிருத்தல் மட்டுமேயன்றி, மற்றப் பொருள்களின் குற்றங்களையும் போக்குவது எதுவோ, அஃதே அமலப் பொருளாகும். அதனுடைய தன்மையே 'அமலத்துவம்' எனச் சொல்லப் பெறுகின்றது. **சத்தியத்துவம்** என்பது, அசித்திற்குள்ள பண்பின் வேறுபாடும், வடிவத்தின் வேறுபாடும் சித்திற்குள்ள பண்பினுடைய விகாரங்களும் அற்றிருப்பது எதுவோ, அதுவே 'சத்தியப் பொருளா'கும். அதன் தன்மையே சத்தியத்துவம் என்பது. எல்லா நாடுகளிலும் ஆன்மாகவிருக்கும் பொருள் எதுவோ, அதுவே அந்தப் பொருளாகிய தத்துவம் ஆகும். அவ்வந்தப் பொருளின் தன்மை **அநந்தத்துவம்** எனப்படும்.

எம்பெருமானின் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்னும் குணங்கள் 'நிரூபித சொரூப விசேஷணங்களாகும்.' இவற்றைச் சார்ந்த வாத்சல்யம், சௌசீல்யம், சுவாமித்துவம், சௌலப்பியம் முதலிய எண்ணிறந்த மங்கள குணங்களும் இவற்றுள் அடங்கும். இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் மயிலாடுதுறை காளியாக்குடி அய்யர் விடுதியிலிருந்து **சிறுபுலியூர்** என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படுகின்றோம். இத்திருத்தலம் மயிலாடுதுறை - காரைக்குடி கிளை இருப்பூர்திப் பாதையில் **கொல்லுமாங்குடி** என்ற நிலையத்திற்குக் கிழக்கே நடந்து சென்றால் ஒரு மைல் தொலைவில் உள்ளது. மாட்டு வண்டியில் சென்றால் 3 மைல் சுற்ற வேண்டும். இந்நிலையம் மயிலாடுதுறை சந்திப்பிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ளது. நல்ல வசதிகளை வேண்டுவோர் மயிலாடுதுறை நகரிலிருந்து கிளம்புவதே சிறந்ததாகும்.

**'சிறுபுலியூர்'** என்பது திருத்தலத்தின் திருநாமம். **'சலசயனம்'** என்பது திருக்கோயிலின் திருநாமம். திருக்கடன் மல்லையில் (மாமல்லபுரத்தில்) தலசயனப் பெருமாள் கிடக்குமிடம் தலசயனம் என்று வழங்கப்பெறுகின்றது. திருமங்கையாழ்வாரின் மங்களா சாசனத் திருமொழிப் பாசுரங்கள் தோறும் **'சிறுபுலியூர் சலசயனம்'** என்றே இத்திருக்கோயில் குறிப்பிடப்பெறுகின்றது. எம்பெருமான் புலிக்கால் முனிவருக்கு (வியாக்ரகபாதர்)[2] பாலசயனமாய்ச் சேவை சாதித்த தலமாதப் பற்றி இவ்வூர் சிறுபுலியூர் என வழங்கப் பெற்றதாகக் கூறுவர். 'சலம்' என்பது 'மாயை;' உறங்குவான் போல் யோகு செய்வதற்குக் கொண்ட சயனமாதலால், 'மாயப்படுக்கை' எனப்பட்டது. மயிலாடுதுறையிலிருந்து பேருந்தில் வந்து கொண்டிருக்கும்போதே நம்மனம் இந்தச் சிந்தனையில் ஈடுபட்டிருக்கின்றது.

பேருந்து ஊரருகில் வந்ததும் வண்டியை விட்டு இறங்கி ஊரை நோக்கி நடக்கின்றோம்.

தமிழகத்தில் மருதநிலவளத்திற்குப் பேர்போனது கீழ்த்தஞ்சை. சிறப்பாக **நன்னிலம் வட்டம்.** சோலைகளும் வாவிகளும் நீர் ஓடைகளும் நிறைந்த ஊர் சிறுபுலியூர். திருமங்கையாழ்வார் மருத நில வளத்தைத் தம் பாசுரங்கள்ளில் மிக அழகாகக் காட்டுவார்.

> **"வெள்ளம்முது பரவைத்திரை விரிய கரைஎங்கும்**
> **தெள்ளும்மணி திகழும்சிறு புலியூர்"[3]**

2. வியாக்ரக பாதர்: வியாக்ரகம் – புலி, பாதர் – கால்களையுடையவர்.
3. பெரி. திரு. 7–9:1

(வெள்ளம் . நீர்ஓட்டம்; முதுபரவை – பழையதானகடல்; திரை – அலை; தெள்ளும் . கொழிக்கப் பெற்ற; மணி – இரத்தினங்கள்)

"கடல் வெள்ளம் அலையெறிந்து நவமணிகளைக்கொண்டு வந்து கொழிக்கும் நீர்க் கரைகளையுடையது சிறுபுலியூர்" என்கின்றார் ஆழ்வார்.

**"அறையும்புனல் ஒருபால்; வயல்ஒருபால்; பொழில்ஒருபால்;**
**சிறைவண்டு இனம்அறையும் சிறுபுலியூர்"[4]**

(அறையும் – ஒலிக்கின்ற; புனல் – நீர்; ஒருபால் – ஒரு பக்கம்; பொழில் – சோலைகள்; சிறை – சிறகுகள்; இனம் – திரங்கள்)

"ஊரைச் சூழ்ந்த நீர்நிலைகளிலும் வயல்களிலும் பொழில்களிலும் வண்டுகள் இன்னொலிகளை எழுப்பிக் கொண்டுள்ளன; கண்ணுக்கும் செவிக்கும் விருந்தூட்டும் சூழ்நிலையை உடையது சிறுபுலியூர்" என்கின்றார் ஆழ்வார்.

நீர்நிலைகளில் வண்டுகள் ஒலிக்குமோ? என்ற வினா எழுகின்றது. நீர்நிலைகளில் மதுவோடு கூடிய வெள்ளப் பெருக்கம் இருக்குமாதலால், மதுவின் நசையினால் வண்டுகள் வந்து மொய்க்கும். கம்பநாடனும்,

**"ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்து**
**ஊக்கமே மிகுந்து உள்தெளிவு இன்றியே**
**தேக்கு எறிந்து வருதலில் தீம்புனல்**
**வாக்கு தேனுகர் மாக்களை மானுமே"[5]**

(மொய்ப்ப – மொய்க்க; வரம்பு . எல்லை; இகந்து . கடந்து; ஊக்கம் . உற்சாகம்; தேக்கு – ஏப்பம்; எறிந்து . வீசிக் கொண்டு; வாக்கும் . வார்க்கும்; தேன் – கள்; நுகர் – குடிக்கின்ற; மாக்கள் – மனிதர்கள்; மானும் – ஒத்திருக்கும்)

என்ற பாடலில் இதனைக் காட்டுவன். கட்குடியரையும் ஆற்று வெள்ளத்தையும் ஒப்பிட்டுக் காட்டும் பாடல் இது. **கட்குடியரைக் கூறுமிடத்து** ஈக்கள் வண்டொடு மொய்த்தல் அவரிடத்துள்ள கள் நாற்றத்திற்காக ஈக்களும் வண்டுகளும் மொய்த்தலும்; வரம்பு இகத்தல் - தமது குலம் குடிப்பிறப்பு என்ற இவற்றுக்கு ஏற்ற ஒழுக்கத்தைக் கைவிடுதலும்; ஊக்கம் மிகுதல் - உற்சாகம் மிகுதலும்; உள்தெளிவு இன்மை - மனம் தெளிவு பெறாமையும்; தேக்கு எறிதல் - ஏப்பம் விடுதலும் ஆகியவற்றைக் கட்குடியாரிடம் காணலாம். **ஆற்று வெள்ளத்தைக் கூறுமிடத்து** ஈக்கள் வண்டொடு மொய்த்தல் - அடித்துச் செல்லும் பல்வகை மலர்களிலுள்ள தேன் முதலியவற்றிற்காக ஈக்களும் வண்டுகளும் மொய்த்தலும்; வரம்பு இகழ்தல் - கரை கடந்து செல்லுதலும்; ஊக்கம் மிகுதல் - வலிமை

4. மேலது 7–9:3 5. கம்பரா. பால. ஆற் – 10

மிகுதலும்; உள்தெளிவு இன்மை - தன்னுள்ளே இருக்கும் நீர் கலங்காதிருத்தலும்; தேக்குதல் - அடித்துக்கொண்டு வரும் தேக்கு மரங்களை வீசுதலும் ஆகியவற்றைக் காணலாம். இப்பாடலில் வண்டுகள் வெள்ளத்தில் மொய்ப்பதை எடுத்துக் காட்டியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

இன்னும் ஆழ்வார், '**எறிநீர்ச் செந்தாமரை மலரும் சிறுபுலியூர்**'[6] என்று இவ்வூரைக் காட்டுவர். மேலும்,

> **"முழுநீலமும் அலராம்பலும் அரவிந்தமும் விரவிக்**
> **கழுநீரொடு மடவார் – அவர் கண்வாய்முகம் மலரும்**
> **செழுநீர்வயல் தழுவும்சிறு புலியூர்"**[7]

(முழுநீலம் – முற்றிலும் கறுத்துள்ள நீலோற்பல மலர்; அரவிந்தம் – தாமரை; கழுநீர் – செங்கழுநீர்ப் பூக்கள்; விரவி – சேர்ந்து; மடவார் – பெண்கள்)

என்று காட்டுவார். (இங்கு, சிறுபுலியூரில், ஊருக்கும் வயலுக்கும் வாசி (வேறுபாடு) தெரிந்துகொள்ளவொண்ணாதபடி இருக்கும் என்கிறார். நீலோற்பலங்களைப் பார்த்தால் அவ்வூர்ப் பெண்களின் கண்களாகத் தோற்றும். அரக்காம்பல்களை நோக்கினால் அப்பெண்களின் செவ்விதழ்களை நிகர்ப்பனவாக இருக்கும்; தாமரை மலர்களைக் காணின், அம்மகளிர்களின் முகம்போலக் காட்சி அளிக்கும். எனவே, உள் வீதிகட்கும் வெளிநிலங்களுக்கும் வேறுபாடு தெரிவதாக இருக்கும். இவ்வூர்ப் பெண்கள் கிளிப்பிள்ளைகட்குப் பேசும் பயிற்சி தருவதை "கிளி மடவார், செவ்வாய் மொழி பயிலும் சிறுபுலியூர்"[8] என்று காட்டுவர்.

இங்ஙனம் ஊரின் சூழ்நிலையை அநுபவித்த வண்ணம் - ஊருக்குள் நுழைகின்றோம். ஊர் எப்படிப்பட்டது? 'திருவிற்பொலி மறையோர் வாழும் ஊராகும் சிறு புலியூர்; ஓமத்தீயை வளர்க்கின்ற மறையோர் வாழும் ஊராகும்.[10] அக்காலத்தில் வேதம் ஓதி வேள்வி வளர்க்கும் அந்தணாளர் வாழ்ந்த ஊராக இருந்தது என்பதை ஆழ்வார் இந்த இரண்டு பாசுரங்களில் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இப்பொழுது அத்தகையோர் வாழும் இடமாகத் திகழவில்லை. ஊர் சிறிய ஊராயினும் தேவையான ஒரு சில பொருள்கள் விற்கும் அங்காடிகள் உள்ளன. கோபுரவாயிலுக்கு வெளியில் வலப்புறத்தில் நல்லதொரு விடுதி உள்ளது. குடும்பத்துடன் வரும் திருத்தலப் பயணிகள் இங்கு வசதியாகத் தங்கலாம். தாங்களாக உணவு தயாரித்துக் கொள்ளலாம். வேறு நல்ல உணவு விடுதிகள் இங்கு இல்லை.

6. பெரி. திரு. 7–9:5
7. மேலது. 7–9:6
8. பெரி. திரு 7–9:2
9. மேலது. 7.9:2
10. மேலது 7–9:7
11. பெரி. திரு. 7–9:3

இந்தத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் இணையடிகளன்றி வேறொன்றையும் அறியாதவர் திருமங்கையாழ்வார்,

**"பறையும்வினை தொழுதும்மின்நீர்**
**பணியும்சிறு தொண்டீர்**
... ... ... ... ... ... ... ... ... ... ...
**புலியூர்ச்சல சயனத்து**
**உறையும்இறை அடியல்லது**
**ஒன்றிறையும் அறியேனே."**[12]

(பறையும் . தொலைந்துபோம்; வினை . வாங்கள்; சிறுதொண்டீர் . கீழானவற்றில் தொண்டு பட்டுத் திரிகின்றவர்கள்; ஒன்று . வேறொன்று; இறையும் . சிறிதும்)

இவ்வாறு தகுதியற்றவர்களைப் பணிந்து திரிகின்றவர்களை நோக்கி, "சிறுபுலியூர்ச் சலசயனத்தைத்தொழுது உய்வீர்களாக; அப்படித் தொழுதால் நும் பாவங்கள் யாவும் தொலைந்து போம்" என்று ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார். "இங்குப் பொருந்தி வாழ்கின்ற பெருமானுடைய இணையடிகளன்றி வேறொன்றையும் அறியேன்" என்று தனது பற்றுறுதியையும் வெளியிடுகின்றார். மேலும், "சலசயனத்து ஆன்ஆயனது அடியல்லது ஒன்று அறியேன் அடியேனே"[12] என்றும் கூறுவர். கிருஷ்ணாவதாரத்து எம்பெருமானே இங்கும் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் நம்பிக்கை. "கிருஷ்ணாவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்ததென்று வெறுக்க வேண்டாதபடி பிற்பாடர்க்கும் அநுபவிக்கலாம்படி அவ்வதாரத்தின்படியே வந்து சாய்ந்தவன்" என்பது **பெரியவாச்சான் பிள்ளையின்** வியாக்கியானம்.

"சிறுபுலியூர் என்ற திருத்தலமும் வேண்டா; அங்குள்ள சலசயனத் திருக்கோயிலும் வேண்டா; அங்குள்ள திருக்கோயிலும் வேண்டா; அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானும் வேண்டா; அத்திருக்கோயிலைத் தொழுவதையே இயல்பாகவுடைய பாகவதோத்தமர்களின் திருவடிகளே சரணம் என்று இருப்பார்க்குத் துயரெல்லாம் தொலைந்திடும்" என்கின்றார் ஆழ்வார். "சலசயனம் தொழுநீர்மையுடையார் அடிதொழுவார் துயர் இலரே"[13] என்பது திருமங்கைாழ்வாரின் திருவாக்கு. "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்"[14] என்ற நம்மாழ்வாரின் திருவாக்கும் ஈண்டு ஒருங்கு வைத்து எண்ணிப் போற்றத்தக்கது. பாகவதர் வழிபாடு பகவான் வழிபாட்டை விடச் சிறந்தது என்பது வைணவ சமயத்தின் தலையாய கோட்பாடு.

12. மேலது 7–9:4
13. மேலது. 7–9:6
14. திருவாய் 7–1:11

கீழ்கூறப்பெற்ற சிந்தனையுடன் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு புயங்க சயனத்தில் சேவை சாதிக்கும் **அருமாகடலமுதனைக்** கண்டு தரிசிக்கின்றோம். தாயாரின் **திருநாமம் திருமாமகள்** நாச்சியார். உற்சவ மூர்த்தி **கிருபாசமுத்திரப் பெருமாள்** (கருணைக் கடல் பெருமாள்) என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுகின்றார் திருமங்கையாழ்வாரின் திருப்பாசுரங்களாலேயே எம்பெருமானை வாழ்த்துகின்றோம்; சரண் புகுகின்றோம்.

சிறுபுலியூர் எம்பெருமான் இருக்கும் இடம் தனக்குத் தெரியவில்லையே என்கிறார் ஆழ்வார்.

> **சேயோங்குதண் திருமாலிருஞ் சோலைமலை உறையும்**
> **மாயா! எனக் குரையாய்இது மறைநான்கின் உளாயோ?**
> **தீயோம்புகை மறையோர்சிறு புலியூர்ச்சல சயனத்**
> **தாயோ?உன தடியார்மனத் தாயோ?அறி யேனே"**[15]
> (சேயோங்கு – மிகவும் உயர்ந்த; தண் – குளிர்ந்த; உறையும் – வசிக்கும்; மறை – வேதம்; தீ – ஓமத்தி; ஓம்பு – வளர்க்கும்; மறையோர் – வேதியர்)

என்பது ஆழ்வார் பாசுரம். "எம்பெருமானே, அடியேனுக்கு ஓர் ஐயம். நீ நான்மறையில் உள்ளாயா? சிறுபுலியூர் சலசயனத்தில் உள்ளாயா? நினது அடியார்களின் நெஞ்சில் உள்ளாயா? நீ இன்னவிடத்தில் உள்ளாய் என்பதை அடியேனால் அறியக் கூடவில்லை. நீயே நின் சோதி வாய்திறந்து அருளிச் செய்தருள்வாயாக" என்றார். இவ்விடத்துப் **பெரியவாச்சான் பிள்ளை** வியாக்கியானம் "இத்தால் சொல்லிற்றாய்த்து - சௌபரி பலவடிவு கொண்டாப் போலே இவ்வோவிடங்கள்தோறும் இனி அவ்வருக்கில்லை என்னும்படி குறையற வர்த்திக்கிறபடியைக் (இருக்கிறபடியைக்) காட்டிக் கொடுத்தான்" என்பது, அப்ராக்ருத திவ்விய மங்கள விக்கிரகங்களையும் கண்ணால் கண்டு அநுபவிக்கலாம்படியான அர்ச்சா மூர்த்திகளையும் நெஞ்சாலே அநுபவிக்கலாம்படி அந்தர்யாமியாயிருக்கும் வடிவுகளையும் ஒருகாலே சேவை சாதிப்பித்த படியாலே கண்டு ஆச்சரியப்படுகின்றார் ஆழ்வார் என்பதை இதனால் பெற வைக்கின்றார். 'திருமாலிருஞ்சோலை உறையும் மாயா?' என்று அழகரை விளித்தது என்னோவெனின் நான்மறைகள், சிறுபுலியூர் சலச்யனம், அடியார் மனம் என்னும் இடங்களில் உறையும் எம்பெருமான் ஒருவனே என்ற உண்மையை விளக்குதல் இப்பாசுரத்தின் உள்ளுறையாதலால், திருமாலிருஞ் சோலை மலையில் உறைபவனும் இவனே என்பது விளியினால் பெறப்படும்.

15. பெரி. திரு. 7–9:7

மாதர்களின் கண்ணழகில் ஈடுபட்டு அழிந்து போகாமல் எம்பெருமான் திறத்தில் ஈடுபட்டு உய்வு பெற வேண்டி சிறுபுலியூர்ச் சலசயனத்து எம்பெருமானைத் தொழுகின்றதாகக் கூறுகின்றார். தம்மை அலட்சியம் செய்யாமல் அருள்புரியுமாறு வேண்டுகின்றார் ஆழ்வார்.

**"மையார்வரி நீலம்மலர்க் கண்ணார்மனம் விட்டிட்டு**
**உய்வான்உன கழலேதொழு தெழுவேன்...**
**... புலியூர்ச்சல சயனத்து**
**ஐவாய் அரவணைமேல்உறை அமலாஅரு ளாயே"[16]**

(மையார் – மை அணிந்த; வரி . தோகை; நீலம் மலர் – கருநெய்தற் பூ; மனம் – மனத்தை; உய்வான் – உய்யும் பொருட்டு; அருளாய் – கிருபை காட்டுவாய்.)

என்பது அவர்தம் திருவாக்கு. இந்த வாக்கைக்கொண்டே நாமும் அவனை வேண்டுகின்றோம்.

பெரிய பிராட்டியார் மார்பில் உறையும் எம்பெருமானிடம் ஆழ்வார் சரண்புகுகின்றார்.

**"கருமாமுகி! லுருவா கனல் உருவா! புனல் உருவா!**
**பெருமால்வரை உருவா! பிற உருவா! நின துருவா**
**திருமாமகள் மருவும்சிறு புலியூர்ச்சல சயனத்து**
**அருமாகடல் அமுதே! உனது அடியேசரண் ஆமே"[17]**

(மா – பெரிய; முகில் – மேகம்; உருவா . உருவமுடையவனே; கனல் – நெருப்பு; புனல் – நீர்; மால்வரை . பெரிய மலை; நினது . உன்னுடைய; திருமாமகள் – பெரிய பிராட்டியார்)

என்பது ஆழ்வார் பாசுரம். இத்திருப்பாசுரத்தின் இனிமை கனிந்த நெஞ்சினரால் நன்கு அநுபவிக்கத்தக்கது. ஆழ்வார் தமது உள்ளன்பு நன்கு விளங்க எம்பெருமானை வாயார விளிக்கின்றார். இறுதியில் **"உன் திருவடிகளே சரணம்"** என்று கூறி அவன் திருவடிகளில் சரண் புகுகின்றார். நாமும் ஆழ்வாரின் அடியொட்டிச் சரண் புகுகின்றோம். பாசுரத்தை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

**"ஆமருவ மேய்த்த அரங்கர்எதிர் ஆர்நிற்பார்**
**தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள் – சேம**
**முறுபுலியூர் வன்றோல் உடையான் உடைந்தான்**
**சிறுபுலியூர் எந்தைமேற் சென்று"[18]**

(ஆ–பசு; மருவி – விருப்பி; எதிர் – முன்பாக; வாணன் . பாணாசுரன்; மருவி . கிட்டி; சாய்த்த – அறுத்துத் தள்ளிய; நாள் – காலத்தில்; சேமம் . காவல்; புலிஊர்வல்தோல் உடையான் – வலிய புலத்தோலை ஆடையாகவுடைய சிவன்; மேல்சென்று – எதிர்த்துச் சென்று; உடைந்தான் – தோற்று ஓடினான்)

16. பெரி. திரு. 7–9:8
17. பெரி. திரு. 7–9:9
18. நூற். திரு. அந் – 11

என்ற திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வர அதனையும் ஓதி மகிழ்கின்றோம். இதற்கு அடிமூலமாக உள்ள திருமழிசையாழ்வாரின் பாசுரத்தையும் சிந்திக்கின்றோம்.

**"அவர்இவர் என்றுஇல்லை அனங்கவேள் தாதைக்கு**
**எவரும் எதிர்இல்லை கண்டீர் – உவரிக்**
**கடல்நஞ்சம் உண்டான் கடன்என்று வாணற்கு**
**உடல்நின்று தோற்றான் ஒருங்கு"**[19]

(அனங்கவேள் – மன்மதன்; உவரிக் கடல் – உப்புக் கடல்; நஞ்சம் – நஞ்சு; கடன் என்று – உன்னைக் காக்க நான் கடமைப்பட்டவன் என்று; ஒருங்கு – குடும்பத்துடன், பரிவாரத்துடன்)

என்பது பாசுரம். 'அவர்' என்பது சிறந்தவர்களையும், 'இவர்' என்பது தாழ்ந்தவர்களையும் குறிக்கின்றன. "தாழ்ந்தவர்களான நம் போலியர் எம்பெருமானுக்கு எப்படி எதிராக முடியாதோ, அப்படியே உயர்ந்தவர்கள் என்று கருதப்பெறும் உருத்திராதிகளும் எம்பெருமானுக்கு எதிர் நிற்க முடியாது" என்ற கருத்து இப்பாசுரத்தில் வலியுறுத்தப்பெறுகின்றது. "கலியன் ஒலிமாலை, பாரார் இவை பரவித் தொழப் பாவம் பயிலாவே"[20] என்ற பல சுருதிப் பாடலடிகளை நினைந்தவண்ணம் நாம் திருக்கண்ணபுரத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

19 நான். திருவந். 56
20. பெரி. திரு. 7–9:10

# 6. கண்ணபுரத்துக் கருமணி

**நாமீர் நாள்தோறும் வாடா மலர்கொண்டு**
**பாமீர் அவன்நாமம் வீடே பெறலாமே.**[1]

என்பது திருவாய்மொழி. பெரியோர்கள் திருநாட்டுக்கு எழுந்தருளும் இறுதி நேரத்தில் தமக்கு மிகவும் வேண்டியவர்கட்கு இறுதிவாக்காகச் சில சொல்லிப் போவதுண்டு. இதனைச் **'சரம சந்தேசம்'** என்று வழங்குவர். எம்பெருமான் நமமாழ்வாரைத் திருநாட்டுக்குக் கொண்டுபோக விரையா நிற்கின்றான்; ஆழ்வாரும் தமக்குப் **பிராப்தி** (அடைய வேண்டிய பொருள்) தப்பாது என்று துணிவு கொள்ளுகின்றார். இவர் சம்சாரிகளாகிய நம்போலியர் பக்கல் பரம கருணையே வடிவெடுத்தவராகையாலே, முதற்பத்தில் **'விடுமின் முற்றவும்'**[2] என்று பரோபதேசம் (பிறருக்கு உபதேசம்) செய்யத் தொடங்கி, பத்துதோறும் உபதேசம் செய்வதில் கருத்துள்ள பதிகங்களை அருளிச்செய்து வந்து, இப்பதிகத்தோடே பரோபதேசத்தைத் தலைக் கட்டுகிறாராதலின் இது **'சரம சந்தேசம்'** ஆகின்றது.

மக்கட் பிறவிக்கு இயல்பானதும் இன்றியமையாததுமான செயலைப் புரியவே புருஷார்த்தம் (புருஷன் - ஆன்மா; அர்த்தம் - அடைய வேண்டிய பொருள்) இயல்பாகவே வந்து கிட்டும் என்கின்றார் இப்பாசுரத்தில். 'செவ்வி மாறாத மலர்களைக் கொண்டு அவன் திருப்பெயரை உவகைக்குப் போக்குவீடாகச் சொல்வீர்களாக; அப்படிச் செய்யவே ஆன்மாவிற்கு ஒத்ததான கைங்கரியத்தைப் பெறலாம்' என்பது ஈடு. **'நாமீர் நாள்தோறும்'** என்பதற்கு, 'பசித்த போதெல்லாம் உண்ணுமாப் போலே' என்பது ஈட்டுரை. வாடாமலர் கொண்டு - உங்களுடைய பக்திக்குத் தகுதியான மலர்களைக் கொண்டு என்றபடி.

1. திருவாய் 10–5:5 2. மேலது 1.2

**மார்வம் என்பதோர் கோயில் அமைத்து**
**மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி**
**ஆர்வம் என்பதோ பூஇட வல்லார்க்கு**[3]
(மார்வம் – இதயம்; ஆர்வம் – பக்தி)

என்பதனால் அன்பாகிய மலர் என்று சொல்லலாம்; ஆன்மாவாகிய மலர் என்றும் சொல்லலாம். 'கந்தமா மலர் எட்டும் இட்டு'[4] எனவும், 'இனமலர் எட்டும் இட்டு' எனவும் ஆழ்வார்கள் அருளிச் செய்வதனால் அந்த எட்டுமலர்கள் என்றும் கூறலாம். **எட்டு மலர்களாவன.** செங்கழுநீர், செண்பகம், இருவாட்சி, பாதிரி, புன்னை, குருக்கத்தி, தாமரை, தாழை என்பன. இவற்றையே வாடாமலராகச் சொல்லிற்றாகவும் கொள்ளலாம். பாடீர் அவன் நாமம் - முக்தர்கள் சாம கானம் பண்ணுமாப்போலே அவனுடைய திருப்பெயர்களை பக்தியுடன் பாடுங்கள் என்றபடி, இப்பாசுரத்தில் மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களும் செயற்படுகின்றன என்பதைக் காணலாம். 'நாடீர்' என்பதனால் 'மனத்தின் தொழிலையும்', 'வாடாமலர் கொண்டு' என்பதனால் 'உடலின் தொழிலையும்,' 'பாடீர்' என்பதனால் 'வாக்கின் தொழிலையும்' சொல்லிற்றாகக் கொள்ளலாம். இனியதனைச் செய்யப் பெரியதனைக் கொள்ளலாம் என்று உரைத்தபடியைக் கண்டும் மகிழலாம்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் சிறுபுலியூரிலிருந்து **திருக்கண்ணபுரத்திற்குப்** புறப்படுகின்றோம். இஃது ஒரு சிற்றூர். திருவாரூரையும் மயிலாடுதுறையையும் இணைக்கும் தென்னிந்திய இருப்பூர்திப் பாதையில் **நன்னிலம்** நிலையத்திலிருந்து சுமார் ஒன்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. நாம் சிறுபுலியூரிலிருந்து பேருந்து மூலம் நன்னிலம் வருகின்றோம். நன்னிலத்திலிருந்து **நாகூர்** செல்லும் பேருந்தில் ஏறி **திருப்புகலூர்** என்ற திருத்தலத்தில் (திருநாவுக்கரசர் முக்தி அடைந்த திருத்தலம்) இறங்குகின்றோம். திருப்புகலூரில் தங்குவதற்கும், உணவு கொள்வதற்கும் விடுதிகள் உள்ளன. மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் இங்கு கிடைக்கும். குதிரை வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு, ஆற்றைப் பாலத்தின் வழியாகக் கடந்து ஒன்றரைக் கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருக்கண்ணபுரத்தை அடைகின்றோம்.

கண்ணபுரத்து எம்பெருமானைக் **குலசேகரப் பெருமாள், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார்** என்ற

3. பெரியாழ். திரு. 4.5.5:3 4. பெரி. திரு. 3.5:6

ஐந்து ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். **குலசேகராழ்வார்** கண்ணபுரத்து எம்பெருமானுக்குக் **'கண்ணபுரத்துக் கருமணி'** என்று திருநாமம் சூட்டுகின்றார். இந்த எம்பெருமான் ஆழ்வாருக்கு இராமனாகவே காட்சி அளிக்கின்றார். அதுவும் குழந்தை இராமனாக. ஆகவே, தாலாட்டுப் பாடல் பாடின முகத்தால் திருமொழியை அருளிச் செய்கின்றார் ஆழ்வார். வண்டியில் வரும்போதே தாலாட்டுத் திருமொழியில் ஆழங்கால்படுகின்றோம்.[5] "கோசலையின் திருவயிற்றில் கோமகனாக அவதரித்தவன் இராமன்; இலங்கைக் கோமான் இராவணனின் பத்துத் தலைகளையும் சிதற அடித்தவன்; எனக்கு நீல இரத்தினம் போன்றவன்; எனக்கு அமுதம் போன்றவன்; இவனே இராகவ நம்பி (1). நின்னுடைய நாபியில் அலர்ந்த தாமரையின் மேல் நான்முகனைத் தோற்றுவித்து உலகங்களை யெல்லாம் படைத்தவன்; எட்டுத் திக்கிலுள்ளவர்களையும் அடிமை கொண்டருள்பவன் (2). சனகனின் மருமகன்; சக்கரவர்த்தி திருமகன்; எங்கள் குலத்து இன்னமுதன் (3).[6] தாமரைமேல் அயனைப் படைத்தவன்; தயரதனின் திருமகன்; மைதிலியின் மணவாளன்; அம்புகள் தொடுக்கப்பெற்ற வில்லை ஆள வல்லவன் (4). பாராளும் படர்செல்வத்தைப் பரத நம்பிக்கு அளித்து ஆரா அன்பு இளையவனுடன் அருங்கானமடைந்தவன்; வெற்றித் திருமகளுக்கிருப்பிடமாய் மலை போன்ற திருமார்பையுடையவன் (5). சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல்கானம் அடைந்தவன்; உனக்கே அற்றுத் தீர்ந்த பரபக்தர்கட்கு அருமருந்து போன்றவன்; அயோத்தி நகருக்கு அதிபதி; சிற்றன்னையின் சொற்கேட்ட சீராமன் (6). பாலனாய் ஏழுல குண்டவன்; வாலியை வானுலகுக்கு அனுப்பி வானர அரசைப் பகலவன் மைந்தனுக்கு அளித்தவன்; ஆலிநகரின் அதிபதி; அயோத்தி நகருக்கு அரசன் (7). மலைகளைக்கொண்டு சேதுகட்டி மதிலிலங்கையை அழித்தவன்; அலை கடலைக் கடந்து அமரர்கட்கு அமுதளித்தவன்; சிலை வலவன்; வீரன்; சீராமன் (8). தயரதனின் குல விளக்கு; இலங்கையைப் பொடிப் படுத்தின எம்மான்; இளையவர்கள்மீது இன்னருள் சுரப்பவன் (9). தேவர்கள், அசுரர்கள் திசைகள் இவற்றைப் படைத்தவன்; அன்பர்கள் அடி வணங்க அரங்கநகரில் அறிதுயில் கொண்டிருப்பவன் (10)" இங்ஙனம் கண்ணபுரத்தெம்மானை இராமனாகப் பாவித்து, இராமனின் வீரச் செயல்களையும் வெற்றிச் செயல்களையும் அநுபவித்து அகமகிழ்கின்றார் ஆழ்வார். "இராகவனே தாலேலோ" என்று தாலாட்டுகின்றார். அர்ச்சாவதார எம்பெருமானை விபவ

5. பெரு. திரு. 8
6. இராமன் அரச குலத்திற் பிறந்தாற் போன்று இவரும் அரச குலத்தவராதலால் 'எங்கள் குலத்தவன்' என்று அருளிச் செய்துள்ளார்.

எம்பெருமானாகப் போற்றுகின்றார். இதனால் இரண்டும் ஒன்றுதான் என்ற வைணவ சமயதத்துவத்தையும் விளக்கி விடுகின்றார்.

**பெரியாழ்வாருக்குக்** கண்ணபுரத்துக் கருமணி கண்ணபுரத்து அமுதமாக இனிக்கின்றான்.[7] இவர்தம் அருமைத் திருமகளார் ஆண்டாள் காட்டு வாழ்க்கையையும் நகர வாழ்க்கையையும் வாசியற இனிதாகக் கொள்ளும் மன மாண்பு விபவாவதாரத்தில் இராமனிடம் இருந்தது போலவே அர்ச்சாவ தாரத்திலும் உள்ளபடியை எடுத்துக் காட்டுகின்றாள். தண்ட காரண்ய வாழ்க்கைக்கும் விருந்தாவன வாழ்க்கைக்கும் ஒப்பாகும் திருமலை வாழ்க்கை. அயோத்தி வாழ்க்கைக்கும் ஆயர்பாடி வாழ்க்கைக்கும் ஒப்பாகும் கண்ணபுரநகர் வாழ்க்கை. இதனை,

> **காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்**
> **வாட்டம் இன்றி மகிழ்ந்துறை வாமனன்**[8]

என்று பாசுரம் இட்டுக் காட்டுவர் நம் அன்னையார். "குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர் உரு" என்னும்படி நித்திய சூரிகளின் அவையின் நடுவே மிக்க பேரொளியுடன் எழுந்தருளியிருக்கும் இருப்பு தவிர்ந்து மநுஷ்ய நாற்றம் நாறுகின்ற இந்த சமுசார நிலத்திலே நடையாடி, "கானமும் வானரமும் வேடு" மானவற்றிற்கு முகங் கொடுத்துக் கொண்டு நிற்க வேண்டிற்றே என்று திருவுள்ளத்தில் வெறுப்பு இல்லாமல் இருட்டறையில் விளக்குப்போலே நம்முடைய அநந்த கல்யாண குணங்களெல்லாம் நன்கு விளங்குமாறு இங்கு வரப்பெற்றோமே! என்று அளவற்ற மகிழச்சியோடே எழுந்தருளியிருப்பதை எண்ணி எண்ணி மகிழ்கின்றார். இராமகிருஷ்ணாவதாரங்கள் ஒரு காலத்தளவில் உள்ளார்க்கு மட்டிலும் என்று பின்னானார் வணங்கும் சோதியாகாமல் தீர்த்தம் பிரசாதித்துவிட்டுத் தன் சோதிக்கு எழுந்தருளினாப் போலன்றி நித்திய வாசம் செய்தருளுகின்ற இடங்களாகும் அர்ச்சாவதத் திருப்பதிகள். இதனை நினைந்தே **'மகிழ்ந்துறை'** என்று குறிப்பிடுகின்றார் அன்னையார். எம்பெருமானை அடிபணிந்து பேறு பெற வேண்டியதாகையாலே அவ்வெம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டு செல்ல வேண்டியவர்கள் சேதநர்கள். அங்ஙனமிருக்க இவர்களிடத்தை நோக்கி அவ்வெம்பெருமான் புறப்பட்டு வருவதற்குக் காரணம் என்ன? என்ற ஐயம் பிறக்கக் கூடுமாதலால் அந்த ஐயத்திற்கு தெளிவு தருவது போல் **'வாமனன்'** என்கின்றாள்.

7. பெரியாழ். திரு. 1.5:8 8. நாச். திரு. 4:2

தன் உடைமையைப் பெறுகைக்குத் தான் இரப்பாளானாய் அவதரித்த படியன்றோ வாமனாவதாரம். இதனால் சேதநன் லாபம் ஈசுவரனுக்குப் புருஷார்த்தமேயன்றி ஈசுவர லாபம் சேதநனுக்குப் புருஷார்த்தமன்று என்று **சத் சம்பிரதாயப் பொருளையும்** விளக்கி வைக்கின்றார்.

நாம் வரும் குதிரை வண்டியை விட்டிறங்கித் திருக்கோயிலுக்கு வருகின்றோம். திருக்கோயிலும் கோயிலுள்ள ஊரும் இருக்கும் சூழ்நிலையைக் கவனிக்கின்றோம். நம்மாழ்வாரின் மங்களாசாசனப் பாசுரங்கள் நினைவிற்கு வருகின்றன.[9] "வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரம்"[10] என்ற அடியைச் சிந்திக்கின்றோம் "சமுத்திரம் அணித்தாகையாலே திரைகள் வந்து மோதா நின்றுள்ள மதிலாலே சூழப்பட்டிருந்துள்ள திருக்கண்புரத்திலே" என்பது ஈடு. இந்நிலை இன்று காண்டற்கில்லை. முற்காலத்தில் இவ்வூருக்கருகில் கடல் இருந்திருத்தல் கூடும் என்றும் நாளடைவில் அது ஒதுங்கிப் போயிருத்தல் கூடும் என்றும் பெரியோர் பணிப்பர். திருமங்கையாழ்வாரும் "கலங்கல் முந்நீர்க் கண்ணபுரம்"[11] என்று பேசுவர். மேலும் இவர்,

> **வலம்மனு படைஉடை மணிவளர் நிதிகுவைக்**
> **கலம்மனு கண்ணபுரம்.**[12]
> (மனு – பொருந்தியிருக்கப் பெற்ற; கலம் . மரக்கலங்கள்)

என்று கூறுவதால் கடல் அருகில் இருந்த கருத்தை அரண் செய்யும். தொலைநாடுகளிலிருந்து சிறந்த சரக்குகளை ஏற்றிக் கொண்டு வருகின்ற கப்பல்கள் கடல்களில் பெரும்பான்மையாகக் காணப்பெறும் என்கின்றார். இன்று சுமார் பத்துக் கிலோமீட்டர் தொலைவில் கடல் உள்ளது. திருக்கண்ணபுரம் ஐந்து கிருஷ்ணன் கோயில்களுள் ஒன்று; மற்றவை திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன் கவித்தலம், திருக்கோவலூர் என்பவையாகும்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஊர் ஆதலால் நீர் வளம், நிலவளத்திற்குக் குறைவில்லை. இவை பற்றிய ஆழ்வார் பாசுரங்களைச் சிந்திக்கின்றோம். நம்மாழ்வார் "வண்டுபாடும் பொழில்சூழ் திருக்கண்ணபுரம்"[13] என்பதால் சோலைகள் சூழ்ந்த ஊர் என்பது புலனாகின்றது. "செய்யில் வாளை உகளும் திருக்கண்ணபுரம்"[14] என்பதால் கழனிகளில் வாளை மீன்கள் துள்ளி விளையாடப் பெற்ற திருக்கண்ணபுரம் என்பது தெரிகின்றது.

9. திருவாய். 9.10
10. திருவாய் 9.10:1
11. பெரி. திரு. 8.8:2
12. மேலது. 8.7:9
13. திருவாய் 9.10:3
14. மேலது. 9.10:7

ஆழ்வாரின் இக்குறிப்புகளினால் இத்திருத்தலம் நீர்வளம், நிலவளம் மிக்கது என்பது தெளிவாகின்றது. திருமங்கையாழ்வாரும் "கார் வானம் நின்றதிருக் கண்ணபுரம்"[15] "கார்மலி கண்ணபுரம்"[16] "கருமா முகில்தோய் நெடுமாடக் கண்ணபுரம்"[17] என்பவற்றால் அடிக்கடி கறுத்த மேகங்கள் சூழ்ந்து மழை பெய்வதற்கும் குறை இல்லை என்பதனையும் அறிகின்றோம். மேலும் இந்த ஆழ்வார்,

**"காவளரும் கடிபொழில்சூழ் கண்ணபுரம்"[18]**

(கா – சோலை; கடி . மணம்).

என்று சோலையின் எழிலை எடுத்துக்காட்டுவர்.

இந்த ஆழ்வார் **'கண்ணபுரத்து ஆதி'**யை நூறு பாசுரங்களாலும் (பத்துத் திருமொழிகள்) திருநெடுந்தாண்டகத்தில் இரண்டு பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்திருப்பதால் ஊரைப் பற்றிப் பேசவும் ஊரில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் பெருமைகளைப் பேசவும் அதிக வாய்ப்புகளைப் பெறுகின்றார். பெரும்பாலும் குற்றெழுத்துகளே நிரம்பப் பெற்றுச் சித்திர கவிகளாலும் ஒரு திருமொழியைப் பாடி மகிழ்கின்றார். ஊரின் சூழ்நிலையை இவ்வாறு காட்டுவர்: திருக்கண்ணபுரம் குளங்கள் நிறைந்த ஊர் (பெரிய திரு. 8-7-1). களை பறிக்கின்றவர்கள் களைக்கட்டுகளைக் கொண்டு களை பறிக்குங்கால் சிறு தூறுகளினின்றும் புறப்படும் முயல்கள் அவர்கள் முகத்தில் துள்ளும்; செழிப்பான கழனிகளில் கயல் மீன்கள் துள்ளும் (3); வண்டுகள் சோலைகளெங்கும் நறுமணமுள்ள மலர்களைக் கோதி; மதுவைப் பருகி அக்களிப்பினால் இசை எழுப்பும் (4,6); கழனிகளில் கலப்பைகளைச் செலுத்தும்போதும், காலால் குழப்பும்போதும் இடையிலே தப்பிக்கிடந்த தாமரை மலர்களினின்றும் நறுமணம் புறப்படும் (8).

மேலும், கண்ணபுரம் காடும் வயல்களும் சூழ்ந்திருக்கும் (பெரி. திரு. 8-8-1); வயல்களில் செழித்த செந்நெற்பயிர்கள் ஓங்கி வளர்ந்து இருள் மூடிக் கிடக்கும் (4); வயல்களில் பொன்போன்ற நெல் விளைச்சலைக் காணலாம்; பல இடங்களில் முல்லை மலர்கள், கருமுகை மலர்கள், செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்து கிடக்கும் (5); நீலோற்பல மலர்கள் எங்கும் மணம் பரப்பி நிற்கும்; அவற்றில் வண்டுகள் கூட்டங்களாக மதுவினைப் பருகும் (6); கடலை அடுத்திருப்பதால் பரிமளம் மிக்க தாழைகள் ஊருக்கு வேலிபோல்

15. மேலது 8.1:4
16. மேலது 8.2:10
17. மேலது 8.6:10
18. மேலது 8.1:7
19. பெரி. திரு. 8.7

அமைந்திருக்கும் (7); ஒரு புறத்தில் கடலலைகள் முத்துகளை ஒதுக்கித் தள்ளும்; இன்னொரு புறத்தில் அழகிய செந்நெற் பயிர்கள் சாமரம்போல் வளைந்து வீசும் (9), கிட்டத்தட்ட மேற்குறிப்பிட்ட சூழ்நிலையை இன்றும் காணலாம்.

எங்கும் சோலைகள்; வண்டினங்களின் இன்னோசைகள். இந்தச் சூழ்நிலையில் ஆழ்வாருக்கு வண்டுகளை நோக்கிப் பாடத் தோன்றியது போலும். நாயகி நிலையிலிருந்து பத்துப் பாசுரங்களைப் பாடி இனியராகின்றார். அவற்றுள் ஒன்று

**விண்ட மலரெல்லாம் ஊதி, நீ என்பெறுதி?**
**அண்ட முதல்வன் அமரர்கள் எல்லாரும்**
**கண்டு வணங்கும் கண்ணபுரத்த எம்பெருமான்**
**வண்டு நறுந்துழாய் வந்துஊதாயதா கோல்தும்பி**[20]

(விண்ட – மலர்ந்த; ஊதி – ஒலிசெய்து; அண்டம் – உலகங்கள்; அமரர்கள் – தேவர்கள்; நறு – மணம் மிக்க)

'தும்பி' என்பது வண்டுகளில் ஒருவகை; கரு வண்டு என்றும் கூறுவர். மரக்கொம்புகளில் மதுவுக்காகத் திரியும் இயல்புபற்றிக் 'கோல் தும்பி' (கோல் - கிளை) என்று விளித்துப் பேசுகின்றாள். "திறந்த கிடந்த வாசல் எல்லாம் திரியுமாப் போலே விண்டமலர்கள் தோறும் நீ ஊதித் திரிவதனால் என்ன பேறு பெறப் போகின்றாய்? அற்பமாயும் நிலையற்றதுமாயும் உள்ள மதுவையுடைய இம்மலர்களிலே ஊதித் திரிவதை விட்டு, திருக்கண்ணபுரத்தில் சந்நிதி பண்ணிக் கொண்டிருக்கும் எம்பெருமானுடைய திருத்துழாய்மாலையிலே உன் சுற்றத்தாருடன் தங்கியிருந்து அங்குள்ள பரிமளத்தை இங்குக் கொணர்ந்து ஊதுவாகில் மிகுதியும் நிலையானதுமான மதுவைப் பருகலாம்" என்கின்றாள் பரகால நாயகி.

**வண்ணம் திரிவும் மனம்குழைவும்**
**மானம் இலாமையும் வாய்வெளுப்பும்**
**உண்ண லுறாமையும் உள்மெலிவும்**
**ஓதநீர் வண்ணன் என்பானொருவன்**
**தண்ணந் துழாய்என்னும் மாலைகொண்டு**
**சூட்டத் தணியும்**[21]

(வண்ணம் . மேனி நிறம்; திரிவு – மாறுபாடு; குழைவு . தளர்ச்சி; உண்ணல் உறாமை – உணவு வேண்டியிராமை; உள்மெலிவு – அறிவு சுருக்கம்)

20. பெரி. திரு. 8.4:3
21. நாச். திரு. 12:7

என்று கூறுவாள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி. எம்பெருமானுடைய திருத்துழாய்ப் பிரசாதத்தைக் கொணர்ந்து தனது தலையில் சூட்டினால்தான் தனது காதல் நோய் தீரும் என்கின்றாள். ஆனால், பரகால நாயகி வண்டுகள் திருத்துழாயில் படிந்து வந்து ஊதினாற்போதும் என்கின்றாள்.

இவ்விடத்தில் மணிவாசகப் பெருமானின் திருக்கோத்தும்பி பதிகமும் சிந்திக்கத்தக்கது. இங்கு அடிகள் ஓர் அரச வண்டை நோக்கிப் பேசுகின்றார்.

**தினைத்தனை உள்ளதோர்**
**பூவினில்தேன் உண்ணாதே**
**நினைத்தொறும் காண்டொறும்**
**பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்தெலும் புள்நெக**
**ஆனந்தத் தேன்சொரியும்**
**குனிப்புடை யானுக்கே**
**சென்றூதாய் கோத்தும்பி.**[22]

(தினைத்தனை – தினையளவு; உள்நெக – உள்உருக)

"நீ மலர்தோறும் ஊதுவதால் கிடைக்கும் தேன் சிறிய அளவினது; எப்பொழுதும் மாளா இன்பத்தேன் சொரியும் குனிப்புடையான் திருவடித் தாமரைக்கண் சென்று ஊதுவாயாக. இந்தத் தேன் என்றும் பசியா இன்னமுதாய் என்பும் உருக்கி உணர்வினில் இனிது உயிர்க்கு ஓவா வளம் தரும்" என்று பேசுவர் அடிகள். பண்டிருந்து இப்படி வண்டினை (வண்டுகளை) விளித்துப் பேசுவது ஓர் இலக்கிய மரபாக இருந்து வருகின்றது.

கண்ணபுரம் என்ற ஊரின் சிறப்பைப் பற்றியும் பேசுகின்றார் திருமங்கை மன்னன். "பெருகுசீர்க் கண்ணபுரம்" (8-2:3) என்கின்றார். எப்பொழுதும் இவ்வூரில் விழாக்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஏராளமான வைணவர்கள் வந்து குழுமுவர். இதனை ஆழ்வார் "மணம் மலி விழவினொடு அடியவர் அளவிய கணம்" (8-7-3) என்று கூறுவர். இந்த வைணவர்கள் சதா சுருதியோடு கூடின அருமறைகளை ஓதிய வண்ணம் இருப்பர் (8-7-7); நாடோறும் தழல் வளர்த்து வாழும் அந்தணர்களும் (8.1-7) சாத்திரங்களைக் கற்ற வைதிகர்களும் வாழும் இடம் இது (8-1:8).

21. திருவாச. திருக்கோத். 3 22. பெரி. திரு. 8.1 முதல 8.10

இந்த ஊரில் எழுந்தருளியிருக்கும் அம்மானை 100 பாசுரங்களாலும் (பத்துத் திருமொழிகளால்)[22] இரண்டு தனிப் பாசுரங்களாலும்[23] மங்களா சாசனம் செய்து மகிழ்கின்றார் திருமங்கையாழ்வார். இவற்றுள் தானான தன்மையில் பாடியவை ஐந்து பதிகங்கள். பிராட்டியின் நிலையை ஏறிட்டுக்கொண்டு வேற்று வாயால் பேசியவை ஐந்து பதிகங்கள். இவற்றுள்ளும் தாய் நிலையில் நின்று பேசியவை இரண்டு திருமொழிகள்; தலைமகள் நிலையில் நின்று பேசியவை மூன்று திருமொழிகள். திருநெடுந்தாண்டகத்திலுள்ள ஒன்று (16) தாய்ப் பாசுரம்; மற்றொன்று (27) மகள் பாசுரம். மகள் பாசுரமாக வந்தவற்றுள் கோல்தும்பி பதிகத்தை மேலே காட்டினோம். தலைமகனைப் பிரிந்த தலைமகள் இரங்கிப் பேசுகின்றாள். 'வரை எடுத்த பெருமானுக்கு இழந்தேன் என் வரிவளையே' (8-3:1) 'கரி வெருவ மருப்பொசித்தாற்கு இழந்தேன் என் செறிவளையே' (2) என்று பல்வேறுவிதமாக எம்பெருமானின் பெருமையைப் பேசிப்பேசி தன் வளையலை இழந்த நிலையை எண்ணி எண்ணி இரங்குகின்றாள் பரகாலநாயகி.

இங்ஙனமே, **தாய் நிலையிலிருந்து** கொண்டு தன் மகள் நிலையையும் பேசுகின்றறள். "எம்பெருமானுடைய திவ்யா யுதங்களைக் கண்டு உகந்து அவற்றையே வாய்வெருவுகின்றாள். திருத்தோள்களைப் பேசுகின்றாள்; நாயகனிடம் அன்பு உண்டான பின்பு முலையில் பசலை நிறம் தோன்றுதல் இயல்பு; ஆனால், இவளிடம் அன்பு விளைவதற்கு முன்னம் பசலை நிறம் தோன்றிவிட்டது. (8-1:1). 'செருவரை முன் ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்து' என்கின்றாள். 'பொருவரை முன் போர் தொலைத்த பொன்னாழி மற்றொரு கை' என்கின்றாள். 'ஒருவரையும் நின் ஒப்பார், ஒப்பிலா என் அப்பா' என்கின்றாள் (2). இவ்விடத்தில் வியாக்கியானத்தில் ஓர் ஐதிகம். 'ஒரு சமயம் திருக்கண்ணபுரத்து அரையர் ஒருவர் விரோதிகளால் நோவுபட நேர்ந்த காலத்து சௌரிராஜன் திரு முன்பே சென்று 'செருவரை முன் ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்து' என்று தாளந்தட்டி விண்ணப்பம் செய்தாராம்; பெருமாள் திருவுள்ளம் உவந்தருளி அரையரை நோக்கி, "ஓய் நீர் அஞ்சவேண்டா, ஒரு கண நேரத்தில் விரோதிகளை முடிக்கின்றோம்" என்று அருளிச் செய்து அப்படியே தலைகாட்டினாராம் - என்பதாக. திருத்துழாய் மாலை, மகர குண்டலங்கள், மணி ஆரம் இவற்றைப் பேசி மகிழ்கின்றாள் (3); தாராய தண்துளப வண்டுழுத வரை மார்பன், போர் ஆனைக்

23. திரு. நெடுந். 16.27

கொம்பு ஒசித்த புள்பாகன், பவள வாயன்' என்று போற்றுகின்றாள் (4); அடித்தலமும் தாமரை; அங்கைகளும் பங்கயம்; முடித்தலமும் பொன் பூணும் என் நெஞ்சைவிட்டு அகலாது; மலரவளோ வரை ஆகத்து இருப்பாள் (5); பேராயிரமுடைய பேராளன்; ஏரார் கன மகர குண்டலநாதன்; எண்தோளன்; நீரார் மழைமுகிலே, நீள்வரையே என்று ஒப்பிட்டுப் பேசப் பெறுபவன் (6); அவன் பீதக ஆடையும் அதன்மீது அணிந்துள்ள சிவளிகைக் கச்சின் அழகும் சொல்லுந் தரமன்று; அடியிணையும் அங்கைகளும் பங்கயத்திற்கு ஒப்பாகும். திருமேனி பற்றி ஐயத்துடன் பேசுகின்றாள்.

**மைவளர்க்கும் மணியுருவம்**
**மரகதவோ? மழைமுகிலோ?**[24]

என்கின்றாள். இராமன் சுமந்திரன் முதலியோரை அயோத்திக்கு அனுப்பிவிட்டு நகர மக்களுக்குத் தெரியாமல் சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் புறப்பட்டுச் செல்வதைக் கூறும் கம்பநாடன்,

**மையோ?மர கதமோ, மறி**
**கடலோ?மழை முகிலோ?**
**ஐயோஇவன் வடிவென்பதொ**
**ரழியாவழ குடையான்**[25]

என்று ஆழ்வார் தாம் திருமேனி அழகினை நினைந்துதான் பாடியிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

**"கொற்றப்புள் ஒன்றேறி மன்றூடே வருகின்றான்"** எனத் தனக்குக் கருடசேவை தருவதைப் பேசுகின்றாள்; பெண்ணாய்ப் பிறந்தவர்கள் அணைந்து வாழ்வதற்கென்றன்றோ அவன் திருமார்பு படைத்தது? ஒருத்தியைத் (அலர்மேல் மங்கையை) திருமார்பிலேயே வாழ வைத்திருப்பதைப் போலவே, நமக்கும் அத்திருமார்பைப் பெறுவித்தல் பெண்ணாய்ப் பிறந்த நாமும் வாழ்ந்து போக மாட்டோமோ? என்கின்றாள் (8); வண்டுகள் படிந்திருக்கப் பெற்ற திருத்துழாய் மாலை அப்பெருமானின் திருமுடியில் ஏறினதும் அதிகமான நறுமணம் வீசப் பெறுகின்றது; என் அன்பு முழுவதும் இவர்பால் குடிபுகுந்துவிட்டது; எனவே, ஒரு நொடிப் பொழுதும் இவரைப் பிரிந்து தரித்திருக்க மாட்டகின்றிலேன்; இவரை எங்கோ கண்டதுபோல் தோன்றுகின்றது; எங்கே கண்டோம்?" என்கின்றாள் (9).

மேலும், **திருத்தாயார்** பேசுகின்றாள். தெள்ளியீர், திருக்கண்ணபுரம் தொழுதாள்" என்பதை மட்டிலும் வியாஜமாகக்

24. பெரி. திரு. 8.1:7    25. கம்ப. அயோ. கங்கை – 1

கொண்டு இவளுடைய கைவளையைக் கொள்ளை கொள்வது தகுதியோ? சொல்லீர் (8-2-1); நீள் நிலா முற்றத்து நின்று பார்த்து 'காணுமோ கண்ணபுரம்?' என்று காட்டினாள் (2); 'திருமலை' என்றும், 'திருநீர்மலை' என்றும் வாய்வெருவினாள்; திருமெய்யத்தைப் பற்றி வினவி (மறுமொழி கூறுவார் ஒருவருமின்மையினால்) வாளாவிருக்கின்றாள்; 'திருக்கண்ணபுரம்' என்று வாயாற் சொன்னவளவில் நீர்ப்பண்டமாய் உருகிவிட்டாள் (3); உண்ணுவதில்லை; உறங்குவதுமில்லை முதிர்ந்த பருவமுடையவளும் அல்லள்; இளம் பெண்தான்; இவள் கண்ணபுரத்தைத் தொழுவது என்ன ஆச்சரியம்? (4); திருக்கண்ணபுரத்தை நோக்கித் தொழும் இவள் தோழிக்கும் மறைக்கக் கூடிய தன் நெஞ்சோட்டங்களைச் சிறிதும் ஒளிக்காமல் என்னிடம் வாய்விட்டுச் சொல்லுகின்றாள். பெண்மைக் குணத்திற்கு இது தகுதியோ? (5). நம்மாழ்வார் பிராட்டியின் நிலையிலிருந்து கொண்டு 'கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்' (திருவாய் 5.6) என்று தொடங்கித் தன்னை எம்பெருமானாகவே பேசித் தரித்ததுபோலவே இவளும் அர்ச்சாவதார ஈடுபாடு அதிகமுடையவளாகையாலே 'வடவரை நின்றும் வந்து இன்று கணபுரம் இடவகை கொள்வது யாம்' என்று தன்னைச் சௌரிராஜப்பெருமாளாகவே சொல்லிக் கொள்ளுகின்றான் (6); கடல் முழங்கினாலும் தண்மதி காய்ந்தாலும் இவள் வருந்துகின்றாள்; 'தரங்கம் வாய்க் கீண்டு உகந்தானது தொன்மை ஊராகிய திருவரங்கம்' என்று கூறுவதே இவளுக்கு ஆசையாக உள்ளது (7); பக்தர்கள் உன் திருவடிகளைச் சேவித்து உய்ந்து போவதைக் கண்ணுற்றவள் திருக்கண்ணபுரம் சேவிக்கச் சென்றாள்; அப்படிப்பட்ட இவளை இப்படி மேனி நிறம் அழியச் செய்வது நீதியோ? (8); முளைக்கின்ற பற்களும் வாய் நிரம்பிற்றில; எடுத்து முடிக்கப் போதுமான அளவு கூந்தலும் வளரவில்லை; விவேகமுடையவள் என்ற பேச்சுக்கும் இடமில்லை" (9).

**திருநெடுந்தாண்டகத்தில்** (16) **திருத்தாயார்** பேசும் பாசுரம் மிகவும் அற்புதமானது.

**கன்றுமேய்த்து இனிதுஉகந்த காளாய்! என்றும்,**
**கடிபொழில்சூழ் கணபுரத்துஎன் கனியே! என்றும்,**
**மன்றுஅமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்,**
**வடதிருவேங் கடம்மேய மைந்தா! என்றும்,**

**வென்று அசுரர் குலம்களைந்த வேந்தே! என்றும்,**
**விரிபொழில்சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்,**
**துன்றுகுழல் கருநிறத்துஎன் துணையே! என்றும்**
**துணைமுலைமேல் துளிசோர சோர்கின்றாளே.**

(உகந்த – மகிழ்ச்சி கொண்ட; காளாய் . காளையே; கடி . கணம்; மன்று இடையர் கூடும் இடம்; மேய – வாழ்கின்ற; களைந்த – அழித்த; பொழில் – சோலை; துன்று – அடர்ந்த; சோர்தல் . தளர்தல்)

தன் மகள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் நிலையைப் பேசுகின்றாள் திருத்தாயார். 'கன்று மேய்த்து இனிது உகந்த காளாய்' என்றவுடனே 'கடிபொழில் சூழ் கண புரத்து என் கனியே' என்று சொன்ன அமைதியை நோக்கி, இவ்விடத்திற்குப் பட்டர் ரஸோக்தியாக (சுவையாக) அருளிச் செய்வதொன்றுண்டு. "கண்ணபிரான் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும்போது அவை கை தவறிப் போகையாலே அவற்றை மடக்கிப் பிடிக்கப் போனவிடத்திலே விடாய்தீர விருப்பதொரு சோலையைக்கண்டு திருவாய்ப்பாடியாக நினைத்துப் புகுந்தான்; அப்பொழில் மயல் மிகு பொழிலாகையாலே கால்வாங்க மாட்டிற்றிலன்; அதுவாயிற்றுத் திருக்கண்ணபுரம்" என்பாராம். 'மன்று அமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்' என்பதில் அமரக் கூத்தாடுகையாவது, கூத்தாடி முடிந்த பின்பும் அவ்விடம் கூத்தாடுவது போலவே காணப்படுகையாம். "பெருந்துகள் எழுந்தருளிப் புக்க திருவீதி போலே காண் திருவாய்ப்பாடியில் அம்பலமிருப்பது" என்று பட்டர் பணிப்பர். மகிழ்ந்தாய் என்பதற்குப் **பெரிய வாச்சான் பிள்ளை** வியாக்கியானம்: கூத்துக் கண்டவர்கள் உகக்கையன்றியே உகப்பானும் தானாயிருக்கிறபடி; அவர்களைத் தன் கூத்தாலே எழுதிக் கொள்வானும் தானாய், உகப்பானும் தானாய் இருக்கிற, 'வடதிரு வேங்கடம் மேய மைந்தா' என்பதில் ஓர் ஊரிலே மன்றிலே நின்று கொள்ளை கொடுத்தது மாத்திரமன்றியே உபயவிபூதிக்கும் நடுவானதொரு மன்றிலே நின்று தன்னைக் கொள்ளை கொடுத்தபடியைச் சொல்லுகிறது. 'விரிபொழில் சூழ் திரு நறையூர் நின்றாய்' என்பதில் நறையூர் நம்பியும் நாச்சியாரும் கடாட்சிக்க அக்கடாட்சமே விளைநீராக வளர்கின்ற பொழிலாகையாலே விரிபொழிலாயிருக்கும். அசேதநங்களைக் கடாட்சித்து வளரச் செய்பவன் என்னக் கடாட்சியா தொழிவதேன்? என்கின்றாள். பிராட்டி பக்கலிலே பிச்சேறித் தன்னூரை அவள் பெயரால் புகழ்பெறச் செய்து 'நாச்சியார் கோயிலாக்கி' இப்படி ஒருத்திக்குக் கைவழி மண்ணாயிருப்பவன் என்னொருத்தியை நஞ்சாக நினைப்பதேன்? என்பது உள்ளுறை. இப்படியெல்லாம் சொல்லா நின்றும், தன் ஆற்றாமைக்கு ஒரு போக்கடி

காணாமையாலே கண்ணீர்கள் முலைக் குவட்டில் துளிசோரச் சோர்கின்றாள். 'துணை முலைமேல் துளிசோரச்' சோர்கின்றாள் என்பதைத் தனித்தனியே கூட்டியுரைத்துப் பொருள் கொண்டால் பரகால நாயகியின் காதல் உறைப்பினைத் தெளிவாக அறியலாம்.

மாலைநேரம் வருகின்றது. இருள் கவிகின்றது. இந்தச் சூழ்நிலையில் பிரிவுத் துன்பத்தால் வருந்தும் பரகாலநாயகி புலம்புகின்றாள்: 'எம்பெருமானிடம் என்நெஞ்சு போய்விட்டது; அப்பெருமானின் கிருபையைப் பெறுவதற்குச் சமயம் நோக்கியிருந்த என்னை நிலவுக்கதிர் சுடுகின்றது; தென்றற் காற்று என் முலைத் தடங்களில் வீசி வலி செய்கின்றது' *(8-5-1)*

**ஊரும் துஞ்சிற்று; உலகமும் துயின்றது**
**ஒளியவன் விசும்பு இயங்கும்**
**தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன;**
**செய்வது ஒன்று அறியேனே (2)**

(துஞ்சுதல் – தூங்குதல்; ஒளியவன் – சூரியன்; விசும்பு – ஆகாயம்.)

இவ்விடத்தில் ஓர் ஐதிகம்: எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்த **பிள்ளையுறங்கா வில்லிதாசர்** திருநாட்டுக் கெழுந்தருளினபோது அவரைப் பிரம்மரதத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றனர் அவர்தம் உறவினர்களும் நண்பர்களும். அவர்தம் திருத்தேவியரான பொன்னாச்சியார் பிரிவாற்றாமைப் பாசுரமாகிய இத்திருமொழியை அநுசந்திக்கத் தொடங்கினார். முதற் பாசுரத்தை அநுசந்தித்து இரண்டாவதான இப்பாசுரத்தை அநுசந்திக்க நேரும்போது பிரம்மரதத்தைச் சுமந்து செல்பவர்கள் விரைந்து சென்றதனால் தேர் மறைந்தது. அதற்குத் தகுந்தவாறு பொன்னாச்சியின் அநுசந்தானம் 'தேரும் போயிற்று; திசைகளும் மறைந்தன; செய்வது ஒன்று அறியேனே' என்ற அடியில் சென்றது. அப்போதே பொன்னாச்சியாரின் உயிரும் தன்னடைவே விட்டு நீங்கிப் போயிற்று. இத்திருமொழி முழுவதும் ஆழ்வார் நாயகியின் புலம்பலைக் கேட்கின்றோம்; நாமும் அந்நிலையை அடைய முயல்கின்றோம்.

தானான தன்மையில் நின்று பேசும்போது "கண்ணபுரம் நாம் தொழுதுமே" என ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகச் சொல்லி "தொண்டீர், உய்யும் வகை கண்டேன்" என்று தொண்டர்களை ஆற்றுப்படுத்துகின்றார்; தன் மனத்திற்கும் "வருந்தாது இரு நீ, மடநெஞ்சே, நம்மேல் வினை சாரா" என்றும் (8-6-6) "மால் ஆய், மனமே! அருந்துயரில் வருந்தாதிரு" என்றும் (8-6-8) உபதேசம்

செய்கின்றார். "கணபுரம் அடிகள்தம் இடமே" என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக எம்பெருமானின் இருப்பிடத்தையும் அநுபவித்து இனியராகின்றார் (8-7). எம்பெருமானை மீன், ஆமை, வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், தசரத ராமன், பலராமன், கிருஷ்ணன் என்ற அவதார மூர்த்திகளாகக்கொண்டு அநுபவித்து அகமகிழ்கின்றார் (8.8). 'இக்கண்ணபுரத்தம் மானுக்கன்றி வேறொருவனுக்கு உரியேன் அல்லேன்' என்று தன் அநந்யார்ஹ சேஷத்துவத்தை 'அம்மானை அடியேன் அடைந்து உய்ந்து போனேனே' என்றும், 'கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரித்தேயேனோ?' (8-9-3) என்றும் வெளியிட்டு மகிழ்கின்றார். அடுத்த திருமொழியிலும் "நின்னையல்லால், வருதேவர் மற்று உளர் என்று என் மனத்து இறையும் நான் கருதேனே" (8-10-2) என்று தான் "மறந்தும் புறந் தொழா மாந்தன்" என்பதை அரண் செய்கின்றார். இதற்கு முத்தாய்ப்பாக,

> **"மற்றும்ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு**
> **உற்றிலேன் உற்றதும்உன் அடியார்க்கு அடிமை**
> **மற்றெல்லாம் பேசிலும் நின்திரு எட்டெழுத்தும்**
> **கற்றநான்"**[26]

(மற்றும் – உன்னைக் காட்டிலும்; உற்றிலேன் – இணங்கேன்)

என்று பேசுவர். "பிற தெய்வங்களைத் தொழுவாரோடு இணங்க மாட்டேன். உன் எட்டெழுத்து மந்திரம் அர்த்த பஞ்சகத்தைப் பேசினாலும், நான் கண்ட சிறப்புப் பொருள் பாகவத சேஷத்துவமேயாகும்" என்று தம் ஊற்றத்தை வெளியிடுகின்றார்.

இந்த எண்ணங்கள் நிறைந்த மனத்துடன் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்கொண்டு சேவை சாதிக்கும் **சௌரிராஜப் பெருமானை** வணங்குகின்றோம். அபயம் அளிக்கும் திருக்கைக்குப் பதிலாக வரம் அளிக்கும் திருக்கையுடன் காட்சி தருகின்றார் இப்பெருமான். அரங்கநாதனிடம் காணப்பெறுவதைப் போலவே இவர் கையிலும் 'பிரயோக சக்கரம்' காணப்பெறுகின்றது. சில பாசுரங்களை இவர் திருமுன் மிடற்றொலி கொண்டு சேவிக்கின்றோம். தாயாரின் திருநாமம் **கண்ணபுர நாயகி**. இவரையும் சேவித்து இவர்தம் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம்.

எம்பெருமானைச் சேவிக்கின்றபோது அவர் தலையில் சௌரி (மயிர்) இருப்பதைக் காட்டுகின்றார் அர்ச்சகர். இது காரணமாகத்தான்

26. பெரி. திரு. 8.10:3

எம்பெருமானுக்குச் **சௌரிராஜன்** என்ற திருநாமம் ஏற்பட்டதாகவும் விளக்குகின்றார். இது பற்றிய வரலாறு : இறைவனுக்குச் சாத்தவேண்டிய மலர்கள், மலர் மாலைகள் அரண்மனையிலிருந்து அனுப்பப்பெற்று வருகின்றன. இவை தவறாகப் பயன்படுத்தப்பெற்று வருவதாகக் கேள்வியுறுகின்றான் அரசன். இதனைப் பரிசோதிக்க வருவதாகச் செய்தியும் அனுப்புகின்றான். அர்ச்சகர் அவசர அவசரமாக மாலையைத் தருவித்து இறைவனை அதனால் அணி செய்கின்றார். பிரசாதமாகப் பெற்ற மாலையில் சிறிது முடி (மயிர்) ஒட்டி இருப்பதைக் காண்கின்றான். காரணம் கூறுமாறு அர்ச்சகரை வினவுகின்றான் அரசன்; அர்ச்சகர் அம்முடி இறைவனுடையது என்று சமாதானம் கூறுகின்றார். அரசனுக்குத் திருப்தி இல்லை இச்சமாதானம். தான் அடுத்த முறை சோதனைக்கு வரும்போது இதனை மெய்ப்பிக்கவேண்டும் என்று கூறிச் செல்லுகின்றான். தன்னைக் காத்தருளுமாறு இறைவனை வேண்டுகின்றார் அர்ச்சகர். அடியாரைக் காத்தருளும் எம்பெருமான் அடுத்த முறை அரசன் சோதனைக்கு வருங்கால் தலையில் குடுமியுடன் சேவை சாதிக்கின்றான்.

இத்திருக்கோயிலின் மற்றொரு சிறப்பு என்னவென்றால் நாம் திருக்கோயிலை வலம் வருங்கால் திருக்கோயிலின் விமானம் நம் கண்ணில் படுவதில்லை. இந்த எம்பெருமானின் நான்கு திருத்தேவியார்களுள் ஒருத்தி **வலைச்சியார்** (மீன் பிடிப்பவள்). இதன் காரணமாக ஆண்டுக்கொருமுறை பரதவர்கட்கு இன்றும் சிறப்புப் பிரார்த்தனை அமைக்கப் பெறுகின்றது. மாசி மகத்தன்று எம்பெருமான் கடலைக் காணும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. இச்செய்திகளை அறிந்த வண்ணம் திருக்கோயிலை விட்டு வெளியில் வருங்கால் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

**பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு**
**வேறுதரினும் விடேன்கண்டாய் – ஏறுநீர்**
**வண்ணபுரத்தாய் என்மனம் புகுந்தாய் வைகுந்தர்**
**கண்ணபுரத் தாய்உன் கழல்.**[27]

(பேறு – புருஷார்த்தம்; வேறு . மாறாக; ஏறுநீர் – கடல்நீர்; புரம் – உடல்; வண்ணம் . நிறம்; கழல் – பாத அணி)

என்ற பாசுரத்தைக் கொடிமரத்தருகில் நின்று மிடற்றொலி கொண்டு ஓதி உளங் கரைகின்றோம். "எம்பெருமானே, நீ எனக்கு வீடுபேறு தரினும், பிறப்பு இறப்பு மூப்பு நோய் இவற்றைத் தந்தருளினும்

27. நூற்றெ. திருப். அந். 17

உன் திருவடிகளை உபாயமாகப் பற்றிக் கொண்டிருப்பேனேயன்றி, அவற்றை விட்டு நீங்கேன்" என்கின்றார் அய்யங்கார். இந்த எண்ணம் நமக்கும் வேண்டும் என்று விரும்புகின்றோம்.

கண்ணபுரத் தம்மான் மீது கலம்பகம் ஒன்று[28] (1966) தோன்றியுள்ளது. இதன் ஆசிரியர் திரு. **டி. எஸ். இராசகோபாலன்** என்பவர். இத்திருத்தலத்தின் மேன்மை, இங்கு பிராட்டிமார் நால்வருடன் எழுந்தருளியிருக்கும் பெருமானது பேரருள், இவனது திருவடிகளில் அடிமை செய்யும் பெரியோர்களது சீர்மை, இப்பெரியோர்களின் கழல்களைப் பற்றிப் பெருமானையும் பற்றுவது கடமை என்பன போன்ற கருத்துகள் இந்நூலில் காணப் பெறுகின்றன. சொல் நயமும், பொருள் நயமும், கருத்துச் செறிவும், பக்திச் சுவையும் நிறைந்துள்ள இந்நூலின் பாசுரங்கள் பாடிய வாய் தேனூறச் செய்யும் பான்மையனவாய்த் திகழ்கின்றன.

**உகந்து கடவன் பலவின் கனியை உகிரதனால்**
**வகிர்ந்து மதுபாய்ச்ச மந்தி கிளையொடும் வாரிதனில்**
**புகுந்து கதலிக் குலைதோய்த்துப் பெருமான்றன் பொன்னடி**
**உகந்திடும் ஊராம் பொழிலார் கணபுர ஒண்ணகரே (9)**

(உகிர் – நகம்; வகிர்ந்து – பிளந்து; வாரி . மதுவெள்ளம்; கதலி – வாழை)

இதில் ஆசிரியர், திருக்கண்ணபுரத்தில் வாழும் விலங்குகளும் பெருமான்பால் பக்தி கொள்வன என்பதைக் காட்டுகின்றார். ஆண் குரங்கு தன் மந்தியுடனும் குட்டிகளுடனும் வாழைப் பழங்களைக் குலை குலையாகத் தேன் வெள்ளத்தில் தோய்த்துப் பெருமான் திருவடிகளில் சமர்ப்பிக்கும் என்கின்றார்.

இறப்பு, நிகழ்வு, எதிர்காலமாய் நிற்கும் எம்பெருமான் சௌரிப் பெருமாள் வாரத்தின் நாட்களாகத் திகழ்வதை சொற்சுவை பொருட்சுவையுடன் எடுத்துக்காட்டுவது கற்றோர்க்கும் பக்தர்கட்கும் பேரின்பம் பயப்பதாக உள்ளது.

**ஞாயி றுறைவார் முகந்திங்கள்**
**நற்செவ் வாயோ ஒண்பவளம்**
**வாயும் வளமோ அம்புதனின்**
**வணமே, வலியார் மாசுணமே**
**மாய முனிந்த வியாழமதே,**
**வெள்ளி யாகும் வாய்நகையே**
**காயும் நரகுக் கோர்அசனி**
**கண்ண புரத்தார் கண்டீரே. (60)**

28. நூலின் பெயர். திருக்கண்ணபுரக் கலம்பகம் என்பது.

(ஞாயிறு உறைவார் – ஞாயிற்றின் கண் உறைபவர்; வணம் . இயல்பு, நிறம்; அம்புதனின் . மேகத்தின்; மாசுணம் – மலைப்பாம்பு; வியாழம் . பாம்பு; நகை – புன்முறுவல்; அசனி – வச்சிராயுதம்)

பாடலின் ஞாயிறு முதல் சனி ஈறாகவுள்ள ஏழுநாட்களின் பெயர்களும் அமைந்து சொற்சுவை பொருட்சுவை பயப்பதைக் கண்டு மகிழலாம். எம்பெருமானை ஏத்துவோர்க்கு இடம் இல்லை என்ற கருத்தினை உயிர் மெய் வருக்க மோனையாக (க முதல் கௌ வரை) அமைந்துள்ள பாடலும் (81) சொல் நயமும் பொருள் நயமும் அமைந்ததே. பன்னிரு திருநாமங்களும் அமைந்த பாடலும் (88) இத்தகையதே.

பிறவிப் பிணியைத் துணிக்குமாறு வேண்டும் பாடலில் ஆழ்வார் பாசுரங்களின் சாயை நன்கு படிந்திருத்தலைக் கண்டு மகிழலாம்.

**களங்கனி வண்ணா கண்ணபுரக் கோனே**
**உளங்கனி(வு) உள்ளோர் உயிரே – வளங்கொள்**
**மறையோர் வழுத்த மகிழ்ந்துறைவாய் தோன்றற்**
**சிறையே சிதைப்பாய் திறம். (90)**

முதல் அடியில் "களங்கனி வண்ணா கண்ணனே" என்றதிலும், இரண்டாம் அடியில் "நினைந்து நைந்துள் கரைந்துருகி" என்பதிலும் 'வளங்கொள் மறையோர் வழுத்த' என்பதிலும், "தீயெடுத்து மறைவளர்க்கும்", "வேதநாவர்" என்பனவுமான சொற்றொடர்களில் ஆழ்வார் பாசுரங்களின் சாயல் படிந்திருத்தலைக் காணலாம்.

வலம்புரிக்குக் கிடைத்த பேற்றினை எண்ணி ஆண்டாள் களிப்பது போல (நாச். 7) இந்த ஆசிரியரும் வேய்ங்குழலின் சிறப்பை எண்ணி மகிழ்கின்றார் (94), திருச்சங்கு செங்கண்மால் தன்னுடைய வாய்த்தீர்த்தம் பாய்ந்து ஆடி அவனுடைய அங்கைத்தலம் ஏறி அன்னவசம் செய்கின்ற (கண் வளர்கின்ற) நிலையைக் கண்டு களிக்கின்றாள் ஆண்டாள்; தனக்கு அந்த வாய்ப்பு இல்லையே என்று பொறாமையும் படுகின்றாள். அதுபோலவே ஆசிரியரும் கண்ணபுரப் பெம்மான் 'பங்கயக் கைகொண்டு உயரும் மின்குழல்' என்றுரைத்து அவன் வாயமுதம் மாந்தி மகிழ்வதைக் கண்டு தானும் மகிழ்கின்றார். இந்தப் பாடல் கண்ணன் கன்றுகளை மேய்த்துத் திரும்பும் கோலத்தைக் காட்டும் பெரியாழ்வாரின் பாசுரங்களையும் (பெரியாழ். திரு. 3.4) அவன் குழல் ஓசையில் மயங்கி நிற்கும் மான் - கணங்கள், பறவையின் கணங்கள், மரங்கள் இவற்றின் நிலையைக் காட்டும் இந்த ஆழ்வாரின் பாசுரங்களையும்

(பெரியாழ். திரு. 3-4) கண்ணன் திருவாயில் இடம்பெற்ற வேய்ங்குழல் அவன் வாயில் பெருகும் மதுவை அருந்தி, நெற்றியில் எழும் சுடரையும், விரல்களிலணிந்துள்ள மோதிரத்தின் மணிகளிலெழும் சுடரையும், கண்மணியின் ஒளியையும் கண்டுபெறும் திளைப்பு பரமபத நாதனை அநுபவித்துத் திளைக்கும் நித்திய சூரிகளின் திளைப்புபோல் முடிவற்றதாகும் என்பதை நோக்கச் செய்கின்றார்.

திருமங்கையாழ்வார் இந்த **சௌரிப் பெருமாளிடம்தான் எட்டெழுத்து மந்திர உபதேசம் பெற்றதாக வரலாறு.** இத்திருமந்திரப் பொருளை ஓர் அரிய பாடலால் (96) அருமையாக விளக்குவர் ஆசிரியர். "பலவகை மலரும் தழையும் கொண்டு வனமாலையாகத் தொடுப்பதுபோல், உன் பல்வகைச் சீர்களைக்கொண்டு யாப்புச் சீர் மலிந்து பாமாலையாகத் தொடுத்து உன் திருவடிகளில் சமர்ப்பித்தேன்" என்று கூறும் இறுதிப் பாசுர அடிகள் இவை :

**அரும்பியெழு பத்துரையார் உள்ளத்தும்**
**ஆர்ந்தனை நீ; அடியேன் பாலும்**
**விரும்பிமிக வந்தனையால் கலம்பகமா**
**வேய்ந்தளித்தேன் உன்றன் சீரே. (100)**

இப்பாடலுக்கு முன்னுள்ள

**ஓங்குதிரைப் பவக்கடலும் வற்றி மேலா**
**ஒண்சுடரின் ஊடுகடந் தப்பால் விண்ணுள்**
**ஓங்குசுடர்ப் பெம்மான்றன் அடியோ ரோடும்**
**ஒழிவின்றிப் பணிசெய்நாள் என்றோ? மண்ணில்**
**ஓங்குபுனல் சூழ்கண்ண புரமே தோயும்**
**உத்தமன்றன் மலரடியை அடியா ரோடும்**
**ஓங்குபெருங் காதலொடும் பரவி ஏத்தல்**
**உறும்என்னில் விண்தனினும் மேல தன்றோ? (96)**

என்ற பாடல் நம்மாழ்வாரின் **"ஒழிவில் காலமெல்லாம்"** (திருவாய் - 3-3-1) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தையும் திருமங்கையாழ்வாரின் **'ஒண்மிதியில்'** (திருநெடுந். 5) என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்தையும், **"இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்"** (திருமாலை - 2) என்ற தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பாசுரப் பகுதியையும் நினைக்கச் செய்வதுடன் ஆசிரியரின் கைங்கரியத் துடிப்பையும் நாடி பிடித்துக் காட்டுகின்றது. இங்ஙனம் திருக்கண்ணபுரக் கலம்பகப் பாடல்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

# 7. அணிஅழுந்தூர் நின்ற அஞ்சனக் குன்றம்

*நம்மாழ்வார் கிருஷ்ணாவதாரத்தில் அதிகமாக ஈடுபட்டவர் என்பதை அவர் இயற்றிய நான்கு பிரபந்தங்களாலும் அறியக் கிடக்கின்றது.*

**மண்ணும் விண்ணும் எல்லாம் உடனுண்டநம்**
**கண்ணன்கண்; அல்லது இல்லை யோர்கண்ணே**[1]

*என்பதில் 'மண்ணாடும் விண்ணாடும் வானவரும் மற்றும் எல்லாம், உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட'*[2] *என்ற வரலாறு காட்டப்பெறுகின்றது.*

**கறுத்தமனம் ஒன்றும் வேண்டா;**
**கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை**[3]

*சிறு தெய்வ வழிபாட்டிலும் அவை நாராயணன் வழியாகக் காக்கின்றனவேயன்றித் தாமாக அன்று என்பதை அறுதியிடுகின்றார் இதில். இன்னும்,*

**கண்ணன் அல்லால் இல்லை**
**கண்டீர் சரண்;அது நிற்க,வந்து**

... ... ... ... ... ... ... ... ... ... ...

**திண்ண மாறும் உடைமை**
**உண்டேல் அவனடிசேர்ந் துய்மினோ**[4]

(அது – இந்த உண்மை; திண்ணமா – திடமாக; உடைமை – நும்முடையதாக நினைத்திருக்கும் பொருள்; அவன் அடி சேர்த்து – அவன் திருவடிகளில் சமர்ப்பித்து)

*என்ற பாசுரத்தில் '**உண்டேல்**' என்பதால் '**நும்முடைமை**' என்று சொல்லக் கூடிய பொருள் உண்மையில் அவனுடையது என்ற ஆழ்வார் திருவுள்ளம் தெளிவாகின்றது. இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக,*

1. திருவாய். 2.2:1
2. பெரி. திரு. 11.6:7
3. திருவாய். 5.2:7
4. மேலது. 9.1:10

**உண்ணும் சோறு பருகுநீர்**
**தின்னும்வெற் றிலையுமெல்லாம்**
**கண்ணன்.**[5]

என்கின்றார். கண்ணன் ஒருவனே ஆழ்வாருக்குத் தாரக போஷக போக்கியங்கள்.[6] இதனால் நம்மாழ்வாரைக் '**கிருஷ்ண திருஷ்ண தத்துவமாக'** (திருஷ்ணம் - விடாய்) உருவகித்துப் பேசுவர் **பராசரப்பட்டர்** என்ற வைணவப் பெரியார்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் காளியாக்குடி அய்யர் விடுதியிலிருந்து **திருவழுந்தூர்** என்ற திவ்விய தேசத்திற்குப் பயணமாகின்றோம். இவ்வூர் விழுப்புரம் - கடலூர் - திருச்சி இருப்பூர்திப் பாதையில் உள்ளது. இருப்பூர்தி நிலையம் உண்டு. மெயில், எக்ஸ்பிரஸ் வண்டிகள் இங்கு நிற்கா. இந்த வண்டிகளில் வருபவர்கள் மயிலாடுதுறையில் இறங்கி ஏதாவது ஒரு விடுதியில் தங்கி வசதிகளுடன் திருவழுந்தூர் வரலாம். திருவழுந்தூர் நிலையத்தில் இறங்குபவர்கள் தெம்பிருந்தால் '**நடராஜா சர்வீஸை**' எளிதாக மேற்கொள்ளலாம். தெம்பில்லாதவர்கள் கொம்பு இல்லாத மொட்டை மாடுகள் கட்டிய வண்டிகளில் ஏறி வரலாம். மயிலாடுதுறையில் இறங்கி வசதிகளுடன் இவ்வூருக்கு வருதலே சிறப்பு. மயிலாடு துறையிலிருந்து திருவழுந்தூருக்கு நகரப் பேருந்து வசதி உண்டு.

பேருந்தில் வரும்போதே நம் மனம் இவ்வூர்ப் பெயரைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குகின்றது. **உபரி சரவசு** என்ற ஓர் அரசன். இவனிடம் இருந்த ஒரு தேர் வானவீதியில் உருண்டோடும் தன்மையது. இவன் தேவர்கட்கும் இருடிகட்கும் இடையில் எழுந்த வழக்கில் ஒருதலைச் சார்பாகத் தீர்ப்புக் கூறியதில் முனிவர்கள் அவர் தேர் பூமியில் அழுந்தட்டும் என்று சாபமிட்டனர். அவர்கள் சாபம் இவ்வாறு பலித்தது. ஒரு சமயம் அவன் வான வீதியில் சென்றபொழுது இவ்வூர்த் திருமால் திருக்கோயிலுக்கு நேராக இவன் தேர் செல்ல நேர்ந்தது. இதனைச் சிறிதும் பொறுக்க முடியாத பெரிய திருவடி (கருடன்) தம் மந்திர ஆற்றலால் தேரைக் கீழே இழுத்து பூமியில் அழுந்த வைத்து விடுகின்றார். பின்னர் **உபரிசரவசு** எம்பெருமானை வணங்கி மன்னிப்புப் பெற்றுத் தேரோடு திரும்பியதாகப் புராண வரலாறு. தேர் (பூமியில்) அழுந்திய ஊராதல் பற்றி **திருஅழுந்தூர்** என்ற திருநாமம் பெற்றது இவ்வூர் என்று அறிகின்றோம்.

5. திருவாய். 6.7:1

6. தாரகம் – தரிக்கச் செய்வது. நீர் முதலாயின. போஷகம் – புஷ்டியை (பலத்தை)த் தருவது. சோறு முதலாயின. போக்கியம் – இன்பத்தைத் தருவது. தின்னும் வெற்றிலை முதலாயின.

திருவழுந்தூர் என்ற திவ்விய தேசத்தையும் அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் **அஞ்சனக் குன்றத்தையும்** திருமங்கையாழ்வார் ஒருவர் மட்டிலுமே தம் திருப்பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார். பேருந்தில் வரும்போதே ஆழ்வார் பாசுரங்களை அசை போடுகின்றோம். நீர் வளமும் நிலவளமும் அமைந்த சூழ்நிலை நம் மனத்தை கவர்கின்றது. இஃது ஆழ்வார் மனத்தையும் கவர்ந்ததனால் இதனை அவர் தம் பாசுரங்களிலும் குறிப்பிடுகின்றார். ஆழ்வார் காட்டும் இயற்கைச் சூழ்நிலையில் நம் மனம் ஈடுபடுகின்றது.

தஞ்சை மாவட்டம் முழுதுமே பொன்னி நதி வளம் கொழிக்கும் சூழ்நிலையாகும். அழுந்தூர் வளத்தை ஆழ்வார்,

**மலைத்திகழ்சந்து அகில்கனகம் மணியும் கொண்டு**
**வந்துஉந்தி வயல்கள்தொறும் மடைகள் பாய**
**அலைத்துவரும் பொன்னிவளம் பெருகும் செல்வத்து**
**அணி அழுந்தூர்[7]**

(மலை – குடகு மலை; சந்து – சந்தனமரம்; அகில் – கட்டை; கனகம் – பொன்; மணி – இரத்தினம்; மடை – நீர் பாயும் வழி.)

என்று காட்டுகின்றார். காவிரி பெருகும்பொழுது குறிஞ்சி நிலக் கருப்பொருளாகிய சந்தனம், அகில் முதலியவற்றைப் புரட்டி அடித்துக்கொண்டு வரும். இவை கழனிகளில் நீர் மடை வழியாகப் பாய்தலினால் மிக்க வளத்தையுண்டாக்கிப் பெருஞ் சிறப்பெய்தும் திருவழுந்தூர். தான் பெருகும்பொழுது பொன்னைக் கொழித்துக்கொண்டு (செம்மண்ணைக் கரைத்துக் கொண்டு வருதலால்? - செம்மண் வண்டல் பயிர்கட்கு நல்லது) வருவதால் காவிரி **பொன்னி** என்ற திருநாமம் பெற்றது. எம்பெருமான் பெருந்துயரத்தினால் வருந்துகின்ற அன்பருள்ள இடங்களில் சென்று பாதுகாப்பது போலவே, இக்காவிரியின் வெள்ளமும் வேண்டும் இடங்களிலெல்லாம் வந்து பாயும் என்று நயந்தோன்றுமாறு அருளிச் செய்துள்ளார் ஆழ்வார் என்பதைச் சிந்திக்கின்றோம்.

அரச சின்னமாகிய வெண்சாமரை வீசவும், வாத்தியங்கள் ஒலிக்கவும், ஓரரசன் தன் பட்டத்து அரசியுடன் சீரிய சிங்காதனத்தின் மீது வீற்றிருத்தல்போல, இத்திருப்பதியில் செந்நெற் பயிர்களாகிய சாமரைகள் வீசவும் சங்குகள் முழங்கவும் அன்னப் பறவைகள் தமது பேடைகளுடன் செந்தாமரை மலர்களில் ஏறி வீற்றிருக்கும் (7-8-2). மற்றும், தாமரைப் பூக்களின்மேல் வரி வண்டுகள் இசை பாடா நிற்க,

7. பெரி. திரு. 7.8:3

அந்த இசைக்கேற்ப அன்னப்பறவை தன் பேடையுடன் சேர்ந்து நடனம் ஆடும் (7-5-9). இவ்வூரைச் சுற்றிலுமுள்ள வயல்களில் நெல்லுக்குக் களையாக முளைத்த குவளைப் பூக்கள் மாதர்களின் கண்களையொத்திருக்கும். நீர் நிலங்களிலுண்டான ஆம்பல் மலர்கள் அவர்களது வாய்போன்று விளங்கும்; இதழ்மிக்க தாமரைப் பூக்கள் அவர்களது முகம் போன்று திகழும் (7-5-10). வயல்களில் உள்ள பாக்கு மரங்களில் முதிர்ந்த பழங்கள் பவளத்தையும், பசுங்காய்கள் மரகதத்தையும், விரிந்த பாளைகள் வெண்முத்துகளையும் நினைப்பூட்டும். வாழை மரங்கள் எம்மருங்கும் குலைகளுடன் நிறைந்து நின்று நிலச் செழிப்பினை நிலைநாட்டும் (7-8-8).

வயல்களிலுள் குருகினங்கள் திரள்திரளாக மீன்களைப் பிடிக்க நீர் நிலங்களில் வந்து இழியும்; தம் வாய்க்குள் அடங்கக் கூடிய சிறு மீன்களைப் பிடித்துக் கதுப்பிலே அடக்கிக் கொண்டிருக்கும். இந்நிலையில் வேறொரு பெரிய மீன் வந்து தோன்ற, அதனைப் பிடிக்க அஞ்சிப்போய், பின்னையும் ஆசையினால் அதனை நெருங்கிக் கிட்டும். இந்த வருணனையின் உட்கருத்தைப் **பெரியவாச்சான் பிள்ளை** "பாரத ஸமரத்தில் பீஷ்மாதிகள் 'அதிரதர், மஹாரதர்' என்றிங்ஙனே பேர்பெற்று ஜீவித்திருந்தோம், இப்போதாகப் பூசல் கோழைகளாக வெண்ணாது, என்று ஸாரதி பக்கலிலே வந்து கிட்டுவது, தேர்க்காலிலே உழங்குண்டு போக வொண்ணாதென்று அகலுவதாய்க்கொண்டு அவர்கள் படுவனவற்றைப் படா நின்றன வாய்த்துக் குருகினங்களும்" என்று வெளியிடுவதை நினைந்து அநுபவிக்கின்றோம் (7-5-2). குட்டிக்கு இரைதேடப் போகும் புள் தனியே செல்லாது தன் காதற் பெடையோடு சென்று, சேற்றைக் கண்டவிடத்தும் பின்வாங்காது, இரைதேடித் திரியும். இங்கே ஒரு சங்கை பிறக்கலாம். "மீன்கள் நிறைந்திருக்கும் இடத்தில் இரைதேடும் என்பது எப்படிப் பொருந்தும்? மீன் அருமைப் பட்டிருந்தாலன்றோ இரை தேட வேண்டும்?" என்பதாக. 'புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடி' என்றுள்ள சொற்போக்கை நோக்கினால் ஐயம் எழக் காரணம் இல்லை. அங்குள்ள மீன்கள் நிலவளத்தாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும். அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்கு அடங்க மாட்டாவாகையால், பொருத்தமான சிறிய மீன்களைத் தேடிப் பிடிக்க வேண்டுமல்லவா?" இந்த நுட்பத்தையும் சிந்திக்கின்றோம் (7-:4) பாக்கு மரங்கள் நிறைந்துள்ள சோலைகளெங்கும் வண்டுகள் இசை பாடும்; குயில்கள் கூவும்; மயில்கள் கூத்தாடும்; இந்தச் சூழ்நிலையில் அலைகளையுடைய காவிரியின் நீர் பக்கங்களில் சுற்றிப் பாய்தலினால் ஊரின் அழகை மிகுவிக்கும் (7-8-4).

இனி ஆழ்வார் காட்டும் அணி **அழுந்தூரின் அழகில்** ஆழங்கால்படுவோம். ஊர் எப்போதும் கார்காலத்தோற்றத்துடன் இருக்கும். காற்றும் துகள்களும் மேக படலங்களும் சிறப்பாகக் கார்காலத்தில் காணப் பெறும். அதுபோலவே,

**துகிலின் கொடியும் தேர்த்துகளும்**
**துன்னி மாதர் கூந்தல்வாய்**
**அகிலின் புகையால் முகிலேய்க்கும்**
**அணியார் வீதி அழுந்தூரே**[8]

என்கின்றார் ஆழ்வார். அங்குள்ள மாடமாளிகைகள் மேக மண்டலத்தளவும் ஓங்கியிருக்கும். மாளிகைகளின் முனையிலே பாதுகாப்புக்கு உறுப்பாக சூலங்கள் நாட்டப் பெற்றிருக்கும். அவை மேகங்களின் கீழ் வயிற்றை இடித்துப் பிளக்க, மழை சொரியும் (7-5-6). இவ்வூர் விதிகள் கடல்போல் நீண்டிருக்கும். மாளிகைகள் சுண்ணச் சாந்திட்டு வெளுத்திருக்கும்; அவை விண்ணுலகத்தளவும் ஓங்கியிருக்கும். சூரியனின் கதிர்களைக் கரும்பாலைப் புகை வந்து மறைத்து எங்கும் நிழல் செய்யும் (7-5-7). இங்குள்ள மாதர்கள்; தேன் ஒழுகும் கூந்தலையுடையவர்கள். கொம்புகள் செறிந்திருக்கும் குருக்கத்தியின் மேலே, செருக்காலே தளிரையும் பூக்களையும் கோதி மதுபானம் பண்ணின வண்டினங்கள், அவற்றை விட இன்பம் மிகுந்ததோர் இடம் தேடிப்போய் இராத் தங்கவேண்டும் என்று எண்ணங்கொண்டு இங்குள்ள மகளிரின் கூந்தற்கற்றையில் ஏறும் (7-5-3). இங்குள்ள பெண்கள் பொன்மயமான சிலம்புகளைக் காலிலணிந்து கொண்டு நடனம் செய்வதால் உண்டாகும் ஒலி ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் (7-5-8). இவ்வூர் மகளிர் கிளியைப் போன்ற இன்சொல்லையும் அன்னப் பேடை போன்ற மென்னடையையும் உடையவர்கள் (7-8-5). திருவிழாக் காலங்களில் திருவீதியில் நடைபெறும் விழாக் காட்சிகளைக் காணும் பொருட்டு வீதியின் இருபுறங்களிலுமுள்ள மாளிகையின் திண்ணைகளில் ‘ஆடு ஏறு மலர் குழலார்’ ஏறி நின்று காட்சிகளைக் கண்ணுறுவர் (7-8-9).

திருவழுந்தூரிலுள்ள நான்மறைவல்ல அந்தணர்கள் எப்போதும் ஏதாவதொரு வேள்வியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். இவர்கள் யாவரும் இளைஞர்களே. அவர்கள் மழைபொழியும் பொருட்டுச் செய்யும் வேள்வியால், வேள்வியைத் தொடங்கும் முன்னரே மழை பொழிந்து விடுகின்றது. காரணம் உண்டான உடனே ஒரு நொடிப் பொழுதும் தாமதியாமல் காரியம் உண்டாகி விடுகின்றது (7-5-1).

8. பெரி. திரு. 7.5:5

இவ்வூர் மறையவர்கள் எப்போதும் இவ்வூர் எம்பெருமானைச் சூழ்ந்துகொண்டு துதியாநிற்பர் (7-6-5-6). இவர் மறையோதுவதால் எழும் ஒலி எப்போதும் கடலொலிபோல் ஒலித்துக் கொண்டே இருக்கும் (7-5-8). இவ்வூர் அந்தணர்களின் தன்மையை,

**எங்கும்மலி நிறைபுகழ்நால் வேதம் ஐந்து**
**வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை**
**அங்கமலத்து அயன் அனையார்**[9]

(வேள்வி – யாகம்; கேள்வி – நூற்கேள்வி; கமலம் – தாமரை; அயன் – நான்முகன்)

என்று எடுத்துக்காட்டுவர் ஆழ்வார். "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர், திசைமுகனை அனையவர்கள், செம்மைமிக்க அந்தணர்கள்" (7-8-7) என்று இவர்களைச் சிறப்பித்துப் பேசுவர். மண்டபம் முதலிய எல்லா இடங்களிலும் வேதம் ஓதிய அந்தணர்கள் நிறைந்து காணப்பெறுவர்(7-8-6).

இத்தகைய சிறந்த சூழ்நிலையில் அமைந்த சிறப்புமிக்க திருவழுந்தூரில் மேற்குப்பகுதியில் திகழ்வது **பெருமாள் கோயில்.** இந்த இருப்பிடத்தை வலியுறுத்துவதுபோல், ஒருமுறைக்கு ஒன்பது முறையாக,

**அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே**[10]

என்று ஒரு திருமொழியில் பன்னியுரைக்கின்றார் ஆழ்வார். இத்திருக்கோயிலுக்கு முன்னர் ஒரு பெரிய திருக்குளம் உள்ளது. இது **தர்சன புஷ்கரிணி** என்ற திருநாமத்தால் வழங்கி வருகின்றது. இந்தப் புஷ்கரிணியைச் சுற்றிக்கொண்டு வந்தால் முதலில் தென்படுவது ஊஞ்சல் மண்டபம். திருக்கோயிலில் நுழைந்தவுடன் இராசகோபுரத்தின் உள்பக்கத் தென்புறத்திலுள்ள மாடங்களில் இருப்பவை கம்பன் மற்றும் அவன் துணைவியார் சிலைகள், ஒன்றிலிருப்பவை பின்னப்பட்டவை; மற்றொன்றில் இருப்பவை புதிய சிலைகள். இராம காதை பாடியருளிய கம்பனுக்கு இத்திருக்கோயிலில் முதல் இடம் கிடைத்திருப்பது நமக்கெல்லாம் பெருமை தருவதாக உள்ளது.

இனி, திருக்கோயிலினுள் நுழையச் சித்தமாகின்றோம். இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் **ஆமருவியப்பன்;** பசுவை விரும்பிய அப்பன். இதனை நினைந்தே ஆழ்வாரும்,

**அன்றாவின் நறுநெய் அமர்ந்துண்ட அணிஅழுந்தூர்**
**நின்றானை**[11]

9. பெரி. திரு. 7.8:4
10. பெரி. திரு. 7:3
11. பெரி. திரு. 7.6:4

என்று மங்களாசாசனம் செய்கின்றார். பசு நெய்யை விரும்பி அமுது செய்வதற்காகவே திருவழுந்தூரில் எழுந்தருளியுள்ளான் ஆமருவியப்பன். திருவாய்ப்பாடியின் நிலையிலே திருவழுந்தூரைத் திருவுள்ளம் பற்றினான் என்பது ஆழ்வார் பெற வைக்கும் குறிப்பு. அன்றியும், இத்திருப்பதியை மங்களாசாசனம் செய்யத் தொடங்கும் முதல் திருமொழி முதற் பாசுரத்திலேயே,

**தந்தைகாலில் பெருவிலங்கு தாள்அவிழ நல்லிருட்கண்**
**வந்தஎந்தை பெருமானார் மருவிநின்ற ஊர்போலும்**[12]

(குந்தை – வசுவேதர்; தாள் அவிழ – பூட்ட இற்று விழும்படியாக; நல் இருள் – நடு நிசி; வந்த – திருவவதரித்த; மருவி நின்ற – நித்திய வாசம் செய்த.)

என்று கண்ணனை இனங்காட்டி விடுகின்றார் ஆழ்வார். இவ்விடத்தில் ஓர் இதிகாசம்: கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் பிருந்தாவன எல்லையில் தன் தோழன்மார்களுடன் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கின்றான். இந்த நேரத்தில் அவ்வழி ஏகின நான்முகன் ஆநிரைகளைத் திருவழுந்தூருக்கு ஓட்டி வந்து விடுகின்றான். இதை அறிந்த கண்ணன் புதிதாக ஓர் ஆநிரையையே உண்டாக்கி ஆயர்களிடம் தந்து விடுகின்றான். நான்முகனும் தன் பிழையை உணர்கின்றான். அவனது வேண்டுகோளின்படியே திருவழுந்தூர் சென்ற பசுநிரையைக் காக்கும் கோவலனாக **ஆமருவி அப்பனாக** - அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவாக அழுந்தையில் - மன்னி நின்ற தேவாதி தேவனாக - எழுந்தருளி விடுகின்றான்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். இவன் அருகில் இடப் பக்கத்தில் பெரிய திருவடியும் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்றான். கருடனைத் தவிர, காவிரி அன்னை, மார்க்கண்டன், பிரகலாதன் இவர்களும் கருவறையில் உள்ளனர். கருவறையிலுள்ள உற்சவரின் பின்புறம் பசு ஒன்று நின்று கொண்டிருப்பதைக் காணலாம். ஆமருவியப்பனல்லவா? உற்சவர் மிக அழகானவர். ஆண்டுக்கு இரண்டு மூன்று முறை திருமுழுக்கு அபிஷேகம் பெறுகின்றார். ஒரு திருமுழுக்கிற்குக் காவிரிக்கே எழுந்தருளு கின்றார். அன்றுதான் அர்ச்சகர்கள் உற்சவரின் முழுமேனி அழகை யும் நாம் காணுமாறு செய்வார்கள். பங்குனிப் புனர்வசு இராமன் பிறந்தநாள். அன்று கண்ணனையே இராமனாக அலங்கரித்து ஊருக்குக் கிழக்கேயுள்ள வேதபுரி ஈசுவரர் கோயில் வரை திருவுலா வரப் பண்ணுவர். இராம காதை பாடிய கம்பனுக்கு ஆமருவியப்பன் **இராமனாகவே** சேவை சாதிக்கின்றான் என்றும் கூறுவர்.

12. பெரி. திரு. 7.5:1

உற்சவரை விட மூலவர் மிக்க அழகு வாய்ந்தவர். சுமார் பத்து அடி உயரம் உள்ளவர். வாட்ட சாட்டமான திருமேனி. கரிய திருமேனியராக அமைந்த நல்ல சிலை வடிவம். தலையில் தங்கத்தாலான கிரீடம். இடையிலே தசாவதார 'உதரபந்தம்'. திருக்கழுத்திலே சகஸ்ரநாம மாலை திகழ்கின்றது. திருத்தோள்களை வாகுவலயங்கள் அணிசெய்கின்றன. 'அகலகில்லேன் இறையும்' என்று அலர்மேல் மங்கை உறை மார்பர். நெற்றியிலே வயிரத் திருநாமம். எல்லாவற்றையும் விட சாந்தம் நிலவும் திருமுக மண்டலம். இந்த எம்பெருமானைச் சேவித்த ஆழ்வார்,

**திருவுக்கும் திருவாகிய செல்வா**
**தெய்வத்துக் கரசே செய்யகண்ணா**
**உருவச் செஞ்சுடர் ஆழிவல்லானே!**
**உலகுஉண்ட ஒருவா! திருமார்பா![13]**

(திரு – பெரிய பிராட்டியார்; திருஆகிய – இலக்குமிகரனான; ஆழி – சக்கரம்; ஒருவா . ஒப்பற்றவனே; திருமார்பா – பிராட்டியைத் திரு மார்பிலுள்ளவனே)

என்று இந்த எம்பெருமானின் பெருமைகளைச் சொல்லி ஏத்துகின்றார்.

**தேன்அமரும் பொழில்தழுவும் எழில்கொள் வீதி**
**செழுமாட மாளிகைகள் கூடம் தோறும்**
**ஆனசொல்சீர் மறையாளர் பயிலும் செல்வத்து**
**அணிஅழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே.[14]**

(தேன்அமரும் – தேன் பொருந்தியுள்ள; பொழில் – சோலை; எழில் – அழகு; மாடம் – மாடி; மாளிகைகள் – வீடுகள்; கூடம் – வேறு இடங்கள்; பயிலும் – வாழும்.)

என்று போற்றிப் பரவுகின்றார். இவரை நாம் மனமாரச் சேவித்து தாயார் சந்நிதிக்கு வருகின்றோம். தாயார்; **செங்கமலவல்லி.** இவரையும் சேவித்து இவரது திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம்.

திருமங்கையாழ்வார் ஆமருவியப்பனை மங்களாசாசனம் செய்யும்போது பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை நிலையிலுள்ள எம்பெருமான்களையும் அநுபவித்து இனியராகின்றார். "பரனே... மாதவனே, மதுசூதா" (3-7-4) என்றும், "வெள்ளத்துள் ஓர் ஆலிலை மேல் மேவி" (7-5-4) என்றும், "உலகுண்ட ஒருவா" (7-7-1) என்றும் **பரத்துவநிலை எம்பெருமானைப்** பரவுகின்றார். "ஒலிநீர் உலகங்கள் படைத்தானை" (7-6-3) என்று **வியூக எம்பெருமானைச்** சிந்திக்கின்றார்.

13. பெரி. திரு. 7.7:1 14. பெரி. திரு. 7.8:6

**விபவாதாரங்களை** எண்ணும்போது நரசிம்மன், பரசுராமன், ஆதிவராகம், வாமன - திரிவிக்கிரமன், ஹயக்ரீவன், இராமன், கிருஷ்ணன் என்ற இந்த எம்பெருமான்கள் ஆழ்வார் சிந்தையில் எழுகின்றனர். "சிங்கம் அது ஆய் அவுணன் திறல் ஆகம் முன்கீண்டு" (7-6-1) என்றும், "சினம் மேவும் அடல் அரியின் உருவம் ஆகி, திறல் மேவும் இரணியனது ஆகம் கீண்டு (7-8-5) என்றும் **நரசிங்கப் பெருமானை** நினைக்கின்றார். "ஆதிவராகம் முன் ஆனாய்" (7-7-40) என்றும்,

> **சிலம்புமுதல் கலன்அணிந்து ஓர்செங்கட் குன்றம்**
> **திகழ்ந்ததென திருஉருவம் பன்றி ஆகி**
> **இலங்குபுவி மடந்தைதனை இடந்து புல்கி**
> **எயிற்றிடை வைத்தருளிய ஈசன்**[15]

என்றும் **வராகப் பெருமானை** அநுபவிக்கின்றார். "பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் அருளிய எம்பரமன் காண்மின்" (7-8-2) என்று **ஹயக்ரீவ** மூர்த்தியைப் போற்றுகின்றார்.

> **வானவர்தம் துயர்தீர வந்து தோன்றி**
> **மாண்உருவாய் மூவடிமா வலியைவேண்டி**
> **தான்அமர ஏழ்உலகும் அளந்த வென்றித்**
> **தனிமுதல்சக் கரப்படைஎன் தலைவங்ன காண்மின்**[16]

என்று **வாமன - திரிவிக்கிரமாவதாரத்தை** அநுபவித்து இனியராகின்றார். "கோவானார் மடியக் கொலைஆர் மழுக் கொண்டருளும் மூவா வானவன்" (7-6-2) என்று **பரசுராமனைப்** பகர்கின்றார்.

அவதாரங்களில் இராமனும் கிருஷ்ணனும் அதிக இடம் பெறுகின்றனர். **இராமனைக்** கருதும்போது இராவணனது பத்து தலைகளையும் கைகளையும் அறுத்த (7-5-1, 7-8-7) செயல்களை அநுசந்திக்கின்றார். **கண்ணனை** நினைக்கும்போதுதான் பார்த்தனுக்குத் தேரேறிச் சாரதியானது, குன்றேந்தி மாரி தடுத்தது, கஞ்சனைக் காய்ந்தது, பூதனையிடம் முலையுண்டு அவளது உயிர் குடித்தது, தயிர் நெய் அமுது செய்தமையால் தாயால் ஆப்புண்டது, விடை ஏழை அடர்த்தது, கும்பமிகு குவலயா பீடத்தைக் கொன்றது, குரவை கோத்தது, சகடாசூரனை உதைத்துக் கொன்றது போன்ற வெற்றிச் செயல்கள் ஒவ்வொன்றாகத் தோன்றி ஆழ்வாரை மகிழ்விக்கின்றன.

15. பெரி. திரு. 7.8:4 ஒப்பிடுக. பெரி. திரு. 4.4:8
16. பெரி. திரு. 7.8:6

**அந்தர்யாமித்துவ எம்பெருமானைச்** "செவ்வாய் முறுவல் செய்தருளி, மாடுவந்து, என்மனம் புகுந்து நின்றார்" (7-5-6) என்றும், "அடியேன் மனம் புகுந்து என் நீலக் கண்கள் பனிமல்க நின்றார்" (7-5-7) என்றும், "என் நெஞ்சு நிறையக் கைகூப்பி நின்றார்" என்றும் சிந்தித்து மகிழ்கின்றார்.

**அர்ச்சாவ எம்பெருமான்களில்** ஆமருவி அப்பனைத் தவிர, திருக்குடந்தைப் பெருமான், நறையூர் நம்பி ஆகிய எம்பெருமான்களையும் அநுபவிக்கின்றார். ஆழ்வாரின் நறையூர் நம்பி அநுபவம் அழகிய மணவாளச் சீயர் "இந்த ஆழ்வார் வாக்கினின்றும் நறையூர் நம்பி நூறு பாசுரங்கள் பெற்றிருந்தும் மனநிறைவு பெறாதவனாய் மீண்டும் வந்து முகங்காட்டினதைக் கண்டு ஆழ்வார் **திருநறையூர் நம்பீ** (7-7-4) என்கின்றார். திருவிண்ணகரில் ஆழ்வார் எழுந்தருளியிருக்கும்போது நம்பி எதிர்கொண்டு சென்றதனால் **திருநறையூர்த் தேனே** (6-3-3) என்று பேசினார்.[17] ஆழ்வார் திருநறையூரினின்று மீண்டு திருவழுந்தூர் செல்லுமளவும் கூட வந்து வழிவிட்டுத் திரும்புகையாலன்றோ 'நறையூர் நம்பி... அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!" (7-7) என்று பேசுகின்றார் எல்லாப் பாசுரங்களிலும்,.

**கசேந்திர மோட்சம்** எல்லா ஆழ்வார்கள் மனத்தையும் கவர்ந்துள்ளது. இந்த ஆழ்வாரும் இதற்கு விலக்கல்லர். இந்த யானை நிகழ்ச்சியை ஆழ்வார், "குலவேழம் அன்று பொன்றாமை அதனுக்கு அருள் செய்த போர் ஏறு" (7-6-4) என்றும்,

**குலத்தலைய மதவேழம் பொய்கை புக்கு**
**கோள்முதலை பிடிக்க அதற்கு அனுங்கிநின்று**
**நிலத்திகழும் 'மலர்ச்சடர்ஏய் சோதீ' என்ன**
**நெஞ்சு இடர்தீர்த் தருளியஎன் நிமலன் காண்மின்[18]**
(அனுங்கி – அஞ்சி)

என்றும் போற்றிப் புகழ்வர்.

வைணவ தத்துவமாகிய **சரீர - சரீரி பாவனையும்** திருவழுந்தூர்பற்றிய இவ்வாழ்வாரின் பாசுரங்களில் இடம் பெறுகின்றது.

**பகலும் இரவும் தானேஆய் பாரும் விண்ணும் தானேஆய்**
**நிகரில் சுடரில் இருளாகி நின்றார்[19]**

17. இப்பாசுர நயத்தைச் சோழ நாட்டுத் திருப்பதிகள் முதற்பகுதி (கட்டுரை – 12) காண்க.
18. பெரி. திரு. 7.8:3
19. பெரி. திரு. 7.5:5

இதில் 'பாரும் விண்ணும்தானே ஆய்' என்பதனால் **அசித்து,** எம்பெருமானின் உடலாய்த் திகழ்கின்றது என்று அவனது திவ்வியமங்களத் திருமேனி காட்டப் பெறுகின்றது. மேலே காட்டப் பெற்ற இறைவனின் ஐந்து நிலைகளாலும் **வைணவ தத்துவம்** புலனாகின்றது.

இங்ஙனம் அணி அழுந்தூர் நின்ற அம்மானையும் ஆழ்வார் பாசுரங்களையும் அநுபவித்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது.

**அடியாராய் வாழ்மின் அறிவிலாப் பேய்காள்**
**செடியார் வினையனைத்தும் தீரும் – முடிவில்**
**செழுந்தூரத் தன்னெனினும் செங்கண்மால் எங்கள்**
**அழுந்தூரத் தன்னணியன் ஆம்.**[20]

(அறிவு – புத்தி; செடியார் – செடிபோல் அடர்ந்துள்ள; தீரும் – ஒழியும்; அத்தன் – சுவாமி; அணியன் – அணிமையிலிருப்பவன்)

என்ற பாடலையும் ஓதி உளங் கரைகின்றோம். "மெய்யடியாராக வாழ்பவர்கட்கு இருவினையும் எம்பெருமான் அருளால் தீயினில் தூசாகும். அவரது இறுதி நாளில் எம்பெருமான் கருடன்மேல் சேவை சாதித்துத்தானே வழித்துணையனாகி நற்கதி சேர்ப்பன் என்கின்றார் திவ்வியகவி. பிரம்மானந்தம் பெற்ற நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

குறிப்பு : தேரழுந்தூர்தான் கம்பன் பிறந்த ஊர். இந்த ஊருக்குத் தென் மேற்குக் கோடியில் **கம்பன் மேடு** என்று ஓர் இடம் உள்ளது. அங்குப் புதையியல் துறையினர் ஒரு நீலப் பலகையில் இதைக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பூர்தி நிலையத்திலும் 'தேரழுந்தூர் - கம்பன் மேட்டுக்கு இங்கே இறங்குங்கள்' என்று ஓர் அறிவிப்புப் பலகையையும் வைத்துள்ளனர்.

20. நூற். திருப். அந். 10

# 8. வெள்ளக்குளத்து அண்ணன்

**இறைவனுடைய** திவ்விய மங்கள உருவத்தைப் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து நிலைகளாகப் பிரித்துப் பேசுவர் வைணவப் பெருமக்கள். அவற்றுள் **பரத்துவம்** என்பது காலம் நடையாடாததும், ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாயுமுள்ள வைகுந்தத்தில் (நித்திய விபூதியில்) அயர்வறும் அமரர்கள் என்று வழங்கப்பெறும் அனந்தன், கருடன், விஸ்வக்சேனர் முதலான நித்திய சூரிகளும் இவ்வுலகத் தளைகளினின்று விடுபட்ட முக்தரும் அநுபவித்தற்கு உரியனாய் எழுந்தருளியிருக்கும் இருப்பாகும். **வியூகமாவது,** இவ்வுலகில் (லீலா விபூதியில்) அதன் படைப்பு, அளிப்பு, அழிப்பு இவற்றை நடத்துவதற்காகவும், சம்சாரிகட்கு வேண்டியவற்றை ஈந்து வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தற் பொருட்டும், வீடு பேற்றை விரும்பித் தன்னை இடையறாது சிந்திப்பவர்கட்கு அவர்களது தளைகளைப் போக்கித் தன்னை வந்து அடைவதற்குக் காரணமான பேரருளைச் சுரப்பதற்காகவும் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யுமனன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் வடிவங்கொண்டு இருக்கும் நிலையாகும். இவற்றுள் வாசுதேவ உருவமான பரத்துவத்தில் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். ஏனைய மூன்றில் அவரவர்கள் மேற்கொண்டிருக்கும் செயலுக்கேற்ப ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும். **விபவ அவதாரங்கள்** எண்ணிறந்தவை. அவற்றுள் ஆதி அம்சோதி உருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த[1] இராமர், கிருட்டிணர் முதலான அவதாரங்கள் யாவும் அடங்கும். இந்த அவதாரங்கள் இறைவனின் இச்சை காரணமாக ஏற்பட்டவை. இவற்றின் பலன் அடைந்தாரைக் காத்தல், அவர்களின் விரோதிகளைப் போக்குதல், வைதிக தர்மத்தை

1. திருவாய். 3.5:5

நிலைநிறுத்துதல் ஆகியவற்றின் பொருட்டாக இருக்கும்.[2] **அந்தர்யாமித்துவமானது,** உயிர்களின் உள்ளே புக்கிருந்து அவர்களின் எல்லாச் செயல்கட்கும் தான் ஏவுபவனாக இருப்பதோடன்றி அவர்கட்குத் தியான ருசி பிறக்கும்போது தியானத்திற்கு உரியவனாதற்காகவும், அவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் அழகே உருவெடுத்தாற் போன்ற மங்களகரமான திருமேனியுடன் எல்லா அணிகளாலும் அலங்கரிக்கப் பெற்றவனாய் பெரிய பிராட்டியோடு **கட்டைவிரல் அளவாக** இதயத் தாமரைக்குள்ளே எழுந்தருளியிருக்கும் இருப்பாகும். **அர்ச்சாவதாரம்** என்பது, 'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்'[3] என்ற பொய்கையாழ்வாரின் திருவாக்குப்படி அன்பர்கள் எதைத் தனக்குத் திருமேனியாகக் கொள்ளு கின்றனரோ அதனையே இறைவன் தனக்கு வடிவமாகக் கொண்டுள்ள நிலையாகும். குணங்கள் நிறைந்துள்ள இந்த அர்ச்சாவதாரமே 'இருட்டறையில் விளக்குப் போலே' ஒளிர்ந்து காணப்படும் என்பது ஆழ்வார் பெருமக்களின் கருத்தாகும்.

இவற்றுள் பரத்துவம் முதலான நிலைகளின் அருமையையும் அர்ச்சாவதாரத்தின் எளிமையையும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குவர் **பிள்ளை உலக ஆசிரியர்.** தண்ணீர் வேட்கை கொண்டவனுக்கு வேறு இடங்கட்குச் செல்ல வேண்டாதபடி தான் நிற்கும் இடத்தில் உண்டாயிருந்தும் கொட்டும் குந்தாலியும் கொண்டு கல்லினால் அல்லது பருகக் கிடையாத பூமிக்குள்ளே இருக்கின்ற தண்ணீரைப் போல் ஆயிற்று **அந்தர்யாமித்துவம்.** 'கண்டு பற்ற வேண்டும்' என்று அவாக்கொண்டவனுக்கு மனத்திலிருந்தும் **'கட்கிலி'**[4] - கண்களால் காண இயலாதபடி, அட்டாங்க யோக முயற்சியால் மட்டிலுமே காண வேண்டும் படியாக இருப்பது இந்நிலையில் இருக்கும் இறைவனின் நிலை. தண்ணீர் வேட்கை கொண்டவனுக்கு அண்டத்திற்குப் புறம்பே பெருகிக் கிடக்கின்ற ஆவர்ண நீர்போல் ஆயிற்று லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கும் **பரத்துவ நிலை.** அப்படி மிக்க நெடுந்தூரம் அன்றியே இந்த உலகிலேயே இருக்கச் செய்தும் தண்ணீர் வேட்கை கொண்ட அவனுக்குச் சென்று அடைய முடியாததான பாற்கடல் போல் ஆயிற்று. கேட்டிருக்கும் அத்தனையல்லது சென்று காண அரிதாம்படி இருக்கும் **வியூகநிலை.** மிக அண்மையிலிருந்தும் அந்தக் காலத்தில் இருந்தவர்கட்குப் பருகலாம்படியாய், வேறு காலத்தில் இருப்பவர்கட்குப் பருகுதற்கு அரிதாம்படியான

2. பகவத் கீதை. 4:8
3. முதல. திருவந். 44
4. திருவாய். 7.2:3

பெருக்காறு போலேயாயிற்று **விபவம்.** பூமியில் அவதரித்துச் சஞ்சரித்தும் அக்காலத்தில் வாழ்ந்தவர்கட்கு அடையத்தக்கதாய்ப் பிற்காலத்தில் உள்ள இவனுக்குக் கிட்டாதபடியாக இருக்கும் இந்நிலை. மேற்கூறியவை போலன்றி அவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றில் தேங்கின மடுக்கள் போலே ஆயிற்று **அர்ச்சாவதாரம்;** காண்பதற்குத் தேசத்தாலும் காலத்தாலும் கரணத்தாலும் சேயதன்றித் திருக்கோயில்களிலும் இல்லங்களிலும் என்றும் ஒக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கின்ற "பின்னானார் வணங்கும் சோதி"[5] யானது **அர்ச்சாவதார நிலை.**

இந்தக் கருத்துகள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் மயிலாடுதுறை காளியாக்குடி விடுதியிலிருந்து திருநாங்கூர்த் திருப்பதிகளைச் சேவிப்பதற்காகப் பேருந்தில் புறப்படுகின்றோம். மயிலாடுதுறையிலிருந்து சீகாழிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சீகாழியை அடைவதற்குச் சுமார் மூன்று கிலோ மீட்டர் முன்னதாகவே ஒரு கிளை சாலை (மண் சாலை) செல்லுகின்றது. அங்கு **திருநாங்கூர், அண்ணன் கோயில்** என்ற பெயர்களிட்ட கைகாட்டிப் பலகைகள் தென்படுகின்றன. இந்த இடத்தில் இறங்கி ஒரு மாட்டுவண்டியை வாடகைக்கு அமர்த்துகின்றோம். சாதாரணமாக இவ்விடத்தில் ஓரிரண்டு மாட்டு வண்டிகள் இதற்கெனவே நிறுத்தி வைத்திருப்பதைக் காணலாம். இந்த வண்டியைக் கொண்டே **திருவெள்ளக்குளம்** (திருநாங்கூர்த் திருப்பதிகளில் 10 வது) **மணிமாடக் கோயில்** (1 வது), **வைகுந்த விண்ணகரம்** (2 ஆவது), **அரிமேய விண்ணகரம்** (3 வது) **வண்புருடோத்தமம்** (5 வது), **செம்பொன்செய் கோயில்** (6 வது) **திருத்தெற்றியம்பலம்** (7 வது) ஆகிய ஏழு திவ்விய தேசங்களையும் சேவிக்கத் திட்டமிடுகின்றோம்.

முதன்முதலாக வழியில் தென்படுவது **திருவெள்ளக்குளம்** என்னும் திருத்தலமாகும்; நெடுஞ்சாலையிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. **அண்ணன் கோயில்** என்ற திருநாமமே எங்கணும் பெருவழக்காக உள்ளது. இத்திருத்தலத்துத் தீர்த்தம் **திருவெள்ளக்குளம்** என்பது; புஷ்கரிணியின் திருநாமமே திவ்விய தேசத்திற்கும் வழங்கலாயிற்று என்பது கருதத்தக்கது. இத்திருத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் மட்டிலுமே ஒரு திருமொழியால் (4.7) மங்களா சாசனம் செய்துள்ளார். முதற் பாசுரத்திலேயே **திருவெள்ளக் குளத்து அண்ணா!** என்று எம்பெருமானை விளிப்பதால் எம்பெருமான் **அண்ணன்** ஆகின்றார்;

5. திருநெடுந். 10

அவன் எழுந்தருளியிருக்கும் கோயில் **அண்ணன் கோயில்** என்று ஆகின்றது. இந்தக் கோயிலின் திருநாமமே திருத்தலத்துப் பெயராகவும் ஆகிவிடுகின்றது.

**'திருவெள்ளக்குளம்'** என்ற பெயரைக் கேட்டவுடன், குமுதவல்லியின் நினைவு வருகின்றது. திருவெள்ளக்குளத்தில் மிகச் சிறந்ததொரு தாமரைப் பொய்கை இருந்தது. ஒரு சமயம் உம்பர் உலகத்து அப்சரப் பெண்கள் அங்கு நீராடிச் சென்றனர். அவர்களுள் **திருமாமகள்** என்பாள் தன் இச்சையால் தெய்வ வடிவைத் துறந்து மானிடவடிவங்கொண்டு தனியே குமுதமலர் கொய்து நிற்கின்றாள். அநுட்டானத்திற்காக வைணவ மருத்துவர் ஒருவர் அங்கு வர நேரிடுகின்றது. அவளை அவர் யாரென்று வினவ, அவள் தன்னுடன் வந்த மகளிர் தன்னை விட்டுப் போய் விட்டனர் என்றும், தனியிருந்து அலைகின்ற தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டுகின்றாள். மக்கட் பேறு இல்லாத இம்மருத்துவர் அம்மகளைத் தன் இல்லத்திற்கு இட்டுச் சென்று தம் துணைவியிடம் ஒப்படைக்கின்றார். குமுதமலர் கொய்து நின்ற அவளுக்குக் **'குமுதவல்லி'** என்ற திருநாமம் இட்டு வளர்த்து வருகின்றனர்.

குமுதவல்லிக்குத் திருமணப் பருவம் வருகின்றது. இவளுக்கேற்ற கணவன் இவ்வுலகில் கிடைப்பானா என்ற கவலை வளர்ப்புப் பெற்றோருக்கு வருகின்றது. இப்பெண்மணியின் குணநலன்களையெல்லாம் கேள்வியுற்ற **திருமங்கை மன்னன்** அம்மருத்துவர் இல்லத்திற்கே வந்து அவருடன் உரையாடிக் கொண்டிருக்கையில் குமுதவல்லி அரசன் கண்ணில் படுகின்றாள். அரசனுக்குக் காதல் விஞ்சுகின்றது; அவளைத் தமக்கு மணம் புரிவிக்குமாறு மருத்துவரை வேண்டுகின்றார். மருத்துவர் இதற்கு முயல்கையில் குமுதவல்லி குறுக்கிட்டு **'திருவிலச்சினை திருமண் காப்பு'** முதலிய பஞ்ச சம்ஸ்காரமுடைய ஒரு வைணவர்க்கே அன்றி பிறர்க்கு வாழ்க்கைப்பட மறுக்கின்றாள். அரசனும் **திருநறையூர்** சென்று நறையூர் நம்பிமுன்னர் அவற்றைப் பெற்று திருவெள்ளக்குளம் திரும்புகின்றார் திருமண ஏற்பாடுகளுடன். குமுதவல்லி மீண்டும் ஒரு நிபந்தனை போடுகின்றாள். ஓராண்டளவு நாடோறும் 1008 வைணவர்கட்கு அமுது படைத்து, அவர்தம் திருப்பாதத் தீர்த்தத்தையும், போனகம் செய்த சேஷத்தையும் உட்கொண்டாலன்றித் தான் திருமணத்திற்கு ஒருப்பட முடியாது என்று கூறுகின்றாள். அரசனும் அவள்மீது கொண்ட ஆசையின் கனத்தினால் அவ்விரதத்தைச் செய்து முடிப்பதற்கும் உடன்படுகின்றார். ஓராண்டிற்குப் பின்னர் இருவருக்கும் திருமணம் நடந்தேறுகின்றது.

இச்செய்திகளைச் சிந்தித்த வண்ணம் இத்திருத்தலத்தை அடைகின்றோம். இது திருநாங்கூர்த் திருப்பதிகளில் **பத்தாவது** ஆகும். இஃது ஒரு சிற்றூரே. இங்கு உணவு விடுதிகளும் இல்லை; இது திருத்தேவனார்த் தொகைக்கு மேல்திசையில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது; சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து தென்கிழக்கில் சுமார் பத்துக் கிலோமீட்டர் தொலைவிலும், வைத்தீஸ்வரன் கோயில் இருப்பூர்தி நிலையத் திலிருந்து கீழ்த்திசையில் சுமார் பத்துக் கிலோமீட்டர் தொலை விலும் உள்ளது. திருத்தேவனார்த் தொகையைச் சேவித்தவுடன் இங்கு வந்திருக்கலாம். காலதாமதம் ஆகும் என்று வரவில்லை.

ஊரின் சூழ்நிலை நம் கண்வட்டத்தில் படுகின்றது. சிறிது சோலை சூழ்ந்த ஊரே. ஆழ்வாரும்,

**"தேனார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்**[6]
(தேன்ஆர் . தேன் நிறைந்த)
**சேடார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்**[7]
(சேடுஆர் – திரண்டு இருக்கும்.)
**சேலார் வயல்சூழ் திருவெள்ளக்குளம்**[8]
(சேல்ஆர் . மீன்கள் நிறைந்த)
**சீரார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்**[9]
(சீர்ஆர் – சிறந்த; பொழில் – சோலை.)

என்றெல்லாம் ஊரைச் சுற்றியுள்ள சோலைகளையும் வயல்களையும் குறிப்பிடுகின்றார்.

வடநாட்டுத் திருப்பதிகளில் **திருவேங்கடத்திற்கு** எவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு சோழநாட்டுத் திருப்பதிகளில் **இத்திருவெள்ளக் குளத்திற்கு** உண்டு என்பது அறிய வேண்டியது ஒன்று. அங்கும் இங்கும் வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். இந்த ஒற்றுமை நயம் விளங்கவே,

**வேடார் திருவேங்கடம் மேய விளக்கே**[10]
(வேடுஆர் – வேடர்கள் மலிந்திருக்கும்)

என்று வேற்றுமையின்றி எம்பெருமானை விளிக்கின்றார். திருவேங்கடம் பற்றிய திருமொழிகளில் **'கண்ணார் கடல் சூழ்'**[11] என்பது ஒரு திருமொழி. அதன் சாயையாகவே இத்திருமொழியும் அருளிச் செய்யப்படுகின்றது. இரண்டு திருமொழிகளின் தொடக்கமும் ஒருவிதமாகவே இருக்கும்படி அமைய வைத்ததும் உய்த்துணரத்தக்கது. திருவேங்கடம் பற்றிய திருமொழி **'கண்ணார்**

6. பெரி. திரு. 4.7:4
7. பெரி. திரு. 4.7:5
8. மேலது 4.7:7
9. மேலது 4.7:8
10. மேலது 4.7:5
11. மேலது 11.0

**கடல் சூழ்'** *(1-10-1)* என்றும், இத்திருமொழி **கண்ணார் கடல் போல்** *(4-7-1)* என்றும், தொடங்கப் பெற்றிருத்தல் காண்க. பாசுரங்களின் நடைப் போக்கும் கருத்துப் போக்கும் ஒருவிதமாகவே இருத்தலையும் ஒப்பிட்டு உணர்ந்து மகிழலாம். இது காரணமாக இத்திருத்தலம் '**தென்திருப்பதி**' என்று வழங்குகின்றது போலும்.[12] திருவெள்ளக்குளத்து எம்பெருமானை நோக்கி ஆழ்வார். வேண்டுவனவற்றைச் சிந்திக்கின்றோம். "திருவெள்ளக் குளத்தெம் பெருமானே! கடல் போன்ற திருமேனியை உடையனாயிருப்பது சம்சாரத்தில் கொதிப்படைந்து கிடக்கும் எம்போலியருடைய தாபங்களைத் தணிப்பதற்கன்றோ? அப்படியிருந்தும் அடியேனுடைய தாபங்களை இன்னமும் அகற்றாமலிருப்பது என்னோ? (1). சர்வரட்சகன் என்பது விளங்கவன்றோ நீ திருத்துழாய் மாலையைச் சாத்தியிருப்பது? நீ என்னிடரை நோக்காதொழியில் துளபமாலை அணிந்திருப்பது பயனற்றதாகுமல்லவா? (2). போவார் வருவா ரெல்லாம் கையெடுத்து வணங்கும்படியாக எளியனாக உள்ளாய், இந்திரன் பசிக் கோபத்தினால் ஏழுநாள் இடைவிடாது கல் மழை பெய்வித்தபோது கோவர்த்தன மலையைக் குடையாகக் கவித்துத் திருவாய்ப்பாடியின் இடரை நீக்கினவனன்றோ நீ? (3). நீ குவலயா பீடம் என்னும் யானையின் கொம்புகளை முறித்தாய் (4). ஒரு பிராட்டிக்காக அரியபெரிய காரியங்களைச் செய்தாய்; மலைகளைக் கொண்டு சேதுகட்டினாய் (6). சங்கல்ப மாத்திரத்தாலேயே படைப்பு அழிப்புகளைச் செய்து தலைக்கட்ட வல்லவன் நீ. ஆயினும் கையிலே கோலைக்கொண்டு கறவைகளின் பின்னே சென்று அவற்றை மேய்த்தாய் (7). பூமியைப் பிரளயம் கொண்ட காலத்தில் வராக அவதாரம் எடுத்து அதனை இடந்து எடுத்தாய். 'நாராயணன்' என்று பேர் பெற்றுள்ளாய். சரீரத்துக்கு நன்மை செய்ய வேண்டுவது சரீரியான ஆன்மாவின் கடமையன்றோ? (8). இப்படியெல்லாம் பலருக்குப் பல்வேறு விதமாக அருள் பாலித்த நீ அடியேனுக்குச் சிறிது அருள்செய்து துன்பங்களைப் போக்கலாகாதா?" என்று பாசுரங்கள் தோறும் பன்னிப் பன்னி வேண்டுகின்றார் ஆழ்வார். இறுதியாக, "பிராட்டியானவள் உன்னைவிட்டுப் பிரியாதிருக்கவும் நான் இழப்பது என்னோ?" என்ற கருத்தை அடக்கிப் **"பூவார் திருமாமகள் புல்கிய மார்பா"**[13] என்று விளிக்கின்றார். நம்மாழ்வார், "அகலகில்லேன் இறையும்" என்று அலர்மேல் மங்கை உறை மார்பா"[14] என்று பேசினது இத்துடன் ஒத்திருப்பதைக் கண்டு மகிழ்க.

12. ஒப்பிலியப்பன் கோயிலையும், திருவண்பரிசாரத்தையும் தென்திருப்பதி என்று வழங்கும் மரபும் உண்டு

13. பெரி. திரு. 4.7:9 14. திருவாய் 6–10:10

இக்கூறியவாறு சிந்தித்த வண்ணம் நாம் திருக்கோயிலை வந்தடைகின்றோம். எம்பெருமானின் திருநாமங்கள் **கண்ணன், நாராயணன்;** தாயார், **பூவார் திருமகள் நாச்சியார்.** கிழக்கே திருமுக மண்டபம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான் எம்பெருமான். திருவேங்கடமுடையானைச் சேவிப்பது போன்ற அநுபவம் நமக்கு ஏற்படுகின்றது. திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் (4-7) சந்நிதியில் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாடலும் நினைவிற்கு வருகின்றது.

**நான்அடிமை செய்யவிடாய் நான்ஆனேன் எம்பெருமான்**
**தான்அடிமை கொள்ளவிடாய் தான்ஆனான்—ஆனதற்பின்**
**வெள்ளக் குளத்தே விடாய்இருவ ரும்தணிந்தோம்**
**உள்ளக் குளத்தேனை ஒத்து.**[15]

(அடிமை . தொண்டு; விடாய் – பேராவல்)

என்பது பாடல். "எம்பெருமானுக்குத் திருத்தொண்டு செய்தாலன்றித் தரித்திருக்கவெண்ணாத நிலை எனக்கு உண்டாயிற்று; உடையவன் பயிர்த் தலையில் குடிசை கட்டிக் கொண்டு நிற்பதுபோல எம்பெருமானும் திவ்வியதேசங்கள் தோறும் எழுந்தருளியிருப்பது எப்போது சேதந லாபம் தனக்கு நேருமோ என்று பேராவல் கொண்டு எதிர்பார்த்து நிற்க, நான் அங்குச் சென்று அப்பிரானை அடிமை செய்யவே; அப்பிரானும் உவந்து என்னை ஆட்கொள, அதனால் இருவரும் விடாய் தீரப் பெற்றோம்" என்கின்றார். **'திருவெள்ளக்குளம்'** என்ற அந்தத் திவ்விய தலத்தின் திருநாமத்திற்கேற்ப, **'விடாய் தணிந்தோம்'** என்று சமக்காரம் தோன்றக் கூறியது சிந்தித்து அநுபவிக்கத்தக்கது. மனநிறைவு பெற்ற நிலையில் நாம் **வண்புருடோத்தமத்தை** நோக்கிப் பயணமாகின்றோம்.

15. நூற். திரு. அந். 39

# 9. நாங்கூர் புருடோத்தமன்

"**(ஸ்ரீ) என்று** பெரிய பிராட்டியார்க்குத் திருநாமம்"[1] என்பது முமுட்சுப்படி. துவயமந்திரத்திலுள்ள **ஸ்ரீ** என்பது பெரிய பிராட்டியாரைக் குறிக்கும் திருநாமம் ஆகும். ஸ்ரீ என்பதற்கு செல்வம், அழகு என்னும் பல பொருள்கள் உண்டு. இவற்றுள் **பெரிய பிராட்டியார்** என்னும் பொருளே இங்குக் கொள்ளத்தக்கதாகும். இப்பெரிய பிராட்டியாருக்கு **இலக்குமி, பத்மா, கமலா, அரிப்பிரியா ஸ்ரீ** என்னும் பல திருநாமங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் ஸ்ரீ என்னும் திருநாமம் மற்றவற்றைப் போன்றதன்று; மிக முக்கியமானதெனக் கொள்க. ஈசுவரனுக்கு எங்ஙனம் **அ** என்னும் ஒலி சிறந்த திருநாமமோ, அங்ஙனமே பெரிய பிராட்டியாருக்கும் **ஸ்ரீ** என்னும் இத்திருநாமம் சிறந்ததாகும். எவ்வாறு அ என்னும் பதம் ஈசுவரனுடைய இரட்சகத்திற்கு இன்றியமையாத இயல்புகளைத் தெரிவிக்கின்றதோ, அவ்வாறே ஸ்ரீ என்னும் இப்பதமும் பிராட்டியாரின் புருஷகாரத்திற்கு இன்றியமையாத இயல்புகளைத் தெரிவிக்கின்றது. புருஷகாரம் என்பது சேர்ப்பித்தல். அதாவது சேதநனை ஈசுவரனோடு சேர்ப்பித்தலாகும்.

**ஸ்ரீ** என்ற சொல்லுக்கு **ஆறு** பொருள்கள் கூறப் பெறுகின்றன. ஈசுவரனுடைய சுவாதந்திரியத்தை மாற்றுதல் சேதநனுடைய தீம்மனத்தை மாற்றுதல் என்ற இரண்டு நரு என்ற தாதுவிலே (வேர்ச் சொல்லில்) பிறந்த **ஸ்ரீ** ஒலியின் பொருள் ஈசுவரனுக்குக் **'கிருபை'** முதலான குணங்களைத் தோற்றுவித்தல், சேதநனுக்கு **'ருசி'** முதலியவற்றைத் தோற்றுவித்தல் என்னும் இரண்டு பொருள்களும் ஸ்ரு என்ற தாதுவினின்றும் பிறந்த **ஸ்ரீ** சப்தத்தின் பொருளாகும்.

மேலும் **இரண்டு** பொருள்களைக் காண்போம். ஒன்று, **'அழித்தல்;'** அதாவது போக்குதல் என்பது. மற்றொன்று

1. முமுட்சுப்படி – 123

**'விரிவுபடுத்தல்'** என்பது. **நாசம்** என்ற பொருளைத் தருகின்ற 'ஸ்ரு' என்ற தாதுவினின்றும் பிறந்த **ஸ்ரீ** என்ற சொல்லுக்கு **'நாசப்படுத்துதல்'** அதாவது போக்குதல் என்பது பொருள். **'விஸ்தாரம்'** என்ற பொருளைத் தருகின்ற ஸ்ரு என்ற தாதுவினின்றும் பிறந்த **ஸ்ரீ** என்ற சொல்லுக்கு **'விஸ்தரிக்கின்றாள்'** என்பது பொருள். **'ஸ்ருணாதி'** நாசப்படுத்துகின்றாள் - அதாவது ஈசுவரனுடைய **'கிருபை'** முதலான குணங்களையும் சேதநனுடைய **தீமனத்தையும்** போக்குகின்றாள். அதாவது ஈசுவரனுடைய **'கிருபை'** முதலான குணங்களையும், சேதநனுடைய 'ருசி' முதலானவற்றையும் **'விரிவுபடுத்துகின்றாள்'** என்றபடி.

இன்னும் **எஞ்சியுள்ள இரண்டு** பொருள்களையும் காண்போம். **'கேட்டல்'** என்ற பொருளைத் தருகின்ற **'ஸ்ரு'** என்ற தாதுவினின்றும் பிறக்கும் **ஸ்ரீ** என்ற சொல்லுக்குக் 'கேட்கின்றாள்' என்பதும் **'கேட்பிக்கின்றாள்'** என்பதும் பொருள், இவ்விருவகைப் பொருள்களுள் 'கேட்பிக்கின்றாள்' என்ற பொருளே இவ்விடத்திற்கு வேண்டுவது. **'ஸ்ருணோதி'** - கேட்கின்றாள், **'ஸ்ராவயதி'** - கேட்பிக்கின்றாள். **ஸ்ரீயாகிய** எம்பெருமாட்டி எம்பெருமானையும் சேதநனையும் தன் உபதேசத்தாலே திருத்துவாள்.

> **உபதேசத்தாலே இருவருடையவும் கர்மபார**
> **தந்திரியம் குலையும்.**[2]

(பாரத தந்திரியம் – பரனுக்கு வசப்பட்டிருத்தல்)

என்பது ஸ்ரீவசன பூஷண வாக்கியம். சேதநனுடைய கர்ம பாரதந்திரியம் வேறு; ஈசுவரனுடைய கர்ம பாரதந்திரியம் வேறு. தாயாம் தன்மையால் வந்த சம்பந்தத்தால் மக்களுக்கு நம்பிக்கைக்குரியவளாய் மக்களுக்கு நெஞ்சு இளகி இறைவனைப் பற்றுவதில் **'ருசி'** உண்டாகுமாறு செய்தல்; மனைவி என்ற சம்பந்தத்தாலே இறைவனால் விரும்பப்படுபவளான இவள் இறைவனுக்கு நெஞ்சு இளகி இவர்களை அங்கீகரிப்பதில் **'ருசி'** உண்டாகுமாறு செய்தல்; இதனால் நல்வினை தீவினைகளின் வசத்திலே இழுப்புண்டு பகவானிடத்திலே **'ருசி'** இல்லாதவனாகத் திரிகின்ற சேதநனுடைய கர்ம பாரதந்திரியம் குலையும்; சேதநன் செய்த பாவங்களை முக்கியமானவையாக்கி அவற்றிற்கு ஈடாகவே செய்பவன் என்று இச்சேதநனைக் காப்பாற்றுவதில் **'ருசி'** இல்லாமலிருக்கின்ற ஈசவரனுடைய கர்ம பாரதந்திரியமும் குலைந்துவிடும். சேதநன் கர்மங்கட்குப் பரதந்திரப்பட்டிருத்தல் அநாதியான பிரகிருதியின் சம்பந்தத்தின் காரியமான அறிவின்மை

2. ஸ்ரீ வசன பூஷ – 13

காரணமாக வந்ததாகும். இறைவன் கர்மங்கட்குப் பரதந்திரப் பட்டிருத்தல் வேறு ஒன்றால் தடைசெய்யப்படாத தன் சுவாதந்திரியத்தின் காரியமான தன் நினைவின் காரணத்தாலாகும். தன் உபதேசத்தாலும் திருந்தாவிடில் வேறு வகையாகவும் திருத்த முயல்வாள் எம்பெருமாட்டி. இதனை,

> **உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை**
> **அருளாலே திருத்தும்; ஈசுவரனை அழகலே**
> **திருத்தும்.**[3]

என்று விளக்குவர் **பிள்ளை உலக ஆசிரியர்.**

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் **திருவண்புருடோத்தமம்** என்ற திவ்விய தேசத்தை நோக்கி வருகின்றோம். இத்திருத்தலம் அண்ணன் கோயிலிலிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும், சீகாழி இருப்பூர்தி நிலையத்தினின்றும், தென் கிழக்குத் திசையில் சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. வண்டியில் வந்து கொண்டிருக்கும் போதே ஊர்ச் சூழ்நிலை நம் கண்வட்டத்தில் படுகின்றது. **திருமங்கையாழ்வார்** தம் பாசுரங்களில் குறிப்பிட்டிருக்கும் சூழ்நிலையையும் சிந்திக்கின்றோம். பெரும்பாலும் பாசுரங்களின் முன்னிரண்டடிகளில் எம்பெருமான் பற்றிய செய்திகளும், பின்னிரண்டடிகளில் நாங்கூரின் நீர்வளம், நிலவளம், சோலைவாய்ப்பு இவை பற்றிய செய்திகளும் அடங்கியுள்ளன.

**திருநாங்கூர் சோலைகளால் சூழப்பெற்ற** இடம். பலா மரங்களின் வரிசைகளும், செண்பக மரங்களின் கூட்டமும் நிறைந்துள்ளன இச்சோலைகளில்; குருக்கத்திச் செடிகளும், மாமரங்களும் வாழை மரங்களும் செறிந்துள்ளன (1). சோலைகளில் கூத்தும் பாட்டும் நடைபெற்ற வண்ணம் உள்ளது. மேக முழக்கம் கேட்கப்படுங்கால் மயில்கள் தம் தோகைகளை விரித்துக் கூத்தாடுகின்றன; மயில்களின் நடனத்திற்கேற்ப வண்டுகள் இசையொலியை எழுப்புகின்றன (3). பல இடங்களில் கருப்பஞ் சோலைகள் காணப்பெறுகின்றன; எம்மருங்கும் கழனிகளில் செந்நெற் பயிர்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. நடைபாதைகளின் அருகிலுள்ள பொய்கைகள் சோலைகள் சூழ்ந்து காணப்பெறுகின்றன (4). திருநாங்கூருக்கும் ஊரைச் சூழ்ந்துள்ள வயலுக்கும் வேறுபாடு காணமுடியாத நிலை. வயலில் வளர்ந்துள்ள கோங்குமரங்களின் அரும்புகளை நோக்கின் அவை அவ்வூர்ப் பெண்களின்

3. ஸ்ரீவசன பூஷ - 14

கொங்கைகள் போல் தோற்றம் அளிக்கின்றன; அங்கு மலர்ந்திருக்கும் அரக்காம்பல் மலர்களை நோக்கின், அவை அவ்வூர் மகளிரின் செவ்விதழ்களை நினைவூட்டுகின்றன; செவ்வி பெற மலர்ந்த செந்தாமரைப் பூக்களை நோக்கின், அவை அவ்வூர் மங்கையரின் முகங்களாகத் தோற்றம் அளிக்கின்றன (6). பாக்குச் சோலைகளின் நடுவே தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன; அவற்றினின்றும் முதிர்ந்த பெருத்த காய்கள் இற்றுக் குளங்களில் விழுகின்றன; இவற்றின் பேரொலியைக் கேட்ட மீன்கள் தங்களை இரையாகக் கொள்வதற்கு ஏதோ ஒன்று நீரில் குதித்துவிட்டது என்று வேறிடம் தேடித் துள்ளித் தாவுகின்றன. எம்பெருமானிடத்தில் காரணமின்றிப் பயந்து கலங்கும் பரிவுடையவர்களின் நிலைக்கு இது போலியாகும் என்று பணிப்பர் பெரியோர் (8). பெண் குரங்கு உட்கார்ந்த நிலையில் வாழைக் கனிகளை நுகர்ந்து தனது குட்டியை அணைத்துக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றுபோய் மாமரக் கிளைகளில் தங்கியிருக்கின்றது (9).

இனி, **திருநாங்கூரின் வளத்தைப்** பற்றி என்ன கூறுகின்றார் என்பதைக் கவனிப்போம். **தில்லை மூவாயிரம் நாங்கை நாலாயிரம்** என்ற வழக்கு உண்டல்லவா? தில்லையில் மூவாயிர தீட்சிதர்கள் இன்று இராவிடினும் தீட்சிதர்கள் கூட்டம் இருக்கின்றது. நாங்கையில் நாலாயிரம் வைணவர்கள் இருந்திருக்கவேண்டும். ஆனால், இன்று அத்திபூத்த மாதிரி ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்கள் உள்ளன. அவர்களும் வறுமையால் வாடி மிகவும் மெலிந்துள்ளனர். **திருமங்கையாழ்வார்,**

> **நல்ல வந்தழல் மூன்றுநூல்**
> **வேதம்ஐவேள் வியோடு ஆறங்கம்**
> **வல்ல அந்தணர் மல்கிய**
> **நாங்கூர்**[4]

(குழல் – நெருப்பு; மூன்று . மூன்று அக்நி; வேள்வி – யாகம்; வல்ல – பயின்ற; மல்கிய – நிறைந்திருக்கப் பெற்ற)

என்று நாங்கையில் வாழ்ந்த (நாலாயிரம்) வைணவர்களைக் குறிப்பிடுவர். இங்கு வாழ்ந்த அந்தணர்கள் **மூன்று** அக்னிகளை வளர்த்தவர்கள்; **நான்கு** வேதங்களைக் கரைத்துக் குடித்தவர்கள்; **ஐந்து** வேள்விகளைச் செய்கின்றவர்கள்; வேதத்தின் அங்கங்கள் **ஆறையும்** தெளிவாக அறிந்தவர்கள். இத்தகையோர் இங்கு அதிகமாக வாழ்ந்திருந்தனர். இங்குள்ள மாடமாளிகைகள் விண்ணைத் தழுவியிருந்தன (கற்பனையில் கூறுவது; இந்த மாளிகையில் கட்டியிருந்த கொடிகள் விண்ணைத் தழுவி

4. பெரி. திரு. 4.2:2

சூரியனுடைய கிரணங்களை மறைத்து நிழல் செய்கின்றன (5). இளமகளிர் நடனமாடுங்கால் அவர்கள் கால்களில் அணிந்திருக்கும் தண்டைச் சிலம்பின் ஒலியும், வேறு சிலர் பந்தடிக்குங்கால் அவர்கள் கைகளில் அணிந்திருக்கும் வளைகளின் ஓசையும் எம்மருங்கும் கேட்கப்பெறும் (7).

அடுத்து, இங்கு **எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றிப்** பேசுகின்றார் ஆழ்வார். இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பெருவள்ளல்; இவனது திருநாமம் **புருடோத்தமன்** என்பது. வள்ளண்மை மிக்க எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதலால் இத்திருத்தலமும் **'வண்புருடோத்தமம்'** என்ற திருநாமம் பெற்றது. இந்த எம்பெருமானே பெரிய கடலில் சேதுகட்டி இலங்கையை அடைந்து அந்நகரின் தலைவனான இராவணன் தலைகளை அறுத்துத் தள்ளினவன்; அவன் தம்பி வீடணனுக்கும் முடி சூட்டியவன் (1). யமுனை நதிக்கரையில்,

**பல்ல வந்திகழ் பூங்கடம்**
**பேறிஅக் காளியன்பண அரங்கில்**
**ஒல்லை வந்துறப் பாய்ந்தரு**
**நடஞ்செய்த உம்பர்கோனே (2)**

(பல்லவம் – தளிர்கள்; பூகடம்பு – பூத்த கடம்பு; பணம் – படம்; ஒல்லை – விரைவாக; உம்பர்கோன் – தேவாதி தேவன்)

ஈண்டு எழுந்தருளியிருப்பவன். கண்ணன் ஏறிய கடப்பமரம் காளியனின் நஞ்சாகிய நெருப்பினால் கொளுத்தப்பெற்று இலை, பூ, காய், கனி முதலியவை ஒன்றுமின்றி மொட்டை மரமாக இருந்தாலும், கண்ணபிரான் அதன்மீது ஏறுங்கால் அவன் திருவடி பட்டமாத்திரத்தில் **'பல்லவம் திகழ பூங்கடப்பாக'** மாறிற்று என்பது ஆழ்வார் திருவுள்ளம் என்பதையும் சிந்திக்கின்றோம். தேவேந்திரனுக்குப் பலியிடவேண்டுமென்று இடையர்கள் சமைத்த சோற்றை முழுவதும் திருவமுது செய்தவன்; கோவர்த்தன மலையைக் குடையாகக் கவித்து ஆநிரைகளைக் கல்மாரியினின்றும் காத்தவன் (3). குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளைப் பறித்து அந்த யானையினையும் அதன் பாகனையும் கொன்றழித்தவன்; அரண்மனையினுள் புகுந்து **சாணூரன் முஷ்டிகன்** என்ற மல்லர்களை ஒருசேர முடித்தவன்; அதன் பிறகு **கம்சனை** அரியணையின் மீதிருந்து தள்ளி அவனையும் உதைத்துத் தள்ளி உயிர் குடித்தவன் (4). சக்கரத்தில் ஆவேசித்துத் தன்னைக் கொல்லக் காத்திருந்த **சகடாசுரனை** அச்சுக்கரத்தை உந்தித் தள்ளி அவனை வானுலகிற்கு அனுப்பிய கோமான்; **பாணாசுரனுக்குத்** துணையாக

வந்த **உருத்திரனை** அவன் சேனைகளோடும் சுற்றத்தாரோடும் தோற்றோடச் செய்து வாணனின் ஆயிரந்தோள்களையும் துணித்தொழித்த பெருமான் (5). **மாவலியிடம்** மூவடி மண் நீரேற்றுப் பெற்று திருக்கையில் நீர் விழுந்தவுடன் **ஓங்கி உலகளந்த** உத்தமன்; இவன் திருவடி நான்முகன் உலகளவும் செல்லும்போது நான்முகன் அத்திருவடியை மலர்களிட்டு வணங்கித் துதிக்கவும், அத்திருவடியினின்றும் கங்கை நதி பெருகும்படியாகவும் செய்த வித்தகன் (6). அச்சம் என்பதை ஒருநாளும் கனவிலும் கண்டறியாத பெருமிடுக்கனான **இரணியனின்** நெஞ்சு உறையும்படியாக அவனது மார்பை இருபிளவாகப் பிளந்து குருதி வெள்ளத்தைப் பெருக்கின நரசிம்மனும் இவனே; கம்சனது ஏவலினால் குதிரை வடிவங்கொண்டு தன்னைக் கொல்லும் பொருட்டு வந்த **கேசி** என்னும் அசுரனைக் கொன்றொழித்தவனும் இந்த எம்பெருமானே (7). சிவனது சாபந் தீரப் பிட்சையளித்த பெருமான்; நம்முடைய பாவங்களையும் தொலைக்க வேண்டியே ஈண்டு எழுந்தருளியிருப்பவன் (8). இந்துவார் சடை ஈசனைப் பயந்தவன் நான்முகன்; அந்த நான்முகனையே தனது திருநாபிக் கமலத்தில் உண்டாக்கின பெருமான் (9). இங்ஙனம் கிருஷ்ணாவதாரச் சேஷ்டிதங்களையும், இராமாவதார தீரச்செயல்களையும், நரசிம்மாவதாரப் பெருமையினையும், வாமன - திரிவிக்கிரமாவதார மகிமையினையும் ஒருசேர அநுபவிக்கும் ஆழ்வார் வைணவ சமயத்தின் **கடவுள் தத்துவத்தையே** விளக்கிவிடுகின்றார். எல்லா நிலை எம்பெருமான்களும் **அர்ச்சை நிலையில் புருடோத்தமனாக** எழுந்தருளியிருப்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

ஆழ்வார் அநுபவித்த நிலையை நாமும் அநுபவித்த நிலையில் திருக்கோயிலில் நுழைகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **புருடோத்தமனை** வணங்கி வழிபடுகின்றோம். தாயாரின் திருநாமம் **புருடோத்தம நாயகி.** இந்தத் தாயாருக்கு ஏனோ தனிப் பெயர் இல்லை. Mrs and Mr. Purushothaman என்று திருமண அழைப்பிதழ்களில் போடும் மரபையொட்டித் தம் பெயரை மறைத்துக்கொண்டனர் போலும். இங்குள்ள உற்சவர் பேரெழில் மிக்க பெருமான். எம்பெருமான் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வருகின்றது.

**சாய்ந்த திருவரங்கம் தண்வேங் கடம்குடந்தை**
**ஏய்ந்த திருமா லிருஞ்சோலை—பூந்துவரை**
**வண்புரு டோத்தமாம் வானவர்க்கும் வானவனாம்**
**ஒண்புரு டோத்தமன்தன் ஊர்**[5]

(சாய்ந்த . பள்ளி கொண்டிருக்கின்ற; தண் – குளிர்ந்த; ஏய்ந்த (திருவுள்ளத்துக்குப்) பொருந்திய; பூ – அழகிய; துவரை – துவாரகை)

என்பது பாசுரம். வானவர்க்கும் வானவனாகிய அழகிய புருடோத்தமன் என்னும் திருமாலின் திருப்பதி **திருவரங்கம், திருவேங்கடம், திருக்குடந்தை, திருமாலிருஞ்சோலை, துவாரகை, திருவண்புருடோத்தமம்** என்பவைகளாகும் என்கின்றார் அய்யங்கார். ஈண்டு அர்ச்சை எம்பெருமான்களின் திருத்தலங் களை எடுத்துக்காட்டி தேவாதி தேவனான பரத்துவ எம்பெருமானே இத்திருத்தலங்களில் அர்ச்சாவதார எம்பெருமான் களாக எழுந்தருளியிருக்கின்றான் என்பதைப் பெற வைக்கின்றார். புருடோத்தமன் - பக்தர்களும் முக்தர்களும் நித்தியர்களுமாகிய புருடர்கள் யாவரினும் சிறந்தவன் என்று பொருள்படும் சொல்லாகும். மனநிறைவு பெற்ற நிலையில் **வைகுந்த விண்ணகரம்** என்ற திருத்தலத்தைச் சேவிப்பதற்காகப் புறப்படுகின்றோம். இத்தலத்தில் கைங்கரியம் செய்யும் அர்ச்சகரே வைகுந்த விண்ணகரத்திலும் கைங்கரியம் புரிபவராதலால் அவரே நம்மை அத்தலத்திற்கு இட்டுச் செல்கின்றார்.

5. நூற். திரு. அந். 34

# 10. நாங்கூர் வைகுந்த நாதன்

**வைகுந்த** விண்ணகரத்திற்கு வந்ததும் வைகுந்தமாகிய பரமபதத்தின் நினைவு வருகின்றது. வைகுந்தத்தில் இருப்பது போன்ற எண்ணங்கள் நம்மனத்தில் அலையிடுகின்றன. வைகுந்தத்தில் சீவான்மா பெறும் ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாக இருக்கும் பான்மையது. இங்குத் திவ்விய கற்பகச் சோலைகள், நானாவித மலர்கள் நிறைந்த திவ்விய பூங்காக்கள், திவ்விய இளமரக்காக்கள், திவ்விய செய்குன்றங்கள், நீராடும் திவ்விய தடாகங்கள் முதலியவை நிறைந்திருக்கும். இங்கு மிகவும் இடம் அகன்ற நிரதிசய ஆனந்த மயமான திருமாமணி மண்டபம் ஒன்றுண்டு. உபய விபூதியிலுள்ளவர்களும் ஒரு மூலையில் அடங்கும்படியான விசாலமானது. இங்குள்ள பொருள்கள் யாவும் சுத்த சத்துவத்தாலானவை. இங்குக் காலம் நடையாடாது; காலை, மாலை, பகல், இரவு, இன்று, நேற்று என்ற நிலைகள் இங்கு இல்லை. முன், பின் என்ற நிலை இங்கு உண்டு. வீடுபேறு அடைவதற்கேற்ற உபாயங்களைக் கையாண்டு அவன் திருவருளைப் பெற்ற முமுட்சுகள்தாம் இந்த நீள் விசும்பினை அடைதல் முடியும். இவர்கள் இப்பூவுலகிற்குத் திரும்பி வருதல் இல்லை. பிரளய காலத்தில் இவர்கட்கு அழிவு இல்லை. இறைவனின் திருவுள்ளப்படி எந்த உருவத்தையும் இவர்கள் மேற்கொள்வர்.

பரமபதநாதன் வீற்றிருக்கும் இடம் இத்திருமாமணி மண்டபமாகும். இவன் வீற்றிருக்கும் சீரிய சிங்காதனம் அற்புதமான கோப்புடையது. பன்னிரண்டு இதழ்களையுடைய நானா சக்தி மயமான திவ்விய பொற்றாமரைப் பூவின் மீது விசித்திரமான கட்டிலைக் கொண்டது. இந்தக் கட்டிலின்மீது பல்லாயிரம் சந்திரர்களை உருக்கி வார்த்தாற் போல குளிர்ந்த தன்மையை உடைத்தான திருமேனியையுடையனாய் கல்யாண குணங்கட்கு

அந்தமில்லாமையினால் அநந்தன் என்ற திருநாமமுடையவனாய், எல்லாவித அடிமைத் தொழில் புரிபவர்கட்கெல்லாம் உபமான நிலமாயிருத்தலால் சேஷன் என்னும் திருநாமமுடையவனாகிய திருஅனந்தாழ்வானாகிய படுக்கையில் வெள்ளிமலையின் உச்சியில் பல்லாயிரம் பகலவர்கள் உதித்தாற் போல் இருக்கும் ஆயிரம் பணாமுடி மண்டலமாகிய சோதி மண்டலத்தின் நடுவில் வீற்றிருப்பவன். அருள்தேவியான பெரிய பிராட்டியார் வலப்பக்கத்திலும், பொறை தேவியான பூமிப் பிராட்டியாரும் ஆனந்த தேவியான நீளாப் பிராட்டியாரும் இடப்பக்கத்திலும் இருப்பர். இவனை அனந்தன், கருடன், விஷ்வச் சேனர் முதலான நித்திய சூரிகளும், இவ்வுலகத் தளைகளினின்றும் விடுபட்ட முக்தரும் அநுபவித்தற்கு உரியனாய் இருப்பன். நாம் இந்தக் குழுவில் ஒருவனாய் இருப்பது போன்ற ஒருவித பிரமையை அடைகின்றோம்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் **வைகுந்த விண்ணகரம்** என்ற திவ்விய தேசத்திற்கு வருகின்றோம். இத்திருத்தலமும் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. எம்பெருமான் வைகுந்தத்தில் எழுந்தருளியிருப்பது போலவே இத்திருத்தலத்திலும் **வீற்றிருந்த திருக்கோலமாகச்** சேவை சாதித்தலால் இத்திருத்தலம் **வைகுந்த விண்ணகரம்** என்று திருநாமம் பெற்றதென்று அறிகின்றோம். எம்பெருமான் திருநாட்டில் எழுந்தருளியிருப்பதை,

**வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல்**
**செல்ல வீவில்சீர்**
**ஆற்றல்மிக் காளும் அம்மானை**

(ஏழ்உலகு . ஏழுவுலகங்களில்; தனிக்கோல் – செங்கோல்; செல்ல – நடக்கும்படி; வீவுஇல் – முடிவில்லாத; சீர் – கல்யாண குணங்கள்; ஆற்றல் – ஆறுதல், அதாவது, சாந்தி.)

என்று காட்டுவார் **நம்மாழ்வார்.** திருவனந்தாழ்வான் மீது பெரிய பிராட்டியோடு வீற்றிருந்து உலகமெல்லாம் செங்கோல் செலுத்துகின்றான்; அங்ஙனம் செங்கோல் செலுத்துவதற்கு ஞானம், சக்தி முதலிய திருக்குணங்கள் நிரம்பப் பெற்றவனாகத் திகழ்கின்றான்; தன்னுடைய தலைமையினால் கொடுங்கோன்மை காட்டாமல் சாந்தியோடு இருந்து ஆள்கின்றான். பரமபதத்தில் எம்பெருமானின் இருப்பை,

1. திருவாய் 4.5:1

**பொங்கோதம் சூழ்ந்த**
**புவனியும் விண்ணுலகும்**
**அங்காதும் சோராமே**
**ஆள்கின்ற எம்பெருமான்.**[2]

(பொங்கு – அலை எறியும்; ஓதம் – கடல்; புவனி . பூ மண்டலம்; விண்உலகு – பரமபதம்; ஆதும் – சிறிதும்; சோராமே – குறைவு படாமல்; ஆள்கின்ற – ஆட்சி புரியும்)

என்று காட்டுவர் பெரியாழ்வார் பெண்கொடி. கடல் சூழ்ந்த மண்ணுலகும் விண்ணுலகும் ஆகிய இரண்டு விபூதிகளையும் சிறிதும் குறைவின்றி ஆண்டு வருகின்றான் என்கின்றார் அன்னையார். வைகுந்தநாதனின் இருப்பு வேறோர் இடத்திலும் காட்டப்பெற்றுள்ளது;[3] ஆண்டு கண்டு கொள்க. இவன் தெற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை சாதிப்பதாகக் கொள்வது ஐதிகம்.

இத்திருத்தலத்து எம்பெருமானைத் **திருமங்கையாழ்வார்** மட்டிலும் ஒரே ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்துள்ளார். இந்தப் பாசுரங்களில் ஆழங்கால்படுகின்றோம். முதலில் ஆழ்வார் காட்டும் தலத்துச் சூழ்நிலையில் நம் கண்வட்டம் செல்லுகின்றது. பெரும்பாலும் பாசுரங்களின் பிற்பகுதியில் தல வருணனை அமைகின்றது. எம்பெருமான் திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருப்பதற்குப் பாங்கான தலம் என்பதை மூதலிக்கின்றார் ஆழ்வார்.

**சலங்கொண்டு மலர்சொறியும் மல்லிகையொண்செருந்தி**
**சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலி னூடே**
**வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்**
**வைகுந்த விண்ணகரம்.**

(சலம்கொண்ட – நீரைப் பருகி; ஒண் – அழகிய; செருந்தி – சுரபுன்னை; வண் – அழகிய; கயல் – மீன்)

என்கின்றார். மல்லிகை, சுரபுன்னை, சண்பகம் முதலியவை எங்கும் அடர்ந்திருப்பதனால் அவற்றின் நறுமணம் நிறைந்துள்ளது. நீரை விட்டுப் பிரிந்தால் ஒரு நொடிப்பொழுதும் வாழமாட்டாத மீன்களும் நீர் உறுத்துவதாகக் கொண்டு அதைவிட்டு நீங்கி அதனைவிட நிலம் மிதிதானே நன்றாயிருக்கின்ற சோலையிலே வந்து சேர்ந்து அச்சோலையின் நறுமணத்தை முகர்ந்துகொண்டு துள்ளி விளையாடுகின்றனவாம். பார்த்தவிடமெங்கும் பெரிய செந்நெற்பயிர்களும், இளந்தென்னை மரங்களும், வெற்றிலைக்

2. நாச். திரு. 11.3 3. வடநாட்டுத் திருப்பதிகள் – வைகுண்ட நாதன் பக். 161
4. பெரி. திரு. 3.9:1

கொடிகளும், அழகிய குலைகளையுடைய பாக்கு மரங்களும் ஒன்றுக்கொன்று மீறிக்கொண்டு செழித்து வளர்ந்துள்ளன; வண்டுகள் பலவிதமான இன்னோசைகள் எழுப்ப, அவற்றிற்கேற்ப மயில்கள் நடனம் ஆடுகின்றன (3).

திருத்தலத்தைச் சுற்றியுள்ள கழனிகளில் செந்நெல்களும், தாமரைப் பூக்களும், மீன் வகைகளும், செங்கழுநீர் மலர்களும் சேர்ந்துகொண்டு கழனிகள் உள்ள இடமெங்கும் திகழ்கின்றன. வெளியில் நோக்கினால் வயல்களின் வளம் சொல்லுக்கு எட்டாதது; உள்ளே நோக்கினால் வைதிகர்களின் செழிப்பு சொல்லுந்தரமன்று. (5). இளங்கமுக மரங்களும், குலைகள் நிறைந்த தென்னை மரங்களும், வெற்றிலைக் கொடிகளும், செந்நெற் பயிர்களும், கரும்புகளும் எம்மருங்கும் செழித்தோங்கி வளர்ந்துள்ளன (7). தாமரை மலர்களினின்றும் செங்கழுநீர் மலர்களினின்றும் தேன் வெள்ளமிட்டுப் பாய்கின்றது; வயலிலுள்ள உழவர்கள் 'இப்பெரு வெள்ளத்தினால் பயிர்கள் அழிந்திடும்' என்றஞ்சி மடைகளை அடைக்கின்றார்களாம். **பெரியவாச்சான் பிள்ளையும்** "அங்கே உடைந்ததுகிடாய்;" இங்கே உடைந்தது கிடாய்; ஸஹ்யப் பெருக்கு கிடாய் என்று கூப்பிடுகின்ற ஆரவாரமாய்க் கிடக்குமாயிற்று" என்றருளிச் செய்துள்ள அழகையும் கண்டு மகிழ்க (8). கயல் 'வாளை' சேல் என்னும் மீன் வகைகள் செந்நெற் பயிர்களிடையே அழகிய பொய்கைகள் போல் ஒவ்வொரு வீதியிலும் நிறைந்து காணப்பெறுகின்றன (9).

இந்தத் திருத்தலத்திற்கருகிலுள்ள கடலில் கப்பல்கள் நிறைந்துள்ளன (10). குற்றமற்ற வைதிகர்கள் நிறைந்திருக்கப் பெற்றது நாங்கூர். **"நாங்கூர் நாலாயிரம்"** என்ற வாக்குப்படி அமைந்துள்ளது. இதனால் வேத ஒலிகளும் இசையொலிகளும் எங்கும் கேட்கப் பெறுகின்றன (2). நாங்கூரின் மாடமாளிகைகளின் உச்சியில் பாதுகாப்புக் குறுப்பாக நாட்டப் பெற்றுள்ள சூலங்கள் மேக மண்டலத்தளவும் ஓங்கியிருப்பதனால் அவை மேகங்களின் வயிறுகளைக் குத்திப் பிளக்க அவற்றினின்றும் முத்துகள் சிதறி விழுந்து மாளிகைகளிலெங்கும் மலிந்து கிடக்கின்றனவாம் (4). வேதவேதாங்கங்களைக் கற்றுத் துறைபோகிய வித்தக மறையோர் பொறுமை முதலிய நற்குணங்களைக் கொண்டவராய், வாரி வழங்கும் வள்ளண்மையுடையோராய்த் திகழ்கின்றனர் (6). இங்ஙனம் நாங்கூரின் வளம் பேசப்பெறுகின்றது பாசுரங்களில்.

அடுத்து, இங்குக் **கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் பெருமை** பேசப்பெறுகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் தீமனத்தையுடைய இரணியனின் மார்பைப் பிளந்த நரசிம்மன்; தடங்கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதளித்த காளை; முகில்வண்ணன் (*1.2*). உலகமெல்லாம் பிரளயப் பெருங்கடலில் மூழ்கி அழிந்து போகாமல் அவை யாவற்றையும் தன் திருவயிற்றில் அடக்கிக் காத்தருளியவன்; உருத்திரனுக்குப் பிச்சையிட்டு அவன் சாபத்தைத் தீர்த்தருளியவன் (*3*). கலையிலங்கு அகல் அல்குல் அரக்கர் குலக்கொடியைக் காதோடு மூக்குடன் அரிந்து அவளைக் கதறியழச் செய்த கார்நிற வண்ணன் (*4*). மின்னனைய நுண்மருங்குல் மெல்லியற்காக இலங்கை வேந்தனின் பத்துத் தலைகளையும் பனங்காய்கள் போல் சிதறி ஓடச்செய்து அவனது இருபது தோள்களும் சின்னபின்னமாம்படி செய்து இலங்கை நகரையும் பொடிபடச் செய்த சூரன் (*5*). அழகிய பெண் உருவங்கொண்டு நஞ்சு தீட்டிய முலையுடன் வந்த பூதனை பேய் வடிவத்துடன் மாயும்படியாக அவளது உயிரை உண்டவன்; இரட்டை மருத மரங்களை முறித்துத் தள்ளினவன்; **சகடா சூரனைச்** சாடியவன் (*6*). இளங்கன்று வடிவாக வந்த **வத்ஸாசுரனைத்** தூக்கி விளாமரத்தின் மீது ஆவேசித்திருந்த **கபித்தாசுரன்மேல்** எறிந்து இருவரையும் ஒருசேர ஒழித்தவன்; இடைச்சியர் வீடுகளில் உறிகளில் சேமித்து வைத்திருந்த தயிர் வெண்ணெய் நெய் பால் முதலியவற்றைத் தன் திருவுள்ளம் குளிரும்படித் திருவமுது செய்தவன் (*7*). தீட்சணியமான திருவாழியால் **நரகன்** உயிர் தொலைத்த நாயகன்; பெரிய பிராட்டியாருக்கும் சிவபிரானுக்கும் பகுதியாகக் கொடுத்த திருமேனியையுடையவன் (*8*). வானவர்களும் மாமுனிவர்களும் ஒருங்குகூடி சிறந்த மலர்களைக் கொண்டு அருச்சிக்கப்பெற்ற எம்பெருமான் (*9*). சங்கம், தண்டு, சக்கரம் முதலிய திவ்வியாயுதங்களை ஏந்திய தாமரைக் கண் நெடிய பிரான் அமர்ந்த நிலையில் காட்சி தருபவன் (*10*).

நம்முடன் வந்த அர்ச்சகர் நம்மைத் திருக்கோயிலுக்குள் இட்டுச் செல்லுகின்றார். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு வீற்றிருக்கும் திருக்கோலத்துடன் சேவை சாதிக்கும் **வைகுந்த நாதனை** வணங்குகின்றோம். இவருக்குத் **தாமரைக்கண் நெடியபிரான்** என்ற மற்றொரு திருநாமமும் உண்டு. தாயாரின் திருநாமம், **வைகுந்தவல்லி** என்பது. இவரையும் வணங்கி இவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். எம்பெருமானின் சந்நிதியில் **திருமங்கையாழ்வாரின்**

**திருப்பாசுரங்களை** மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். இந்நிலையில் **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்** திருப்பாடல் நினைவிற்கு வர, அதனையும் உள்ளம் உருக ஓதுகின்றோம்.

**வணங்கேன் பிறதெய்வம் மாலடியார் அல்லாக்**
**குணங்கேடர் தங்களுடன் கூடேன்—இணங்கிநின்று**
**வைகுந்த விண்ணநகரம் வாழ்த்துவேன் ஈதன்றோ**
**வைகுந்த விண்ணகர வாழ்வு.**[4]

(பிறதெய்வம் – திருமாலல்லாத பிறதெய்வங்கள்; மால் – திருமால்; குணம் கேடர் – நற்குணமில்லாதவர்; இணங்கி – கூடி நின்று; வாழ்த்துவேன் – துதிப்பேன்)

என்பது பாடல். "வைகுந்தத்திற்குச் சென்றாலும், அங்கு உண்டாகும் நம்வாழ்வு திருமாலடியார்களுடன் - நித்தியர் முத்தர்களுடன் - கூடி எம்பெருமானைத் துதித்தலேயாகும். அதனை இப்பூவுலகத்தில் **வைகுந்த விண்ணகரத்தில்** செய்து அதனை யொத்த பேற்றினை அடைவேன்" என்கின்றார். மனநிறைவுடன் **திருச்செம்பொன்செய்** கோயிலுக்கு வருகின்றோம்.

5. நூற். திரு. அந். 31

# 11. நாங்கூர் நந்தாவிளக்கு

**திவ்வியதேச** யாத்திரையாகச் சென்ற மதுரகவிகள் அயோத்தியிலிருக்கும்போது தென்திசையில் வானத்தில் ஒரு பேரொளிப் பிழம்பு தோன்றுகின்றது. அதனை நோக்கி அவர் நடக்க அதுவும் தென்திசையிலேயே நகர்ந்து செல்கின்றது. இதனைக் கவனித்தே நடக்கும் மதுரகவிகள் தெற்கே வரவர ஒளிப்பிழம்பும் உறைப்பில் குறைந்து வரக் காண்கின்றார். இறுதியில் இவர் திருக்குருகூர் திருத்தலத்திற்கு வருங்கால் அவர் கண்ட பேரொளி ஒரு புளியமரத்தில் அடங்குகின்றது. அதன் அடியில் ஓர் அழகிய குழந்தையைக் காண்கின்றார். கண்மூடி மௌனியாகி இருக்கும் குழந்தைமுன் ஒரு சிறு கல்லைப் போடுகின்றார். உறங்காத் திருப்புளியாழ்வாரின் கீழ் உள்ளத்தால் உறங்காத அக்குழந்தை தன் திருக்கண்களைத் திறந்து மதுரகவிகளை நோக்குகின்றது. மதுரகவிகள் அக்குழந்தையை நோக்கி,

> **செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால்**
> **எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?**

என்று வினவுகின்றார். அக்குழந்தை அதற்கு,

> **அத்தைத் தின்று அங்கே கிடக்கும்**

என்று மறுமொழி பகர்கின்றது. எதிரும் புதிருமாக இருக்கும் இந்த வினாவிடை வைணவ சமயத்தின் சாரமாகத் திகழ்கின்றது.

வைணவ சமயத்தின் தத்துவம் மூன்று. அவை. **சித்து, அசித்து, ஈசுவரன்** என்பவை. **சித்து** என்பது அறிவுடைய ஆன்மா. **அசித்து** என்பது உயிரற்ற பொருள்களான பஞ்ச பூதங்கள் மற்றும் இவற்றின் சேர்க்கையால் ஏற்பட்ட சடப் பொருள்கள். **சித்து, அசித்து** என்ற இரண்டும் **ஈசுவரனது** திருமேனியாகத் திகழ்கின்றன. இதனைச் **சரீர - சரீரி பாவனை** என்று பேசும் வைணவ தத்துவம். மேற்குறிப்பிட்ட எதிரும் புதிருமாகத் தோன்றும் வினாவிடையில் இத்தத்துவம் அடங்கியிருப்பதைச் சிந்திக்கின்றோம்.

**செத்தது** என்பது **உயிரற்றது;** அஃதாவது **அசித்து** அல்லது **அசேதநம்.** நமது உடல் அசித்தாலானது. அசேதநமான இந்த உடலின் நடுவில் - அதாவது வயிற்றில் (இதயத்தில்) இருப்பது[1] ஆன்மா. இஃது **அணுஅளவாக** - அதாவது சிறியதாக - இருப்பது. இது சேஷத்துவ பாரதந்திரியங்களாகின்ற தருமங்களை உடையதாக, ஈசுவரனால் இரட்சிக்கப்பெறும் பொருளாய் அறிவே வடிவமாக இருப்பது.

**பிறந்தால்** - சிறிதாக, அணு அளவாக இருக்கும் இந்தச் சீவான்மா பஞ்ச பூதச் சேர்க்கையாலான - அசித்து சம்பந்தமான இந்த உடம்பிலே சேர்ந்துகொண்டு இந்த **மண்ணுலகிலே பிறவியைத் தொடங்கிவிட்டால்;** அஃதாவது, செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்? பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலான உடம்பில் சீவான்மா கலந்து இந்த தேக யாத்திரையைத் தொடங்குகின்றது என்பது தத்துவத்தின் உட்பொருளாகும்.

**எத்தைத் தின்று** எங்கே கிடக்கும்? - எதைத் தனக்கு உணவாகக்கொண்டு, அதாவது எதனைத் தொடர்ந்த சாதனமாகக் கொண்டு, **எதனைக் குறிக்கோள் எனக் கொண்டு** வாழும்? **சடகோபரின் மறுமொழி: அத்தைத் தின்று அங்கே கிடக்கும்** என்பது. அந்த உடலில் ஏற்படும் சுகதுக்கங்களை உணவாகக் கொண்டு அந்தச் சுகதுக்கங்களுக்குக் காரணமான உடலிலேயே உழன்று கொண்டிருக்கும்.; சுகதுக்கங்களுக்கு ஏதுவான உடலையே தஞ்சம் எனக்கொண்டு சீவான்மா பற்றிக் கொண்டிருக்கும். இஃது உல கோரின் இயல்பு என்பது மதுரகவிகளுக்குத் தெரியாதது அன்று.

ஆனால், மதுரகவிகளின் வினா இந்தச் சாதாரண இயல்பைத் தெரிந்து கொள்வதற்கு அன்று. எல்லோரும் சாதாரணமாக அறிந்த இதனைத் தெரிந்து கொள்ளவா அயோத்தியிலிருந்து திருக்குருகூருக்கு வரவேண்டும்? அவருடைய வினா இதனை அறிந்துகொள்ள விடுக்கவில்லை. "ஐம்பெரும் பூதங்களால் ஆன உடம்பில் தேவரீர் எதை உணவாகப் பற்றிக் கொண்டுள்ளீர்? மற்ற உயிர்களைப் போலத் தேவரீரும் ஏன் உடம்பின் காரணமாகச் சுகதுக்கங்களில் உழலவில்லை? இவற்றிற்குக் காரணமான உடலையே ஏன் தஞ்சம் எனப் பற்றிக் கொண்டிருக்கவில்லை? உலக வழக்கிற்கு மாறாக உண்ணாமலும் உரையாடாமலும் இந்தப் **புளியாழ்வாரின் கீழ்** கிடப்பது ஏன்? இந்த வினாக்களுக்கெல்லாம் தெளிவு ஏற்படுமாறு **சடகோபரின் விடை** அமைந்திருக்கின்றது.

1. இதயத்தில் ஈசுவரன் கட்டை விரலின் அளவில் தங்கியிருப்பதாக வைணவ தத்துவம் நுவல்கின்றது.

**சிறுமாமனிசராகிய**[2] நம்மாழ்வார் இவ்வினாக்கட்குத் தரும் மறுமொழியாகிய **அத்தைத் தின்று அங்கே கிடக்கும்** என்பதில், உடலினால் ஏற்படும் சுக - துக்கங்களையே உணவாகக்கொண்டு உடம்பையே பெரிதென எண்ணி வாழ்ந்து கொண்டிருப்பது உயிரினங்களின் தன்மையாகும் என்ற கருத்து அடங்கியுள்ளது. இது தவிர தன் நிலையும் அடங்கியுள்ளது. "என் நிலை அங்ஙனமன்று. என் உடம்பு என்னைக் கட்டுப்படுத்தாது. என் உயிர் என் உடம்பின் வசப்படாது. செத்ததின் வயிற்றில் - அசித்து சம்பந்தமான உடலுடன் - சிறியதான சீவான்மா பிறந்தால் - அதாவது எனக்குப் பிறவி ஏற்பட்டாலும் - செத்ததுடன் சேராது இச்சிறியது. ஆதலின் செத்ததின் தொடர்பால் ஏற்படும் சுக துக்கங்களை உணவாகக் கொள்ளாது. இது காரணமாக இந்த உடலையே தஞ்சம் எனவும் கொள்ளாது.

ஆயின் **சடகோபன்** என்ற ஆன்மா தின்ன வேண்டியது என்ன? கிடக்க வேண்டியது எங்கே? அதாவது, எதனைப் புருஷார்த்தம் எனக் கருதும்? எதனை உபாயமாகப் பற்றும்?

'**அத்தைத் தின்று அங்கே கிடக்கும்**' உடலுக்குப் பிராணவாயு - உயிர்க்காற்று - போன்று சீவான்மாவிற்குப் **பரமாத்தும ஞானம்** பிராணனாய் உள்ளது. இதனை மேலும் தெளிவாக்குவோம். திருமந்திரத்திலுள்ள '**ஓம்**' என்ற பிரணவத்தில் **அ, உ, ம** என்ற **மூன்று** எழுத்துகள் உள்ளன. இதில் **அகாரம்** திருமாலைக் குறிக்கும். இந்த அகாரம் '**ஆய**' என்னும் நான்காம் வேற்றுமையை (சதுர்த்தியை) இறுதியில் பெற்றுள்ள '**நாராயணாய**' (நாராயண+ஆய) என்னும் பதத்தின் சுருக்கமாகும். ஆதலின் '**நாராயணாய**' என்னும் பதத்திலுள்ள வேற்றுமை உருபு இவ்வகாரத்தில் மறைந்து கிடக்கின்றது. மறைந்து கிடக்கும் இந்த வேற்றுமை '**சேஷத்துவத்தையும்**'[3] **உகாரம்** அந்த சேஷத்துவத்தின் அநந்யார்ஹத்துவத்தையும்[4] **மகாரம்** ஞானவானாகிய சீவான்மாவையும் குறிக்கும். எனவே, மகாரம் உணர்த்தும் சீவான்மா அத்தைத் தின்று அகாரம் உணர்த்தும் திருமாலின் அனந்த கல்யாண

2. 'சிறுமாமனிசர்' என்பது நம்மாழ்வார் பிரயோகம் (திருவாய் 8.10:3). திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கின்ற சிறியாச்சான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார் போல்வார். முதலியாண்டான் எம்பார் முதலிய பெரியோர். எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதில் பரமபதத்து நித்திய சூரிகளைப் போலுதலால் இவர்களும் அன்னவரே. ஆகவே, வடிவு சிறுத்து மகிமை பெருத்தவர்களும் மனிதர் என்று பார்க்கும்போது சிறுமை தோன்றினும், பகவத் பக்தி ஞானம் அநுட்டானம் முதலிய நற்குணங்களைப் பார்க்கும்போது மேன்மை பெற்று விளங்குபவர்கள் (இது பட்டருக்கு அவருடைய திருத்தந்தையார் கூரத்தாழ்வானின் விளக்கம் – ஈடுகாண்க.)

3. சேஷத்துவம் – பிறருக்கு அடிமையாயிருத்தல்

4. அநந்யார்வரத்துவம் . மற்றவருக்கில்லாமல் ஈசுவரனுக்கே உரிததாயிருத்தல்.

குணங்களையே (Auspicious Qualities) உணவாகக் கொண்டு கொண்டு அவன் சந்நிதியிலேயே உள்ள புளியாழ்வாரின் கீழ் கிடக்கின்றது. இவ்வாறு உலகத்துச் சித்து அல்லது ஆன்மாக்களின் நிலையினையும் இதற்கு மாறான தமது ஆன்மாவின் நிலையினையும் இதற்கு மாறான தமது ஆன்மாவின் நிலையினையும் உணர்த்துகின்றார் சடகோபர்[5]. இதனால் **மாறன்** என்ற திருநாமத்தையும் பெறுகின்றார்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் மணிமாடக் கோயிலை நோக்கி வருகின்றோம். நாங்கூர் என்பது ஒரு பெரிய இடம். **"நாங்கூர் நாலாயிரம்"** என்று வழங்கி வரும் சொற்றொடர்படி நாலாயிரம் வைணவக் குடிகள் வாழ்ந்த இடமாதலால் அவரவர்கட்கு அணித்தாக இருக்குமாறு எம்பெருமான் பதினொரு இடங்களில் சந்நிதி பண்ணலாயிற்று. திருக்கோயிலை நோக்கி வரும்போதே **திருமங்கையாழ்வார்** இத்திருக்கோயில் எம்பெருமானை மங்களா சாசனம் செய்த பாசுரங்களில் ஆழங்கால் பட்ட வண்ணம் வருகின்றோம்.

முதலில் திருமங்கையாழ்வார் காட்டும் **திருத்தலச் சூழ்நிலையைச்** சிந்திக்கின்றோம். ஆழ்வார் இதனை "வண்டார் பொழில் சூழ்ந்து அழகாய நாங்கூர்"[6] என்று சிறப்பிப்பர். மேலும்,

**"எத்திசையும்**
**கந்தாரம் அம்தேன் இசைபாட மாடே**
**களிவண்டு மிழற்ற நிழல்துதைந்து**
**மந்தாரம் நின்று மணம்மல்கும் நாங்கூர்"**[7]

(கந்தாரம் – தேவ காந்தாரி இராகம்; களிவண்டு . ஒருவகைச் சாதி வண்டு; மிழற்ற . ஒலிக்க; மந்தாரம் – பாரிஜாத மரங்கள்; துதைந்து . நெருங்கி; மல்கும் – நிறைந்திருக்கும்)

என்ற பாசுரப் பகுதியில் ஓரளவு நன்கு இச்சூழ்நிலை காட்டப்பெறுகின்றது. எல்லாவிடங்களிலும் அழகிய தேன் சாதி வண்டுகள் 'தேவகாந்தாரி' இராகம் பாடுகின்றன; களிவண்டு சாதியிற் பிறந்த வண்டுகள் பக்கங்களில் ஆலாபனை பண்ணுகின்றன; பாரிஜாத மரங்கள் நெருங்கி நின்று நிழல் தருவதுடன் நறுமணத்தையும்

5. சடகோபர் – தாயின் கருவறையிலருந்து வெளிவரும் – குழந்தை முதலில் நுகர்வது தன் மூக்கினால் உலகக் காற்றை இக்காற்றுக்குச் சடம் என்பது பெயர். இக்காற்று குழந்தையின் உடலில் புகுந்ததும் உலகில் நிலவும் அஞ்ஞானததினின்றும் உடலால் ஏற்படும் சுகதுக்கங்கட்கும் காரணமாகின்றது. இந்தக் காற்று தம் மூக்கில் நுழையாத படி 'ஊம்' என்ற ஊங்காரத்தால் அதட்டி வெருட்டினதால் இவர் 'சடகோபர்' என்ற பெயர் பெற்றார் என்பர். இவரும் தம் பிரபந்தங்களெங்கும் தம்மைச் 'சடகோபர்' என்றே குறிப்பிடுவர்.

6. பெரி. திரு. 3.8:10
7. மேலது. 3.8:1

நல்குகின்றன என்று கூறுகின்றார் ஆழ்வார். **வீரசிங்கங்களால்** கொல்லப்பெற்ற **யானைகளின் கொம்புகளையும்,** அகில் மரங்களையும், அழகிய முத்துகளையும், வெளுத்த சாமரங்களையும், மலையில் விளையக்கூடிய பல்வேறு பண்டங்களையும் காவிரி நதி அலைகளால் தள்ளிக்கொண்டு வருகின்றது. திருநாங்கூரில் காவிரியாறு நேரே பெருகுவதில்லையாயினும் காவிரிக் கால்களின் பெருக்கு சுற்றுப் பகுதிகளில் உள்ளமை பற்றி 'பொன்னி... திரையுந்து நாங்கூர்' என்று கூறப்பெற்று இருப்பது ஈண்டு அறியத்தக்கது (3). மரங்களின் தளிர்கள் அசைந்தாடுவதால் அவற்றின் அருகேயுள்ள பூங்கொடிகளின் திரள் ஆடுகின்றது; குயில்கள் கூவுகின்றன; மேகங்கள் உலவும் சோலைகளில் மயில்கள் நடனமாடுகின்றன (5) வயல்களில் எருமைகளின் இருப்பை,

**.. ஓங்குபைந்தாள்**
**கண்ஆர் கரும்பின் கழைதின்று வைகி**
**கழுநீரில் மூழ்கி செழுநீர்த் தடத்து**
**மண்ஏந்து இளமேதிகள் வைகும் நாங்கூர்"**[8]

(ஓங்கு – உயர்ந்து; பைந்தாள் – பசுந் கால்கள்; கண்ஆர் – கணுக்கள் நிரம்பிய; கழை – கரும்பு; வைகி – தாமதித்து நடந்து; தடத்து . தடாகத்தில்; மண்ஏந்து – கொம்புகளில் மண்ணைத் தாங்கி; மேதி . எருமைகள்)

என்று காட்டுவார் ஆழ்வார். வயல்களில் இளைய எருமைகள் கரும்புத் தலையாடியை மேய்ந்து, அளவுமீறி தின்னதாலே, நகர்ந்து செல்லமாட்டாமல் இருந்த இடத்திலேயே இடம் வலம் கொண்டு அசைபோடுகின்றன; பிறகு மெதுவாக நடந்து சென்று செங்கழுநீர்ப் பூக்கள் நிரம்பியிருக்கப் பெற்ற அழகிய நீர் நிரம்பிய தடாகத்திலே மூழ்குகின்றன; குட்டையின் சேற்றிலே கொம்புகளைக் குத்தி மண்ணுருண்டையைப் பெயர்த்தெடுத்துத் தாங்கிக்கொண்டு கிளம்பி, பின்னர்க் கரையேறவும் முடியாதபடி அவ்விடத்திலேயே தாமதித்துக் கிடக்கின்றன. இப்பாசுரத்தைப் **பிள்ளை விழுப்பரையரும் ஆப்பானும்** கூடி அநுசந்தித்துப் பொருள் நோக்குங்கால் மூன்றாம் அடியில் 'வைகி' என்று ஒருமுறை வந்துள்ளது; நான்காம் அடியிலும் 'வைகு' என்று மீண்டும் வந்துள்ளது. இப்படித் திரும்பவும் கூறுவதற்குப் பொருளென்ன? என்று ஐயுற்றுப் **பட்டரைப்** பணிந்து கேட்க, "அவ்விடத்து எருமைகளின் சௌகுமார்யம் (இளமைத் தன்மை) விளக்கப்பட்டதாகின்றது, முரட்டெருமைகளாயிருந்தால் பதறிப் பதறி நடக்கும்; சுகுமாரமான எருமைகளாகையாலே வைகி வைகிக் கிடக்கிறபடி" என்று அருளிச் செய்தாராம். வைகுதல் - விளம்பித்தல்; தாமதமாக இருத்தல் (6). அன்னப் பறவைகள் தாமரைப் பூக்களில்

8. பெரி. திரு. 3.8:6

தம்பதிகளாக இருந்துகொண்டு விளையாடுங்கால் அம்மலர்கள் துகைக்கப் பெற்று அவற்றினின்றும் மதுவெள்ளம் பெருகிக் செங்கழுநீர் மடைகளிலும் ஓடிப் பாய்கின்றதாம். திரண்ட புண்டரீகங்களின் (தாமரைகளின்) நடுவே அன்னங்கள் துகைக்க நடுவு நிற்கின்ற செங்கழுநீரானது மது வெள்ளமிடா நிற்கும் என்ற **பெரிய வாச்சான் பிள்ளையின்** வியாக்கியானத்திற்கிணங்க வேறு வகையாகவும் பொருளுரைத்துக் கொள்ளலாம் (9).

அடுத்து, ஆழ்வார் **திருநாங்கூர் நகரச் சிறப்பு** பற்றியும் பாசுரங்களில் குறிப்பிடுகின்றார். திருநாங்கூரில் மாட மாளிகைகள் விண்ணளவும் ஓங்கியிருக்கின்றன; அவற்றில் புறாக்கள் கொடுங்கையின் மேலுள்ள, மெல்லிய பேடைகளுடன் உல்லாசமாகக் கலவி செய்து மகிழ்கின்றன (2). இவ்வூரிலுள்ள வைதிக அந்தணர்கள் **கார்ஹபத்தியம், ஆகவநீயம், தட்சிணாக்கினி** என்ற முக்தீக்களை வளர்த்து, இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களை ஓதி, பிரம்ம வேள்வி, தேவ வேள்வி, பூத வேள்வி, பித்ரு வேள்வி, மநுஷ்ய வேள்வி என்ற ஐம்பெரும் வேள்விகளை[9] அநுட்டிப்பவர்கள்; சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கல்பம் என்ற வேதாங்கங்கள் ஆறையும்[10] பயின்றவர்கள்; நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என்ற ஏழு ஸ்வரங்களையும்[11] அறிந்தவர்கள் (4). இங்குள்ள வைதிக அந்தணர்கள் அல்லும் பகலும் மறையோதிக் கொண்டே இருப்பர். அவர்கள் வீட்டு மகளிரும் விடாமல் காதில் பட்ட உறைப்பின் மிகுதியால் மறை வாக்கியங்களை விடாமல் சொல்லுகின்றனர்; அவர்கள் வீட்டு மகளிரின் வாயிலும் வேதவொலி மலியப்பெற்றது இத்திருத்தலமாகும் (8).

9. பிரம்ம வேள்வியாவது – நாடோறும் வேதத்தில் ஒவ்வொரு பகுதியை ஓதுவது. தேவவேள்வியாவது – அக்நிஹோத்ரம் செய்வது: பூதவேள்வியாவது – பிராணிகட்குப் பலியிடுவது. பித்ருவேள்வியாவது – பித்ருக்கனனை உத்தேசித்துத் தர்ப்பணம் விடுவது. மநுஷ்யவேள்வியாவது – விருந்தினர்கட்கு உணவு முதலியன கொடுப்பது.

10. அச்சுக்கள், ஹல்லுக்கள் என்னும் எழுத்துகளை உச்சரிக்க வேண்டிய முறைகள் சிட்சையில் நுவலப்பெறும். ப்ரக்ருதி ப்ரத்யயங்களின் பாகுபாடும் அவற்றின் அர்த்த விவேகமும் வியாகரணத்திலும் நிருக்தத்திலும் அறுதியிடப் பெறும். காயத்ரி த்ரிஷ்டுப், ஜகதீ இவை போன்ற சாந்தோ பேதங்கள் சந்தஸில் கூறப் பெறும். வேதோக்த கருமங்களைக் காலமறிந்து அநுட்டிக்க வேண்டுகையாலே அக்காலங்களை அறிவிப்பது சோதிடம் ஆச்வலாயர், ஆபஸ்தம்பர் முதலிய பெருமுனிவர்களால் செய்யப்பெற்ற கல்பங்களில் வைதிக கருமங்களை அநுட்டிக்க வேண்டிய முறைமைகள் விளக்கப்பெறும்.

11. மயிலின் கூவுதல் ஷட்ஜ ஸ்வரம். மாடுகளின் கூவுதல் ரிஷப ஸ்வரம். ஆடுகளின் கூவுதல் காந்தார ஸ்வரம். அன்றில் பறவைகளின் கூவுதல் மதியம் ஸ்வரம். குயிலின் கூவுதல் பஞ்சம ஸ்வரம். குதிரையின் கனைத்தல தைவத ஸ்வரம். யானையின் முழக்கம் நிஷாத ஸ்வரம். இவை பற்றி நாரதர் சொல்லியுள்ளார்.

திருநாங்கூரின் மாட மாளிகைகளில் கொடிகள் நாட்டப் பெற்றுள்ளன (5). இக்கொடிகள் சந்திர மண்டலத்தை எட்டியிருக்கும்; சந்திரன் சஞ்சரிக்கும்போது, இக்கொடிகளில் தவக்குண்டு அப்பால் செல்ல முடியாதபடி அவற்றோடு விளையாடுகின்றான். இப்படிப்பட்ட மாளிகைகள் நிறைந்த வீதிகளில் குறத்திகள் தங்கட்கு விளையாட்டாகக் கிடைக்கின்ற நன்முத்துகளைக் கூடை கூடையாகக் கொண்டு நாழி நெல்லுக்கு விற்பனை செய்கின்றார்களாம். திருநாங்கூராரிடத்தும் முத்துகள் ஏராளமாக இருக்கையாலே, அவர்கள் வந்து அவற்றைக் கொள்வதில்லை; குறத்திகள் தாங்களே சென்று, வேண்டாமென்று கதவடைத்துத் தள்ளினாலும் 'நாழி நெல்லுக்கு நானாழி முத்து கொள்ளுங்கள்' என்று வலுக் கட்டாயமாகக் கொடுக்குமாறு கூறுகின்றமை தோன்றும். இந்தச் சந்தை நிலைவரத்தால் ஊரின் செல்வச் செழிப்பைச் சொன்னவாறாம் (7).

அடுத்து, ஆழ்வார் **எம்பெருமான் பெருமையில்** ஆழங்கால் படுவதையும் காண்போம். தேவர்கள் இத்தலத்தில் குழுமி எம்பெருமானை, "நந்தா விளக்கே! அளத்தற் கரியாய்! நர நாரணனே! கருமாமுகில் போன்ற எந்தாய்!" என்று பரவுகின்றனர். ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை **'நந்தாவிளக்கே'** என்று குறிப்பிட்டமையால் எம்பெருமானின் திருநாமமும் **'நந்தாவிளக்கு'** என்று வழங்கலாயிற்று. "சுயம்பிரகாசமான ஞானத்தை ஸவரூபமாக உடையவனே!" என்பது இதன் பொருளாகும் (1). இத்திருக்கோயிலில் சந்நிதி பண்ணியிருப்பவன் ஆதிமூலமே என்று கூவி அழைத்த முதலையின் வாயில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடின **கசேந்திரன்** என்ற யானையின் துயர் துடைத்தவன் (2). யானையின் துயர் தீர்த்த எம்பெருமானுக்கு அண்டினவர்களின் விரோதிகளைக் களைந்தொழிந்தால் அம்மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகப் பெரிய பிராட்டி வெகுமானம் பண்ணுகின்றாள்; தனது திருமுலைத் தடத்தாலே அவனை அமுக்கிக் கட்டித் தழுவுகின்றாள் (3). முன்பொரு காலத்தில் கருடப் பறவையின் மீது ஏறிக்கொண்டு எழுந்தருளி **மாலி, சுமாலி** முதலிய அரக்கர்கள் எட்டுத் திசைகளிலும் சிதறியோடவும் பலர் மாண்டொழியவும் கடல் சூழ் இலங்கையை அழித்த பெருமான் (4)[12]. பேய்ச்சியின் முலையிலுள்ள நஞ்சினை அவளுயிருடன் ஒக்க உண்டவன்; **வத்ஸாசுரனை** எறிதடியாகக் கொண்டு **கபித்தாசுரன்** மேல் கழற்றி யெறிந்து இருவரையும் ஒருங்கே முடித்தவன்; குருந்தமரத்தை ஒசித்த கோபாலன்; தடந்தாமரைப் பொய்கை புக்கு ஆயமங்கையருடன்

12. இச்செய்தி உத்தர இராமாயணத்தை அடியொற்றியது.

தீர்த்தமாடி மகிழ்ந்த பிரான் (5.6). யமுனையின் ஒரு மடுவிலிருந்து கொண்டு அம்மடு மழுவதையும் தன் நச்சுத் தீயால் கொதிப்பித்துக் கொடுமை புரிந்து வந்த **காளியன்** என்ற நாகத்தின் கொழுப்பை அடக்கி அதன் தலைமேல் நாட்டியமாடிய பெருமான் (7). சுருண்ட கூந்தலையுடைய இடைச்சியரின் ஆடைகளை அபகரித்தவன்; அவர்தம் சிற்றில்களைச் சிதைத்தவன்; முற்றா இளம் பெண்டிருக்கு விளையாட்டையும் ஆசைப் பெருக்கையும் விளைவித்த பெருமான் (8). ஏழு காளைகளை அடக்கி நப்பின்னைப் பிராட்டியின் மெல்லிய புயங்களை விரும்பி அணைத்தவன்; சுடர் ஆழியையும் ஒண் சங்கையும் தாங்கி நிற்பவன் (9).

இந்த அநுபவத்துடன் திருக்கோயிலில் நுழைந்து கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **நந்தா விளக்குப் பெருமாளை** வணங்குகின்றோம். இத்திருப்பெயர் திருமங்கையாழ்வாரால் சூட்டப்பெற்றதாகும். இந்தப் பெருமானுக்கு **நரநாராயணன்** என்ற திருநாமமும் உண்டு. தாயாரின் திருநாமம், **புண்டரீகவல்லி.** இவரையும் சேவித்து இவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். இக்கோயிலின் உற்சவர் குள்ளமாயும் மிக அமைதியான முகத்தோற்றத்துடனும் இருக்கின்றார். எம்பெருமான் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதி உளங் கரைகின்றோம். "மணி மாடக் கோயில் வணங்கு என் மனனே" என்று ஆழ்வாரைப் பின்பற்றி ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக நம் மனத்தை ஆற்றுப்படுத்துகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

**சீரே தருங்கதியில் சேருகைக்கு நானுன்னை**
**நேரே வணங்கினேன் நெஞ்சே நீ – பாரில்**
**அணிமாடக் கோயில் அரங்கனார் நாங்கூர்**
**மணிமாடக் கோயில் வணங்கு.**[13]

(சீர் – சிறப்பு; கதி – முத்தி; நேரே – நன்றாக; பாரில் . உலகில்; அணி . அழகிய; அரங்கனார், அரங்கநாதன்; வணங்கு – தொழு)

"நாங்கூர்த் திருப்பதியை வணங்குவதற்கு நீ இசைவாயாயின் நமக்குத் தவறாமல் நற்கதி வாய்க்கும்" என்று தம் நெஞ்சை நோக்கி இதம் உரைக்கின்றார் அய்யங்கார். எல்லாவற்றிற்கும் மனமே காரணமாதலால், ஆழ்வார் நெஞ்சை வணங்கி வேண்டுகின்றனர். இவ்விடத்தில்,

13. நூற். திரு. அந். 30

**நெஞ்சமே! நல்லை! நல்லை! உன்னைப் பெற்றால்**
**என்செய் யோம்?இனி என்ன குறைவினம்?**
**மைந்த னைமல ராள்மண வாளனைத்**
**துஞ்சும்போதும் விடாது தொடர்கண்டாய்.**[14]

(நெஞ்சு – மனம்; நல்லை – நன்மையுடையை; என் செய்யோம் – எதைத்தான் செய்ய மாட்டோம்; மைந்தன் – இளையவன்; மலராள் – திருமகள்; துஞ்சுதல் – மறத்தல்; விடாது – விடாமல்; தொடர் – நில்.)

என்ற நம்மாழ்வார் பாசுரமும் ஈண்டுக் கருதத்தக்கது. மேல் விழுந்து தொழுத நெஞ்சைக் கொண்டாடி "என்றைக்காவது நான் நைச்சியாநுசந்தானம் பண்ணிப் பிரியப் பார்த்தவிடத்திலும் நீ எம்பிரானை விடாமல் தொடர வேண்டும்" என்று தன் நெஞ்சை இரக்கின்றார் ஆழ்வார்.

**நாங்கூர்** - வடமொழியில் **நாகபுரி** என வழங்கும். அழகிய மாடமாளிகை வீடுகள் நிறைந்த தலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் காரணம் பற்றி இத்திருத்தலத்திற்கு, '**திருமணி மாடக்கோயில்**' என்ற பெயர் ஏற்பட்டது போலும். ஆண்டுதோறும் தை அமாவாசையன்று நாங்கூரைச் சேர்ந்த **பதினொரு திருக்கோயில்** எம்பெருமான்களும் **தங்கக் கருட வாகனங்கள்மீது** காலையில் எழுந்தருளி மாலை வரையிலும் இத்திருத்தலத்தில் தங்குவார்கள். இதற்கென இத்திருக்கோயிலில் வரிசையாகத் தனித்தனி மண்டபங்கள் உள்ளன. எல்லோரும் இரவில் கருடசேவை தருகின்றனர். திருமங்கையாழ்வார் அன்னவாகனத்தின் மீது எழுந்தருளுவார். ஆண்டு முழுவதும் **பதினொரு தங்கக் கருட வாகனங்களும்** பாதுகாப்பாக இத்திருக்கோயிலிலேயே வைக்கப் பெற்றுள்ளன. எம்பெருமான்கள் இந்த விழாக்கோலம் கொள்வதற்குச் சென்னையிலுள்ள பல **வைசியர்கள்** செலவை ஏற்கின்றனர் என்பதாக அறிகின்றோம். இச்செய்தியை அறிந்தவண்ணம் மன நிறைவுடன் **திருத்தெற்றியம்பலம்** என்ற திவ்விய தேசத்தை நோக்கி வருகின்றோம்.

14. திருவாய். 1.10:4

# 12. திருத்தெற்றியம்பலத்துச் செங்கண்மால்

**திருமந்திரத்தின்** முதற் பதமாகிய '**ஓம்**' என்ற பிரணவத்தின் பொருளைச் சிந்திக்கின்றோம். பிரணவம் ஒன்றுமே சகல வேதசாரமாகும். இதன் பொருளை நன்கு உணர்ந்தால் இறைவனுடைய தன்மையையும் சீவனாகிய தன்னுடைய தன்மையையும் நன்கு அறியலாம். இதனால் '**நான்**' என்ற அகங்காரமும் '**எனது**' என்ற மமகாரமும் ஒழியும்; ஒழியவே சம்சாரக் கடலினின்றும் கரையேறப் பெறலாம்.

பிரணவத்தை ஓர் ஆதாரத்தில் எழுதினால் வலம்புரிச் சங்கம்போல் காணப்பெறும். இந்தப் பிரணவம் பிரிந்த நிலையில் '**அ, உ, ம**' என்ற மூன்று எழுத்துகளாக இருக்கும். இதில் **அகாரமே முதல்** எழுத்தாகும். வடமொழியில் '**அவ்**' என்னும் தாது (வினைப்பகுதி) '**காத்தல்**' என்ற பொருளைத் தரும். வடமொழி இலக்கணப்படி '**அவ்**' என்னும் வினைப்பகுதியின் மீது தக்க விகுதி பெற்றுத் தேறிய அகாரம் அனைத்தையும் காக்கும் எம்பெருமானைக் கூறும். இந்த அகாரத்தின்மேல் நான்காம் வேற்றுமையுருபு (சதுர்த்தி) ஏறிப் பின் அழிந்துள்ளது. இதன் பொருள் **சேஷியைப்** பெருமைப்படுத்தும் தன்மையாகும். இதுவே **சேஷத்துவம்** ஆகும்.

பிரணவத்தில் **இரண்டாவது** எழுத்து **உகாரம்**. இதன் பொருள் மற்றொன்றினுடைய சம்பந்தத்தை மறுத்தலாகும். இங்கு எம்பெருமானைக் கூறும் அகாரத்துடன் உகாரத்தைச் சேர்த்துப் பொருள்படுத்தும்போது எம்பெருமானையன்றி **மற்றொருவனுக்கும் அடியனல்லன்** என்று பொருள்படும். இந்த உகாரத்திற்கு இன்னொரு பொருளும் உண்டு. பகலவனும் அவனது ஒளியும் பிரியாதிருப்பது போலவே, எம்பெருமானும் எம்பெருமாட்டியும் கணநேரமும் பிரியாது நின்று உலகத்தைக் காத்து வருகின்றனர். பிரணவத்தின் **மூன்றாவது** எழுத்து **மகாரம்.** அதன் முன்பு அகாரம் மகாரம் என்ற இரண்டு

எழுத்துகள் உள்ளன. **உகாரத்திற்குப் பிராட்டி** என்ற ஒரு பொருள் உண்டு. அகாரமோ எம்பெருமானைக் கூறும். ஆகவே **அகாரமும் உகாரமும்** சேர்ந்து **திவ்விய தம்பதிகளை** உணர்த்தும்.

**மகாரம்** சீவனைக் கூறும். தத்துவசார சம்ஹிதை முதலிய நூல்களில் மகாரம் சீவனைக் கூறுவதாக நுவலப் பெற்றுள்ளது. மேலும் '**மந்**' என்ற வினைப்பகுதியிலிருந்து **மகாரம்** தோன்றுகின்றது. இந்த வினைப்பகுதி ஞானம் என்ற பொருள் கொண்டது. இந்தப் பகுதியிலிருந்து தோன்றிய மகாரம் ஞான சொரூபனாய் நிற்பவன், ஞானத்தைக் குணமாகக் கொண்டவன் என்ற பொருள்களைத் தந்து அங்ஙனல்லாத அசேதநனத்தினின்றும் வேறுபட்டு நிற்கும் சீவனைக் கூறுகின்றது. மேலும் '**மஸ்**' என்னும் வினைப் பகுதியிலிருந்தும் **மகாரம்** தோன்றும். இந்த வினைப்பகுதிக்கு '**அளவு**' என்று பொருள். மற்ற பிரமாணங்களால் '**அணு**' என்னும் அளவில் நின்று **மகாரம்** அணுவான **சீவனைக்** காட்டுகின்றது. இதனால் எங்கும் நிறைந்து நிற்பது பற்றி '**விபு**' எனப்படும் **ஈசுவரனைக்** காட்டிலும் அணுவான சீவன் வேறுபட்டவன் என்பதாகின்றது. இக்கருத்துகளை **வேதாந்த தேசிகர்,**

**காரணமும் காவலனும்ஆகி என்றும்**
**கமலையுடன் பிரியாத நாதனான**
**நாரணனுக் கடியேன்நான் அடிமை பூண்ட**
**நல்லடியார்க் கல்லால்மற் றொருவர்க் கல்லேன்**
**ஆரணங்கள் கொண்டகமும் புறமும் கண்டால்**
**அறிவாகி அறிவதுமாய் அறுநான்கன்றிச்**
**சீரணிந்த சுடர்போலத் திகழ்ந்து நின்றேன்**
**சிலைவிசயன் தேரனைய சிறுவே தத்தே.**[3]

(காரணம் – மூல காரணம்; காவலன் – இரட்சகன்; கமலை – இலக்குமி; நாதன் – சுவாமி; அடியார் – பாகவதர்; ஆரணங்கள் – வேதங்கள்; அறிவு – ஞானம்; அறிவதுமாய் – தர்மபூத ஞானத்தால் பிறவற்றை அறிபவனுமாய்; அறுநான்கு – 24 தத்துவங்கள்; சீர் – சிறப்பு)

என்ற பாடலால் விளக்குவர். சர்வேசுவரன் எல்லாவற்றுக்கும் முதற் காரணமாக நிற்பவன்; அனைத்தையும் காண்பவன்; பிராட்டியை ஒருபோதும் பிரியாதவன்; சேதநனாகிய சீவன் ஞான சொரூபமாய் நிற்பவன்; ஞானத்தைக் குணமாகவும் கொண்டவன்; அசேதநத்தைக் காட்டிலும் வேறுபட்டு நிற்பவன். இத்தகைய சீவன் எம்பெருமானுக்கு அடியன்; அவனுடைய அடியார்கட்கும் அடியன்; வேறொருவனுக்கும் அடியன் அல்லன். இதுவே பார்த்தன் தேர் போன்ற பிரணவத்தின் சாரம். இதுவே வேதங்களால் ஆய்ந்து கண்ட பொருளுமாகும்.

1. சேஷி – ஆண்டான், தலைவன்
2. சேஷத்துவம் – தலைமைத் தன்மை
3. தேசிகப் பிரபந்தம் – 97

பார்த்தனுடைய தேரில் தலைவனான கண்ணன் **முன்பும்** அடியனான பார்த்தன் **பின்பும்** வீற்றிருந்ததுபோல, பிரணவத்தில் தலைவனான பகவானைக் கூறும் **அகாரம்** முன்பும் அடியனான சீவனைக் கூறும் **மகாரம்** பின்பும் இருப்பதால் பிரணவத்திற்குப் பார்த்தன் தேரை ஒப்பிடுவது முன்னோர்களின் வழக்காக அமைந்தது.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் **திருத்தெற்றியம்பலம்** என்னும் திவ்விய தேசத்திற்கு வருகின்றோம். இத்திருத்தலமும் சீகாழி இருப்பூர்தி நிலையத்தினின்றும் கீழ்த்திசையில் சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. **திருமங்கையாழ்வார்** மட்டிலுமே இத்திருத்தல எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார். இவர்தம் திருப்பாசுரங்களில் ஆழங்கால்படுகின்றோம். இத்திருத்தலத்தின் சோலை வளம், நகர்வளம் எம்பெருமானின் பெருமை இவற்றைப் பாசுரங்களில் காணலாம்.

முதலில் வயல் - சோலை வளத்தில் ஈடுபடுவோம்.

**நூற்றிதழ்கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்(து)**
**இளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்**
**சேற்றளையில் வெண்முத்தம் சிந்து நாங்கூர்த்**
**திருத்தெற்றி அம்பலம்.**[4]

(கமுகு – பாக்கு; பகுவாய் – விரிந்த வாய்; அளை – வளை)

வயலிலுள்ள நண்டுகள் உணவிற்காகத் தாமரைப் பூவில் சென்று புகுவது உண்டு; அங்ஙனம் போயிருக்கும்போது பாக்குப் பாளைகளினின்றும் உதிரும் வெண்முத்துகள் இறைக்கப்பட்டு நண்டின் வளை மூடப்பெறுகின்றது என்று கூறுகின்றார் ஆழ்வார். திருநாங்கூர் வயல்களில் நெற்பயிர்கள் செழித்து வளர்கின்றன; அந்த நெற்பயிர்கள்மேல் கருநெய்தற்பூக்கள் வரிசை வரிசையாய்ப் படர்ந்துள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வண்டுகளின் ஆரவாரமும், பூக்கொய்தற்பொருட்டுச் செல்லும் மங்கையரின் பாதச் சிலம்புகளின் ஒலியும் சேர்ந்து தொனிக்கின்றன (2). திருநாங்கூரைச் சுற்றிலும் தென்னை மரங்களும் மாமரங்களும் செறிந்து கிடக்கின்றன; ஓங்கியிருக்கும் தென்னை மரங்களினின்று தேங்காய் நெற்றுகள் மாமரங்களின் மீது வீழ்கின்றன; அந்த அதிர்ச்சியினால் மாம்பழங்கள் உதிர்ந்து வீழ்கின்றன; அவற்றையெல்லாம் திரட்டி உருட்டிக் கொண்டும், மற்றும் பலவகையான மலர்களையடித்துக் கொண்டும் பெருவெள்ளமாகப் பாய்ந்து வரும் காவிரியாற்றுக் கால்வாய்களை

4. பெரி. திரு. 4.4:1

யுடையது திருநாங்கூர் (3). அழகு பொருந்திய மலர்கள் மலிந்துள்ள சோலைகள் விண்ணை முட்டுமளவும் பரவியுள்ளன; அவை எழில் மதியை அசையவொட்டாமல் தடுத்து நிறுத்துகின்றன (4). நறுமணம் கமழ்கின்ற மலர்களையணிந்த கூந்தலையுடைய மகளிர் நீரில் படிந்து நீராடுகையில் தங்கள் கொங்கைத் தடங்களில் அணிந்திருந்த குங்குமக் குழம்புகளைத் தேய்த்துக் கழுவுவதனால் நீரோட்டம் செந்நிறம் அடைந்து வெண்மணல் நிலங்களில் தவழ்கின்றது (7). திருமணிக் கூடத்துத் திருமொழியில்,

**கொவ்வைவாய் மகளிர் கொங்கைக்**
**குங்குமம் தழுவிப் போந்த**
**தெய்வநீர் கமழும் நாங்கூர்**[5]
(கொவ்வை – கொவ்வைக் கனி போன்ற)

என்ற பாசுரத்தில் இதே கருத்தைக் கூறியிருப்பது ஈண்டு உளங்கொள்ளத்தக்கது.

இனி, நகர்வளத்தைக் காண்போம். திருநாங்கூரிலுள்ள மணிமாடங்கள் மதி மண்டலத்தளவும் ஓங்கியுள்ளன (4). நகரில் வீதிதோறும் மலை மலையான மாடங்கள் வரிசை வரிசையாக இடைவிடாது ஒன்றோடொன்று சேர்ந்து நெருங்கியுள்ளன; இத்தகைய வீதிகளில் மதுர மொழிகளையுடைய மகளிர் தம் புருவ நெறிப்பினால் ஆடவர்களின் மனத்தைக் கவர்ந்து கொள்ளுகின்றனர் (5).

**மான்போலும் மென்நோக்கின் செய்ய வாயார்**
**மரகதம்போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு**
**தேன்போலும் மென்மழலை பயிற்று**
(மான்போலும் – மானின் நோக்கு போன்ற; செய்ய – சிவந்த; மரகதம் – பச்சை நிறம்; மடக்கிளி . அழகிய கிளி)

கின்றனர் (6). நாங்கூர்த் தெருக்கள் தோறும் நான்மறைகள், ஆறு அங்கங்கள், இதிகாச புராணங்கள் இவற்றின் முழக்கம் எங்கும் கேட்கப் பெறுகின்றன (8). நான்கு வேதங்களையும் விடாமல் ஓதிக் கொண்டுள்ளனர் அந்தணர்கள் (9).

எம்பெருமானிடம் எங்ஙனம் **ஆழ்வார் ஆழங்கால் படுகின்றார்** என்பதையும் கண்டு மகிழ்வோம். திருநாங்கூரின் ஒரு பகுதியாகிய திருத்தெற்றியம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் செந்தாமரைக் கண்ணன் (செங்கண் மால்) மண்ணின் பாரம் நீங்க வடமதுரையில் பிறந்தவன்; கஜேந்திரன் என்ற யானையைக் காத்தவன் (1). முன்பு கம்சனால் ஏவப் பெற்றுப் பேய் வடிவை மறைத்துத் தாய் வடிவு

5. பெரி. திரு. 4.5:2

கொண்டு நஞ்சு தீற்றிய முலை கொடுக்க வந்த பூதனையின் உயிர் குடித்தவன் (2). திருவாய்ப் பாடியிலுள்ள சிறுகுடில்களில் தந்திரமாக நுழைந்து வெண்ணெயை வாரியுண்பதும்,

**மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள் தம்இடம் புக்கு**
**கச்சொடு பட்டைக் கிழிடதது காம்பு துகில் அவைகீறி**
**நிச்சலும் தீமைகள்[6]**

(மச்சு – நடுநிலை; மாளிகை – மேல் நிலை; சச்சு – முலைக் கச்சு; பட்டு . பட்டை; காம்புதுகில் – கரைகட்டின சேலை; கீறி – கிழித்து; நிச்சலும் – நாடோறும்)

என்றபடியே மகளிரிடத்தில் சில தீம்புகளைச் செய்வதுமாய் இங்ஙனம் திருவாய்ப்பாடி முழுவதும் நலிவு படுத்திய நாராயணனே இத்திருத்தலத்தில் எழுந்தருளி இருப்பவன் (3). முன்பொருகால் **நப்பின்னைப்** பிராட்டியைத் திருமணம் புரிவதற்குக் கன்யாசுல்கமாக வைக்கப் பெற்றிருந்த ஏழு காளைகளையடக்கி அப்பிராட்டியை மணம் புரிந்தவன் (4). பெரிய பிராட்டியாரோடும் பின்னைப் பிராட்டியாரோடும் நித்தமும் கலவி புரிந்தும் இளமை மாறாத பெருமான் (5). இராமன் என்ற ஒரு சிறு பயல் பூமியை எல்லாம் ஆள்பவனாக நினைத்து அகங்காரப்படுகின்றான்; அதை அறிந்தும் அவனைத் தண்டியாமல் பொறுத்திருப்பவன் அரக்கர்கட்குத் தலைவனாவனோ? என்று கிளர்ந்தெழுந்த இராவணனது மலைபோன்ற இருபது தலைகளையும் ஒரே சமயத்தில் அறுத்தொழித்த தனி வீரன் (6). மாணி நிலைக்கு உரிய கோலத்துடன் வாமன உருவங்கொண்டு மாவலியின் யாக பூமிக்குச் சென்று பூமி தானம் பெற்ற பெருமான் (7). ஆழ்வாரின் வராக அவதார ஈடுபாடு மிகவும் அற்புதமானது.

**சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரிய மேரு**
**திருக்குளம்பில் கணகணப்பத் திருவா காரம்**
**குலுங்கநில மடந்தைதனை இடந்து புல்கிக்**
**கோட்டிடைவைத் தருளியஎம் கோமான்[7]**

(சிலம்பின் இடை – தண்டைச் சிலம்பின் நடுவில்; பரல் . பருக்கைகய்; திருக்குளம்பு – அழகிய குளம்பு; திரு – இலக்குமி; ஆகாரம் – உடம்பு; நிலமடந்தை – பூமிப் பிராட்டி; இடந்து – கோட்டால் குத்தி யெடுத்து; புல்கி – தழுவி)

என்று கூறுவர் ஆழ்வார். இதில் வராக அவதாரமாகிய பேருருவத்தைக் காட்டுகின்றார். இந்தக் கோல வராகத்தின் திருக்குளம்பில் மேருமலை தண்டைச் சிலம்பின் நடுவிலிட்ட பருக்கைக் கல்போன்று கணகணவென்று ஒலிக்குமாம்; திருமார்பில் பிராட்டியிருக்கும் இருப்பு குலுங்குமாம். இந்த நிலையில் அண்ட

6. பெரியாழ். திரு. 2.7:3 7. பெரி. திரு. 4.4:8

பித்தியில் சார்ந்து கிடந்த பூமிப் பிராட்டியைக் கோட்டால் குத்தி எடுத்துத் தழுவிக்கொண்டு கோரப் பல்லின்மீது நிலை நிறுத்திக் கொண்ட கோமான் (8). எல்லா இடங்களையும் கடந்து எட்டுத் திக்குகளிலும் எல்லாப் பூமியிலும் அண்டத்திலும் பரவி கீழ் வெள்ளம் கிளம்பி கடல் பெருகும்படியான பிரளயப் பெருவெள்ளத்தை முன்பொருகால் திருவயிற்றில் அடக்கிக் கொண்டவன் (9). இத்தகைய பெரும்புகழ் வாய்ந்த எம்பெருமானே திருத்தெற்றியம்பலத்தில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருப்பவன்.

இந்த அநுபவம் எழுந்த நிலையில் திருக்கோயிலில் நுழைகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு புயங்க சயனத்தில் சேவை சாதிக்கும் **செங்கண் மாலைக்** கண்டு சேவிக்கின்றோம். தாயாரின் திருநாமம், **செங்கமலவல்லி** நாச்சியார். இவரையும் வழிபட்டு இவர்தம் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். ஆழ்வார் பாசுரங்கள் பத்தையும் அவன் சந்நிதியில் மிடற்றொலி கொண்டு சேவித்து மனம் உருகுகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாடலும் நினைவிற்குவர அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

**சென்றதுகாலம் திரைநரை மூப்பு ஆனஇனி**
**என்றுகொல் சாவுஅறியோம் என்நெஞ்சே! – கன்றால்**
**உருத்தெற்றி அம்பலத்தை ஓர்விளவின் வீழ்த்தான்**
**திருத்தெற்றி அம்பலத்தைச் சேர்.**[8]

(காலம் – வாழ்நாள்; திரை – தோற்சுருக்கம்; நரை – மயிர் வெளுத்தல்; மூப்பு – கிழத்தனம்; ஆன – தோன்றியுள்ளன; இனி – இனிமேல்; சாவு – மரணம்; ஓர்விளவின் – ஒரு விளாமரத்திலுள்ள; அம்பலத்தை – அழகிய பழத்தை; உருத்து – கோபித்து; கன்றால் இளங்கன்றைக் கொண்டு; எற்றி – வீசி எறிந்து; வீழ்த்தான் – விழச் செய்தவனான திருமால்; சேர் – இடைவிடாது தியானி)

என்பது பாடல். "பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி ஒவ்வொரு கரணமும் ஒடுங்கிக்கொண்டே வருகின்ற முதுமைப் பருவத்திலும் தமது நெஞ்சம் இறப்பின்றியே நின்றதென்று சிந்தனைச் சிறிதுமின்றி உலகப் பற்றுக்கொண்டு உழல்வது கண்டு ஆற்றாது அந்நெஞ்சை நோக்கி இனியாவது கன்றால் விளவெறிந்து இரண்டு அசுரர்களையும் ஒருசேர மாய்த்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசத்தைச் சார்ந்து உய்வு பெறுவாய்" என்று உணர்த்துகின்றார் அய்யங்கார். மனநிறைவு பெற்று அடுத்திருக்கும் **செம்பொன்செய் கோயிலை** நோக்கிச் செல்லுகின்றோம்.

8. நூற். திருப். அந். 36

# 13. செம்பொன்செய் கோயில் பேரருளாளன்

**எம்பெருமானின்** திருக்குணங்கள் பற்றி நாம் சிந்திக்கின்றோம். எம்பெருமானின் திருக்குணங்களுக்கு அளவே இல்லை. ஒரு பொருளுக்கு உளதாகக் கூறும் குணமானது தன்னைப் பெற்றிருக்கும் பொருளுக்கு மற்றொரு பொருளைக் காட்டிலும் ஒரு வேற்றுமை காட்டுவதால் அக்குணம் **விசேஷணம்** எனப்படும். இத்தகைய விசேஷணம் '**ஸ்வரூப நிரூபக விசேஷணம்**' என்றும், '**நிரூபித ஸ்வரூப விசேஷணம்**' என்றும் இருவகைப்படும். ஒரு பொருளின் ஸ்வரூபத்தை (Essential Nature) எந்த குணத்தையுடையதாகக் கூறியே விளக்கினாலன்றி அப்பொருளின் ஸ்வரூபத்தை அறிய முடியாதோ அந்தக் குணம் '**ஸ்வரூப நிரூபக விசேஷணம்**' எனப்படும். ஒரு பொருளின் ஸ்வரூபத்தை விளக்கியபின் அதன் பெருமை புலப்படுவதற்கு எந்தக் குணங்கள் வெளியிடப் பெறுகின்றனவோ அவை **நிரூபித 'ஸ்வரூப விசேஷணம்'** எனப்படும்.

எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை **சத்தியத்துவம், ஞானத்துவம், அனந்தத்துவம், ஆனந்தத்துவம், அமலத்துவம்** என்னும் **ஐந்து** குணங்களையிட்டே விளக்க வேண்டும். ஆதலின் இவ்வைந்தும் '**ஸ்வரூப நிரூபக விசேஷணம்**' ஆகும். இவற்றுள் **சத்தியத்துவம்** என்பது, எப்பொழுதும் மாறுபடாத் தன்மை. **ஞானத்துவம்** என்பது, எப்பொழுதும் குறைவுபடாத ஞான சொரூபனாம் தன்மை. **ஆனந்தத்துவம்** என்பது, இங்குதான் இருக்கின்றான் என்று தேசத்தாலும், இப்பொழுதுதான் இருக்கின்றான் என்று காலத்தாலும், இந்தப் பொருளின் சொருபமாகத்தான் இருக்கின்றான் என்று பொருளினாலும் அளவிட முடியாதபடி எவ்விடத்திலும் எக்காலத்திலும் எந்தப் பொருளின் சொருபனாகவும் நிற்குந் தன்மை. **ஆனந்தத்துவம்** என்பது, ஆனந்த சொரூபனாய் நிற்கை. **அமலத்துவம்** என்பது, குற்றங்களில்லாத தன்மை.

இந்த **ஐந்து** குணங்களால் எம்பெருமானது சொருபத்தை அறிந்தபின் **செளலப்பியம், செளசீல்யம், வாத்சல்யம், சுவாமித்துவம்** முதலிய அளவற்ற திருக்கல்யாண குணங்களைக் கொண்டு அவன் பெருமை அறியப் பெறும். இந்தத் திருக்குணங்கள் **'நிருபிதஸ்வரூப விசேஷணம்'** ஆகும். இவற்றையும் விளக்குவோம்.

இவற்றுள் **செளலப்பியம்** என்பது, எளியனாயிருக்கும் இருப்பு. இது, கண்ணிற்குப் புலனாகாதிருக்கும் ஈசுவரன், தன் திவ்விய மங்கள விக்கிரகத்தை, சேதநன் தன் கண்களாலே கண்டு பற்றுதற்கேற்ப எளியனாயிருத்தல். இறைவன் தான் இருக்கும் பரமபதத்தை விட்டுச் சமுசாரிகளிடையில் வந்து அவதரித்துத் தன்னை எளியனாக்குகின்றான். இஃது, 'ஈசுவரன் நம் ஊனக் கண்களுக்குப் புலனாகாதவன், நாம் அவனைப் பற்றுதல் யாங்ஙனம்?' எனச் சேதநன் பின்னிடாதவாறு எம்பெருமானை நேருக்குநேரே கண்டு பற்றுமாறு செய்கின்றது, இங்ஙனம் செய்வன இராமகிருஷ்ணாவதாரங்களும், அர்ச்சைகளும் ஆகும்.

**செளசீல்யம்** என்பது, உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு புரையறக் கலக்கை; இந்த செளசீல்யம் இரு வகைப்படும்; நித்திய விபூதி, லீலாவிபூதி இவற்றிற்குச் சுவாமியாய்ப் பெரிய பிராட்டியாரை முக்கியத் துணைவியாய்க் கொண்டவனாய்த் தடை சிறிதுமற்ற சுவாதந்திரியமாகின்ற தேஜஸை உடையவனாய் இருக்கும் பரமபுருடன், தன் பெருமையையும் தன்னோடு கலக்கும் சீவான்மாவின் சிறுமையையும் நோக்காது, தன் பேறாக அவனுடன் புரையறக் கலத்தல் ஒருவகை. சேதநன் விருப்பமின்றி இருப்பினும், பகவானே சென்று அவனோடு புரையறக் கலத்தல் மற்றொரு வகை. முந்தியதற்குப் பாத்திரமானவர்கள் ஞானிகள்; பிந்தியதற்குப் பாத்திரமானவர்கள் சமுசாரிகள்.

**வாத்சல்யம்** என்பது, கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு. இதை விளக்குவோம். சிறிது மலங்கலந்த புல் முதலியவற்றையும் தீண்டாத தாய்ப்பசு, தான், ஈன்ற கன்றின் உடலிலுள்ள வழுவை விருப்புடன் தன் நாவினால் நக்கி, அக்கன்றைத் தூய்மைப் படுத்துகின்றது. அஃது அத்துடன் நிற்கின்றதா, தன் இனிய பாலையும் அதற்கீந்து, அதை வளர்ப்பதுடன், அதன் எதிரில் வருபவரைக் கொம்பினால் முட்டித் தள்ளியும், அதற்கு முன் தான் ஈன்று கன்று வரினும், அதை உதைத்துத் துரத்தியும் அவ்விளங்கன்றைக் காக்கின்றது. இங்ஙனமே பகவானும், தன்னை வந்தடைந்த சேதநனின் குற்றங்களைப் பாராமல், அவற்றைப்

போக்கியமாய்க்கொண்டு, இன்னருளாகிய பாலைச் சுரந்து காக்கின்றாள். அதன்றியும் தன்னைப் பற்றின சேதநனுக்கு ஒரு குறைவு நேரின், என்றும் தன்னை விட்டுப் பிரியாமல் கூடியிருக்கும் பிராட்டியாரையும் வேண்டாவென வெறுத்து அவனுக்குப் பல நன்மைகளைச் செய்வதற்குப் பசுவிற்குக் கன்றினிடமும், பகவானுக்குச் சேதநனிடமும் இருக்கும் அன்பே காரணமாகும். இதுவே 'வாத்சல்யம்' எனப்படும்.

**சுவாமித்வம்** என்பது, உடையனாயிருக்கும் இருப்பு. சேதநன் ஈசுவரனைக் கருதாமலும் நோக்காமலும் பாராமுக மாயிருக்கும் நிலையிலும், ஈசுவரன் இவனை விடாமல் நின்று, இவனுடைய சொரூபத்தையே நோக்கிக்கொண்டு போவதற்குக் காரணமாயுள்ள ஒரு தொடர்பே சுவாமித்துவமாகும். சேதநன் உலகப் பற்றிலேயே இச்சை வைத்து உழன்று திரிகின்றான். இங்ஙனம் சேதநன் பயனற்ற வழியில் தன் காலத்தைக் கடத்தினும், தன் உடைமையான இவனை அங்ஙனமே நலமற்ற வழியில் விட்டு விடுவதற்கு ஈசுவரனுடைய சுவாமித்துவமாகின்ற தொடர்பு இடந் தருதல் இல்லை. ஆதலின், அவன் தன் உடைமையான சேதநனை விடாது மறைந்திருந்து, அச்சேதநனுக்கு வெறுப்பு அற்றிருக்கும் நிலை தொடங்கி, கைங்கரியம் புரியும் நிலை ஈறாக உள்ள பல நன்மைகளையும் உண்டாக்குகின்றான். இதற்குக் காரணம் பகவானுக்கும் சேதநனுக்கும் உள்ள தொடர்பேயாகும்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் **செம்பொன்செய் கோயிலை** நோக்கி வருகின்றோம். இதுவும் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து கீழ்த்திசையில் சுமார் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இந்தத் திருப்பதி திருநாங்கூரில நட்ட நடுவில் உள்ளது. இத்திருப்பதியை மங்களா சாசனம் செய்துள்ள **திருமங்கையாழ்வார்** பாசுரங்களிலும் **நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய் கோயில்** என்ற சொற்றொடரால் குறிப்பிடப் பெற்றுள்ளதைக் கண்டு மகிழலாம்.[1] இது தவிர ஆழ்வார் இத்திருமொழியையும் திருநாங்கூர்ப்பதிகங்கள் பதினொன்றின் நன்னடுவே அமைத்தருளின அழகும் போற்றத்தக்கது. **'நந்தாவிளக்கே'** (திருமொழி 3-8) என்று தொடங்கி **'கவளயானை கொம்பொசித்த'** (திருமொழி 4-8) என்ற திருமொழியளவாகப் **பதினொரு திருமொழிகள்** திருநாங்கூர்த் திருப்பதிகளை மங்களா சாசனம் செய்வனவாகும். இவற்றுள் இத்திருமொழி **நன்னடுவே** அமைந்திருப்பதைக் காண்க.

1. பெரி. திரு. 4.3. இத்திருமொழியில் எல்லாப் பாசுரங்களிலும் இச்சொற்றொடர் வந்துள்ளது.

இந்தத் திருப்பதியும் சோலைகள் நிறைந்த சூழ்நிலையில் அமைந்துள்து. பாசுரங்களில் இந்நிலை ஏனைய திருமொழிப் பாசுரங்கள் போல் விரிவாக விளக்கப் பெறாவிடினும் **'மலர்ப் பொழில்சூழ் நாங்கை'** என்று முதற் பாசுரத்திலும் *(4-3-5)*, **'தேனமர் சோலை நாங்கை'** *(4-3-10)* என்று இறுதிப் பாசுரத்திலும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இங்ஙனமே திருநாங்கூர் மாட மாளிகை நிறைந்த ஊர் என்பதை ஒரே பாசுரம் **'சீரணி மாட நாங்கை'** *(4-3-1)* என்று குறிப்பிடுகின்றது. ஏனைய பாசுரங்களில் சிறப்புடை மறையோர், திடமொழி மறையோர், திசைமுகன் அனையோர், செல்வ நான்மறையோர், செஞ்சொல் நான்மறையோர், தெளிந்த நான்மறையோர் என்றும் **வைதிக அந்தணர்களின் சிறப்பு** பேசப் பெறுகின்றது.

இத்திருத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் **'பேரருளாளன்'** என்று திருநாமம் சூட்டுகின்றார். இவர் 'மலர் மகளோடும் மண் மகளோடும்' நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிப்பதையும் குறிப்பிடுகின்றார் (4-3-1). இங்கு நின்ற எம்பெருமான் "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்த இமையோர் தலைவா" (திருவிருத்.1) என்று **நம்மாழ்வார்** கூறுகின்றபடியே பற்பல அவதாரங்களை எடுத்தாலும், இவை யாவும் நம் பிறவிபோல் வினை வயத்தவை அன்று; அநுக்கிரக மடியாக உண்டானவை. ஆழ்வார் இவரை,

> **பிறப்பொடும் மூப்பொன்று இல்லவன் தன்னைப்**
> **பேதியா இன்பவெள் ளத்தை**
> **இறப்பெதிர் காலக் கழிவுமா னானை**
> **ஏழிசை இன்சுவை தன்னை**[2]

(பேதியா – விகாரமடையாத)

என்று குறிப்பிடுவர். இங்கு எழுந்தருளியிருக்கும் பிறப்பிலிப் பல் பிறவி எம்பெருமான் மூப்பின்றி என்றும் இளையவனா யிருப்பவன்; பேதியா இன்ப வெள்ளத்தன்; எக்காலத்தும் நிலை பெற்றிருப்பவன்; ஏழிசைகளிலும் உண்டாகும் சுவையே வடிவு கொண்டாற் போன்றவன்; மறைகளில் கூறப் பெறுபவன்; தேவாதி தேவன் *(2)*. பஞ்ச பூதங்கள், இருசுடர், பூமியிலுள்ள உயிர்கள், உயிரற்ற பொருள்கள் இவற்றிற்கு அந்தர்யாமியாயிருப்பவன்; கடல் நிற வண்ணன் *(3)*. வாமன மாணியாக **மாவலியின்** யாக பூமியில் மூவடி மண் இரந்து பெற்று உலகளந்தவன்; நித்திய சூரிகள் அடியிணை வணங்க அலையெறி பாற்கடலில் துயிலும் பரமன்; அனைவரையும் காப்பதற்கு அறிகுறியாக உயர்மணி மகுடம் சூடி நிற்பவன் *(4)*.

2. பெரி. திரு. 4.3:2

சாதுக்களை நலியும் அரக்கர்களை அழிப்பதற்காகத் தாய்போல் கருணை காட்டும் சக்கரவர்த்தி திருமகனாக அவதரித்தவன் (5). அரண் அமைந்த இலங்கை நகர் பொடிபட அம்பு தொட்டவன் (6). குவலயா பீடம் என்னும் யானையை அழித்தவன்; **கம்சன்** பூசையில் வைத்திருந்த வில்லை முறித்தவன்; மல்லர்களை அடர்த்தவன்; கஞ்சனைக் காய்ந்தவன் (7). **வாணனின்** ஆயிரந் தோள்களும் அறுந்து விழும்படி திருவாழியைச் செலுத்தியவன்; திருவேங்கட மலையில் சேவை சாதிக்கும் வேங்கட கிருஷ்ணன் (8). மற்றும்,

**"களங்கனி வண்ணா கண்ணனே என்றன்**
**கார்முகி லேயென நினைந்திட்டு**
**உளங்கனிந் திருக்கும் அடியவர் தங்கள்**
**உள்ளத்து ஊறிய தேன்**

(கார்முகில் . காளமேகன்; கனிந்திருத்தல் – பரிபக்குவமாயிருத்தல்)

போல் இனியனாயிருப்பவன் (9). இத்தகைய எம்பெருமானை 'வணங்கி அல்லல் தீர்ந்தேன்' என்கின்றார் ஆழ்வார். இந்த எம்பெருமான் சந்நிதியில் இவ்வாழ்வார் பாசுரங்கள் அனைத்தையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங் கரைகின்றோம். திருக்கடைக் காப்புச் செய்யுளின் இறுதிப் பகுதியாகிய,

**ஒழிவின்றிக் கற்றுவல் லார்கள்**
**மானவொண் குடைக்கீழ் வையகம் ஆண்டு**
**வானவ ராகுவர் மகிழ்ந்தே.**

என்ற பகுதி இத்திருமொழியை ஓதியதன் பயனை எடுத்துரைக்கின்றது. "இப்பாசுரங்களை ஒன்றும் வழுவாமல் ஓதுபவர்கள் வெண்கொற்றக் குடையின்கீழ் வீற்றிருந்து இவ்வுலகை நெடுங்காலம் அரசாண்டுப் பின்னர் நித்திய சூரிகளின் திரள்களிலும் சென்று சேரப்பெறுவர்" என்று அறியும்போது பரிபூரண பிரம்மானந்தம் பெற்ற நிலையை அடைந்து விடுகின்றோம்.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாடலும் நினைவிற்கு வர, அதனையும் ஓதி உள்ளக் கிளர்ச்சி அடைகின்றோம்.

**ஊர்வேன் மடலை; ஒழிவேன் மடநாணம்;**
**சேர்வேன் கரிய திருமாலை; – பார்அறிய**
**அம்பொன் செய்கோயில் அரங்கன் அணிநாங்கூர்ச்**
**செம்பொன்செய் கோயிலினிற் சென்று.**[3]

(ஒழிவேன் – துறப்பேன்; அம்பொன் – அழகியபொன்; அணி – அழகிய; சேர்வேன் – சென்று அடைவேன்)

3. நூற். திரு. அந். 35

என்பது பாடல். அய்யங்கார் பிராட்டி நிலையை அடைந்து மடலூர்தல் பற்றிப் பேசுகின்றார். இம்மடற்றிறம் பெரும்பாலும் ஆடவர்க்கே உரியது. அளவு மீறின ஆசையால் மகளிர்க்கும் சிறுபான்மைவரும். அன்றியும், மடலூர்தல் ஆடவர்க்கே உரியதென்றும், மடலூர்வேன் என்று சொல்லுதல் இருபாலார்க்கும் உரியதென்றும் உணர்தற்பாற்று. இங்குக் கூறியது தலைவியின் மடற்றிறம். பிரிவாற்றாது வருந்தும் தலைவி காதல் மிகுதியால் நாணம் துறந்து மடலூரத் துணிந்தமையைக் கூறுதல் இச்செய்யுளின் பொருளாகும். மடம், நாணம் என்பன மகடூஉக் குணங்கள் நான்கைச் சேர்ந்தவை; மற்றவை - அச்சமும் பயர்ப்புமாகும். இவற்றுள் **மடமாவது** - அறிந்தும் அறியாது போன்றிருத்தல்; கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்றும் கூறுவர். **நாணமாவது** - செய்யத் தகாதவற்றின்கண் உள்ளம் ஒடுங்குதல். **அச்சமாவது** - பல ஆடவர்களிடையில் செல்லக் கூசுதல். **பயிர்ப்பாவது** - கணவனல்லாத மற்றைய ஆடவரது ஆடை முதலியன தம்மேற்பட்டால் அருவருப்புக் கொள்ளுதல்.

இங்ஙனம் பல செய்திகளை அறிந்த நிலையில் மன நிறைவு பெற்று **அரிமேய விண்ணகரத்தை** நோக்கி நடை கட்டுகின்றோம்.

# 14. நாங்கூர்க் குடமாடும்கூத்தன்

திருவாய்மொழியில் துவயத்தின் பொருள் சொல்லப்படுகின்றதாக ஆசார்யர்கள் காட்டுவர். **துவயம்** என்பதற்கு இரண்டு என்பது பொருள். மூன்று மந்திரங்களுள் துவயம் **இரண்டாவது** மந்திரமாகும். இது **மந்திர இரத்தினம்** என்றும் வழங்கப்பெறும். இதில் இரண்டு வாக்கியங்கள் அடங்கியுள்ளன, அவை,

> **ஸ்ரீமத் நாராயண சரணௌ சரணம்**
> **பிரபத்யே;**
> **ஸ்ரீமதே நாராயணாய நம**

என்பவையாகும். இந்த இரண்டு வாக்கியங்களும் பத்துப் பொருள்களைச் சொல்லுகின்றன. திருவாய்மொழியிலுள்ள பத்துப் பத்துக்களாலும் இந்தப் பத்துப் பொருள்களையும் அடைவே காட்டுவர் நம் பூர்வாசார்யர்கள். இவற்றை எடுத்துக்காட்டுவோம்.

1. **ஸ்ரீமத்** : திருமகள் கேள்வனாக இருக்கும் தன்மை. திருவாய்மொழியின் **'முதல் பத்து'** இதனைக் கூறுகின்றது. 'மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள்' *(1-3:1)* என்றும், 'மலராள் மைந்தன்' *(1-5:9)* என்றும், 'திருமகளார் தனிக்கேள்வன்' *(1-6:9)* என்றும், 'திருவின் மணாளன்' *(1-9:1)* என்றும், 'பூமகளார்த தனிக் கேள்வன்' *(2-1:7)* என்றும், 'மைந்தனை மலராள் மணவாளனை' *(1-10:4)* என்றும் திருமகள் கேள்வனாதல் காட்டப் பெறுகின்றது. **ஸ்ரீ** புருஷகார பூதையான பெரிய பிராட்டியாரோடு; **மத்** - நித்திய யோக முடைய.

2. **நாராயண** : சித்து, அசித்து என்ற இரண்டு தத்துவங்களை உடலாகக் கொண்டு வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீலயம், சௌலப்பியம், ஞானம், சக்தி, பிராப்தி, பூர்த்திகளாகின்ற கல்யாண

1. ஆசா. ஹிரு. 210

குணங்களையுடைய எம்பெருமான் இத்தத்துவங்களை இயக்கும் தன்மை. **இரண்டாம் பத்து** இதனை நுவல்கின்றது. 'எம்பெருமான் நாரணற்கு' (2-1:7) என்றும், 'எம்பிரான் எம்மான் நாராயணனாலே' (2-7:1) என்றும், 'நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்' (2-7:2) என்றும் நாராயணனின் இயக்கும் தன்மை கூறப் பெறுகின்றது.

3. **சரணௌ** : எல்லா உலகங்கட்கும் புகலிடமான நாராயணனுடைய இரண்டு திருவடித் தாமரைகள் பற்றி **மூன்றாம் பத்து** கூறுகின்றது. 'நாண்மலராம் அடித்தாமரை' (3-3:9) என்றும், 'அங்கதிர் அடியன்' (3-4:3) என்றும், 'அவன் பாத பங்கயம்' (3-6:4) என்றும், 'அன்று தேர் கடவிய பெருமான் கனை கழல்' (3-6:10) என்றும், 'மூவுலகும் தொழுதேத்தும் சீர் அடியான்' (3-8:1) என்றும் கூறப் பெற்றிருத்தலைக் காணலாம்.

4. **சரணம்** : அத்திருவடிகளே உபாயமாக இருத்தல். **நான்காம் பத்தால்** இஃது அறியப் பெறுகின்றது. 'இலங்கைநகர் அம்பு எரி உய்த்தவர்' (4-2:6) என்றும், 'வல்வினை தீர்க்குங் கண்ணனை' (4-4:11) என்றும், 'தொல்வினை தீர' (4-4:11) என்றும், 'வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே' (4-5:2) என்றும், 'மேவி நின்று தொழுவார் வினை போக' (4-5:4) என்றும் 'பிறந்தும் செத்தும் நின்று இடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்' (4-7:7) என்றும், 'நோயே மூப்பிறப்புப் பிணியே என்றிவை ஒழிய' (4-9:7) என்றும், 'வேட்கை எல்லாம் விடுத்து - கூட்டறிய திருவடிக்கண் கூட்டினை' (4-9:9) என்றும், 'அஃதே உய்யப் புகும் ஆறு' (4-1:11) என்றும், 'உய்பு உபாயம் மற்று இன்மை தேறி' (4-3:11) என்றும் விருப்பு இல்லாதவற்றை நீக்கி விருப்பு உள்ளனவற்றைப் பெறுதல் செய்தலாகின்ற தன்மையையுடைய **உபாயத்தன்மை** இதில் சொல்லப் பெற்றிருப்பதைக் காணலாம்.

5. **பிரபத்யே** : அத்திருவடிகளைப் பற்றிய ஆன்மாவின் வேண்டுதலை உள்ளடக்கியுள்ள துணிவு. இஃது **ஐந்தாம்** பத்தால் உணர்த்தப் பெறுகின்றது. 'தமியேனுக்கு அருளாய்' (5-7:2) என்றும், 'ஆறு என நின்பாதமே சரணாக' (5-7:10) என்றும், 'உன்னால் அல்லால்' (5-8:3) என்றும், 'கழல்கள் அவையே சரணாகக் கொண்ட' (5-8:11) என்றும், 'நம்பெருமான் அடிமேல் சேமங்கொள் தென் குருகூர்ச் சடகோபன்' (5-9:11) என்றும், 'நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று நாடொறும், ஏக சிந்தனையனாய்' (5-10:11) என்றும் உபாயத்தன்மை பற்றிய சேதநன்மாட்டுள்ள வேண்டுதலையுட் கொண்ட துணிவு இதில் கூறப்பெற்றுள்ளது.

*6.* ***ஸ்ரீ*** : திருமகள், அவளுடைய நாயகன் இவர்களுடைய சகல ஆன்மாக்களுக்கும் கைங்கர்யத்தைக் கொடுப்பதற்குரிய நித்திய சம்பந்தம். இஃது **ஆறாம்பத்தால்** கூறப் பெறுகின்றது. 'திருமாமகளிரும் தாம் மலிந்திருந்து' (6-5:8) என்றும், 'அடிமை செய்வார் திருமாலுக்கே' (6-5:11) என்றும், 'ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்' (6-7:8) என்றும், 'என் திருமாவற்கு' (6-8:10) என்றும் 'கோலத்திருமாமகளோடு உன்னை' (6-9:3) என்றும் **இச்சம்பந்தம்** தெரிவிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம்.

**7. மதே** : கைங்கர்யத்திற்கு எதிர்த்தலையான ஈசுவரனுடைய எல்லை இல்லாத இனிமை. இஃது **ஏழாம்** பத்தால் எடுத்துக்காட்டப் பெறுகின்றது. 'கன்னலே அமுதே' (7-1:2) என்றும், 'கொடியேன் பருகு இன்னமுதே' (7-1:7) என்றும் 'அலைகடல் கடைந்த ஆரமுதே' (7-2:5) என்றும், 'திருமாலின் சீர் இறப்பு, எதிர்காலம் பருகிலும் ஆர்வனோ' (7-9:9) என்றும் 'இவ்வேழுலகை இன்பம் பயக்க' (7-10:11) என்றும் எம்பெருமானின் பரம போக்கியமாயிருக்கும் தன்மை கூறப்பெற்றிருப்பதைக் காணலாம்.

**8. நாராயண** : எல்லாப் பொருட்கும் **சுவாமியாயிருத்தல்**[2]; அஃதாவது எல்லாப் பொருட்கும் தலைவனாயிருத்தல். இஃது **எட்டாம்** பத்தால் அறியக் கிடக்கின்றது. 'அடியேன் பெரிய அம்மானே' (8-1:3) என்றும், 'விண்ணவர்கோன் நங்கள் கோனை' (8-2:2) என்றும், 'அமர்ந்த நாதனை' (8-4:10) என்றும், 'மூவுலகாளி' (8-9:5) என்றும், 'நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன்' (8-9:11) என்றும் சொல்லப் பெற்றிருப்பதைக் காணலாம்.

**9. ஆய : நித்திய கைங்கர்யம்.** இஃது **ஒன்பதாம்** பத்தால் தெரிவிக்கப் பெறுகின்றது. 'பண்டை நாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்து' (9-2:1) என்றும், 'நின் தீர்த்த அடிமைக் குற்றேவல்' (9-2:2) என்றும், 'தொடர்ந்து குற்றேவல் செய்து' (9-2:3) என்றும், 'கொடு வினையேனும் பிடிக்க' (9-2:10) என்றும், 'உறுவது இது என்று உனக்கு ஆட்பட்டு' (9-6:7) என்றும், 'நானும் மீளா அடிமைப் பணி செய்யப் புகுந்தேன்' (9-8:4) என்றும் நித்தியமாய் உளதான தொண்டு சொல்லப் பெற்றிருப்பதைக் காணலாம்.

***10. நம : கைங்கர்யத்திற்குத் தடைகளாக*** உள்ள அனைத்தும் நீங்குதல். இது **பத்தாம்** பத்தால் பகரப் பெறுகின்றது. 'துயர் கெடும்

2. சுவாமி – சொம்மையுடையவன் சுவாமி. சொம் – சொத்து, உடைமை.

கடிது' (10-1:8) என்றும், 'கெடும் இடராய' (10-2:1), என்றும், 'எழுமையும் ஏதம் சாரர்' (10-2:2) என்றும், 'தரும் நோய்வினைகள் எல்லாம்' (10-2:3) என்றும், 'இப்பிறப்பு அறுக்கும்' (10-2:5) என்றும் 'உன்தன் திருவுள்ளம் இடர் கெடும் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்றோம்' (10-3:9) என்றும், 'பிணி ஒன்றும் சாரா பிறவி கெடுத்து ஆளும்' (10-4:7) என்றும், 'பிறவித் துயர் கடிந்தோம்' (10-4:3) என்றும், 'விண்டே ஒழிந்த வினை ஆயின எல்லாம்' (10-4:9) என்றும், 'அமராவினைகளே' (10-5:9) என்றும், 'கடுநரகம் புகல் ஒழித்த' (10-6:11) என்றும், 'பிறவி கெடுத்தேன்' (10-8-3) என்றும், 'தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்' (40-8:6) என்றும், 'அந்தி தொழும்', சொல்லு (10-8:7) என்றும், 'அவவாவற்று வீடு பெற்ற' (10-10:11) என்றும் கூறப் பெற்றிருப்பதில் **கைங்கர்யத்திற்குத் தடைகளா யுள்ளவை** அனைத்தும் அடியோடு அகன்றமை சொல்லப் பெற்றிருப்பதைக் காணலாம்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் **அரிமேய[3] விண்ணகரத்திற்கு** வருகின்றோம். இந்தத் திருப்பதி திருமணி மாடக் கோயிலிலிருந்து சுமார் ஒரு பர்லாங் தொலைவிலுள்ளது. இத்திருத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் ஒருவரே மங்களாசாசனம் செய்துள்ளார்.[4] ஆழ்வார் பெற்ற அநுபவத்தையே நாமும் பெற முயல்கின்றோம்.

முதலில் நாங்கூர்ச் சூழ்நிலை அவரை எவ்வாறு கவர்ந்துள்ளது என்பதைக் காண்போம். தாழைகளும் தாமரைகளும் செங்கழுநீர்ப் பூக்களும் தடாகங்கள் தோறும் மலிந்து கண்டவிடமெங்கும் விளங்கப்பெற்றனவாய் ஆகாயத்தை அளாவிய சோலைகளையுடையது (1). எங்குப் பார்த்தாலும் புன்னை மரங்கள் காணப்பெறுகின்றன. இம்மரங்களிலுள்ள மொக்குகள் முத்துகள் போலவும், மலர்கள் பொன் போலவும் காட்சி அளிக்கின்றன. தேனைச் சொரியா நிற்கும் பலா மரங்கள் நிறைந்துள்ளன (2). மல்லிகை மலர்களும், செங்கழுநீர்ப் பூக்களும், திரள் திரளாகப் பூத்த மலர்களையுடைய சுரபுன்னைகளும், பாக்குப் பாளைகளும் செண்பக மலர்களும் மணம் வீசப்பெற்ற சோலைகள் ஊரைச் சூழ்ந்துள்ளன; இந்தச் சோலைகளின் நடுவே கரும்பு ஆடுகைக்காக ஏறின வயலில் கரும்பாலைகளின் புகை பரிமளிக்கப் பெற்றுள்ளது (4). எங்குப் பார்த்தாலும் வாத்திய ஒலிகளும், வண்டினங்களின்

3. அடியவர்களின் பாபங்களைப் போக்குவதனாலே 'ஹரி' எனப்படுகின்ற எம்பெருமான் நித்தியவாசம் செய்யப்பெற்ற தலம் என்று பெயர் பெற்றது.

4. பெரி. திரு. 3.10

ஒலிகளும், வேதம் ஓதுவார்களின் குரல் ஒலிகளும், மடவாரின் சிலம்புகளின் ஒலியும், கடல் ஒலியும் விளங்கப்பெற்றது நாங்கூர் (5). செந்நெற் பயிர்களை அறுவடை செய்யுங்கால், அவற்றைப் பிடிக்கின்ற பிடியில் தாமரைகளும் மீன்களும் சேர்ந்து பிடிபட்டு அறுக்கப்பெறுங்கால் அவற்றின்று உதிர்ந்த முத்துகள் வலைச்சியர்களால் வாரித் திரட்டப்பெறுகின்றன. நாங்கூர் அருகில் கடல் உள்ளதால் கடலலைகள் இங்கே வந்து கூடும்; அலைகளுடன் முத்துகளும் வந்து சேரும். அவை மீன்களின் வயிற்றிலே புகும்; அவை அறுவடையில் வெளிப்படுகின்றன (6). புனல் அலையெறிந்து துறைகள்தோறும் முத்துகள் தள்ளிக் கிடக்குமிடம் (7). சோலைகளில் பறவைகளின் ஒலிகளும் அப்போதலர்ந்த செவ்விப் பூக்களில் வண்டுகள் தேனைப் பருகின களிப்புக்குப் போக்கு வீடாகச் செய்யும் இன்னோசைகளும் கேட்கப் பெறுகின்றன (8). காவிரி ஆறு சந்தன மரங்களையும், அகில் மரங்களையும், நவரத்தினங்களையும் தள்ளிக்கொண்டு வந்து சோலைகளிலும் வயல்களிலும் அவற்றிற்குச் செழிப்பினை உண்டாக்குகின்றது (9).

அடுத்து ஆழ்வார் காட்டும் **நகர்வளத்தைக்** காண்கின்றோம். மிக்கப் புகழ்படைத்த வேதியர்கள் வாழ்கின்ற ஊர் திருநாங்கூர் (1). இவர்கள் சாத்திரங்களை நன்கு கற்றவர்கள்; ஆன்ம குணம் நிறைந்தவர்கள் (2). அழகிய மகளிர் நிறைந்து வாழுமிடம் (3). மனத்தாலும் வாக்காலும் பகவானது மந்திரங்களையும், நான்மறைகளையும், வேதாங்கங்களையும், மற்றுமுள்ள கலை களையும் கரைத்துக் குடித்த ஆசாரம் நிறைந்தவர்கள் வாழுமிடம் (7). கொடிகள் பொதிந்த மதில்களும், மாடமாளிகைகளும், கோபுரங்களும் நெருங்கிய மணிமயமான மண்டபங்களும், அறச்சாலைகளும், கும்பல் கும்பல்களாக அந்தணர்களும் நிறைந்திருக்கும் ஊர் (8). பரம வைதிகர்கள் சிறந்த மலர்களைக் கொண்டு எம்பெருமான் திருவடிகளே சரணம் எனக் கூறி அருச்சிக்கும் அந்தணர்கள் வாழுமிடம் (9). வேதம் ஓதுவதில் நான்முகனையும் அழகில் முருகனையும் ஒத்திருக்கும் அந்தணர்கள் நிறைந்திருக்கும் ஊர் (10).

இனி, இங்கு எழுந்தருளியிருக்கும் **எம்பெருமானின் பெருமைகளில்** ஆழங்கால்படுவோம். குற்றம் குறைகட்குக் கொள்கலனாயிருப்பவர்கள் அஞ்சிக் கிடவாமல் சேதநர்கள் எவ்வளவு அபராதங்கள் புரிந்திருந்தாலும் அவற்றை நற்றமாக எடுத்துரைக்க வல்ல பெரிய பிராட்டியாரும் அவற்றைப் பொறுப்பிக்க வல்ல பூமிப் பிராட்டியாரும் ஒரு நொடிப்பொழுதும் எம்பெருமானை விட்டுப் பிரியாமல் இருக்கும் இருப்பைப் பேசுகின்றார்.

**திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்**
**தீவினைகள் போய்அகல அடியவர்க் கென்றும்**
**அருள்நடந்து இவ்வேழுலகத் தவர்பணிய வானோர்**
**அமர்ந்தேத்த இருந்த இடம்**[5]

(திருமடந்தை . பெரிய பிராட்டியார்; மண் மடந்தை – பூமிப் பிராட்டியார்; தீவினைகள் – பாவங்கள்; அருள் நடந்து – கிருபை பண்ணி)

என்பது ஆழ்வார் வாக்கு. இங்கு சந்நிதி பண்ணியுள்ள எம்பெருமான் போர்புரிந்த இடங்களிலெல்லாம் வெற்றியே கண்டு வந்த நரகாசுரனைத் தொலைத்த திருவாழியையுடையவன்; அமரர்கள் பொருட்டு அருள்கூர்ந்து அலைகடல் கடைந்து அமுதம் எடுத்தளித்தவன்; இரத்தினம் போல் சிறந்தவன்; ஆழ்வார்க்கு அமுதம் போன்றவன் (2). உம்பரும் இவ்வேழுலகும் ஏழ்கடலும் எல்லாம் உடையபிரான்; இடையர்கள் கண்ணால் கண்டு களிப்படையும்படி குவலயாபீடத்தின் கொம்புகளைப் பிடுங்கி அவற்றால் அந்த யானையையும் பாகனையும் கொன்றொழித்துப் பின்னர் கம்சனையும் குடுமியைப் பிடித்திழுத்து மஞ்சத்தினின்றும் கீழே தள்ளிக் கிரீடம் சிதற அடித்துக் கொன்றொழித்தவன் (3). நரசிம்ம வடிவங்கொண்டு இரணியன் மார்பைத் தன் வல்லுகிரால் பிளந்துகொண்டு அவன் மகன் பிரகலாதன் திறத்துப் பேரருள் செய்த பெருமான் (4). கண்டவர்கள் மனம் களிக்கும்படி **மாவலியின்** யாக பூமியில் வாமன மாணியாகச் சென்று மூவடி மண் இரந்து பெற்று மேலுலகங்களையும் இப்பூமண்டலத்தையும் மற்றும் எல்லாவற்றையும் அளந்து கொண்ட எம்பெருமான் (5). வாள் நெடுங்கண் மலர்க்கூந்தல மைதிலிக்காக இலங்கை மன்னன் இராவணனைக் கொல்ல சிலை வளைத்த தயரதன் சேய்; ஆழ்வாரின் ஒப்பற்ற இரட்சகன்; நித்திய சூரிகளின் தலைவன் (6). தீமனத்துக் **கம்சனின்** கபடச் செய்கைக்கிணங்கக் கெட்ட எண்ணத்துடன் திரிந்து கொண்டிருந்த **தேனுகனையும்** நஞ்சு தீட்டிய முலையுடன் வந்த **பூதனையையும்** முடித்தவன். காமனைப் பயந்த[6] கரியத் திருமேனியுடைய அம்மான் (7). கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை; காமருசீர் முகில் வண்ணன். இந்திரன் பசிக் கோபத்தினால் ஏழுநாள் விடாது கல்மாரி பொழிந்தபோது கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துக் கன்றுகளையும் இடையர்களையும் காத்தருளின கோமான்; இடைச்சாதியின் மெய்ப்பாடு தோன்ற குடக்கூத்தாடியவன்; திருமங்கையாழ்வார் இத்தலத்து எம்பெருமானுக்குக் **'குடமாடு கூத்தன்'** என்றே திருநாமம் சூட்டுகின்றார் (8). பேய் வடிவை மறைத்துத் தாய் வடிவுடன் நஞ்சு தீட்டிய முலையோடு வந்த

5. பெரி. திரு. 3.10:1

6. கண்ணன் உருக்குமணிப் பிராட்டியிடம் மன்மதன் அம்சனான பிரத்தியும்னனைப் பிறப்பித்தவன்.

**பூதனையின்** பாலை அவள் உயிரோடு அமுது செய்தவன்; அந்த நஞ்சுக்கு மாற்றாகத் தயிர் வெண்ணெய் முதலியவற்றை வாரி உண்டவன்; **கம்சனுடைய** உயிர் குடித்தவன். உலகம் உண்ட பெரு வாயன் (9). வலிமிக்க ஏழுகாளைகளின் வலியடக்கி பின்னைப் பிராட்டியின் செவ்விய தோளைப் புணர்ந்துகந்த பெருமான் (10). இத்தகைய பெருமை வாய்ந்த பெருமான்தான் **அரிமேய விண்ணகரத்தில்** எழுந்தருளியிருப்பவன்.

ஆழ்வார் பெற்ற இந்த அநுபவத்தை நாமும் பெற்று திருக்கோயிலினுள் நுழைந்து கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **'குடமாடு கூத்தனை'** வணங்குகின்றோம். தாயாரின் திருநாமம் **அமிர்தகடவல்லி** என்பது. இவரையும் வணங்கி இவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். திருமங்கையாழ்வார் கூறுகிறபடி 'அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே' என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக நெஞ்சிற்கு உபதேசம் செய்கின்றோம். எம்பெருமான் சந்நிதியில் பத்துப் பாசுரங்களையும் ஓதி உளங் கரைகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாடலும் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

**வாழும் அடியார் மடநெஞ்சே நம்அளவோ**
**தாழும் சடையோன் சதுமுகத்தோன் – பாழிக்**
**கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்**
**அரிமேய விண்ணகரத் தார்க்கு.**[7]

(மடம் . அறியாமையையுடைய; வாழும் . வாழ்கின்றவர்கள்; நம் அளவோ – நாம் மாத்திரம் தானோ; தாழும் . தொங்குகின்ற; சதுமுகம் – நான்கு முகம்; பாழி – பலம் பொருந்திய; கரி – யானை (ஐராவதம்); விண்ணகரம் . உம்பர் உலகம்; காவலோன் – இந்திரன்)

என்பது பாடல். "நம்மைப் போன்ற சாமானிய மனிதர்கள்தாம் அரிமேய விண்ணகரத்தில் அமர்ந்தானுக்கு அடியவர் என்று கருதுகின்றனையா? யோகம் செய்யும் முறையை உணர்த்தியவனும் ஞானத்தைத் தரக் கூடியவனுமான சிவபிரானும் விடாது நான் மறைகளை ஓதி அவற்றின் பொருளை உணர்பவனான நான்முகனும், உம்பர் நாயகனான இந்திரனும் இவனுக்கு அடியவர்களாவர். இப்படி எல்லார்க்கும் அவனே தலைவனாதலால், வேறு தெய்வங்களிடத்தில் சிறிதும் பற்று வைக்காமல் இவனையே நம்பியிருப்பின் நமக்குத் தவறாமல் நற்கதி கிடைக்கும்" என்று தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார். இப்பாடலை ஓதும் நாமும் இதனையே நம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றோம். பரிபூரண பிரம்மாநுபவம் பெற்ற நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

7. நூற். திருப். அந். 32

# 15. வயலாளி மணவாளன்

**ஸ்ரீவசன பூஷணத்திலுள்ள** சில வாக்கியங்கள் நம் சிந்தையில் குமிழியிடுகின்றன.

**"திருமாலிருஞ் சோலைமலையே" என்கிறபடியே,
உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும்
விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்."**[1]

(உகந்தருளின நிலங்கள் - திவ்விய தேசங்கள்; சரீர ஏகதேசம் - சரீரைக தேசம் என வந்தது; வடமொழிப் புணர்ச்சி; ஏகதேசத்தில் - ஒரு கூற்றில்)

எம்பெருமான் தெற்குத் திருமலை (திருமாலிருஞ் சோலை)யையும் திருப்பாற் கடலையும் என் தலையையும் ஒக்க விரும்பா நின்றான்; வைகுந்தத்தையும் திருவேங்கடத்தையும் என் உடலையும் ஒக்க விரும்பா நின்றான் என்கின்றார் நம்மாழ்வார் (திருவாய் 10-7-8). தனக்கு விருப்பமான திவ்விய தேசங்கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை ஞானியின் உடலின் ஒரு கூறிலே பண்ணும் என்கின்றார் **பிள்ளை உலக ஆசிரியர்** மேற்குறிப்பிட்ட வாக்கியத்தில்.

மேற்கூறிய கருத்தினை அடுத்த வாக்கியத்தில் தெளிவாக்குவர்.

**அங்குத்தை வாசம் சாதனம்;
இங்குத்தை வாசம் சாத்தியம்.**[2]

(அங்குத்தை . அவ்விடம்; இங்குத்தை – இவ்விடம்; சாதனம் – அடைவதற்குத் துணையாக இரப்பது; சாத்தியம் . அதனால் அடையும் பயன்)

உகந்தருளின நிலங்களிலே விரும்பி வசிப்பது தக்க உபாயங்களாலே மக்களை அகப்படுத்திக் கொள்ளுகைக்கு. இதனால் அவ்விடத்தில் வசிப்பதைச் சாதனம் என்கின்றார். இம்மக்கள் திருந்த இவர்கள்

1. ஸ்ரீவசன பூஷ – 174   2. மேலது – 175

மனங்களிலே தாம் வசிக்கப் பெற்றதனால் அந்தத் திவ்விய தேசங்களிலே நின்று பண்ணின கிருஷியின் பலமாகையால் இவ்விடத்தில் வசிப்பதைச் சாத்தியம் என்கின்றார். சாதனத்தையும் சாத்தியத்தையும் ஆழ்வார்கள் பாசுரங்களில் கண்டு மகிழலாம்.

**நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருஎவ்வுள்**
**நாகத்தணை அரங்கம் பேர்அன்பில் – நாகத்து**
**அணைப்பார் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்**
**அணைப்பார கருத்தன் ஆவான்.[3]**

(நாகத்து அணை – திருவனந் தாழ்வானாகிய படுக்கை; அணைப்பார் – எம்பெருமானோடு அணைந்தே இருக்க வேண்டும் என்ற ஆசையுடையார்; ஆவான் – ஆவதற்காக)

என்பது **பக்திசாரரின்** திருவாக்கு. ஈண்டு குடந்தை, வெஃகா போன்ற இடங்களில் கிடத்தல் சாதனம்; கருத்தன் ஆதல், அதாவது அன்பருடைய நெஞ்சில் புகுந்தவனாக ஆதல் சாத்தியம்.

**மலைமேல் தான்நின்று என்மனத்துள் இருந்தானை**
**நிலைபேர்க்கல் ஆகாமை நிச்சித்து இருந்தேனே.[4]**

(மலை – திருமலை; நிலை பேர்க்கல் ஆகாமை – இந்நிலையில் நின்றும் மாற்ற வொண்ணாமை; நிச்சித்து இருத்தல் – உறுதியாக எண்ணுதல்)

என்பது நம்மாழ்வாரின் அருளிச் செயல். இங்கு மலைமேல் நிற்றல் சாதனம்; என் மனத்துள் இருத்தல் சாத்தியம்.

**விஷ்ணு சித்தர்** என்ற பெரியாழ்வாரும்,

**பனிக்கடலில் பள்ளிக்கோளைப்**
**பழகவிட்டு ஓடிவந்து, என்**
**மனக்கடலில் வாழவல்ல**
**மாயமணாள நம்பீ.[5]**

(பனிக்கடல் – குளிர்ந்த திருப்பாற்கடல்; பள்ளிக்கோள் – பள்ளி கொள்ளுதல்; பழகவிட்டு – பழகும்படி விட்டு; மனக்கடல் – இதயமாகின்ற கடல்)

என்று கூறுவர். தன்னுடைய இன்பகரமான இடங்களைத் துறந்துவிட்டு எம்பெருமான் என் நெஞ்சையே தன்னுடைய இடமாக அங்கீகரித்தருளினான்'' என்று பேசுகின்றார் ஆழ்வார்.

மேற்குறிப்பிட்ட சாதனம் காரணமாகவும் சாத்தியம் காரணமாகவும் வருகின்ற ஆசையின் உயர்வு தாழ்வுகளையும் விளக்குவர் **பிள்ளை உலக ஆசிரியர்.**

**'கல்லும் கனைகடலும்' என்கிறபடியே, இது சித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும்.[6]**

3. நான். திருவந். 36
4. திருவாய். 10.4:4
5. பெரியாழ். திரு. 5.4:9
6. ஸ்ரீவச. பூஷ – 176

(ஆதரம் – ஆசை; மட்டம் – குறைவு)

இந்த வாக்கியம்,

> **கல்லும் கனைகடலும் வைகுந்த வான்நாடும்**
> **புல்என்று ஒழிந்தனகொல்? ஏபாவம் – வெல்ல**
> **நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான்**
> **அடியேனது உள்ளத்து அகம்**[7]

(கல் – திருமலை; திருமாலிருஞ்சோலை மலை; கனைகடல் – திருப்பாற்கடல்; வான்நாடு . வானுலகம்; புல்என்று – அற்பமாய்; ஏபாவம் . ஐயோ, பாவம்.)

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தை உட்கொண்டதாகும். எம்பெருமானுக்குப் பரமபதத்திலும், திருப்பாற்கடலிலும், கோயில் திருமலை, பெருமாள் கோயில் முதலான உகந்தருளின இடங்களிலும் இருப்பதிற் காட்டிலும் மெய்யடியாருடைய இதயத் தாமரையில் வாழ்வதே சிறந்தது என்றும், சமயம் பார்த்து அன்பர்களின் நெஞ்சில் வந்து சேர்வதற்காகவே இவ்விடங்களில் வந்து தங்குகின்றான் என்றும் கொள்வர் நம்மாழ்வார். இவ்விடங்களில் தங்குவது **உபாயம்.** அன்பர்களின் இதயத்தில் தங்குவது **புருஷார்த்தம்**. பின்னது சாத்தியமாகிவிட்டால முன்னவற்றில் வாசம் செய்வதில் ஆதரம் மட்டமாய்விடும் என்பது **பிள்ளை உலக ஆசிரியரின்** கருத்தாகும்.

இந்த எண்ணங்கள் நம்மனத்தில் குமிழியிட்ட வண்ணம் மயிலாடுதுறையில் உள்ள காளியாக்குடி தங்கும் விடுதியிலிருந்து திருவாலி - திருநகரியை நோக்கிப் பயணமாகின்றோம். மயிலாடுதுறையினின்றும் திருவெண்காடு செல்லும் சில பேருந்துகள் திருநகரியைத் தொட்டுவிட்டுச் செல்லும். இவற்றில் ஒன்றின் மூலம் திருநகரியை வந்தடைகின்றோம். திருநகரிக்கும் திருவாலிக்கும் இடையே சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. திருநகரி எம்பெருமானுக்கு நாற்பது வேலி நிலம் இருப்பதாகச் சொல்லுகின்றனர். நாடோறும் **பத்து அடியார்கட்குத்** திருவமுது படைக்கின்றார் ஆழ்வார். திருநகரியிலுள்ள திருக்கோயிலில் **திருமங்கையாழ்வாருக்கும் குமுதவல்லித் தாயாருக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன.** தவிர, திருமங்கையாழ்வார் வயிரவாளுடன் புரவிமேல் இவர்ந்த நிலையிலுள்ள வாகனக் காட்சி கண்கொள்ளக் காட்சியாக அமைந்துள்ளது. இங்குள்ள எம்பெருமான், தாயார், திருமங்கையாழ்வார், குமுதவல்லித் தாயார் இவர்களைச் சேவிக்கின்றோம். நாம் வந்த நாள் **ஏகாதசியாக** இருந்ததால்

7. பெரி. திருவந். 68

திருக்கோயிலில் உப்புமா, தேங்காய்த் திருகல் இவை பிரசாதங்களாகக் கிடைக்கின்றன. திருக்கோயிலுக்குப் பின்புறத்தில் நரசிம்மர் சந்நிதி ஒன்று உள்ளது. அங்குச் சென்று அவரையும் சேவித்து அவர்தம் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம்.

திருக்கோயிலுடன் தொடர்புடைய **வைணவர் ஒருவர்** திருநாங்கூர் தலங்கள் சிலவற்றை ஒருசேரச் சென்று சேவிப்பதற்கு மாட்டு வண்டி அமர்த்தித் தருகின்றார். உணவு விடுதிகள் இல்லாத ஊரில் திருவமுதும் படைக்கின்றார். உணவுக்குப் பிறகு திருவாலியை நோக்கி வருகின்றோம். இந்தத் தலத்து எம்பெருமானைத் **திருமங்கையாழ்வாரும் குலசேகராழ்வாரும்** மங்களாசாசனம் செய்துள்ளனர். குலசேகராழ்வார் கணபுரத்துக் கருமணியை தாலாட்டுப் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யும் பொழுது ஒரு பாசுரத்தில்,

**ஆலிநகர்க்கு அதிபதியே**[8]

என்று குறிப்பிடுகின்றார். திருமங்கையாழ்வார் தானான தன்மையில் ஒரு திருமொழியிலும்[9] பிராட்டி நிலையை ஏறிட்டுக் கொண்டு இரண்டு திருமொழிகளிலும்[10] வயலாளி மணவாளனைச் சேவித்து மகிழ்கின்றார். இவற்றைத் தவிர, பெரிய திருமொழியில் ஒன்பது திருப்பாசுரங்களிலும்[11] திருநெடுந்தாண்டகம் (12) சிறிய திருமடல் பெரிய திருமடலிலும் இந்த எம்பெருமானைக் குறிப்பிடுகின்றார். இந்த வயலாளி மணவாளன்தான் தன்னை வழிப்பறிக்குமாறு அந்தண வடிவுகொண்டு பல ஆபரணங்களைத் தரித்து மணவாளக் கோலமாய் மனைவியுடனே எழுந்தருளின தாகவும், ஆழ்வார் இவர்களைத் திருமணங் கொல்லையில் திருவரச மரத்தடியில் பதுங்கியிருந்து அவர்களை வளைத்து வழிப்பறி செய்ததாகவும் பின்னர் எம்பெருமான் சகலவேத சாரமான எட்டெழுத்து மந்திரத்தை இவர் செவியில் உபதேசித்துக் கருடன்மேல் எழுந்தருளி இவருக்குச் சேவை சாதித்தாகவும் வரலாறு.

வண்டியில் வந்து கொண்டிருக்கும்போதே **ஊர்ச் சூழ்நிலை** நம் கண்வட்டத்தில் படுகின்றது. சோழவளநாடு அல்லவா? 'புல்லி வண்டறையும் பொழில் புடை சூழ் தென்ஆலி' (3-5:10)என்று சோலை வளத்தைப் பேசுகின்றார் ஆழ்வார். அசோக மரத்தின் இளந்தளிர்கள்

8. பெரு. திரு. 8.7
9. பெரி.திரு. 3.5
10. மேலது. 3.6; 3.7
11. மேலது. 2.4:1, 4.9:2, 6.8:2, 8.9:6,8, 10.1:3, 11.3:9, 11.7:3, 11.8:6

எல்லாவிடங்களிலும் பரவி இருப்பதனால் எங்கும் செந்தழல் பரவியிருப்பது போன்ற காட்சி தருகின்றன (3-5:1). புன்னை மரங்களும் சுரபுன்னை மரங்களும் பொருந்தியிருக்கின்றன சோலைகளில்; அங்குள்ள விசாலமான தடாகங்களில் அன்னங்கள் தங்கி வாழ்கின்றன (4). புன்னை ஞாழல் மரங்களின் நிழலில் குளிர்ந்த தாமரைப் பூவின்மீது ஆண் நண்டுகள் தங்கியிருக்கின்றன (7). இளவண்டுகள் செண்பகப் பூவையும் மல்லிகைப் பூவையும் தழுவி அவற்றை விட்டு நீங்கித் தென்னை மரங்களின் பாளைகளில் உள்ள தாதினை அளைகின்றன (8). கருப்பஞ்சாறு அட்ட புகை காளமேகம்போல் எங்கும் பரவி மணம் வீசுகின்றது; சோலைகளி லுள்ள மயில்கள் அப்புகைத் திரளை மேகத்திரளாக மயங்கிக் களித்துக் கூத்தாடுகின்றன (2). அலையெறிகின்ற நீர்வளம் பொருந்திய வயல்களில் செந்நெற் பயிர்களை அறுப்பவர்களின் முகத்தில் மீன்கள் குதித்துப் பாய்ந்து கருப்பஞ் சோலைகளில் சென்று சேர்கின்றன (3). துதிப் பாடல்களின் மதுரமான ஓசையும், சங்குகளின் முழக்கமும், பலவேறு வகைப்பட்ட இசைக் கருவிகளின் ஒலியும், மாதர்களின் நடன ஒலியும் நீங்காதிருக்கப் பெற்றது திருவாலி (5). சந்தியா வந்தனம் முதலிய நித்திய கருமங்கள் இவற்றைத் தெரிவிக்கும் வேதங்களைத் தொன்றுதொட்டு ஓதியும் ஓதுவிடத்தும் வரும் அந்தணர்கள் நிறைந்திருப்பது இத்திவ்வியதேசம் (6).

இயற்கைச் சூழலில் ஈடுபட்டிருக்கும் நம் மனம் ஆழ்வாரின் **இறையநுபவத்தைப்** பற்றிச் சிந்திக்கின்றது. எம்பெருமான், தன்னை இவ்வாழ்வார் நினையாதிருந்தும், தானாகவே இவரைப் பொருட்படுத்தி இவருடைய நெஞ்சிலே வந்து குடிகொண்டான். தன்னையொழிய வேறொன்றிலும் நெஞ்சு பட்டி மேயாதபடி ருசியையும் பிறப்பித்தான். ஒரு நொடிப் பொழுதாகிலும் இறைவனை விட்டுப் பிரிந்தால் பிழைக்க முடியாது என்ற நிலையையும் பிறப்பித்தான். இதை எண்ணிய ஆழ்வார், "இனி நான் உன்னைப் போக விடேன்; என் நெஞ்சிலேயே நிரந்தரமாகக் குடியிருந்து ஒழிவில் காலமெல்லாம் அடிமை கொண்டருள வேண்டும்" என்கின்றார். இதனைப் பாசுரங்கள் தோறும் பன்னியுரைக்கின்றார்.

**வந்துனது அடியேன் மனம்புகுந்தாய்;**
**புகுந்ததன்பின், வணங்கும்என்**
**சிந்தனைக்கு இனியாய்**[12]
(வணங்கும் – வணக்கமுற்ற)

12. பெரி. திரு. 3.5:1

**நீலத் தடவரை மாமணி நிகழக்**
**கிடந்ததுபோல் அரவுஅணை**
**வேலைத்தலைக் கிடந்தாய்; அடியேன்**
**மனத்து இருந்தாய்.**[13]

(வரை – மலை; நிகழ – விளங்க; வேலை – திருப்பாற்கடல்)

**புந்தியேன் மனத்தே புகுந்தாயைப்**
**போகல் ஒட்டேன்.**[14]

என்று பலவாறு உரைத்துள்ளதைக் கண்டு மகிழ்க. பாசுரந்தோறும் **'திருவாலி அம்மானே'** என்று ஆழ்வார் விளித்து மகிழ்வதையும் கண்டு அநுபவிக்கலாம்.

கீழே கண்ட மானச அநுபவம் முதிர்ந்து உண்மையான நேர்க்காட்சி போன்று வளர்ந்து விடுகின்றது. ஆற்றாமையும் மீதூர்ந்து விடுகின்றது. கரைபுரண்ட ஆற்றாமையால் ஆழ்வார் தலைவனோடு கலந்து பிரிந்த ஒரு பிராட்டியின் நிலையை ஏறிட்டுக்கொண்டு **பரகால நாயகியாகி** அந்நிலையில் பேசுகின்றார்.[15] எம்பெருமான் விரைந்து மீண்டு வரக் காணாமையாலும், அவனைப் பிரிந்து தான் ஆற்றியிருக்க இயலாமையாலும், தானே அவன் இருப்பிடம் நோக்கிச் செல்லுவதற்கு இயலாதவாறு தன் மேனி மெலிந்து கிடப்பதாலும், கண்ணிற்பட்ட வண்டு, குருகு முதலிய பறவைகளைத் தூது விடுகின்றார். அஃதாவது ஆழ்வார் ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவே உடையவரான சில மகான்களைத் தம்மை எம்பெருமான் பக்கல் சேர்ப்பதற்குரிய ஆசாரியராக வரித்து அவர்களை நோக்கிச் சொல்லுகின்றார் என்று கொள்க.

கீழ்க்கூறிய கருத்து **ஆசாரிய ஹிருதயம்** கூறும் கருத்தினையொட்டியது. பறவைகளைத் தூது விடுவதற்குரிய உட்பொருளை இந்நூல்,

**சேர்ப்பாரைப் பட்சிகளாக்கி, ஜ்ஞான கர்மங்களைச் சிறகு என்று, குருஸப்ரமசாரி புத்ர சிஷ்ய ஸ்தானே பேசும்.**[16]

(ஸப்ரமசாரி – ஒருசாலை மாணாக்கர்; ஸ்தானே – இடத்தில்)

என்று குறிப்பிடும். "விண்ணோர் பிரானார், மாசுஇல் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே"[17] என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்துள்ளமையால் பகவத் விஷயத்தில் கொண்டு சேர்க்குமவாகள் பறவைகளாகக் கொள்ளப்பெறுவர். **இரண்டு சிறகுகளைக்** கொண்டு

13. பெரி. திரு. 3.5:2
14. பெரி. திரு. 3.5:6
15. இதனை 'மகள்பாசுரம்' என்று வழங்குவர்
16. ஆசா. ஹிரு – 150
17. திருவிருத் – 55

பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ அங்ஙனமே **ஞானம், ஒழுக்கம்** (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப் பெறுகின்றான் என்பது ஆன்றோர் கொள்கை.

இங்கு **ஓர் ஐதிகம்: நஞ்சீயர்,** நோய்வாய்ப்பட்டு இருக்கையில் அவர்தம் சீடர்களில் ஒருவரான **பெற்றி** என்பவர் விசாரிக்கச் சென்று உரையாடுகையில் 'இப்போது சுவாமிக்கு என்ன திருவுள்ளம்?' என்று கேட்க, அதற்கு நஞ்சீயர் '**தூவிரிய மலருழக்கி**'[18]த் திருப்பாசுரங்களைக் காதாரக் கேட்கவும், பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து சேவிக்கவும் விருப்பமாயுள்ளது' என்று அருளிச் செய்தார். உடனே **வரந்தரும் எம்பெருமாளரையர்** என்பவரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து இத்திருமொழியைச் சேவிக்கச் சொல்லிக் கேட்டருளா நிற்கையில், **நான்காம்** பாசுரத்தில்,

**தானாக நினையானேல்**
**தன்னினைந்து நைவேற்குஓர்**
**மீனாய கொடிநெடுவேள்**
**வலிசெய்ய மெலிவேனோ?**

(தானாக – அவன் தானாகவே; நினையானேல் – என்னை நினையாதிருந்தாலும்; தன்நினைந்து – அவனையே நினைத்துக் கொண்டு; நைவேற்கு . மனம் தளர்ந்திருக்கும் என்னை; ஓர் மீனாய... நெடுவேள் – மன்மதன்; மெலிவேனோ – இளைத்துப் போவேனோ.)

என்னும் அளவில் வந்தவாறே '**நோவுபடுவதற்கு முன்பே**' வந்து உதவாமற் போனாலும் நேர்ந்த **நோயைப் போக்குவதற்காகிலும்** வந்தாலாகாதோ? என்றருளிச் செய்து மிகவும் தளர்ந்து வருந்தினார் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. ஆகவே, இத்திருமொழி பகவத் காமுகர்களை நன்கு உருக்கும் என்பது வெள்ளிடை மலை.

**பரகால நாயகி** வண்டை நோக்கிப் பேசுகின்றாள் (மூன்று பாசுரங்களில்)

**தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே**
**பூவிரிய மதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே**
**தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி**
**ஏவரிவெஞ் சிலையானுக்கு என்நிலைமை உரையாயே.**[19]

(தூ . சிறகு; உழக்கி – மிதித்து; விரிய – மலர; மதுதேன்; பொறி – புள்ளி; வரி . ரேகை; விரிய அக்நி காரியங்கள் விசாலமாகப் பரவும்படி)

இப்பாசுரத்தில் **வண்டுகளை வைணவர்களாகக்** கொள்ளுதல் வேண்டும். 'என் நிலைமை உரையாயே' என்பதில் உரையாயே

18. பெரி. திரு. 3.6 19. பெரி. திரு. 3.6:1

என்பதற்குப் **பெரியவாச்சான் பிள்ளை** அவர்களின் வியாக்கியானம். "கொடு வரவேண்டா; அறிவிக்கு மித்தனையிறே வேண்டுவது. வருகை அவன் பணியே; வாரா தொழியுமன்று ரட்கனுக்குக் குறையாமே. நீங்களறிவித்த அநந்தரம் (உடனே) உங்கள் பேச்சுக் கேட்டுத்தானே வாரா நிற்கும்" என்பது. அடுத்த பாசுரத்திலும்,

**அறுகால சிறுவண்டே**
**மணிகழுநீர் மருங்கலரும் வயலாளி மணவாளன்**
**பணியறியேன் நீசென்றுஎன் பயலைநோய் உரையாயே.**[20]

(மணி – அழகிய; கழுநீர் – செங்கழுநீர்ப் பூக்கள்; மருங்கு – நாற்பக்கத்திலும்; பணி . செய்தி; பயலை – பசலை)

என்று வண்டினை நோக்கியே பேசுகின்றாள் பரகாலநாயகி. ஈண்டு 'அறுகால சிறுவண்டே' என்பதற்கு 'இரண்டு காலாகவும் நான்கு காலாகவும் இன்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக அறுகால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்னே' என்று வியந்து கூறுவதாகச் சில ஆசார்யர்கள் பொருள் கூறினராம். இப்பொருளில் சிறப்பேதும் இல்லை; வண்டு செல்வதற்குச் சிறகேயன்றி கால்கள் அல்ல. இதற்குத் திருநெடுந்தாண்டகத்தில் (26) 'அறுகால சிறுவண்டே தொழுதேன் உன்னை' என்ற விடத்தில் **பட்டர்** அருளிச் செய்த பொருள் நயஞ்செறிந்தது. அவர் கூறுவது : "வண்டே, நீ எம்பெருமான் பக்கல் சென்று என் நிலைமையை விண்ணப்பம் செய்து அவனது அருளைப் பெற்று மீண்டு வந்தாயாகில் நீ செய்த பேருபகாரத்திற்குத் தோற்று உன் திருவடிகளை நான் தலைமேல் அணிந்து கொள்வேன்; அப்போது என் தலை நிறைந்திருக்கும்படி உனக்கு ஆறுகால் உண்டாயிருக்கப் பெற்றது பரமபாக்கியம் என்கின்றாள்" என்பது. உள்ளுறைப் பொருளில், **புருஷகார கிருத்யம்**[21] செய்யும் பாகவதர்களே வண்டின் இடத்தில் நிற்பதால் பாகவதர்களின் திருவடிகள் உத்தேச்யமாகக் குறையில்லை. இவ்விடத்தில,

**எம்கானல் அகம்கழிவாய் இரைதேர்ந்திங் கினிதமரும்**
**செங்கால மடநாராய்! திருமூழிக் களத்துஉறையும்**
**கொங்குஆர்பூந் துழாய்முடிஎம் குடக்கூத்தர்க் கென்தூதாய்**
**நுங்கால்கள் என்தலைமேல் கெழுமீரோ நுமரோடே.**[22]

(கானல் – கழி; தேர்ந்து – தேடி; கால – காலையுடைய; கொங்குஆர் – தேன் மிகுந்த; நுமர் – உன்னைச் சேர்ந்தவர்)

என்ற தேனினும் இனிய திருவாய்மொழிப் பாசுரத்தையும் சிந்திக்க வேண்டியது.

20. பெரி. திரு. 3.6:2
21. உதவி செய்பவரின் செயல்
22. திருவாய். 9.7:1

இன்னொரு பாசுரததிலும்,

**தேன்வாய வரிவண்டே திருவாலி நகராளும்**
**ஆன்ஆயற் கென்னுறுநோய் அறியச்சென் றுரையாயே.**[23]
(தேன்வாய – தேன்போல் இனிய வாய்ப்பேச்சு; வரி . ரேகை)

என்று வண்டை நோக்கிப் பேசுகின்றாள் பரகாலநாயகி. 'தேன்வாய வரிவண்டே' ஆபத்துக் காலத்தில் மதுரமான பேச்சுப் பேசுபவனன்றோ நீ? பிராட்டி அசோகவனத்தில் அசோக மரத்தில் மயிர் முடியைப் பிணைத்து உயிர் மாய்க்கப் புகுந்தபோது ஒருவன் இனிமையாகப் பேச்சுப் பேசி உயிர் பெறச் செய்ததுபோல உதவுபவனன்றோ நீ?' என்று புகழ்ந்து கூறுகின்றாள். 'திருவாலி நகராளும் ஆனாயற்கு!' இதற்குப் **பெரியவாச்சான் பிள்ளை** வியாக்கியானம்: "திருவாய்பாடியின் சம்பத்தோடே திருவாலியின் சம்பத்தையும் கையடைப்பாக்கினால், பின்னை அவனுக்கு, நொந்தாரை ஐயோவென்ன அவசரமுண்டோ?" என்று. அர்ச்சாவதாரத்தின் ஐசுவரியமும், விபவாவதாரத்தின் ஐசுவரியமும் ஒரு மடை கொண்டிருக்கும் என்பது தோன்ற மூலம் இருக்கும் அழகை அறிந்து இன்சுவை மிக்க வியாக்கியானம் இட்ட அழகை அநுபவித்து மகிழவேண்டியது.

அடுத்து **நாரையைத்** தூது விடுகின்றாள் ஆழ்வார் நாயகி. குருகை நோக்கி, "குறிப்பறிந்து கூறாயே"[24] என்கின்றாள். "அவனுடைய திருவுள்ளத்தை அறிந்து வந்து என்னிடம் சொல்க" என்ற பொருள் தவிர, வேறொரு பொருளும் சொல்லலாம். அதாவது "நான் உனக்குத் தூது சொல்லும் வார்த்தையை அவனிடம் சென்று திடீரென்று சொல்லிவிடாதே; எந்தச் சமயத்தில் சொன்னால் பலிக்குமோ அந்தச் சமயத்தில் சொல்ல வேண்டுமாதலால் அந்தக் குறிப்புத் தெரிந்துகொண்டு என் வார்த்தையை அவனிடம் சொல்க" என்பதாகும். "நான் ஆற்றாமையாலே கண்ணாஞ் சுழலையிட்டுச் சொன்னவற்றையெல்லாம் அங்குச் சொல்லாதே. அவன் தரிக்கும்படி அளவறிந்து வார்த்தை சொல் என்றுமாம்" என்ற **பெரியவாச்சான் பிள்ளையின்** வியாக்கியானப் பகுதியின் சுவை அநுபவித்து மகிழத்தக்கது.

இத்திருமொழியில் இந்த நான்கு பாசுரங்களே தூதுரைப்பன; அடுத்த பாசுரங்கள் யாவும் எம்பெருமானை நோக்கி தன் ஆற்றாமையைத் தானே சொல்லிக் கதறுவனவாக அமைந்துள்ளன. ஒரு பாசுரத்தில்,

23. பெரி. திரு. 3.6:4 24. பெரி. திரு. 3.6:3

**... திருமெய்ய**
**மலையாளா நீயாள வளையாள மாட்டோமே.**[25]

(ஆளா – ஆளுபவனே; நீ ஆள – உன்னுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்குமளவில்; வளை ஆள மாட்டோமே – கையில் வளை தங்காமல் துன்பப் படவேண்டியதே.)

என்று நைந்து வருந்துகின்றார். 'நீ ஆள வளையாள மாட்டோமே' உன்னுடைய ஆளுகையில் அடங்கியிருப்பார்க்கு (அதாவது உன்னுடைய துணைவியராக இருப்பார்க்கு) கையில் வளை தங்கியிருக்கப் பிராப்தியுண்டோ? என்கை. விட்டுப் பிரியாமல் கூடியிருக்குங் காலத்திலோ மகிழ்ச்சி மிகுதியினால் உடம்பு பூத்து வளை வெடித்துப்போம்; பிரிந்த காலத்திலோ உடல் இளைத்து வளை கழன்றொழியும்; ஆகவே, ஒருபோதும் வளை தங்கியிருக்கப் பிராப்தி இல்லை என்னலாம். இவ்விடத்தில் ஓர் **இதிகாசம்; அம்மங்கியம்மாள்** என்னும் ஓர் ஆசிரியர் நோயால் துன்புற்றிருந்தார். **நஞ்சீயரும் நம்பிள்ளையும்** அவரைக் கண்டு விசாரிக்க எழுந்தருளியிருந்தனர்; அப்போது அவர் மிகவும் மனம் நொந்திருப்பதைக் கண்டு, "சுவாமி, தேவரீர் சாமானிய மனிதரன்றே; எவ்வளவோ பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணியிருக்கின்றீர்; குணாநுபவத்தாலல்லது போது போக்கியறியீர்; இப்படிப்பட்ட உம்மையும் எம்பெருமான் மற்றவர்களைப் போலவே இப்படித் துன்புறுத்துகின்றானே;" என்றாராம். அதற்கு அவர் **"நீயாள வளையாள மாட்டோமே"** என்பதல்லவா கலியன் பாசுரம்; எம்பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டால் துன்பப்பட்டுத்தானே இருக்க வேண்டும்" என்றாராம். பிறகு வெளியில் எழுந்தருளின **நஞ்சீயர் நம் பிள்ளையை நோக்கி**, "பார்த்தீரா இவருடைய அத்யவசாயத்தை (எண்ணத்தை); என்ன பாசுரம் எடுத்துக் காட்டினார்" என்று அருளிச் செய்து மகிழ்ந்தனராம்.

அடுத்த திருமொழி **தாய்ப் பாசுரமாகச்** செல்லுகின்றது. ஆழ்வார் நாயகி தன்னை நோக்கிக் கதறுவதை அறிந்த **வயலாளி மணவாளன்** மனம் இரங்கி பரகால நாயகியைத் தாய்மார் முதலானோர் அறியாமல் உடன் போக்கில் கடத்திச் சென்றுவிட்டான். மகளின் படுக்கைத் தலையில் படுத்துக் கொண்டு உபசாரங்கள் பண்ணிக் கொண்டிருந்த திருத்தாயார் ஆயாசத்தால் சற்றுக் கண்ணயர்ந்தபோது இந்நிகழ்ச்சி நேரிட்டு விடுகின்றது. இருவர் நிலையையும் நன்கு அறிந்தவளாகையால் எம்பெருமானே இவளைக் கடத்திக்கொண்டு போயிருக்க வேண்டும் என்று அறுதியிட்டுப் பேசுகின்றாள் திருத்தாயார்.

25. பெரி. திரு. 3.6:9

**கள்வன்கொல் யானறியேன்**
**கரியான்ஒரு காளைவந்து**
**வள்ளிமருங்குல் என்றன்**
**மடமானினைப் போதவென்று**
**வெள்ளிவளைக் கைப்பற்றிப்**
**பெற்றதாயரை விட்டகன்று**
**அள்ளலம் பூங்கழனி**
**அணியாலி புகுவர்கொலோ.**[26]

(காளை – இளையவன்; வள்ளி – கொடி; மருங்குல் – இடை; மடமான் – இளமான்; போத என்று – வாவா என்று அழைத்து; அள்ளல் – சேற்றுநிலம்)

திருத்தாயார் சொல்லத் தொடங்கும்போதே **'கள்வன் கொல்'** என்று எம்பெருமானைக் கள்ளனாகச் சங்கித்துச் சொல்லுகின்றாள். சாத்திரங்களில் சேதநன் கள்வனாகச் சொல்லப் பெறுகின்றான். எம்பெருமானுக்கே உரிமைப்பட்டதான ஆன்மாவைத் தனக்குரியதாகவும் பிறருக்குரியதாகவும் கருதுகின்ற சேதநன் **'ஆன்மாபகாரக் கள்ளன்'** எனப்படுகின்றான். தன் உடைமையைத் தான் கைக்கொள்ளுகின்ற பெருமானைக் கள்வன் கொல் என்று சொல்லப்பெறுகின்றது.

**செஞ்சொற் கவிகாள் உயிர்காத்து**
**ஆட்செய்மின்; திருமா லிருஞ்சோலை**
**வஞ்சக் கள்வன் மாமாயன்** **(திருவாய். 10–7–1)**

என்று நம்மாழ்வாரின் கூற்றையும் நோக்குக.

**வயலாளி மணவாளன் பரகால நாயகியைக்** கவர்ந்து செல்கின்றதாகச் சொல்லுகின்ற இச்செய்தி பலரும் அறியக் கவர்ந்து சென்றமையைக் கூறுகின்றதா? அன்றி, எவரும் அறியாமல் கவர்ந்து சென்றமையைக் குறிப்பிடுகின்றதா? என்ற வினாக்கள் எழுகின்றன. மகளைத் தாய் அணைத்துக்கொண்டு கிடக்கையில் தனியாக வந்து கவர்ந்து சென்றதாகப் **பிள்ளையமுதனார்** பொருள் கூறினாராம். அதைப் **பராசரப்பட்டர்** கேட்டருளி "அங்ஙனம் வேண்டா; பலரும் கண்டு கொண்டிருக்கையில் தீவட்டிக் கொள்ளைக் கள்ளர் கொள்ளை கொண்டு போமாப்போலே கொண்டுசென்றதாகக் கொள்வது எளிது" என்று அருளிச் செய்தனராம்.

திருவாய்மொழியில் "உண்ணும் சோறு பருகும் நீர்" (திருவாய் 6-7) என்கின்ற திருவாய்மொழியின் போக்கும் இத்திருமொழியின்

26. பெரி. திரு. 3.7:1

போக்கும் ஒருபுடை ஒத்திருக்கும். திருவாய்மொழியில் **பராங்குச நாயகி** தானாகவே எம்பெருமான் உறையுமிடமான திருக்கோளூரை விசாரித்துக்கொண்டு புறப்பட்டுப் போகின்றாள். இத்திருமொழியில் எம்பெருமானே வந்து **பரகால நாயகியை** அழைத்துக்கொண்டு செல்கின்றான். இவ்வளவே வேற்றுமை.

ஒரு சமயம் **ஆளவந்தார்** குழுவில் இவ்விரண்டு திருப்பதிகங்களைப் பற்றி ஆராய்ச்சி நடைபெற்றது. **"உண்ணும் சோறு"** திருவாய்மொழியிலும் மகள் தாயை விட்டுச் சென்றாள்; **கள்வன்கொல்** திருமொழியிலும் மகள் தாயை விட்டுச் சென்றாள்; இந்த இருவருவள் எந்த மகளுக்காகத் தாய் அதிகம் கவலைப்படவேண்டும்? - என்பதாக. அப்போது அங்கிருந்த முதலிகள், 'பரகால நாயகி தனித்துச் செல்லவில்லை; நெடுமால் துணையாப் போயின பூங்கொடியாள்' *(3-5-10)* என்கையாலே தலைவனாகின்ற துணையுடன் சென்றிருக்கின்றாள்; ஆகையால் அவளைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. **பராங்குச நாயகி** அப்படி துணையுடன் செல்லாமல் துணைவன்பால் தனியே சென்றாளாகையால் அவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியுள்ளது" என்றார்கள்.

இதனைக் கேட்ட **ஆளவந்தார்**, "இப்படிச் சொல்லலாகாது; பராங்குச நாயகி தனியே சென்றாளாகிலும்தான் நினைத்தவிடத்திற்குப் போய்ச் சேரவேண்டும் என்னும் ஆவலினால் எப்படியாவது விரைவிற்சென்று சேர்ந்து விடுவாள்; வழியில் தங்கி அபாயங்களுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்வதற்குக் காரணம் இல்லை. ஆனது பற்றியே "திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே"[27] என்று ஐயமின்றி அறுதியிட்டுச் சொல்லப் பெற்றது அங்கு. ஆகையால் அவளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய தில்லை. **பரகால நாயகியும்** அப்படித் தனியே சென்றிருப்பாளாகில் அவளும் தனக்கு உத்தேச்யமான திருவாலியிலே சென்று சேர்ந்தே தீருவள்; 'திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருவாலியே' என்று தாயும் உறுதியாகக் கூறியிருப்பாள்; அவளைப் பற்றியும் கவலைப்பட வேண்டாதிருக்கும். அங்ஙன் அன்றியே தம்பதிகளாய்ச் செல்லுகையால் நாயகனுடைய வடிவழகில் ஈடுபட்டு நாயகி பைத்தியம் பிடித்தும், நாயகியின் வடிவழகில் ஈடுபட்டு நாயகன் பைத்தியம் பிடித்தும் இப்படி இருவரும் பித்தம் தலைக் கொண்டவர்களாய்ப் போக நேருமாகையால் உத்தேச்யமான

27. திருவாய். 6.7:1

**திருவாலியில்** சென்று சேர்வர் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. திருவாலியிற் சென்று சேர்வர்களோ அன்றியே ஒருவருக்கொருவர் பைத்தியம் பிடித்தவர்களாகச் சென்று இலங்கை போன்ற விரோதிகளின் இருப்பிடத்தில் சென்று சேர்வார்களோ? என்று ஐயுற்றுக் கவலைப்பட வேண்டியுள்ளது. இது தோன்றவே '**அணியாலி புகுவர் கொலோ?'** என்று ஐயம்படவே சொல்லப்பட்டிருப்பதைக் காண்மின்' என்றருளிச் செய்தனராம். ஆகவே, இத்திருமொழியின் ஒவ்வொரு பாசுரத்திலும் '**ஆலிபுகுவர் கொலோ?'** என்று ஐயமாகவே சொல்லியிருப்பது பொருந்தும்.

பெரியாழ்வார் திருமொழியிலும்,

**நல்லதோர் தாமரைப் பொய்கை**
**நாண்மலர் மேல்பனி சோர,**
**அல்லியும் தாதும் உதிர்த்திட்டு**
**அழகழிந் தால்ஒத்த தாலோ**
**இல்லம் வெறியோடிற் றாலோ**
**என்மகளை எங்கும் காணேன்;**
**மல்லரை அட்டவன் பின்போய்**
**மதுரைப்புறம் புக்காள் கொல்லோ**[28]

(நாள்மலர் . அப்போது அலர்ந்த பூ; அல்லி – உள்ளிதழ்; தாது – புறவிதழ்; மதுரைப்புறம் . திருவாய்ப்பாடி; புக்காள் – புகுந்தாள்)

என்று இருவரும் சேர்ந்து பிச்சேறிக் **கம்சனின்** நகரமாகிய மதுரையிற் புகுவார்களோ? அன்றி அதற்கு அருகிலுள்ள திருவாய்ப்பாடியிற் புகுவார்களோ? என்று உடன்போக்கிற் சென்ற தலைவியைக் குறித்துத் திருத்தாயார் ஐயப்பட்டுச் சொன்னதும் ஈண்டு நினைக்கத்தக்கது.

திருத்தாயர் **பல்வேறு விதமாகப் பேசித்** துயர் உறுகின்றாள். அயல் மணாட்டி ஒருத்திக்குச் சொல்லுகின்றாள். "பண்டு வெண்ணெய் திருடின இடையன் என் வீட்டில் புகுந்து என் பெண்ணின் வாலெயிறூறிய நீரைப் பருகினான்; அவனை விரும்பி அவனுடன் சென்றுவிட்டாள்" என்பதாக (2). மற்றொரு தோழியிடம், "அரக்கர் குலப் பாவையை மூக்கரிந்தவனுடன் சென்றுவிட்டாள்" என்கின்றாள் (3). **பரகாலத் திருத்தாயர்** தெருவில் நின்று அலற்றுவதைக் கேட்டு ஓடிவந்த ஒரு மகளிடம் "அவன் தொல் பிறப்பு அறியேன்; அவன் இளைஞன்; சங்கை ஊதுபவன்; பாண்டவர்கட்குத் தூது சென்றவன். அவன் ஊர் எது என்பதும்

28. பெரியாழ். திரு. 3.8:1

தெரியாது. தெரிந்தால் சொல்லுங்கள்" என்கின்றாள் (4). "பெற்றதாய் என்ற இரக்கம் கொள்ளவில்லை; தனக்குத் தகுந்த மாதவனைக் கொண்டாடிக்கொண்டு என்னை விட்டு நீங்கினாள்" (5). "இவள் நமக்கு உதவியாயிருப்பள்" என்று வளர்த்தனால் பயன்பெறவில்லை. சிறிதேனும் என்பால் இரக்கம் கொண்டாள் இலள்; என் தனிமைக்கும் இரங்கிற்றிலள்; தேவர்கட்குத் துணையாய் இலங்கை சென்றவனுடன் சென்றுவிட்டாள்" (6). "தனக்குத் தாய் ஒருத்தி, தந்தை ஒருவன் இருப்பதாக நெஞ்சில் கொள்ளாமல் பின்னைப் பிராட்டியைக் கைப்பிடித்த பெருமானது தோளழகில் ஈடுபட்டு அவனோடு நடந்து சென்றுவிட்டாள்" (7). "என் மகள் பருவம் நிரம்பினவளும் அல்லள். நேற்றுவரை விளையாட்டுக் கருவிகளான முற்றில் (சிறுமுறம்), கிளி, பந்து, ஊசல் பூவைப் பறவை முதலியவற்றை ஒரு நொடிப் பொழுதும் விட்டுப் பிரியாதவள். இவற்றையெல்லாம் துறந்து பிறப்பிலியின் பின் சென்றுவிட்டாள்" (8). "காவி மலர்களையொத்த கண்களை யுடையவள்; கடிமலர்ப் பாவையொப்பாள்; அன்ன நடையினைக் கொண்டவள்; மூங்கில் போன்ற தோள்களையுடையவள். பாவியேன் என் வயிற்றில் பிறந்தவளாதலால் தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனி வழி போயினாள் என்ற பழிச் சொல் புறப்படும் படியாகப் போக நேர்ந்தது" (9). இச்செய்திகள் சங்கப் பாடல்களை நினைக்கச் செய்கின்றன.

இங்ஙனம் ஆழ்வார்கள் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் இருக்கும் நம்மை மாட்டுவண்டி திருக்கோயிலில் கொண்டு வந்து சேர்க்கின்றது. திருக்கோயிலில் நுழைந்து மேற்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **வயலாளி மணவாளனைச்** சேவிக்கின்றோம். வயலாளி மணவாளனுக்குக் **கல்யாணரங்கநாதன், வேதராசன்** என்ற திருநாமங்களும் உண்டு. தாயாரின் திருநாமம் **அமிர்தகடவல்லி** என்பது. இவரையும் சேவித்து இவர்தம் திருவருளுக்குப் பாத்திரர்களாகிறாம். திருவாலியில் நரசிம்மர் சந்நிதி ஒன்று உண்டு. அங்கும் சென்று அந்த எம்பெருமானையும் வணங்குகின்றோம். இந்த நிலையில் **பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்** திருப்பாடல் நினைவிற்கு வர, அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

**கழன்றுபோம் வாயுவினை கட்டாமல் தீர்த்தம்**
**உழன்றுபோய் ஆடாமல் உய்ந்தேன்–அழன்று**
**பொருவாலி காலன் பரகாலன் போற்றும்**
**திருவாலி மாயனையே சேர்ந்து.**[29]

29. நூற். திருப். அந். 18

(கழன்று . வெளிச்செல்லும்; கட்டாமல் . அடக்காமல்; உழன்று – வருந்தி; உய்ந்தேன் – நற்கதிபெற்றேன்; வாலிகாலன் – இராமன்)

என்பது பாடல். "எம்பெருமானுக்கு அடியவனாயிருக்கின்ற ஆன்மாவின் சொரூபத்திற்கு விருத்தமான தவம் செய்தல், புண்ணியத் தீர்த்தமாடல் முதலான உபாயங்களை மேற்கொள்ளாமல் ஆன்ம சொரூபத்திற்கு அநுகூலமாய் சித்தோபாயமான எம்பெருமானைப் பற்றுதலாகின்ற பிரபத்தி உபாயத்தை மேற்கொண்டு எளிதில் நற்கதி பெற்று ஈடேறினேன்' என்கின்றார் திவ்விய கவி.

திருமங்கையாழ்வார் தாம் பிறந்த கள்ளர் குடிக்கேற்ப இளமையில் ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர். சோழ அரசனின் சேனாதிபதியாகவும், அவனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகவும் இருந்து திருமங்கை நாட்டை ஆண்டவர். கொற்றவனுக்குக் கொடியவருடன் கொடும் போர் நேருங் காலங்களில் படைகளுடன் முன்சென்று பகைவென்றவராதலின் இவருக்குப் பரகாலன் என்ற திருநாமமும் உண்டு. **பரகாலன்** - பகைவர்கட்கு எமன்,

எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கணம் செய்த தலமாதல் பற்றி இத்தலம் **திருவாலி** என்ற திருநாமத்தால் வழங்கி வருகின்றது. திருமங்கையாழ்வார் திருவவதரித்த திருத்தலமாகிய **குறையலூர்** ஆலிநகருக்கு அருகில் உள்ளது. திருநகரியிலும் திருவாலியிலும் திருமங்கையாழ்வாருக்கு முக்கியத்துவம் உண்டு. திருமங்கை நாட்டு மன்னன் அல்லவா? ஆண்டுதோறும் பங்குனி உத்தரத்தன்று நடைபெறும் **'வேடுபறி உற்சவம்'** பெரும் புகழ் பெற்றது. வேடனாக நின்று வழிப்பறி செய்து அதனால் பெற்ற செல்வத்தைக்கொண்டு பாகவதர்கட்கு ததியாராதனம் செய்ததை நினைவூட்டும் வண்ணம் நடைபெறும் திருவிழா இது. திருநகரியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள **வேதராசபுரம்** என்னும் ஊரிலுள்ள ஒரு பெரிய மைதானத்தில் இத்திருவிழா நடைபெறுகின்றது. இச்செய்திகளை அறிந்த வண்ணம் **திருத்தேவனார்த் தொகை** என்னும் திவ்விய தேசத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

# 16. திருத்தேவனார்தொகை தெய்வநாயகன்

**வைணவ** கொள்கைப்படி சித்து எனப்பெறும் ஆன்மாவும், அசித்து எனப்பெறும் மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதியும் (மூலப் பகுதியும்) இறைவனது உடலாக உள்ளன. இதனைச் ***சரீர - சரீரி பாவனை*** (உடல் - உயிர் - உறவு) என்று குறிப்பிடுவர் மெய்விளக்க நூலார். அதாவது பிரம்மம் எனப்படுவது உயிராகவும், இந்த அகிலம் உடலாகவும் உள்ளன. **இராமாநுசர்** இந்த உயிர் அகிலமாகிய உடலைத் தாங்கி அதற்கு **ஆதாரப் பொருளாகவும்,** அதனைத் தன்னாட்சிக்கு உட்படுத்தும் பொருளாகவும் (நியந்தா) அந்தப் பொருளைப் பயன்படுத்தும் தலைவனாகவும் (சேஷி) உள்ளது என்பர். இதன் காரணமாகத்தான் உடல் தாங்கப்பெறும் பொருளாகவும் **(ஆதேயம்),** தன்னாட்சிக்குட்பட்ட பொருளாகவும் **(நியந்தா),** தலைவனுக்காகவே நிலைபெற்றிருக்கும் பொருளாகவும் (சேஷன்) கொள்ளப் பெறுகின்றது. இதனால் இந்த உடல் உயிரின்றும் பிரிந்தியங்க முடியாத பொருளாக **(பிரகாரா)** அமைந்து கிடக்கின்றது. உயிருள்ள ஆன்மாவிற்கு முற்றிலும் ஆக்கப்பட்டதாகவும், தன் பயனுக்கு உட்பட்டதாகவும், முழுமை நிலையில் சார்ந்தன்மையுடையதாகவும் இருக்கும் எந்த ஒரு பொருளும் அந்த ஆன்மாவின் உடல் என்று வழங்கப்பெறும். ஆகவே, உயிருள்ள பொருள்களனைத்தும், உயிரற்ற பொருள்களனைத்தும் ஒருசேர பரமான்வின் உடலாக உள்ளது; காரணம், அவை பரமான்மாவால்தான் உயிர் பெறுகின்றன; இயங்குகின்றன, அப்பரமான்விற்கு மனநிறைவைத் தருவதற்காகவே நிலை பெற்றுள்ளன. மூலப் பகுதி விரிவடைந்து மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்புகளாகவும், மற்றுமுள்ள பொருள்களாகவும் ஆகின்றது. உயிர், தன்னுடைய வினைகட்கேற்ப ஒவ்வொருடம்பை அடைகின்றது. அதுவே உயிருக்குப் பிறப்பாகும். இறைவன்

(பிரம்மம்) மூலப்பகுதியின் விகாரமாகிய எல்லாப் பொருள்களுள்ளும் அந்தர்யாமியாக மறைந்துள்ளான். மூலப்பகுதியின் விகாரமாகிய உடம்பிற்கு வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய விகாரங்கள் உண்டு. அவ்வுடம்பினுள்ளிருக்கும் உயிருக்கு அத்தகைய விகாரம் ஒன்றும் இல்லை. ஆயினும், தான் ஆற்றிய வினைகட்கேற்ப உடம்பைப் பெற்றிருத்தலால் இவ்வுடம்பைப் பற்றிய இன்ப துன்ப உணர்ச்சிகள் உயிருக்கு உண்டு. தனக்கு உடலாகவுள்ள இந்த உடம்பினுள்ளும், உயிரினுள்ளும் அந்தர்யாமியாகவுள்ள இறைவன் உடம்பினுடைய விகாரங்களையும், உயிரினுடைய இன்ப துன்ப உணர்ச்சிகளையும் அடைவதில்லை. இறைவன் வினை காரணமாக இல்லாமல் தன் விருப்பினால் இவ்விரண்டனுள்ளும் அமைந்திருத்தலால், இவ்விரண்டின் தன்மைகளையும் அவன் அடைவதில்லை. இதுவே **சரீர - சரீரி பாவனையின்** தத்துவமாகும்.

**திருத்தேவனார் தொகையை** நோக்கி நாம் மாட்டு வண்டியில் வந்து கொண்டிருக்கும்போது இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் உள்ளன. இந்த ஊரின் பெயர் **திருத்தேவனார்தொகை** என்று ஏற்பட்டதன் காரணத்தையும் சிந்திக்கின்றோம். பாற்கடல் கடைந்த போது வெளிவந்த திருமகளை இத்தலத்தின்தான் எம்பெருமான் திருமணம் புரிந்து கொண்டதாகவும், அத்திருக்கோலத்தில் இங்கு எழுந்தருளியுள்ளதாகவும் புராண வரலாற்றால் அறிகின்றோம். இந்தத் திருமணத்திற்கு தேவர்கள் திரண்டு வந்தனர் என்றும், அங்ஙனம் இவர்கள் திரண்ட இடம் என்பது பற்றி இத்திருத்தலம் **திருத்தேவனார் தொகை** என்று திருநாமம் பெற்றது போலும் என்றும் ஊகிக்கின்றோம். தேவனார் என்பது தேவர்களையும், தொகை என்பது நெருங்கி நின்ற இடத்தையும் குறிப்பனவாகக் கொள்ளலாம். இந்த இடத்தைத் **திருமங்கையாழ்வார்,**

**"கார்ஆர்ந்த திருமேனிக் கண்ணன்**
**அமர்ந்து உறையும்இடம்**
**சீர்ஆர்ந்த பொழில நாங்கைத்**
**திருத்தேவ னார் தொகை"**

(கார் ஆர்ந்த – மேகத்தோடொத்த; சீர் ஆர்ந்த – அழகு பொருந்திய; பொழில் – சோலை)

என்று குறிப்பிடுவர். இத்திருத்தலம் திருநாங்கூர்த் திருப்பதிகளுள் **நான்காவதாகும்.**

1. பெரி. திரு. 4.1:10

இந்தத் திருத்தலம் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து தென்கிழக்குத் திசையில் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நாம் திருநகரியிலிருந்து ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு இத்திருக்கோயிலுக்கு வருகின்றோம். இது **'கீழைச்சாலை மாதவப் பெருமாள் கோயில்'** என்று பொதுமக்களால் வழங்கப்பெறுகின்றது. இத்திருக்கோயில் மண்ணியாற்றின் தென்கரையில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இதனைத் **திருமங்கையாழ்வாரும்,**

> **"போது அலர்ந்த பொழில் சோலைப்**
> **புறம்எங்கும் பொருதிரைகள்**
> **தாது உதிர வந்து அலைக்கும்**
> **தடமண்ணித் தென்கரைமேல்**
> **மாதவன்தான் உறையும் இடம்"[2]**

(போது – பூக்கள்; அலர்ந்த – மலரப் பெற்ற; தாது – மகரந்தப் பொடி; தடம் – பெரிய; மாதவன் – திருமகள் நாதன்)

என்று தம் பாசுரத்தில் குறிப்பிடுவர். இத்திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும் நுழைவாயிலில் இராசகோபுரம் இல்லை. இப்பகுதியிலுள்ள பெரும்பான்மையான திருக்கோயில்கட்கு இராசகோபுரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், விமானம் இரண்டு தளமாக அமைந்து மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் இத்திருக்கோயிலுக்கு அழகூட்டுகின்றது. கருவறைக்கு முன்னர் விசாலமான மண்டபம் ஒன்று உள்ளது. இதனைக் கடந்துதான் கருவறைக்குச் செல்ல வேண்டும்.

எம்பெருமான் திருமணம் புரிந்துகொண்டு 'பின்னானர் வணங்கும் சோதியாக' நின்றருளும் இத்தலத்தில் திருமண மாகாதவர்கள் வந்து வழிபாடு செய்தால் திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு பெறுவர் என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே இருந்து வருகின்றது. இதேபோல் மகப்பேறு இல்லாதவர்களும் இங்கு வழிபட்டு மக்கட்செல்வம் பெற்று மகிழ்கின்றனர் என்ற நம்பிக்கையும் உள்ளது. திருக்கோயிலுக்குப் பின்புறத்தில் இவர்ச் சுடுகாடு உள்ளது. இத்திருக்கோயிலின் விமானத்தின் நிழல் விழுகின்றது என்றும், இது இத்தலத்தின் மற்றொரு தனிச் சிறப்பு என்றும் கூறுவர். இதனை அறிந்த நாம்,

> **"சரணமாகும் தனதாள்அடைந்**
> **தார்க்கு எல்லாம்**
> **மரணமானால் வைகுந்தம்**
> **கொடுக்கும் பிரான்"[3]**

2. பெரி. திரு. 4.11 3. திருவாய். 9.10:5

என்ற திருவாய்மொழியை நினைவு கூர்கின்றோம். எம்பெருமானைச் சரணம் அடைந்தவர்கள் யாவரும் இவ்வுடல் முடியும்வரை (பிராரத்த கருமம் தீரும் வரை) பொறுத்திருக்க வேண்டும் என்பதனையும், அதன்பிறகு சஞ்சித கருமங்களைத் தீயினில் தூசாக்கி வீடு பேற்றினை நல்குவான் இறைவன் என்பதனையும் சிந்திக்கின்றோம்.

இத்திருக்கோயில் எழிலார்ந்த **சோலைகள் சூழ்ந்த சூழ்நிலையில்** அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இருப்பது அல்லவா? **திருமங்கையாழ்வாரும்** இதனைப் 'பொழில் திருத்தேவனார் தொகை'[4] 'தேனாரும் மலர்பொழில் சூழ் திருத்தேவனார் தொகை'[5] 'சுந்தரநற் பொழில் புடைசூழ் திருத்தேவனார் தொகை'[6] 'சேடேறு பொழில் தழுவு திருத்தேவனார் தொகை'[7] 'சீராரும் மலர்ப் பொழில் சூழ் திருத்தேவனார் தொகை'[8] என்று குறிப்பிடுவர். திருக்கோயிலின் புறமெங்கும் பூக்கள் மலரப்பெற்ற சோலைகள் உள்ளன. அப்பூக்களின் தாது உதிரும்படியாக மண்ணியாற்றின் அலைகள் வீசுகின்றன. வண்டுகளும் 'தென்னாதென'வென்று இசை பாடுகின்றன (1). இந்த மண்ணியாற்றங்கரையில் மிக்க பலசாலிகள் வசித்து வருகின்றனர் (4). இதனைத் திடகாத்திரமுள்ள உழவர்களைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இவர்களைத் தவிர, திருநாங்கூரில் அக்காலத்தில் அந்தணர்களும் வாழ்ந்து வந்தனர் என்பதை 'பெருஞ்செல்வத்து எழில்மறையோர் நாங்கை தன்னுள்' என்று இருமுறை (7, 8) குறிப்பிடுவதையும் காணலாம்.

இங்ஙனம் சிந்தித்த நிலையில் திருக்கோயிலின் முன் வாசலில் ஓய்வுகொண்ட பின்னர் எம்பெருமான் சந்நிதிக்குச் செல்லுகின்றோம். இத்திருக்கோயில் எம்பெருமானின் திருநாமம் **தெய்வநாயகப் பெருமாள்** என்பது; உற்சவரின் திருநாமம் **மாதவப் பெருமாள்;** தாயார், **கடல்மகள் நாச்சியார்**. இவர் திருக்கோயிலின் தென்பகுதியில் தனிக்கோயிலில் எழுந்தருளித் திருவருள் பாலிக்கின்றார். இங்கு எம்பெருமானும், தாயாரும் சிறிய உருவத்தைக்கொண்டு திகழ்கின்றனர். மூலவர் மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். அர்ச்சகர் கற்பூர தீபம் காட்டும்பொழுது எம்பெருமானின் அழகிய திருமுக மண்டலமும் மந்தகாசமான தோற்றமும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன. உடனே திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலியால் ஓதி உளங் கரைகின்றோம்.

4. பெரி. திரு. 4.1:2
5. மேலது. 4.1:3
6. மேலது. 4.1:4
7. மேலது. 4.1:7
8. மேலது. 4.1:8

பின்னர் வெளிவந்து பிராகாரத்தை வலம் வருகின்றோம். அடுத்து, தாயார் சந்நிதிக்கு வந்து அவரைச் சேவித்து அவர்தம் திருவருளுக்கும் பாத்திரர்களாகின்றோம்.

பின்னர், திருமண்டபத்தில் ஓரிடத்தில் அமர்ந்து திருப்பாசுரத்திலுள்ள தத்துவக் கருத்துகளில் அசை போடுகின்றோம். ஒரு பாசுரத்தில் வரும்,

**யாவருமாய் யாவையுமாய் எழில்வேதப் பொருள்களுமாய்**
**மூவருமாய் முதலாய மூர்த்தி**[9]

(யாவருமாய் – சேதநப் பொருள்களாய்; யாவையுமாய் – அசேதநப் பொருள்கள் எல்லாவற்றையும்; வேதப்பொருள்களுமாய் – வேதம் கூறும் பொருள்களுமாய்)

என்ற பாசுரப்பகுதிப்படி உயிருள்ள பொருள்களையும், உயிரில் பொருள்களையும் எம்பெருமான் உடலாகவுடையவன்; நான்மறைகளும் எம்பெருமானின் சொருபம், உருவம், குணம், விபூதி முதலியவற்றைக் கூறுகின்றன. எம்பெருமான் **நான்முகன் உருவத்தில்** உலகைப் படைக்கின்றான்; **தானான தன்மையில் காத்தல் தொழிலைச்** செய்கின்றான். உருத்திரன் உருவத்தில் அழிக்கும் தொழிலை மேற்கொள்ளுகின்றான் என்பதை உணர்த்துகின்றது.

மேற்கூறிய **சரீர - சரீரி பாவனையின்** தத்துவத்தை,

**வானாடும் மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும்**
**தானாய எம்பெருமான்**[10]

என்று வேறொரு விதமாகக் கூறுவர் ஆழ்வார். இதில் பல்லுயிரும் தானான எம்பெருமான் என்பதற்கு **பெரியவாச்சான் பிள்ளை** தரும் சிறப்பான விளக்கம்: 'தானும் குடும்பமுமாய்க் கலநெல் ஜீவிப்பானொருவனை 'உனக்கென்ன வேணும்?' என்றால், 'எனக்குக் கல நெல் வேணும்' என்னுமிறே தன்னபிமானத்துக் குள்ளே அடங்குகையாலே. அப்படியே, தானே இதுக்கெல்லாம் அபிமாநியாயிருக்கிற ஸர்வேச்வரன் - ஸ்வ வ்யதிரிக்த ஸம்ஸ்த வஸ்துக்களும் 'தன்னைத்தவிர பிற பொருள்களும் தனக்கு ப்ராகாரமாய் புறம்பு ஒருவரின்றிக்கே உபய விபூதியும் தன்னிழலிலே யொதுங்கும்படி யிருக்கையாலே தலைவனானவன் வந்து நித்திய வாசம் பண்ணுகிற தேசம்' என்பது.

இந்திரன், இமையவர், முனிவர்கள், நான்முகன், கதிரவன் சந்திரன் இவர்கட்குத் திருவருள் பாலித்தவன் இந்த எம்பெருமான்

9. பெரி. திரு. 4.1:2 10. மேலது 4.1:3

(4). பிரளயாபத்தில் ஆகாயம், கடல்கள், தீவுகள் குலவரைகள் இவற்றையெல்லாம் திருவமுது செய்து உய்யக் கொண்ட பிரான் (5). பாலகனாய் ஏழுலகத்தையும் உண்டு ஆலிலையில் களைப்பாறியவன் (6). இரணியாசுரனைக் கிழித்தழிக்கும் நரசிம்மனாக எழுந்தருளியவன் (7). குவலயாபீடம் என்ற மதக் களிற்றினைப் பாகனோடு அக்களிற்றின் தந்தத்தைக் கொண்டே அழித்தவன் (9). சீதாப் பிராட்டியை மணம் புணர்வதற்காக வயிரம்பற்றிய திண்ணிதான வில்லை முறித்தவன் (8). இந்த எம்பெருமான்களே திருத்தேவனார்த்தொகையில் எழுந்தருளி யிருப்பவன் என்று பாசுரங்களில் தெரிய வைக்கின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் சிந்தித்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாடல் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

**ஆர்க்கும் வலம்புரியால் அண்டமும் எண்டிசையும்**
**கார்க்கடலும் வெற்பும் கலங்கினவால் – சீர்க்கும்**
**திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத்து ஊதத்**
**தருத்தேவ னார்த்தொகையும், சாய்ந்து**[11]

(ஆர்க்கும் – பேர் ஆரவாரம் செய்யும்; வலம்புரி – பாஞ்ச சந்நியம்; அண்டம் . அண்டங்கள்; கார் – கரிய; வெற்பு – அஷ்டகுல பர்வதங்கள்; சீர்க்கும் – சிறப்பு பெற்ற; மால் – திருமால்; தரு – கற்பகம்; தேவனார் தொகை – தேவர்களின் கூட்டம்; சாய்ந்து – மூர்ச்சித்து விழ)

இதில் திருச்சங்கத்தின் சிறப்பு கூறப்பெறுகின்றது. பாரிசாத மரத்தை உம்பர் உலகினின்றும் கொணர்வதற்காக எம்பெருமான் தேவலோகம் சென்றபோது திருச்சங்கத்தைத் திருப்பவழ வாயில் வைத்து ஊதியவுடன் தேவர்களின் கூட்டம் மூர்ச்சித்து விழுந்தன; அண்டங்கள், எண்திசைகள், கார்க்கடல், குலபருவதங்கள் இவை யாவும் நிலை கலங்கிப் போயின என்கின்றார் **அய்யங்கார்.** அய்யங்காரின் அநுபவத்தையும் பாடலால் பெறுகின்றோம்.

பலசுருதிப் பாடலின் கருத்தைச் சிந்திக்கின்றோம் இந்தப் பத்துப் பாசுரங்களை ஓதுபவர்கள் திருநாட்டில் திருவனந் தாழ்வான் முதலிய நித்திய சூரிகளுடன் கூடி வாழப் பெறுவர் என்பதை நினைந்து பரிபூர்ண பிரம்மாநந்தம் பெற்ற மனநிறைவுடன் **திருக்கூடலூரை** நோக்கிப் பயணமாகின்றோம்.

11. நூற். திரு. அந். 33

# 17. திருக்கூடலூர் வையம் காத்த பெருமாள்

***திருவாய்மொழி*** *அர்த்த பஞ்சக ஞானத்தை நல்குகின்றது என்று ஆசாரியர்கள் அருளிச் செய்துள்ளனர். அதனை ஈண்டுச் சிந்திக்கின்றோம்.*[1] அர்த்த பஞ்சகம் என்பது **இறைநிலை** (பரஸ்வரூபம்), **உயிர்நிலை** (ஆன்ம ஸ்வரூபம்), **நெறியியல்** (உபாய ஸ்வரூபம்), **தடையியல்** (விரோதி ஸ்வரூபம்), **வீட்டின் இயல்** (புருஷார்த்த ஸ்வரூபம்) என்னும் ஐந்து பொருள்களைக் கூறுவது. இவற்றை அடைவே நோக்குவோம்.

**'உயர்வற உயர்நலமுடையவன்'** (திருவாய் *1-1:1*) என்ற திருவாய்மொழியில் *'அயர்வறும் அமரர்கள் அதிபதி'* என்பதனால் பெரும்பாலும் உபநிடதங்களின் அடியொற்றிப் பரத்துவத்தில் பரத்துவமும்; 'திண்ணன் வீடு' என்றதில் பெரும்பாலும் இதிகாச புராணங்களின் கூற்றாலே உடன்பாட்டாலும் எதிர்மறை முகத்தாலும் பிறருக்கு உபதேசம் செய்யும் முகத்தால் அவதாரத்தில் பரத்துவமும், *'அணைவரு அரவணை' (2-8:1)* என்றதில் 'வீடு முதலாம்' என்பதனாலும், 'புணைவன் பிறவிக் கடல் நீந்துவார்க்கே' என்பதனாலும் 'பட்டர் நிர்வாகத்தின்படி மோட்சத்தின் தன்மையைக் கூறுகையால் பரத்துவமும், ஒன்றும் தேவும்' *(4-10:1)* என்றதில் 'ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா, அன்று நான்முகன் தன்னோடு தேவர் உலகோடு உயிர்படைத்தான்' என்று எம்பெருமானுடைய ஜகத் காரணத்துவத்தை முதலிப்பதால் பரத்துவம் கூறி **இறைநிலை** நிலைநிறுத்தப்பெறுகின்றது.

**ஆன்மஸ்வரூபத்தை** (உயிரின் நிலையை) நோக்குவோம். **'பயிலும் சுடர் ஒளி'** *(3-7:1)* என்னும் திருவாய்மொழியில் 'பயிலும் பிறப்பிடைதோறும் எம்மை யாளும் பரமரே' என்பதனால் மேன்மேலும் பிறப்பது எமக்கு விடத்தக்கதாக இருப்பினும்

1. ஆசா. ஹிரு. 211 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

பாகவதர்கட்கு ஆட்படிருத்தலாகிய பெருஞ்செல்வம் கிடைக்கப் பெறுவதாமாகில் எத்தனைப் பிறப்புகள் நேர்ந்தாலும் விருப்பமே என்கின்றார். **'ஏறாளும் இறையோனும்'** *(4-8:1)* என்ற திருவாய்மொழியில் 'மாறு ஆளன் கவராத மணிமாமை குறைவு இலம்' என்பதனால் அடிமைக்குப் புறம்பாக உள்ளவையான ஆன்மா, ஆன்மாவுடன் சம்பந்தப்பட்ட பொருள்கள் எல்லாம் விடத்தக்கவை என்ற எதிர்மறை முகத்தாலே அடிமையே ஆன்மாவிற்குச் சொரூபம் என்பதனை உணர்த்துகின்றார். 'கண்கள் சிவந்து' *(8-8:1)* என்னும் திருவாய்மொழியில் 'ஆழியான் ஒருவன் அடியேன் உள்ளானே' என்பதனால் பகவானுக்கு இந்த ஆன்மா சரீரமாக இருப்பதனாலே 'மையாய், சரீரத்தைக் காட்டிலும் வேறாய், ஞானானந்த லட்சணமாய் இருக்கும்' என்பதனைக் காட்டுகின்றார். **கருமாணிக்கமலைமேல்** *(8-9-1)* என்ற தோழி பாசுரமாகச் செல்லும் திருவாய்மொழியில் அநந்யார்ஹத்துவம் வெளியிடப் பெறுகின்றது. ஆக இந்த நான்கு திருவாய்மொழிகளாலும் **ஆன்ம சொரூபம்** (உயிரின் நிலை) வெளியிடப் பெறுகின்றது.

**விரோதி சொரூபத்தைக்** காண்போம். **'விடுமுன் முற்றவும்'** *(1.2)* என்று தொடங்கும் திருவாய்மொழியின் மூன்றாம் பாசுரத்தில் 'நீர்நுமது என்று இவை வேர்முதல் மாய்த்து' என்பதனால் **'யான்'** என்ற அகப்பற்றையும் **'எனது'** என்ற புறப்பற்றையும் விட்டொழிக்க வேண்டும் என்கின்றார். **'சொன்னால் விரோதம்'** *(3-9:1)* என்ற திருவாய்மொழியில் 'என்னப்பன் எம்பெருமான் உளனாக, என் நாவில் இன் கவியான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்' என்பதனால் அடிமை செய்யத்தகாதவர்களுக்கு அடிமை செய்தல் விடுதற்கரியது என்பதை அருளிச் செய்கின்றார். **'ஒரு நாயகமாய்'** *(4-1:1)* என்ற திருவாய்மொழியில் 'ஒரு நாயகமாய் உலகுடன் ஆண்டவர், பெருநாடு காண இம்மையிலே பிச்சை தாம் கொள்வர்' என்பதால் ஐசுவரியம் நிலையற்றது என்பதை எடுத்துரைக்கின்றார். இத்திருவாய்மொழியின் **ஒன்பதாம் பாசுரத்தில்,** 'படிமன்னு பல்கலன் பற்றோடறுத்து ஐம்புலன்வென்று, செடிமன்னு காயம் செற்றார்களும், குடிமன்னும் இன்சுவர்க்கம் எய்தியும் மீள்வர்கள்' என்பதனால் துறக்க வாழ்வும் நிலையற்றது என்பது காட்டப் பெறுகின்றது. **பத்தாம் பாசுரத்தில்** 'இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் சிறுக நினைவதோர் பாசம் உண்டாம்' என்பதனால் கைவல்யமும் நிலையற்றது என்பதைத் தெளிவுறுத்துகின்றார். **'கொண்ட பெண்டிர்'** *(9-1:1)* என்ற திருவாய்மொழியில் 'கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறர், கண்டதொடு பட்டதல்லால் காதல் மற்று யாதும் இல்லை'

என்பதனால் சரீர சம்பந்தம் காரணமாக வருகின்ற உறவு முறையினர் விரும்பத்தக்கவர் அல்லர் என்பதனைக் காட்டுகின்றார். இங்ஙனம் இந்த நான்கு திருவாய்மொழியாலும் **விரோதி சொரூபத்தைத்** தெளிவாக்கு கின்றார் ஆழ்வார்.

**உபாய சொரூபத்தையும்** காண்போம். **'நோற்ற நோன்பிலேன்'** *(5-7:3)* என்ற திருவாய்மொழியின் **ஆறாம் பாசுரத்தில்** 'ஆறு எனக்கு நின்பாதமே சரண் ஆகத் தந்தொழிந்தாய்' என்று கூறி 'நோற்ற நோன்பிலேன்' என்பதனாலும் **'ஆராஅமுதே'** *(5.8)* என்ற திருவாய்மொழியின் **எட்டாம் பாசுரத்தில்** 'களைவாய் துன்பம்; களையாது ஒழியாய்; களைகண் மற்றிலேன்' என்று வேறு கதி இல்லாமையயைக் கூறி 'கழல்கள் அவை சரணாகக்கொண்ட' *(5-8:11)* என்று சரணாகதியைக் குறிப்பிட்டதனாலும்; **'மானேய் நோக்கு மடநல்லீர்'** *(5-9:1)* என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் 'வைகலும் வினையேன் மெலிய' என்று பக்தியின் வசப்பட்டமையைக் குறிப்பிட்டு இறுதிப் பாசுரத்தில் 'நம்பெருமான் அடிமேல் செமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்' என்று கூறியதனாலும்; **'பிறந்த வாறும்'** *(5-0:1)* என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் 'எனது ஆவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற இச்சிறந்த வான்சுடரே' என்று தரித்து நின்று அவன் குணங்களை நினைக்க முடியாதவாறு உருக்குலைந்தமையைக் குறிப்பிட்டு 'நாகு அணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று நாடோறும் ஏக சிந்தையனாய்' என்று கூறியதனாலும் **'உபாய சொரூபம்'** (நெறியியல்) விளக்கம் அடைகின்றது.

இறுதியாக **புருஷார்த்த சொரூபம்** (வீட்டின் இயல்) பற்றிய விளக்கத்தைக் காண்போம். **'எம்மா வீட்டுத் திறமும் செப்பம்'** *(2.9:1)* என்ற திருவாய்மொழியின் **நான்காம்** பாசுரத்தில் 'தனக்கேயாகும் எனைக் கொள்ளும் ஈதே' என்பதனால் தான் செய்யும் கைங்கரியத்தில் தன் பொருட்டாகச் செய்தலாலாய இன்பம் வேண்டா என்று விரும்பியதனாலும்; **'ஒழிவில் காலம் எல்லாம்'** *(3-3:1)* என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுஇலா எல்லா அடிமைகளையும் செய்யவேண்டும்' என்று பாரித்தமையாலும்; **'நெடுமாற்கு அடிமை'** *(8.10)* என்ற திருவாய்மொழியில் 'கொடுமா வினையேன் அவன் அடியார் அடியே கூடும்' *(1)* என்பதனாலும், 'சயமே அடிமை தலைநின்றார் திருத்தாள் வணங்கி' என்பதனாலும் 'பகவானுக்குச் செய்யும் கைங்கரியம் பாகவதர்களுக்குச் செய்யும் தொண்டின் அளவாக முடியவேண்டும்'

என்று கூறுவதனாலும்; **'வேய்மருதோளிணை'** (10.3) என்ற திருவாய்மொழியின் **ஒன்பதாம்** பாசுரத்தின் 'உன்தன் திருவுள்ளம் இடர்கெடும் தோறும்' என்றவதனால் அவனுடைய மன நிறைவே பேறாக இருக்க வேண்டும் என்பதைச் சொன்னதாலும் **பல சொருபத்தைச்** சொன்னவாறாயிற்று. இங்ஙனம் இருபது திருவாய்மொழிகளில் தெளிவாக அருளிச் செய்து மற்றைய எண்பது திருவாய்மொழிகளாலும் அந்த **ஐம்பொருள் தன்னையே** விரித்துப் பேசுவர் ஆழ்வார் என்பது ஆசார்யர்களின் திருவுள்ளம்.

இதனையே,

**மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்**
**தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்**
**ஊழ்வினையும் வாழவினையும் ஓதும் குருகையர்கோன்**
**யாழினிசை வேதத்து இயல்.**[2]

(தொக்கு இயலும் . சேர்ந்து கிடக்கும்; ஊழ்வினை . முன்னைய வினைகள்; வாழ்வினை – புருஷார்த்தத்தை)

என்ற திருவாய்மொழித் தனியன் சுருக்கமாக உரைக்கின்றது. திருவாய்மொழியில் துவயத்தின் பொருள் நுவலப் பெறுகின்றது என்பதைப் **பிள்ளை உலக ஆசிரியர் 'சாரசங்க்ரஹம்'** என்ற இரகஸ்ய நூலில் தெளிவாக விளக்குவர்.[3]

இந்தத் தத்துவக் கருத்துகள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் **திருக்கூடலூர்** என்ற திவ்விய தேசத்தை நோக்கி வருகின்றோம். இந்தத் திவ்விய தேசம் **'ஆடுதுறைப் பெருமாள் கோயில்'** என்ற திருநாமத்தாலும் வழங்கி வருகின்றது. இத்திருத்தலம் மயிலாடுதுறை - திருச்சி இருப்பூர்தி பாதையில் அய்யம்பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இப்படி வருவதை விடக் கும்பகோணத்திலிருந்து கும்பகோணம் தஞ்சை வழியில் பேருந்து மூலம் வருவதே சிறந்தது; அல்லது திருவையாற்றிலிருந்தும் கும்பகோணம் செல்லும் பேருந்திலும் வரலாம்; நேராகக் கோயிலருகிலேயே இறங்கலாம். அய்யம்பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து வந்தால் மாட்டுவண்டி அல்லது குதிரை வண்டியில்தான் வருதல் வேண்டும். திருவையாற்றிலிருந்து வந்தால் இதனைச் சேவித்த பிறகு **திருக்கபித்தலம், ஆதனூர்** என்ற தலங்களைச் சேவித்துக்கொண்டு கும்பகோணம் வரலாம். **கூடலூர்** ஒரு சிற்றூர்; இங்குச் சத்திரங்களோ, தங்கும் விடுதிகளோ இல்லை;

2. திருவாய்மொழித் தனியன் 3, ஆசா. ஹிரு. 210

ஒருசில சிற்றுண்டி விடுதிகள் உள்ளன. நாம் **திருமணிக் கூடத்திலிருந்து** மாட்டு வண்டியில் வருகின்றோம். இப்படித்தான் செல்லுமாறு திருநகரி வைணவர் நமக்கு ஏற்பாடு செய்தார். தேவர்கள் கூட்டமாகக் கூடி இத்தலத்து எம்பெருமானை வணங்கி வாழ்த்தியமையால் இத்திருத்தலம் **கூடலூர்** என்று திருநாமம் பெற்றதாகக் கூறுவர் பெரியோர்.[4]

திருக்கூடலூர் தஞ்சை மாவட்டத்தில் சாலையின் மீது இருக்கின்றது; இருபுறங்களில் வயல்களும் சோலை வளங்களும் சூழ்ந்துள்ளன. சோலைகளில் மணம் மிக்கதாய், குளிர்ந்ததாய், இனிமையான தேனைப் பருகின வண்டுகள் குறிஞ்சிப் பண்ணைப் பாடுகின்றன (2). மரக்கொம்புகளிலுள்ள வண்டுகள் தமக்கு வாய்ந்த இடங்களைத் துறந்து வயலில் ஏர் பிடித்து உழுகின்றவர்களின் தலைமுடியில் அணிந்திருக்கும் மலர்களில் உள்ள தேனை உணவாகக்கொண்டு இசை பாடுகின்றன (4). சோலைகளில் வண்டலிட்ட நுண்ணிய மணல்களில் மாம்பழங்கள் விழுந்து வரிசையாகக் கிடக்கின்றன (6). அங்கு முல்லைக் கொடிக் குருந்த மரத்தை முட்டாக்கிட்டுப் படர்ந்துள்ளன (7). படர்ந்த மட்டைகளையுடைய (இலைகளையுடைய) தென்னை மரங்கள் குளங்களின் கரையிலே நிற்கும்; அவற்றிலுண்டாகிய இளநீர்க் குலைகளானவை தாழ்ந்து நிற்கின்றபோது, குளங்களை இளநீராலே நிறைத்து மட்டைகளால் மறைத்து வைத்தாற் போலே இருக்கும் (8).

ஆழ்வார் கூறும் **வயல் வளத்தையும்** காண்போம். நாரைகள் நீர்நிலைகளிற் சென்று அமர்ந்திருக்கும்; அவற்றின் கால்களில் சிறு மீன்கள் வந்து குத்தும்; குத்தினாலும் ‘உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு’ என்றாற்போலே அவற்றைக் கவனியாது தாம் விரும்பி உட்கொள்ளும் பெருமீன்கள் வந்து கிட்டினவுடன் அவற்றின்மீது விழுந்து கொள்ளை கொள்ளும் (3). வண்டலிட்டிருக்கும் நீர்நிலைகளில் கெண்டை மீன்கள் செருக்கினால் துள்ளும்போது அவற்றின் உடல் மின்னல் மின்னினாற் போலே இருக்கும்; அதனைக் கண்ட மேகங்கள் தம்மிடத்து மின்னுகின்ற மின்னலின் ஒளியே என்று கருதி மின்னலுக்கு அடுத்தபடி உண்டாக வேண்டிய இடிமுழக்கத்தைச் செய்கின்றன (5). வயல்களின் வாய்க்கால்களில் தாழம்பூக்கள் மலர்ந்திருக்கும்; அவற்றைக் கண்ட

4. நூற்றெட்டுத் திருப்பதிகளுள் திருக்கூடலூர் என்ற திருநாமம் பெற்ற இரண்டு தலங்கள் உண்டு. ஒன்று பாண்டி நாட்டைச் சேர்ந்த தென்மதுரை ஆகும். மற்றொன்று சோழநாட்டைச் சேர்ந்த இத்திருத்தலம் ஆகும்.

5. இடியும் மின்னலும் ஒரே காலத்தில் தான் உண்டாகும். ஒளியின் வேகம் அதிகமாதலால் மின்னல் முதலில் தெரியும். ஒலியின் வேகம் குறைவாதலால் இடிமுழக்கம் பின்னர் கேட்கும்.

கெண்டை மீன்கள் குருகுகள் தம்மை இரை கொள்வதற்காக வந்து அசையாமல் நிற்கின்றன போலும் என்றெண்ணி அஞ்சி ஒளிக்கும் (9).

இத்தகைய **சூழ்நிலையிலமைந்த இத்திருத்தலம்** எத்தகைய தென்னில் செங்காந்தள் மலர் போன்ற விரல்களையுடையவரும் மெல்லிய அழகிய ஆடைகளையணிந்தவர்களுமான நன்மடவார்களின் கூந்தல் மணம் கமழப் பெற்றதாக இருக்கும். இது 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் **குறுந்தொகைப் பாடலையும்**[6] கூந்தலுக்கு செயற்கை மணமேயன்றி இயற்கை மணம் இல்லையென்று இறையனாரிடம் வாதிட்ட நக்கீரரையும் அதனால் அவருக்கு நேர்ந்த விளைவினையும் நினைக்கச் செய்கின்றது.

இனி, **ஆழ்வாரின் இறையநுபவத்தையும்** காண்போம். இந்த எம்பெருமானை,

**தாம்தம் பெருமை அறியார், தூது**
**வேந்தர்க்கு ஆய வேந்தர்.**[7]

என்கின்றார். எம்பெருமான் எல்லாம் அறிந்தவன் என்றும், எல்லா வல்லமையும் பெற்றவன் என்றும் வேதவேதாந்தங்களில் நுவலப் பெற்றாதால், அவன் தன் பெருமையைத் தானறிய வல்லனவனல்லன்; 'உனக்கு இவ்வளவு பெருமை உண்டு' என்று பிறர் சொல்லக் கேட்பவனேயன்றி தன் பெருமை தானறியாதவன். எம்பெருமானுக்குப் பெருமை பரத்துவம் பொலிய நிற்கும் இருப்பன்று. ஏவிய செயல்களை நிறைவேற்றுவதற்காகத் தன்னைத் தாழவிட்டுக் கொண்டிருக்கும் இருப்பே இங்கு பெருமை எனப்படுகின்றது. பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்று 'பாண்டவர் தூதன்' என்று பேர் பெற்றான். இப்படி இழிதொழில் செய்தாலும், இவனுடைய சௌலப்பிய குணம் அறிவிற் சிறந்தோரால் ஈடுபடும்படியாகவே இருக்கும். 'அரசர்க்கரசன்' என்ற பெருமையும் மிக்குத் தோன்றும்.

இந்த எம்பெருமான் நப்பின்னைப் பிராட்டியை மணம் புணர்வதற்காக கொழுத்த ஏழு காளைகளை வலியடக்கின வீரன் (2). எல்லா வல்லமையும் உடையவன். தயிருண்ணப் பார்க்கின்றான்; தன் விருப்பம் இந்த இருப்பால் நிறைவேறாதென்று, அதற்காகப் பிள்ளைவடிவு கொண்டு தயிரமுது செய்கின்றான்; இதனால் தன் நீர்மையைக் காட்டுகின்றான் (3). கண்டார் கண்ணைக் கவரும் மன்னு குறளுருவில் மாணியாய் மாவலிதன் பொன்இயலும் வேள்விக்கண் புக்கு இருந்து கூடி மண் இரந்து பெற்றவன் (4). அடியார்கள்

6. குறுந். 2 7. பெரி. திரு. 5.2:1

துதிக்கும்படியாகத் தன்னுடைய கோலத் திருமேனி சூரிய மண்டலத்தையும் போய்த் தொட வளர்ந்து அண்டமெங்கும் பரவி நின்ற உத்தமன் (5). தக்கன் வேள்வியை அழித்த சங்கரன் சாபத்தைத் தீர்த்த பெருமான் (6). கடல்கள், மலைகள் முதலானவற்றோடு கூடிய உலகங்களையெல்லாம் பிரளயம் கொள்ளாதபடித் தன் திருவயிற்றிலே வைத்துக் காத்த பெருமான் (7). திருநீர்மலையிலெழுந்தருளியுள்ள பெருமானே இங்கும் எழுந்தருளியுள்ளான் (8)[8]. ஆற்றுப் பெருக்கு போல் பெருகா நின்றுள்ள காதலைக் கொண்ட ஆழ்வாரின் இதயம் உருகும்படியாக உட்புகுந்த பெருமான் (9). இத்தகைய எம்பெருமான்தான் திருக்கூடலூரில் எழுந்தருளியிருப்பவன்.

இந்த இறையநுபவத்துடன் திருக்கோயிலில் நுழைகின்றோம். 'காவிரிப் பெருநீர் வண்ணன் கண்ணனைத்' தரிசிக்கின்றோம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் **வையம் காத்த பெருமாளைக்** கண்ணாறக் கண்டு களிக்கின்றோம். தாயாரின் திருநாமம் **பதுமாசன வல்லி.** இவரையும் சேவித்து இவர்தம் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். எம்பெருமான் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களை ஓதி உளங் கரைகின்றோம்.

இந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாடல் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

**உண்டுகேட் டுற்றுமோந் துப்பார்க்கும் ஐவர்க்கே**
**தொண்டு படலாமோ உன்தொண்டனேன் – விண்டிலங்கும்**
**ஆடலூர் நேமிமுதல் ஐம்படையாய் அன்புடையாய்**
**கூடலூராய் இதனைக் கூறு.**[9]

(உற்று – பரிசித்து; ஐவர் – ஐந்து இந்திரியங்கள்; தொண்டு . அடிமை; விண்டு . விட்டுவிட்டு; ஆடல் ஊர் – வெற்றி பொருந்திய; நேமி – திருவாழி)

என்பது பாடல். "மெய் வாய் கண் செவி மூக்கு என்னும் ஐம்பொறிகளுள் கண் எம்பெருமானையே தரிசிக்க வேண்டும்; செவி பெருமான் பெருமைகளையே கேட்க வேண்டும்; வாய் அவனைத் துதிக்க வேண்டும்; மூக்கு அவனது திவ்விய மணத்தை முகர வேண்டும்; கைகால் தலை முதலிய உறுப்புகளையுடைய மெய் அவ்வெம்பெபருமானைத் தொழுதல், வலம் செய்தல், வணங்குதல் முதலியன செய்தல்வேண்டும். இங்ஙனம் எல்லாப் பொறிகளும் சர்வேசுவரனான எம்பெருமானது விஷயங்களையே நுகரும்

8. திவ்விய தேசத்தில் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் யாவரும் ஒருவனே என்ற உண்மையைத் தெரிவித்தவாறு.

9. நூற். திருப். அந். 25

பொருளாகக் கொள்வதனால் நான் ஈடேறும் வகை எளிதில் அமைந்திருக்கின்றது. அதனை விட்டு கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள[10] என்றவாறு சிற்றின்ப விருப்பத்தால் பஞ்சேந்திரியங்கட்கு வசப்பட்டு நாசமடையலாமோ? நான் அவ்வாறு வசப்பட்டு அழியாதவாறு பாதுகாப்பது உனது கடமை'' என்று வேண்டுகின்றார் அய்யங்கார். இவ்விடத்தில் "**உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்**"[11] என்றவற்றால் தாரக போஷக போக்கியாதிகளெல்லாம் அவ்வெம்பெருமானே என்று நம்மாழ்வார் கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது. இந்த உணர்வுடன் மன நிறைவு பெற்றுத் **திருமணிக் கூடத்தை** நோக்கி விரைகின்றோம்.

10. குறள். 1101 11. திருவாய். 6.7:1

# 18. திருமணிக்கூடத்து நாயகன்

**வைணவ சமயத்தின்படி** ஆன்மா ஒளி பெறுவது 'நலம் அந்தம் இல்லதோர் நாட்டில்' தான். இவ்வுலகம் துன்பங்களுக்கு அந்தமில்லாதிருப்பது; அதுபோல அவ்வுலகம் இன்பங்களுக்கு அந்தம் இல்லாதிருப்பது. அந்தம் இல்லது என்பதை நலம், நாடு என்ற இரண்டிற்கும் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். அந்தம் இல்லது ஓர் நாடு - அழிவில்லாத ஒப்பற்ற நாடு. நலம் அந்தம் இல்லதோர் நாடு - அழிவில்லா இன்பத்தையுடைய நாடு. நலம் - இன்பம்; நாடும் அழிவில்லாதது; அதனை அடைந்தார்க்கு உண்டாகும் இன்பமும் அழிவில்லாதது. 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடு[2] என்றார் **பரிமேல் அழகர்.** வீட்டுலகத்தில் ஆன்மா இறைவனுக்குச் செய்யவேண்டிய கைங்கரியத்திற்கு ருசி பிறக்க வேண்டிய இவ்வுலகத்தில் அர்ச்சாவதார எம்பெருமானுக்குக் **கைங்கரியம்**[3] செய்தலை வைணவ சமயம் பரிந்து பேசுகின்றது.

நம்மாழ்வாரும்,

**ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி**
**விழுவிலா அடிமை செய்யவேண்டும்**[4]

(ஒழிஇல் – ஒய்வில்லாத; உடனாய் – உடனே இருந்து; அடிமை . கைங்கரியம்)

என்று திருவேங்கடமுடையான் திருவடிகளில் எல்லாவித அடிமைகளும் செய்யவேண்டும் என்று பாரிக்கின்றார். 'அந்தோ நீழே வெகு காலம் வீணாகக் கழிந்துவிட்டதே என்கின்ற இரவு நெஞ்சிற் படாதபடி அதனை மறந்து ஆனந்த மயமாகக் கைங்கரியம் பண்ணப் பாரிக்கின்றார்' என்பதேயாம். கைங்கரியம் செய்வதிற்காட்டிலும் செய்யவேண்டும் என்கிற **பாரிப்புநிலை**

1. திருவாய். 2.8:4
2. அறத்துப்பால் – உரைப்பாயிரம்
3. கைங்கரியம் – கிங்கரனது செயல். கிங்கரன் – தனக்கு என்று ஒரு பயனையும் கருதாது, தலைவனது விருப்பின்படியே செய்பவன். எதையும் செய்பவன் என்றவாறு.
4. திருவாய். 3.3:1.

நின்றிருந்தாலும் போதும் என்ற சாத்திரப் பொருள் தெரிவிக்கப் பெறுகின்றது.

கைங்கரியத்தைப் பற்றி ஸ்ரீவசன பூஷணம் குறிப்பிடுவதையும் சிந்திக்கின்றோம்.

**கைங்கரியம் தன்னைப் பல சாதனம்**
**ஆக்காதே பலமாக்கவேணும்.**[5]

என்பது சூத்திரம். கைங்கரியம் புரியுங்கால், இம்மை மறுமை வீடு ஆகிய பலன்களில் யாதேனும் ஒன்றிற்கு அதனைச் சாதனமாக நினையாமல் கைங்கரியம் செய்வதையே ஒரு பயனாக நினைக்க வேண்டும் என்பது இதன் கருத்து. சாதனம் ஒரு பலனைப் பெறுதற்குக் கருவியாக இருப்பது; பலமாக்குதல் - இறைவனுடைய முக உல்லாசம் ஒன்றையே கருதுதல். 'உனக்கே நாம் ஆட்செய்வோம்"[6] என்று ஆண்டாள் கூறுவதும் இதுவேயாகும். இதனை அதாவது, தான் கை ஏலாதே அவனைக் கை ஏற்கப் பண்ணுகை.[7] என்று மேலும் விளக்குவர் பிள்ளை உலக ஆசிரியர். இந்தக் கைங்கரியத்தைச் சர்தனம் ஆக்காது பலம் (பயன்) ஆக்கவேண்டும் என்பது இதன் பொருள். அதாவது, ைங்கரியம் கொள்ளுகின்ற இறைவனை, தன் நிறைவினைப் பாராமல், விருப்பத்துடன் ஏற்கப் பண்ண வேண்டும். மேலும்,

**கொடுத்துக் கொள்ளாதே, கொண்டதற்குக் கைக்**
**கூலிக்கொடுக்க வேணும்.**[8]

என்பர் அவ்வாசிரியர். ஒன்றைக் கொடுத்து அதற்குப் பதிலாக ஒரு பயனையும் கொள்ளாமல், கொடுத்த பொருளை எம்பெருமான் ஏற்றுக் கொண்டமைக்காக அப்படிப்பட்ட பொருளை தன் ஆசைக்குத் தகுதியாக நிறையக்கொண்டு வந்து கொடுத்துப் பின்னையும் கைக்கூலி கொடுக்க வேண்டும்.

**இன்று வந்து இத்தனையும்**
**அமுது செய்திடப் பெறில்,நான்**
**ஒன்று நூறா யிரமாகக்**
**கொடுத்துப் பின்னும் ஆளும்செய்வன்**[9]
(ஆளும் – கைங்கரியமும்)

என்று பெரியாழ்வார் திருமகள் சொல்லுவது இதுவேயாகும்.

இவ்வாறு ஒரு பயனையும் கருதாது கைங்கரியம்

5. ஸ்ரீவச. பூஷ. 287
6. திருப். 29
7. ஸ்ரீவச. பூஷ. 288
8. மேலது 289
9. நாக். திரு. 9:7

புரிந்தவர்களில் எடுத்துக்காட்டுகளாக **விதுரர், மாலாகாரர், கூனி** என்ற மூவரைக் காட்டுவர் ஆசிரியர். பாரதத்தில் கண்ணன் தூது வந்தபோது **விதுரர்** கண்ணன் நெஞ்சு உகுக்கும்படி யாதொரு பயனையும் கருதாது,

**என்ன மாதவம் செய்தது**
**இச்சிறுகுடில்?**[10]

என்று கூறி மாயோனுக்கு அமுது படைக்கின்றான். **மாலாகாரர்** என்பவர் கிருட்டிணனுக்கும் பலராமனுக்கும் அணிந்துகொள்ள மலர்மாலை கொடுத்தவர்; இவர்தான் இச்சிறுவர்களைக் கம்சன் அமைத்த வில்விழாவிற்கு அழைத்து வந்தவர். **கூனி** என்பவள் இராமாயணத்தில் வருகின்ற கூனி அல்லள்; இந்தக் கூனி கிருட்டிணனுக்குப் பூசிக்கொள்வதற்குச் சாந்து கொடுத்தவள்.[11] இதனை,

**மடிதடவாத சோறும், சுறு நாறாத பூவும், சுண்ணாம்பு**
**படாத சாந்துமிறே இவர்கள் கொடுத்தது.**[12]

(சுறு – மலர், மயிர் முதலானவை நெருப்பில் பட்டுப் பொங்கும்போது உண்டாகின்ற தொரு நாற்ற விசேடம்.)

என்று எடுத்துக்காட்டுவர் ஸ்ரீ வசன பூஷண ஆசிரியர்.

**திருத்தேவனார்த் தொகையிலிருந்து திருமணிக் கூடத்தை நோக்கி** மாட்டுவண்டியில் வந்து கொண்டிருக்கும் நம் மனத்தில் மேற்கூறிய கருத்துகள் குமிழியிடுகின்றன. **திருமணிக் கூடம்** என்ற திவ்விய தேசம் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. நிலையத்திலிருந்து வண்டியில் வருவதைவிட நாம் மேற்கொண்ட முறையே சிறந்தது. இந்த ஏற்பாட்டில் திருத்தேவனார்த்தொகை (திருநாங்கூர்த் திருப்பதிகளில் 4 வது), திருமணிக் கூடம் (8 வது), காவளம்பாடி (9 வது), பார்த்தன் பள்ளி (11 வது) என்ற நான்கு திவ்விய தேசங்களையும் சேவித்து விடுகின்றோம். இத்திருத்தலம் மண்சாலைக்கருகில் ஒரு புளியந்தோப்பினுள் உள்ளது. வண்டி திருக்கோயிலை நெருங்கி வந்து கொண்டிருக்கும்போது திருக்கோயில் அமைந்திருக்கும் சூழ்நிலையை நம் கண்கள் வட்டமிடுகின்றன. ஓரளவு திருமங்கையாழ்வார் காலத்தில் இருந்த சூழ்நிலை இன்றும் உள்ளதா என்று கவனிக்கின்றோம்.

திருமங்கையாழ்வார் திருக்கோயிலின் சூழ்நிலையை,

10. வில்லிபாரதம் – கிருட்டிணன் தூத – 78
11. ஸ்ரீவச. பூஷ. 290
12. மேலது 291
13. பெரி. திரு. 4.5:1

**தேம்பொழில் கமழும் நாங்கூர்த்**
**திருமணிக் கூடம்.**[13]
(தேம்பொழில் . தேன்மிக்க சோலை)

என்று கூறி சோலை வளத்தைக் காட்டுகின்றார். காவிரியாற்றின் பாய்ச்சல் எங்கும் பரவிக் கண்டவிடங்கள் எங்கும் பொற்குவியல்கள் குவிக்கப் பெற்றுள்ளன; எம்மருங்கும் தேன்மிக்க சோலைகள் உள்ளன. மங்கைமார் தங்கள் கொங்கைத் தடத்தில் அணிந்திருந்த குங்குமச் சேறுகள் தீர்த்த மாடுங்கால் நீரில் கழுவ, அவற்றோடு கூடிப் பெருகும் காவியாற்று நீர் நறுமணம் கமழுகின்றது (2). சோலைகளில் குரங்குகள் முந்துற தேமாங்கனிகளைப் புசித்து அதன் சுவை தெவிட்டவே, அதனை மாற்றுவதற்கு வாழைப் பழங்களை நுகர்கின்றன; அப்போது மதுவைப் பருகுவதற்காக ஏற்கெனவே அப்பழங்களில் படிந்திருந்த வண்டினங்கள் வெருவி ஓடுகின்றன (4). பொதிய மலையினின்றும் நறுமணத்துடன் புறப்பட்ட தென்றல், மன்றங்கள் வயல்கள், காவுகள், மாடங்கள் இவைதோறும் புகுந்து வீசுகின்றது (7). தாமரைப் பூவில் தேன்வெள்ளம் அதிகமாகி நீரில் பெருகுகின்றது; அதனைப் பருகுவதால் கொழுத்த வாளை மீன் களிப்பாலே பாய்கின்றன; செங்கயல் அதைக் கண்டு அஞ்சித் துள்ளி வேறிடத்திலுள்ள நீர்நிலைகட்குப் பெயர்கின்றன (8). இவ்வூரிலுள்ளார் வேதங்களைக் கற்றுத் துறைபோய வித்தகர்கள்; இவர்கள் ஆசையுடன் அறங்களை அநுட்டித்துக் கைவண்மை யால் தீவளர்த்து ஓம்புகின்றனர் (3). பண்டொருகால் பாண்டிய மன்னன் படையெடுத்து வந்தபொழுது அவனை வெருட்டி ஓட்டிவிட்டனர் இவ்வூரிலுள்ள அந்தணர்கள்; பிறிதொரு சமயம் சோழ அரசனையும் அவர்கள் அப்படியே தோற்கடித்து ஓட்டினராம் (6). இந்த ஊர்த் திருமாளிகைகள் சந்திர மண்டலத்தையும் எட்டும்படியாக உள்ளன (10). இன்று இச்சூழ்நிலை சிறிதேனும் இல்லை. கடவுளே கைவிட்ட இடத்தைத்தான் (God forsaken palce) காண முடிகின்றது. ஏதோ ஓரளவு தோப்புகள் உள்ளன; அவ்வளவே.

இத்திருத்தலத்தில் **எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச்** சிந்திக்கின்றோம். இவன் கசேந்திரனின் துயரைத் தொலைத்தருளினவன்; கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து கோநிரையைக் காத்தருளிய கோமான் (1). பூதனையின் நஞ்சுதோய்ந்த முலையை உண்பதுபோல் பாவனை செய்து அவள் உயிரை உறிஞ்சியவன்; இலங்கைமீது கடுமையான சரங்களைச் செலுத்தி இராக்கதப் பூண்டுகளை அழித்தவன் (2). குதிரை வடிவாக

13. பெரி. திரு. 4.5:1

வந்த **கேசி** என்னும் அரக்கனை வாய்கிழித்து வானுலகுக் கேற்றியவன்; இரட்டை மருத மரங்கள் இற்று முறிந்து விழும்படி தவழ்நடை கற்றவன். ஏழு காளைகளை அடக்கிப் பின்னைப் பிராட்டியை மணந்தவன் (3). குவலயா பீடம் என்னும் யானையின் தந்தங்களைப் பறித்து யானையையும் பாகனையும் கொன்றவன்; குருந்த மரத்தை முறித்தொழித்த கோவலன்; கொக்கு வடிவமாக வந்த **பகாசுரன்** என்ற அசுரனை வாயைக் கிழித்து வானுலகுக்கு அனுப்பியவன் (4). சூர்ப்பணகையின் காதையும் மூக்கையும் முலைக் கண்களையும் வாளால் தடிந்தவன்; பூமிப் பிராட்டியும் பெரிய பிராட்டியும் தன்னைவிட்டுப் பிரியாதவர்களாகப் பொருந்தியிருக்கப் பெற்றவன் (5). மீன், வாமனன், அன்னம், வராகம், நரசிம்மம், ஹயக்ரீவன் என்ற அவதாரங்களை எடுத்தவன். அண்டமும் சூரியனும் சந்திரனும் மற்றுமுள்ள பொருள்களும் தானாகவே இருக்கப் பெற்றவன் (6).

**குன்றமும் வானும் மண்ணும் குளிர்புனல் திங்க ளோடு**
**நின்றவெஞ் சுடரும் எல்லா நிலைகளும் ஆய எந்தைதான் (7)**

திருமணிக் கூடத்தில் எழுந்தருளியுள்ளான். இவன்தான்.

**சங்கையும் துணிவும் பொய்யும் மெய்யும்இத் தரணி ஓம்பும்**
**பொங்கிய முகிலும் அல்லாப் பொருள்களும் ஆய எந்தை (8)**

(சங்கை – ஐயம்; தரணி – பூ மண்டலம்; ஓம்பும் . பாதுகாக்கும்; முகில் – மேகம்)

ஆவான், மேலும்,

**பாவமும் அறமும் விடும் இன்பமும் துன்பந் தானும்**
**கோவமும் அருளும் அல்லாக் குணங்களும் ஆய எந்தை (9)**

இவனே யாவான். மும்மூர்த்திகளும், முனிவர்களும், தேவர்களும் வந்து இவனை வணங்குவார்கள்.

கீழ்க்கூறியவாறு எம்பெருமானைச் சிந்திக்கும் நிலையில் நம் மாட்டுவண்டித் திருத்தலத்தை வந்தடைகின்றது. எம்பெருமான் **வரதராசன்** பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் இவர்களுடன் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். எம்பெருமானின் திருநாமம் **மணிக்கூட நாயகம். திருமாமகள் நாச்சியார்** என்பது தாயாரின் திருநாமம். இவர்களை வணங்கி இவர்தம் திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் சந்நிதியில் மிடற்றொலிகொண்டு ஓதி உளங்

கரைகின்றோம்; பரிபூர்ண பிரம்மாநுபவம் பெற்ற நிலையை அடைகின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவுக்கு வர அதனையும் ஓதுகின்றோம்.

**சேராது முன்செய்த தீவினை பின்செய்வதுவும்**
**வாராது; இனிநீ மடநெஞ்சே; – நேராகக்**
**குருமணிக் கூடத்தானைக் கொம்புபறித் தானைக்**
**திருமணிக் கூடத்தானைச் செப்பு.**[14]

முன் செய்தத வினை – சஞ்சிதம்; பின்செய்வது . ஆகாமியம்; வாராது . அணுகாது; குருமணி . உயர்ந்த இரத்தினங்கள்; கொம்பு – தந்தம்; செப்பு . துதிசெய்.

என்பது பாசுரம். திருமணிக் கூடத்தானின் திருநாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் அவனருளால் அளவின்றி ஈட்டப்பெற்ற வினைத்திரளில் அநுபவித்தவை போக எஞ்சியவை தீயினில் தூசாகும்; இனி செய்யும் வினைகளும் காட்டுத் தீ முன்னர்ப் பஞ்சுத் துய்போல அழிந்தொழியும் என்கின்றார் அய்யங்கார். மனநிறைவுபெற்ற நிலையில் **காவளம்பாடியை** நோக்கி நம் பயணம் தொடர்கின்றது.

14. நூற். திருப். அந். 37

# 19. காவளம்பாடிக் கண்ணன்

**"மாதவன்என்றென்று ஓதவல்லீரேல்**
**தீதொன்றும் அடையா ஏதஞ்சாராவே"[1]**

(மாதவன் – இலக்கமி நாதன்; தீது . முன்னைய பாவங்கள்; ஏதம் . மேலுள்ள பாவங்கள்)

காவளம்பாடியை நோக்கி நம் மாட்டுவண்டி வந்து கொண்டிருக்கும்பொழுதே இந்தத் திருவாய்மொழிப் பாசுரம் நம் மனத்தே எழுகின்றது. வாடாமலர் கொண்டு நாள்தோறும் நாட முடியாமலும், வேங்கடம் மேயானை அடிபணிய முடியாமலும் இருப்பவர்கட்கு ஒருவழி அருளிச் செய்கின்றார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

இதில் 'மாதவன் என்று' சொல்லாமல் மாதவன் என்று இரட்டித்துச் சொன்னதன் காரணத்தைச் சிந்திக்கின்றோம். இலக்குமி சம்பந்தத்தை இரண்டு தடவை அநுசந்திக்க வேண்டும் என்பது குறிப்பு. இரண்டு கண்டமாக உள்ள துவயம் என்னும் மந்திர இரத்தினத்தில் முன் வாக்கியத்திலும் பின்வாக்கியத்திலும் உள்ள **'ஸ்ரீமத்'** என்ற பதங்களின் பொருள்களைத் திருவுள்ளம்பற்றி துவய அநுசந்தானம் செய்ய நியமிக்கின்றார் ஆழ்வார் என்று கொள்ள வேண்டும். **ஆசாரிய ஹிருதயத்திலும்** மாதவன் என்று துவயமாக்கி[2] என்று அருளிச் செய்திருப்பதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. **'ஸ்ரீமத்'** என்ற இரண்டு பதங்களின் கருத்தை நம் ஆசிரியர்கள் தெளிவாக்கியுள்ளனர்.

> **"இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈசுவரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமை இரக்கிறது"[3]**

1. திருவாய். 10.5:7
2. ஆசாரிய ஹிரு. சூத்திரம் 228
3. முமுட்சுப்படி – 122

என்பது முமுட்சுப்படி. முன் வாக்கியத்தில் இலக்குமி சம்பந்தம் சொன்னது புருஷகாரமாக; பின் வாக்கியத்தில் அது சொன்னது பெரிய பிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே கைங்கரியம் செய்கையைக் குறிப்பிட்டவாறு. ஆக அடையும் நிலையோடு அநுபவிக்கும் நிலையோடு வேறுபாடின்றி இரண்டு நிலையிலும் இலக்குமி சம்பந்தம் உத்தேசமாக இருப்பதால் இங்கு 'மாதவன் என்றென்று' என இரட்டித்து அருளப் பெற்றுள்ளது. இத்திருவாய்மொழி முதற் பாசுரத்தில் சொன்ன 'நாரணமே' என்பதனுடன் 'மாதவன்' என்ற இதனை இரண்டு தடவை சேர்த்துச் சொல்ல வல்லீர்களாயின் என்பது குறிப்பு. எட்டெழுத்துத் திருமந்திர அநுசந்தானத்தோடு மாத்திரம் நில்லாமல் துவய அநுசந்தானமும் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றார் ஆழ்வார். ஒருவர் முன்னே சொல்ல மற்றொருவர் பின்னே சொல்லுவதற்கு 'ஓதுதல்' என்று பெயர். 'உங்கட்கு ருசி இல்லை யாகிலும் பிறரால் தூண்டப் பெற்றவராகி எப்பொழுதாவது சொல்ல நேரிட்டால்' என்பதனைக் குறிக்கவே ஓத்வல்லீரேல் என்கின்றார். பிரம்ம ஞானம் பெறுவதற்கு முன்னர் செய்யும் பாவங்கள் 'பூர்வ பாவங்கள்' எனப்படும்; இவற்றையே '**தீது**' எனக் குறித்தார்; பிரம்ம ஞானம் பெற்ற பின்பு நேரும் பாவங்கள் உத்தரபாவங்கள் எனப்படும்; இவற்றையே 'ஏதம்' எனக் குறித்தார். ஆண்டாளும் இவற்றை,

> **போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
> **தீயில் தூசாகும்**[5]

என்று அருளிச் செய்திருப்பதையும் ஈண்டு நினைக்கின்றோம். போய பிழைகள் தீயிலிட்ட தூசுபோலே தொலைந்தொழியும்; இனி வரும் பிழைகள் தாமரை இலைத் தண்ணீர்போல் பற்றுதலின்றி ஒழிந்து போகும். ஈட்டாசிரியரும் "மேலே சொன்ன திருமந்திரமும் (*10-5:1*) இப்பாசுரத்தில் சொன்ன (*10-5:7*) ஸ்ரீமத் பதமும் தனித்தனியே பேற்றுக்குப் போதியதன் பின்பு இரண்டினையும் சேர்த்துச் சொன்னவர்கட்குப் பேறு சொல்லவேண்டாவிறே" என்று கூறியுள்ளதையும் சிந்திக்கின்றோம்.

இந்த எண்ணங்கள் நிறைந்த மனத்துடன் இருக்கும் நம்மை மாட்டு வண்டி காவளம்பாடியில் கொண்டு சேர்க்கின்றது. இத்திருத்தலம் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருமணிக் கூடத்திலிருந்தும் மாட்டு வண்டியில் வரலாம். இங்கிருந்து நான்கு கி.மீ. தொலைவிலுள்ளது.

4. திருவாய். 10.5:1 5. திருப். 5

காவளம்பாடி எந்தவித வசதிகளும் இல்லாத ஒரு சிற்றூர். இத்திருத்தலம் திருநாங்கூர்த் திருப்பதிகளில் **ஒன்பதாவதாகும்.**

**திருமங்கையாழ்வார்** இத்திருப்பதி எம்பெருமானை ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்துள்ளார்.[6] இத்திருமொழிப் பாசுரங்களில் **நாங்கை நாட்டுவளம்** ஓரளவு காட்டப்பெறுகின்றது. நாங்கைநாட்டு நீர்நிலைகளில் கயல்மீன்கள் அச்சத்தால் துள்ளியோடுகின்றன; மலர்களில் வண்டுகள் ஆரவாரத்துடன் தேனை நுகர்ந்து இன்புறுகின்றன (4). நாட்டின் சோலைகளின் நீழலில் நறுமணம் நிறைந்து காணப்பெறுகின்றது (6). சோலைகளில் எங்கும் நறுமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன; கால்வாய்கள் தோறும் நீர் பாய்ந்தோடிய வண்ணம் உள்ளது (7, 8). சோலைகள் எங்கும் அழகிய மயில்கள் தோகைகளை விரித்தாடுகின்றன (9). பருத்தெழுந்துள்ள பலா மரங்களிலும் மாமரங்களிலும் நறுமணம் வீசும் கனிகள் பழுத்துத் தொங்குகின்றன; இவை கனிந்து விழுந்து தேன் வெள்ளமிடப் பெற்றனவாகத் திகழ்கின்றன (3). திருநாங்கூரில் விண்ணளாவிய பெரிய மலைகள் போன்ற மாடமாளிகைகள் பொருந்திக் காணப் பெறுகின்றன (5). இவற்றில் நான்மறை வல்ல அந்தணர்களும் பகைவர்களை விரைவில் சென்று ஒழிக்கவல்ல வீரர்களும் வாழ்கின்றனர் (1, 2).

திருப்பாசுரங்களில் பரத்துவநிலை எம்பெருமான், அவதாரநிலை எம்பெருமான்கள் சேவிக்கப் பெறுகின்றனர். முதலையால் கவ்வப் பெற்று ஆயிரம் திருநாமங்களை அநுசந்தித்த கஜேந்திராழ்வானின் இடர் களைந்த எம்பெருமான் அநுசந்திக்கப் பெறுகின்றான் (1). ஆதிவராகமாகி அண்ட பித்தியில் அழுந்திக் கிடந்த பூமியைக் கொணர்ந்தவன்; மாவலின் யாக பூமியில் வாமன மாணியாக எழுந்தருளிக் குறையிருந்தவன் (2). இராமனாக வந்து வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு மகுடம் சூட்டியவன் (3). இராவணனுடைய பத்துத் தலைகளையும் அறுத்துத் தள்ளி வீடணனுக்கு அரசை அளித்தவன் (4). கண்ணனாக வந்து **காளியன்** என்ற நாகத்தின்மீது பல்வேறு நர்த்தனங்களைச் செய்தவன் (5). மல்லர்களைக் கொன்று பாரதப் போரில் பல்லாயிரம் அரசர்களை நாசமடையச் செய்தவன் (6). தருமபுத்திரனுக்கு அரசளிக்க விரும்பித் தூதுபோனவன்; குவலயா பீடத்தையும் அதன் பாகனையும் கொன்றொழித்தவன் (7). **சத்தியபாமைக்காக** தேவேந்திரனைச் செற்று, விரைந்து நந்தவனத்தின் அழகை அளித்து கற்பகத் தருவினைப் பூமிக்குக்

6. பெரி. திரு. 4.6

கொண்டு வந்தவன் (8). **காயத்ரி, த்ரிஸ்டுப், ஜகதீ, அநுஷ்டுப், பங்க்தி** என்று சொல்லப்பெறும் சந்தஸுக்களிலெல்லாம் தானாக இருப்பவன்; எழுத்துகளின் எண்ணிக்கையைக் கொண்டு சந்தஸ்யைகளின் பெயர்களை அறுதியிட்டவன்; பஞ்ச பூதங்கட்கு நியாமகன்; காரியப் பொருள்கள் யாவும் அழிந்து கிடந்த காலத்து எல்லாம் தன் பக்கலிலே ஐக்கியமாகித் தானொருவனே என்னும்படி நிலைபெற்றிருப்பவன்; இவற்றையெல்லாம் பாகுபாடு செய்து காரியங்கொள்ள நினைத்த காலத்து இவற்றுக்கெல்லாம் காரணபூதனாக நின்றவன்; இவ்விதமாக அருமறைகளால் உணர்த்தப்படுபவன் (9).

இப்படிப்பட்ட எம்பெருமானே **காளம்பாடித் திருக்கோயிலில்** சேவை சாதிப்பவன் என்று ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் திருக்கோயிலில் புகுகின்றோம். நின்ற திருக்கோலத்தில கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் **கோபால கிருஷ்ணனை** வணங்குகின்றோம்; **கண்ணன்** என்ற திருநாமத்துடனும் இந்த எம்பெருமான் வழங்கப் பெறுகின்றான். தாயாரின் திருநாமம் **மடவரல் நாங்கை செங்கமலவல்லி நாச்சியார்.** இவரையும் வணங்கி இவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். எம்பெருமானின் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களை மிடற்றொலிகொண்டு ஓதி உளங்கரைகின்றோம்; ‘காவளம் பாடிமேய கண்ணனே; களைகண் நீயே’ என்று ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வேண்டும் ஆழ்வார் வாக்கிலேயே நாமும் இறைஞ்சுகின்றோம்.

இந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

**செப்பேன் மனிதருக்குளன் செஞ்சொல் தமிழ்மாலை**
**கைப்பேன் பிறதெய்வம் காண்பாரை—எப்போதும்**
**காவளம்பாடித் திருமால்கால் தாமரை தொழுது**
**நாவளம்பாடித் திரிவேன் நான்.**[7]

(செப்பேன் – பாடேன்; செஞ்சொல் – இன்சொல்; பிறதெய்வம் . திருமாலை யன்றி வேறு கடவுள் கைப்பேன் – வெறுப்பேன்; நா – (எனது) நாவினால்; வளம்பாடி . வளமாகக் கவி பாடி; திரிவேன் – காலம் கழிப்பேன்)

‘உலகப் பற்றுக்கு ஏதுவான மனித வழிபாட்டை நீக்கி, பிற தெய்வ வழிபாடு செய்பவர்களை வெறுத்தொதுக்கி வீடுபேற்றிற்கு ஏதுவான திருமால் திருவடிகளின்மீது கவிதைகள் யாத்து வழிபட்டுப் பொழுது போக்குவேன்’ என்கின்றார். மறந்தும் புறந்தொழா வீர

7. நூற். திருப். அந். 38

வைணவராகிய அய்யங்கார் தமது அநுட்டானத்தை இங்ஙனம் வெளியிட்டதைச் சிந்திக்கின்றோம். இதனால் இவர் திருமாலடியார்களிடம் பேரன்பு கொண்டவர் என்பதையும் தெளிகின்றோம்.

இத்திருக்கோயிலின் வழிபாடு காலை 10 மணிக்குத்தான் தொடங்குகின்றது. இந்த நேரத்தைத் தவிர வேறு நேரங்களில் வந்தால் சேவை கிடைக்காது. இத்திருக்கோயிலில் மடைப்பள்ளி இல்லை. இத்திருக்கோயிலிலிருந்து ஒன்றரை கிமீக்குக் கிழக்குத் திசையில் திருமங்கையாழ்வார் அவதரித்த **குறையலூர்** என்ற சிற்றூர் உள்ளது. இதற்கு எதிர்த்திசையில் முக்கால் கி.மீ. தொலைவில் திருமங்கையாழ்வார் நாடோறும் 1008 அடியார்க்குத் திருவாராதனம் செய்த 'மங்கை மடம்' என்ற சிற்றூர் உள்ளது. இச்செய்திகளை அறிந்த நிலையில் **'பார்த்தன் பள்ளி'** என்ற திருத்தலத்தை நோக்கிப் பயணமாகின்றோம்.

# 20. பார்த்தன்பள்ளிச் செங்கண்மால்

**ஒத்தின் பொருள்முடிவும் இத்தனையே உத்தமன்பேர்**
**ஏத்தும் திறம்; அறிமின்...**
**.. .... .. .. .. .. .. .. .. .. .. .. .. ..**
**... மாதவன்பேர்**
**சொல்லுவதே ஒத்தின் சுருக்கு"[1]**

(ஒத்து – திருமுறை; ஏத்தும் – துதிக்கும்; திறம் – வகை; சுருக்கு – சாரம்)

"எம்பெருமான் திருநாமங்களை உச்சரிப்பதே திருமுறைகளின் சாரமாகும்; ஆகவே அவனைத் துதிக்கும் வகையை அறிந்து கொள்ளுங்கள்" என்பது **பூதத்தாழ்வார்** காட்டும் வழி. ஞானம் மீதூர்ந்து நிகழும்பொழுது இங்ஙனம் அவன் திருநாமங்களைச் சொல்லி அநுபவிக்கலாம்; அவனுடைய திருக்குணங்களில் ஈடுபட்டு அநுபவிக்கலாம்; அவனுடைய திவ்விய மங்கள வடிவழகை வருணித்து அநுபவிக்கலாம்; அவன் உகந்த திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசி அநுபவிக்கலாம்; அவ்விடங்களில் ஆதரம் மிக்க அடியார்களின் பெருமைகளைப் பகர்ந்து அநுபவிக்கலாம். இவற்றைத் தவிர சிறப்பான தனித்தன்மையுடைய ஒரு வழியும் உண்டு. அதாவது தாமான தன்மையை விட்டுப் பிராட்டிமாரின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்றுவாயாலே பேசியநுபவித்தலாகும் இது. இந்நிலையை **ஆசாரிய ஹிருதயம்** என்னும் நூல்,

**ஞானத்தில் தம்பேச்சு**
**பிரேமத்தில் பெண்பேச்சு[2]**

(பிரேமம் – காதல், அன்பு)

என்று குறிப்பிடும். திருமங்கையாழ்வார் இந்நிலையில் இருந்து கொண்டு எம்பெருமானைப் பாடிப்பெற்ற அநுபவம் சொல்லுந்தர மன்று. அப்பாசுரங்களை ஓதியே நாம் அநுபவிக்க வேண்டும்.

1. இரண். திரு. 39 2. ஆசாரிய ஹிரு. சூத்திரம் 118

ஆழ்வார் இப்படி அநுபவிக்கும்போது **தோழி பாசுரம், தாய் பாசுரம், மகள் பாசுரம்** என்று மூன்று வகுப்புகளாகப் பாசுரங்கள் அமையும். இப்போது ஆழ்வார்க்குப் **'பரகாலர்'** என்ற ஆண்மைப் பெயர் நீங்கிப் **'பரகாலநாயகி'** என்ற பெண்மைப் பெயர் வழங்கப் பெற்று வரும். தோழி சொல்லுவது போலவும், தாய் சொல்லுவது போலவும், தலைமகள் சொல்லுவது போலவும் பாசுரங்கள் வெளிவந்தாலும், பாசுரங்களைப் பகர்பவர் ஆழ்வார்களேயாவார். ஓர் ஆறு பல வாய்க்கால்களாகப் பிரிந்து சென்றாலும் அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்குமாப்போலே, இம்மூன்று நிலைகளில் **'சொல் மாலைகள்'** வடிவு கொண்டாலும் **"மன்னுமா மாட மங்கையர் தலைவன் மானவேல் கலியன் வாய் ஒலிகள்"**[3] என்று ஆழ்வார் பாசுரமாகவே தலைக்கட்டும். நாயகி வாக்காக வடிவு கொள்ளும் பதிகங்களின் இறுதிப் பாசுரம் ஆழ்வார் தாமான நிலையிலிருந்து பேசுவது போலவே நிறைவு பெறும்.

எம்பெருமானைப் பற்றிக் கூறும் நூல்களில் **திருமங்கையாழ்வார்** அருளியுள்ள **பெரிய திருமொழியும்** ஒன்று. பொதுவாக இவ்வாழ்வாரின் பாசுரங்கள்,

**நெஞ்சுக்கு இருள்கடி தீபம்;**
**அடங்கா நெடும் பிறவி**
**நஞ்சுக்கு நல்லமுதம்; தமிழ்**
**நன்னூல் துறைகள்**
**அஞ்சுக்கு இலக்கியம்; ஆரண**
**சாரம்; பரசமயப்**
**பஞ்சுக்கு அனலின் பொறி"**[4]

(இருள்கடி . இருளைப் போக்க; அடங்கா – ஒன்றுக்கும் அடங்காத; துறைகள் ஐந்து – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி; ஆரணம் . வேதம்; பரசமயம் – புறமதங்கள்)

என்று போற்றப்பெறுகின்றன. பெரிய திருமொழியில் ஆழ்வார் எம்பெருமானை 118 பதிகங்களால் அநுபவித்து இனியராகின்றார். இவற்றுள் ஆழ்வார் **தாமான தன்மையில்** பேசியவை 98 பதிகங்கள்; **பெண் பாவனையில்** பேசியவை 20 பதிகங்கள் இவற்றுள் **தாய் பாவனையில்** பேசியவை **ஏழு** பதிகங்கள்; மகள் பாவனையில் பேசியவை **பதின்மூன்று** பதிகங்கள்; **தோழி பாவனையில்** பேசியவை இவ்வாழ்வாரிடம் ஒன்று கூட இல்லை.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் காவளம்பாடியிலிருந்து **பார்த்தன் பள்ளியை** வந்தடைகின்றோம்.

3. பெரி. திரு. 5.7:10    4. தனியன்

பார்த்தனுக்காக (அர்ச்சுனனுக்காக) சேவை சாதிக்கும் இடமாதலால் இத்திருத்தலம் இப்பெயர் பெற்றது என்பர். பார்த்தன் பள்ளி திருநாங்கூர்த் திருப்பதிகளுள் **பதினொன்றாவதாகும்.** இது சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருநாங்கூரிலிருந்து வண்டி மூலம் வந்தால் நான்கு கிலோ மீட்டர் தொலைவிலும் கால் நடையாக வந்தால் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இங்கு தங்குவதற்கோ உணவு கொள்ளுவதற்கோ எவ்விதமான வசதிகளும் இல்லை. திருநாங்கூரிலிருந்து காலையில் புறப்பட்டு வரலாம்; வழிபாட்டினை முடித்துக்கொண்டு வடதிசையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள **திருமணிக்கூடம்** வந்து அங்கும் வழிபாட்டை முடித்துக்கொண்டு திருநாங்கூரை வந்தடையலாம்.

பார்த்தன் பள்ளி வந்தடைந்ததும் **திருமங்கையாழ்வார்** இத்திருத்தல எம்பெருமானைப் பற்றி மங்களா சாசனம் செய்துள்ள திருமொழியில் ஆழங்கால்படுகின்றோம். இத்திருமொழி **தாய்ப் பாசுரமாகச்** செல்லுகின்றது. **பரகால நாயகியைப்** பெற்றெடுத்த திருத்தாயார் பார்த்தன் பள்ளிப் பெருமாளிடத்தில் தன் மகள் காதல் கொண்டு இருக்கும் நிலையை வெளியிடுகின்றார்; அப்பெருமானை நினைந்து வாய்வெருவிக் கூறும் படிகளை ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றார்.

**"கவளயானைக் கொம்பொசித்த**
**கண்ணனென்றும் காமருசீர்க்**
**குவளைமேகம் அன்னமேனி**
**கொண்டகோன்என் ஆனையென்றும்**
**தவளமாட நீடுநாங்கைத்**
**தாமரையாள் கேள்வனென்றும்**
**பவளவாயாள் என்மடந்தை**
**பார்த்தன்பள்ளி பாடுவாளே"[5]**

(கவளம் . யானையின் உணவு; ஒசித்த . முறித்தொழித்த; காமரு – (காமம்+தரு) – ஆசையை விளைவிக்கின்ற; சீர் – அழகு; அன்ன – ஒத்த; மேனி – உடல்; கோன் – சுவாமி; தவளம் – வெண்மையான)

பார்த்தன் பள்ளியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை எப்படி எப்படி எல்லாம் எண்ணுகின்றாள் என் மகள் தெரியுமா? "குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளைச் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவதுபோல எளிதில் பிடுங்கி அதன் உயிரைத் தொலைத்திட்ட கண்ணன்; அப்படிப்பட்ட சூரன் அவன். அவன்

5. பெரி. திரு. 4.8:1

திருமேனின் நிறம் குவளை மலர், காளமேகம் இவற்றின் நிறத்தையொத்துக் கண்ணைக் கவரும் திறத்தது. யானையை எத்தனை தடவை பார்த்தாலும் ஒவ்வொரு தடவையும் கிடைத்தற்கரிய பொருள்போல் காணப்பெறுவது போலவே, தன் கண்ணனும் 'அப்பொழுதைக்குப் பொழுது ஆராவமுதமாக' இருக்கின்றான்" என்கின்றாள் (1). 'யானையை முடித்த செய்தி' ஒரு தடவை சொல்லி முடியக் கூடியதோ? 'மிகவும் வேகமாகச் சீறி வந்த களிற்றுடன் போர்புரிவதும் வெற்றி பெறுவதும் எளிதான செயலல்லவே' என்று அந்த வீரத்திலேயே ஈடுபட்டுக் 'கஞ்சன் விட்ட வெஞ்சினத்த களிறு அடர்த்தகாளை' என்கின்றாள். சிறிது வயது சென்ற பிறகு செய்த இச்செயல் கிடக்கட்டும். தொட்டில் பருவத்தில் செய்த அரும்பெருஞ் செயல் உங்கட்குத் தெரியுமோ? வஞ்சனையாகக் கொல்ல வந்த பேய்ச்சியின் முலையுண்கின்ற போக்கில் அவள் உயிரையும் உண்ட மாயன் அன்றோ இவன்?" என்கின்றாள் (2).

"இவள் நான்முகன் படைத்த அண்டங்களிலுள்ளார் எல்லோர்க்கும் சுவாமி; தனக்கு ஆனை போன்றவன்; இடைப் பெண்களின் கொங்கைகளுடன் அணையும் இயல்புடையவன்; திருமறைகளும் தேடிச்செல்லும் செல்வன்" என்கின்றாள் (3). இதனை ஊடல் தோன்றச் சொல்லுகின்றாள் என்று கொள்ள வேண்டும். "நேற்றுவரை அடங்கிக் கிடந்த இவள் அழகிய வளையல்களணிந்த மகளிர் முன்னே வரம்பு அழிந்தவளானாள்; பெண்மைக்குரிய மரியாதைகள் அழியப் பெற்றாள்; பல மகளிரின் எதிரே சேது கட்டுவித்து இலங்கையைப் பாழ்படுத்திய பெருமிடுக்கன் என்று தலைவனைப் புகழ்கின்றாள் (4). ஒரு பிராட்டிக்காகப் படாதபட்டு அரும்பெரும் செயல்கள் ஆற்றியவன் தன் விஷயத்திலும் கொள்ளவேண்டும், அலட்சியமாக இருப்பதாகச் சொல்லுகின்றாள் என்று. "முன்பு ஒரு காலத்தில் அரக்கர்களின் ஆவி முடியும்படியாக ஆழ்கடல் சூழ் இலங்கையைப் பொடிபடுத்திய பெருவீரன்; ஆண்மைக்கு இலக்கணமான அழகிய வில்லைக் கையிலே உடையன்" என்கின்றாள் (5). "பிரளய காலத்தில் உலக முழுவதையும் தன் திருவயிற்றில் காத்துப் பின்னர் வெளிப்படுத்திய பெருமான்; கடல் போன்ற திருமேனி நிறமுடையவன்" என்கின்றாள் (6). "எத்தனையோ பிறவிகளாகத் தேடிப் பிடித்து என் நெஞ்சைத் தன் இருப்பிடமாகக் கொண்ட நாதன்; அவனோ யார்க்கும் அகப்படாத கள்வன்; நான்கு மறைகளும் தேடிப்பார்த்தாலும் அவற்றுக்கும் அகப்படாத தொலைவிலுள்ள பெருமையுடை யவன்"

என்கின்றாள் (7). "உயர்ந்தோராலும் சாதாரண மக்களாலும் புகழப் பெறுபவன். சந்திர சூரியர்களாலும் மற்றுமுள்ள உம்பராலும் கிட்ட முடியாமல் பெருஞ்சுடர் வீட்டிலங்கும் திருவாழியாழ்வானை ஆயுதமாகவுடையவன்; அடியார் பக்கல் பேரன்புடையவன்" என்கின்றாள் (8). "கண்ணன் என்றும், வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும் எண்ணன் என்றும், எல்லோர்க்கும் இன்பம் அளிப்பவன் என்றும், ஏழ் உலகங்கட்கும் காரணபூதன் என்றும் பேசுகின்றாள் என் மகள்" (9). இத்தகைய பெருமான் பார்த்தன் பள்ளியில் திருக்கோயில் கொண்டுள்ளான் என்று சொல்லிவிட்டு அத்திருப்பதியின் திருநாமமிட்டு இசைபாடத் தொடங்கிவிட்டாள் தன் மகள் என்று திருத்தாயர் ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகப் **"பார்த்தன் பள்ளி பாடுவாளே"** என்று கூறுகின்றாள்.

இங்ஙனம் திருப்பாசுரங்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம்கொண்டு சேவை சாதிக்கும் **தாமரையாள் கேள்வனைக்** கண்டு மகிழ்ந்து வழிபடுகின்றோம். தாயாரின் திருநாமம் **தாமரை நாயகி** என்பது. இவரையும் வணங்கி இவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம். எம்பெருமான் சந்நிதியில் திருமொழிப் பாசுரங்கள் பத்தையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங்கரைகின்றோம். ஆழ்வார் கொண்ட பிராட்டியின் நிலை நமக்கு வருவதற்கு முயல்கின்றோம். இப்பாசுரங்களை ஓதுபவர்கள் **"ஏர்கொள் நல்ல வைகுந்தத்துள் நாளும் இன்பம் எய்துவார்"** *(10)* என்ற குறிப்பை நினைந்து எம்பெருமானை ஒரு நொடிப்பொழுதும் பிரியாமல் அநுபவிக்கும் இடமாகிய திருநாட்டில் நித்தியானந்தம் அநுபவிக்கப் பெறுவோம்" என்ற எண்ணமும் கொள்ளுகின்றோம்.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாடல் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம்.

**ஒத்துஅமரர் ஏத்தும் ஒளிவிசும்பும் பாற்கடலும்**
**இத்தலத்தில் காண்பரிய என்நெஞ்சே – சித்துணர்ந்த**
**தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்**
**பார்த்தன்பள் ளிக்குட் பணி"**[7]

(ஒத்து – ஒன்றுகூடி; அமரர் – நித்திய சூரிகள்; ஒளிவிசும்பு – பரமபதம்; இத்தலத்தில் . இந்தப் பூமியில்; சித்து – சீவான்மாவின் உண்மை நிலை; தீர்த்தன் – பரிசுத்தனான பிரகலாதாழ்வான்; செப்ப – மறுமொழி கூற; வெளிநின்றானை – (தூணிநின்று) வெளித்தோன்றிய திருமாலை; பணி வணங்குக)

6. பெரி. திரு. 4.8:1 பாசுரம் காண்க.
7. நூற். திருப். அந். 40

பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம் என்ற நான்கு நிலைகளிலுள்ள எம்பெருமான் காண்டற் கரியனாதலால் **அர்ச்சாவதார நிலையில்** பார்த்தன் பள்ளியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை வழிபடுமாறு தன் நெஞ்சிற்கு ஆற்றுப்படுத்துகின்றார் அய்யங்கார். இந்நிலையில் **திருவெண்காடு** வந்து பேருந்து மூலம் **மயிலாடுதுறை** வந்து சேர்கின்றோம்; காளியாக்குடி அய்யர் விடுதியில் ஒய்வு கொள்ளுகின்றோம்.



‘ஸ்ரீ சடகோபன் பொன்னடி’
‘வைணவ இலக்கியமாமணி’
‘தமிழ் வாகைச் செம்மல்’

## பேராசிரியர். டாக்டர். ந. சுப்புரெட்டியார்

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி., டி.லிட்.,

### இந்நூலாசிரியர் பற்றி...

89 - அகவையைக் கடந்தவர்

**பணிகள் :**

1. 9 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941- 50)
2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக்கல்லூரி - தமிழ்ப் பேராசிரியர் - துறைத்தலைவர் (1950 - 60)
3. திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் ( 1960 - 1980)

**ஓய்வுக்குப் பின்னர் பணிகள் :**

1. 18 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சியம் தலைமைப் பதிப்பாசிரியர்.
2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மதிப்பியல் பேராசிரியர்.
3. சென்னைப் பல்கலைக் கழகம் - தமிழ் இலக்கியத்துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
4. மதிப்பியல் இயக்குநர் - மரபியல் பண்பாடு நிறுவனம் (1995 - 2002) சென்னைப் பல்கலைக் கழகம்.

**பிற பணிகள் :**

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக் கழகங்களில் பல்வேறு பணிகள் - பொறுப்புகள். 125 நூல்களுக்கு மேற்பட்ட பல்துறை நூல்களின் ஆசிரியர்.

**பெற்ற பரிசுகள்** : 16 நூல்கள் பரிசு பெற்றவை.

**பெற்ற விருதுகள்** : பத்துக்கு மேல் - பல்வேறு நிறுவனங்கள் மூலம்.